# மாணவர் தமிழ்க் கட்டுரை

LIBRARY
31 MAR 1958
MADRAS

0
Duplicate
251
2-45

வித்துவான்
பாலூர். கண்ணப்ப முதலியார்

மாணவர்

# தமிழ்க் கட்டுரை

வித்துவான்
பாலூர். து. கண்ணப்ப முதலியார்
தமிழ் விரிவுரையாளர்
தி நியூ காலேஜ், சென்னை 14.

பதிப்பாளர் :
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு சென்னை 1

[பதிப்புரிமை] 1955 [விலை ரூ. 1-8-0

*First Printed:* *February 1938*
*Reprinted:* *August 1940, Feb. 1944, Jan. 1946, Sep. 1948, Oct. 1951 & Feb. 1955.*

The Progressive Printers, Madras 1.

# ஆக்கியோன் முன்னுரை

கலாசாலை மாணவர்கள் பெரும்பாலும் கட்டுரை எழுதும் பயிற்சியில் சிறிது தியக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள் ; வாக்கியப் பிழைகளும், சந்திப் பிழைகளும், எழுத்துப் பிழைகளும் இன்றி எழுத இயலாது தவிப்பது ஒருபுறமிருக்க, விஷயங்களே மனத்தில் அமையாத நிலையில் இடர்ப்படுகின்றார்கள். விஷயம் ஒருவாறு அமையப் பெற்றாலும், அதனை எங்ஙனம் வகைப்படுத்தி வரைவது என்னும் முறை உணரப்பெறாது, ஒன்றுக்கொன்றை எழுதிக் கட்டுரைகளைக் கெடுத்து வருவதைக் கலாசாலை ஆசிரியர்கள் அனுபவத்தால் நன்கு உணர்வார்கள். இக் குறையை ஒருவாறு நீக்கக் கருதி, யான் S. S. L. C. மாணவர்களுக்கு வியாச மொழிபெயர்ப்புப் பரீக்ஷைத் தாளில் கொடுக்கப்பெறும் வியாசங்களையும், மற்றும் சில கட்டுரைகளுக்குரிய பகுதிகளையும் தேர்ந்து, ஒவ்வொரு கட்டுரைக்கும் முகப்பில் அக்கட்டுரையின் அமைப்புக் குரிய குறிப்புக்களைத் தந்து 'மாணவர் தமிழ்க் கட்டுரை' என்னும் இந்நூலை எழுதியுள்ளேன். ஆதலின், இந்நூலைக் கண்ணுறும் கலாசாலை அதிகாரிகளும், தலைமை ஆசிரியர் களும், தமிழ்ப்புலவர்களும், தங்கள் தங்கள் பாடசாலை களில் பயன்படுத்தி என்னை இத்துறையில் மேன்மேலும் உழைக்க, ஊக்குமாறு அவர்களை வேண்டிக்கொள்ளு கிறேன்.

இந்நூல் அச்சு ஆகுங்காலத்து இதற்கு ஆவனசெய்து உதவிய என் இயற்றமிழ் ஆசிரியர் உயர் திருவாளர் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கும், இதனைப் பிரசுரிக்க முன்வந்த ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தார்க்கும், இந்நூலுக்கு முன்னுரை எழுதி உதவிய சென்னை, கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்த உயர் திருவாளர் ச. த. சற்குணர், B. A. அவர்கட்கும், இந்நூல் வெளி வருவதற்கு ஒரு தூண்டு கோலாய் இருந்த என் உழுவல் அன்பர், சென்னை முத்தியாலுப்பேட்டை உயர் கலாசாலை மாஜித் தலைமைத் தமிழ் ஆசிரியர் உயர் திருவாளர் வ. தணிகாசலம் பிள்ளை அவர்கட்கும் எனது நன்றி உரியதாகுக.

பா. து. க.

## FOREWORD

Students generally acquit themselves in Tamil original composition very poorly. The difficulty of both thought and language confront them together.

Now *Students' Tamil Essays* is a book to help them in language and thought. There are as many as seventy diffierent topics treated in the book; essays, descriptive narrative and reflective, are all represented.

The excellent choice of the subjects does credit to the author, and makes the book perhaps the first of its kind in Tamil.

The author's language is simple, correct, and free from all affectation. He never tumbles into poetic diction and never makes his prose style grotesque. Nor does he fall into that species of painful pedantry which drives some people in these days to struggle to express themselves in a vocabulary exclusively Tamil.

And I strongly recommend this very useful book to all students and teachers of Tamil.

Royapettah,
Madras,
23rd Feb, 1938.

S. D. SARGUNAR,
*Lecturer in Tamil (Retired),*
*Madras Christian College.*

## கடவுள் வணக்கம்

நேரிசை வெண்பா

செம்மைசேர் மாணவர் செந்தமிழ்க் கட்டுரைநூல்
மெய்ம்மைசேர் மேதினியில் மேவிடவே—அம்மையோடு
அப்பனுய் வந்தருளும் அண்ணல் அடியேனை
எப்போதும் காத்தருள்வான் ஏற்று.

---

## ஆசிரிய வணக்கம்

விருத்தம்

பேர்மணக்கும் புரசையெனப் பேசுறுநற்
பதியதனிற் பிறங்கி நாளும்
நார்மணக்கும் இலக்கியமும் நடைதெரிக்கும்
இலக்கணமும் நயப்போ டோதி
ஏர்மணக்கும் இன்சொல்லால் எந்தமைநற்
றமிழ்த்துறையில் இயக்கி வாழும்
சீர்மணக்கும் குருமணியாம் வேணுகோ
பாலர் திருவடி சிந்தை செய்வாம்.

---

## உரிமை உரை

### நேரிசை ஆசிரியப்பா

உலகில் நிலவும் உயர் மொழி தம்முள்
செம்மைசேர் மொழியாம் செந்தமிழ் மொழியில்
ஆர்வம் அடியேற் கமைவிறச் செய்த
சீர்சால் தமிழோ டாங்கிலப் புலமையும்
சிறக்கப்பெற்றசே டாசலப் பெரியீர் !
ஆங்கிலத் தொடுகண் ணனையநற் கணிதமும்
அன்பாய்ப் பயிற்றிய அருளுடை மனத்துச்
சோமசுந் தரமெனும் சுகுணச் செல்வீர் !
'கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகெ'னும் குறளின்
உரையினை நன்குநான் உணர்ந்தேன் ஆதலின்
நீவிர் செய்த நினைப்பரு நன்றிகட்
கென்செய வல்லேன் இலகுகைம் மாறெனா ?
மாணவர் தமிழ்க்கட் டுரையெனும் இந்நூல்
உமக்கே உரிமை யாக்கினன்
உவந்தேற் றென்னை ஊக்கலும் கடனே.

# பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள்—God | 1 |
| 2. | நட்பு—Friendship | 6 |
| 3. | பள்ளிக்கூட விடுமுறை நாட்களை நல்வழியில் கழிக்கும் முறை—The best way of spending the school holidays | 8 |
| 4. | பள்ளிக்கூடக் கேளிக்கைப் பிரயாணத்தின் நன்மை — The importance of school excursion | 10 |
| 5. | காலத்தின் அருமை—The value of time | 13 |
| 6. | தேகப் பயிற்சி விளையாட்டுக்களினால் ஏற்படும் நன்மைகள்—The advantages of games and sports | 15 |
| 7. | பெண் கல்வி—Female Education | 18 |
| 8. | வாசகசாலை நூல் நிலையங்களின் பயன்—The advantages of Reading Rooms and Libraries | 21 |
| 9. | சிக்கனம்—Thrift | 25 |
| 10. | சுகாதாரப் பாதுகாப்பு—Care of Health | 27 |
| 11. | தெருவில் நடந்த ஓர் ஆபத்து—A street accident | 31 |
| 12. | ஆகாய விமானம்—The Aeroplane | 34 |
| 13. | கிராம வாழ்க்கை—Rural Life | 38 |
| 14. | சாதுரியம்—Tact | 40 |
| 15. | இன்சொல்—Kind words | 42 |
| 16. | செல்வத்தைச் சரியான வழியில் செலவிடும் முறை—The right use of money | 44 |

17. உத்தியோகத் தேர்வு—The Choice of a Profession 46
18. விடாமுயற்சியே யாவற்றையும் வெல்லும்—Perseverance overcomes all difficulties 49
19. நான் விரும்பிக் கொண்டாடும் ஒரு திருவிழா—A festival which I enjoy 53
20. நாய் காட்டிய நன்றியறிவு—Faithfulness of a dog 56
21. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது—Lost opportunities seldom recur 58
22. நான் கண்ட ஒரு திருமணக் காட்சி—A marriage function which I witnessed 62
23. நான் பார்த்த ஒரு திருவிழா—A festival I witnessed 64
24. நான் கண்ட ஒரு கிராமக் காட்சி—The scene of a village that I have seen 68
25. குதிரையின் அறிவு—The intelligence of the horse 70
26. தேகப் பயிற்சி—Physical Exercise 73
27. பசு—Cow 76
28. சாரணர் இயக்கம்—The Scout movement 78
29. நான் விரும்பும் விளையாட்டு—My favourite game 83
30. அயல் நாட்டுப் பிரயாணமும் அதன் பயனும்—The advantages of foreign travel 85
31. மிருகங்களிடத்தில் இரக்கங் காட்டுதல்—Kindness to animals 88
32. விளையாட்டினால் விளையும் நன்மை தீமைகள்—The good and evil aspects of sports 91

33. தமிழ்ப் பெருமை—Greatness of Tamil 93
34. என் ஊர்ச் சுகாதாரப் பாதுகாப்பு—The sanitation of my town 98
35. யுத்தத்தினால் ஏற்படும் நன்மை தீமைகள்—The advantages and disadvantages of War 101
36. புத்திமானே பலவான்—Knowledge is Power 104
37. ஒருவரைப் பெரியவராக்கும் குணங்கள்—Traits that make a man great 108
38. நான் விரும்பும் கைத்தொழில்—The Craft which I would like to choose 110
39. பெரியோர்களின் சரித்திரங்களைப் படிப்பதனால் ஏற்படும் நன்மைகள்—The advantages of reading the biographies of great men 113
40. பொது நன்மை—The public good 115
41. பத்திரிகையின் பயன்—The value of a news-paper 118
42. உழவுத் தொழிலின் சிறப்பு—The greatness of agriculture 121
43. பள்ளிக்கூட நூல் நிலையம்—The School Library 124
44. திரைகடலோடியும் திரவியம் தேடு—Earn even by going overseas 126
45. கற்றவர்கள் நாட்டுக்குச் செய்ய வேண்டிய நன்மைகள்—The duties of the learned to the country 128
46. மழை—Rain 129
47. மதுபானத்தால் விளையும் தீமைகள்—The evils of drink 132

48. ஆறுகளும் அவற்றின் பயனும்—Rivers and their uses 135
49. இருப்புப்பாதைப் பிரயாணம்—A journey by train 137
50. இருப்புப்பாதை—The Railway 139
51. தாய் மொழியை வளர்த்தற்குரிய அவசியம்—The importance of improving one's mother-tongue 143
52. நான் விரும்பும் நூல்—My favourite book 146
53. கலாசாலைச் சஞ்சிகையும் அதன் பயனும்—The School magazine and its uses 149
54. நாணயமே நற்கொள்கை—Honesty is the best policy 152
55. வெள்ளப் பெருக்கு—The flood 156
56. நான் கோடை கால விடுமுறை நாட்களைக் கழித்த விதம்—How I spent my summer holidays 160
57. செஞ்சிலுவைக் கழகம்—The Red-Cross Society 163
58. ஆறும் ஜார்ஜ் அரசரது முடிசூட்டு விழா—The Coronation of King George VI 166
59. பொருட்காட்சிச் சாலை—The Exhibition 169
60. ஓர் இருப்புப்பாதை நிலையம்— A Railway Station 172
61. விருப்பமான தொழில்—A hobby 175
62. நாட்டுப் பற்று —Patriotism 178
63. படக்காட்சி—The Cinematograph 181
64. என் வாழ்க்கையின் நோக்கம்—My aim in life 186

65. அச்சு இயந்திரத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகள் —The Advantages of the Printing Press 190
66. பாடங்களைத் தாய் மொழியில் பயிற்றுதல்—Vernacular as the medium of instruction in schools 192
67. தொழிற் கல்வி—Manual training 194
68. கட்சிப் பிரிவுகளினால் ஏற்படும் நன்மை தீமைகள்—Advantages and disadvantages of Party spirit 197
69. மலைகளும் அவற்றின் பயனும்—Mountains and their uses 200
70. ஆங்கில அரசாட்சியினால் ஏற்பட்டுள்ள நன்மைகள்—The Advantages of British Rule 202

# மாணவர் தமிழ்க் கட்டுரை

## 1. கடவுள்

குறிப்பு: 1. முன்னுரை, 2. கடவுள் ஒருவர் உண்டு என்பது, 3. கடவுளின் குணங்கள், 4. நமது கடமை, 5. முடிவுரை.

கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் பலதிறச் சமயங்கள் நிலவுகின்றன. இவற்றுள் நமக்கு அதிகமாகப் புலனுவன சைவம், வைணவம், பௌத்தம், ஜைனம், கிறிஸ்தவம், மகம்மதியம் என்னும் மதங்களே ஆகும். இம்மதங்களில் பல உட்பிரிவுகள் இருப்பினும், இவையே கூடமாக நடைமுறையில் சாணப்பட்டு வருகின்றன. இம்மதங்களேயன்றி, எம்மதத்தையும் சாரார்த சில பொது மதங்களும் உண்டு. இத்தகைய மதங்கள் பல்வகை நற்கொள்கைகளைப் போதிக்கின்றன. அவற்றுள் மிக முக்கியமானது எல்லாப் பொருளையும் ஆக்கி அளித்து அழிக்கும் ஒரு பொருள் உண்டு என்பதேயாகும் அதனை மேற்கொண்டு ஒழுகுபவர் ஆஸ்திகர் என்றும், அப்படிப்பட்ட ஒரு பொருள் இல்லை என்று கூறுபவர் நாஸ்திகர் என்றும் கூறப்படுவர். 'அப்படி எல்லாவற்றிற்கும் காரணமாய் இருப்பது ஒரு பொருள் என்றால், அதனை ஏன் அரன், அரி, அருகன், ஏசு, அல்லா என்று வழங்குகின்றனர்?' என்று ஒரு சிலர் வினவலாம். அங்ஙனம் வினவுவோர்க்குத் திருப்திகரமான பதில் அளிக்கலாம். அந்த ஒரு பொருள் பல பெயர்களையுடையது. இதனாலேதான் அந்த ஒரு பொருளின் தன்மையை நன்கு அனுபவத்தால்

உணர்ந்து, "ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி," என்றும், "பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை" என்றும் பெரியோர் கூறியுள்ளார். பேர் பலவாயினும், பொருள் ஒன்றேயாகும். உதாரணமாகத் தண்ணீராகிய ஒரு பொருளை எடுத்துக்கொள்வோம்: தமிழில் அதனைப் புனல் என்றும், ஆங்கிலத்தில் வாட்டர் என்றும், தெலுங்கில் நீளு என்றும், வடமொழியில் ஜலம் என்றும், இந்துஸ்தானியில் பாணி என்றும், மலையாளத்தில் வெள்ளம் என்றும் வழங்கி வருகின்றனர். இப்பெயர்கள் தண்ணீர் என்னும் ஒரு பொருளையே குறிக்கின்றன அல்லவா ? இதுபோலவே அந்த முழுமுதற் பொருளுக்கும் பல மொழிகளில் பல மதங்களில் பல பெயர்கள் வழங்குகின்றன. அப்படி வழங்கும் பெயர்களுள் கடவுள் என்னும் பெயரும் ஒன்று. நாமும் அப்பெயரையே நமது கட்டுரைக்கு இட்டு, அக்கடவுளைக் குறித்து ஒரு சிறிது கூறுவோம்.

கடவுள் இல்லை என்னும் கொள்கையை நல்ல அறிவுடைய ஒருவன் ஏற்றுக்கொள்ளல் இயலாது. கடவுள் இல்லையென்பவர், "எல்லாம் இயற்கையே செய்து முடிக்கிறது. அதனைச் செய்ய ஒரு பொருள் வேண்டுவது இல்லை," என்னும் விதண்டாவாதம் செய்வர். அவரது விதண்டாவாதம் நிலைபெறாது. எங்ஙனம் எனில், காட்டில் மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அம்மரங்கள் எங்ஙனம் உண்டாயின எனின், 'வித்தினின்றும் உண்டாயின,' என்னும் பதில் கிடைக்கும். அவ்வித்து எதனின்றும் தோன்றியதெனில், 'மரத்தினின்றும் தோன்றியது,' என்னும் விடையே வரும். இப்படி இவ்விரண்டையுமே கூறிக்கொண்டிருந்தால், இவற்றுள் எது முன் தோன்றியது என்பதை மக்களால் அறிய இயலாது. ஆகையால்

அம்மரத்துக்கு முதற்காரணமாகிய வித்தை முதன்முதல் தோற்றுவித்தவன் ஒருவன் இருக்கவேண்டும் என்பது சிற்றறிவினருக்கும் புலனாகிறது. அவ்வொருவனே கடவுளாம். ஆகவே, உலகில் காணப்படும் பலதிற இயற்கைப் பொருள்களையும், காட்சிப் பொருள்களையும் கண்கூடாகக் காண்பதனாலேயே கடவுள் உண்டு என்பதை நாம் உணரலாம். இதனாலன்றோ, "ஞாலமே கரியாக (கடவுளே, நீ உண்டு என்பதற்கு உலகமே சாட்சியாக) நான் உனை நச்சி னேன்," என்று ஒரு பெரியார் கூறியுள்ளார்.

புகை கண்ட இடத்து நெருப்புண்டு என்று அறிவதைப் போல, இயற்கைப் பொருள்களைக் கண்டவிடத்துக் கடவுள் ஒருவர் உண்டு என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். 'ஆனால், புகை வந்த இடத்தைத் தேடிக் கண்டவிடத்து ஆங்கு நெருப்பைக் காண்கிறோம். அது போல, இயற்கையில் கடவுளை நேரிற் காணவில்லையே!' என்று சிலர் சந்தேகிக்கலாம். கடவுளைக் காணுதல் எளிதில் முடியும் காரியம் அன்று. அதற்கான முயற்சியாகிய பக்தி, வைராக்கியம் முதலியன நம்மிடம் பொருந்தியபோது கடவுளை அட்டியின்றிக் காணலாம். பாலைப் பார்த்து, 'இதில் வெண்ணெய் உண்டு; நெய் உண்டு,' என்று கூறினால், 'அவை இதில் இல்லையே!' என்று எவரேனும் கூறுவாரா? கூறார். ஏனெனில், அவர்களுக்கு அப்பாலைக் காய்ச்சித் தயிராக்கிக் கடைந்து வெண்ணெய் எடுத்து உருக்கினால் நெய்யாகும் என்பது தெரியும். அது போலவே கடவுளைக் காணும் விருப்பமுடைய ஒருவன் வைராக்கியம் என்னும் கோல் நட்டு, அறிவாகிய கயிற்றைக்கொண்டு கடைந்தால், கடவுளாகிய வெண்ணெய் கிடைக்கும் என்ற பொருளில், திருநாவுக்கரசர் என்னும் பெரியார்,

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்;
உறவுக் கோல்நட்டு உணர்வுக் கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே"

என்று கடவுளைக் காணும் உபாயத்தைத் தெரிவிப்பாராயினர்.

இத்தகைய கடவுளுக்குக் குலம், குணம், குறி, புலம், தனக்கென ஒரு பற்று, குற்றம், மைந்தர், மனை, சஞ்சலம் முதலியன இல்லை. இதனுலேதான் பெரியோர்களும் கடவுளின் தன்மையைக் கூறவந்தபோது, 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி,' என்றும், 'தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி,' என்றும், 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட ஒண்ணுது,' என்றும் கூறிப்போந்தனர். அவன் அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து விளங்குபவன்; நெடிய பொருளில் நெடியவனும், குறிய பொருளில் குறியவனும், இப்படி ஒவ்வொரு பொருளினும் பொருந்தி நிற்பதே அவனது சிறந்த குணமாம். ஆனல் அவன் உயிர்களின் பொருட்டு ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, சம்பத்து, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு குணங்களையுடையவன் என்றும், தன் வயத்தனுதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருள் உடைமை என்றேனும்; அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்றேனும்; அறிவு, காட்சி, வீரியம், இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுளின்மை, அழியா

இயல்பு உடைமை என்றேனும் வழங்கும் எட்டுக் குணங்களையுடையவன் என்றும், கடவுளுக்குக் குணங்களை ஏற்றிக் கூறுவது அவரவர் புனைந்துரையேயன்றி மெய்யுரையாகாது.

இங்ஙனம் குணம், குறி, பேர், ஊர் ஒன்றும் இலனாய்ப் பார்க்கும் இடமெங்கும் ஒரு நீக்கமற நிறைந்திருக்கின்ற பரிபூரணனந்த வடிவினனுகிய கடவுளுக்கு நாம் செய்ய வேண்டுபவை பல உள. அவற்றுள் ஒன்று, அவன் நம்மை விரும்பி ஏற்று ஆட்கொள்ளும்படி செய்தலேயாகும். அப்படி அவன் நம்மை ஏற்றுக்கொள்ளுவதற்கு நாம் சில முறைகளைக் கையாள வேண்டும். அவையாவன: அவனுக்கு வெறுப்பான செய்கைகளை மேற்கொள்ளாது, விருப்பமான காரியங்களையே மேற்கொண்டு ஒழுகுதலும், அவன் வெறுப்பனவாகிய பொய், பொறாமை, வெகுளி, இன்னச்சொல் முதலிய தீய குணங்களை அறவே ஒழித்து, பிறருக்கு இதம் செய்தல், ஜீவகாருண்யம், அடக்கம், ஒழுக்கம், மெய்ம்மொழி புகலுதல் முதலிய நற்குணங்களை மேற்கொண்டு ஒழுகுதலுமாம். மேலும், அவனை என்றும், எப்பொழுதும் மறவாது துதித்தல் வேண்டும். அவ்வாறு செய்ய இயலாதேல், காலையும் மாலையுமாவது மறவாது துதிக்க வேண்டும். இப்படிச் செய்தால் கடவுள் நம்மைக் கைவிடான்.

ஆகவே, எவ்வளவு கற்ற போதும் கடவுள் ஒருவன் உண்டு என்னும் கொள்கையை மறவாது, அவன் விரும்பும் காரியங்களையே மேற்கொண்டு, வெறுக்கும் விஷயங்களைத் தள்ளி நடக்க வேண்டும்.

“கற்றதனல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?”

## 2. நட்பு

குறிப்பு: 1. நட்பு என்பது யாது? 2. நட்புக் கொள்ளுதற்குரியவர், 3. நட்பு வகை, 4. நட்பு ஆராய்தல், 5. நட்பில் பிழை பொறுத்தல், 6. முடிவுரை.

உலகிலுள்ள ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் ஈறான எல்லா உயிர்களும் தனித்து வாழ நாம் காண்கின்றோமில்லை. ஒவ்வொன்றும் தன் தன் இனத்தோடே சேர்ந்து வாழ்வது கண்கூடாகக் காணும் விஷயம். இதனால் கடவுள் சிருஷ்டிக்கு உட்பட்ட உயிர்கள் சேர்க்கையை விரும்பியே நிற்கின்றன என்பது வெள்ளிடைமலை. ஆகவே, இதனை வேறு வகையில் கூற வேண்டுமாயின், ஒவ்வொன்றும் நட்புக் கொண்டுள்ளது என்று கூறலாம். நட்பாவது உயிர்கள் ஒன்றுக்கொன்று கொள்ளும் மன நெகிழ்ச்சியாகிய உள்ளன்பே ஆகும். இத்தகைய நட்புப் பல காரணங்களால் உண்டாகிறது. சிலருக்கு இனிய சொல்லாலும் பொருளாலும் நட்பு உண்டாகிறது. வேறு சிலருக்கு அறிவாலும் ஒழுக்கத்தாலும் நட்பு உண்டாகிறது.

நாம் எப்பொழுதும், உள்ளன்புடையவர், உடனிருந்து சுக துக்கங்களை அனுபவிப்பர், துன்பம் வந்த போது உயிரையும் கொடுத்து உதவி புரிபவர், குண நலம், குடி நலம், நற்சுற்றம் முதலியன பொருந்தப் பெற்றவர், உலகப் பழிச்சொல்லுக்கஞ்சி நடப்பவர் ஆகிய இத்தகைய நற்குண நற்செய்கை உடையவரையே நாடி நட்புக் கொள்ளவேண்டும்.

நட்பு மூன்று வகைப்படும். அவை: தலை நட்பு, இடை நட்பு, கடை நட்பு என்பன. அவற்றுள் தலை நட்பானது சிறந்த நட்பாம். அதுவே முதல் நட்பாகும்.

அது மனத்தாலும் செயலாலும், ஒற்றுமைப்பட்டு ஒருவருடன் ஒருவர் பழகுதலாம் அது நாளுக்கு நாள் வளர் பிறைச் சந்திரனைப்போல வளர வல்லது. நூல்களைப் படிக்குந்தோறும் சுவையும் நயமும் தோன்றுவது போன்று, தலை நட்பும் பயிலுந்தோறும் இன்பமும், அன்பும் பெருக்க வல்லது.

இடை நட்பு என்பது, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று நடிப்பது; மேலுக்கு நட்பும் உள்ளுக்குப் பகையும் கொண்டு விளங்குவது.

கடை நட்பு என்பது, தம் நண்பனுக்குப் பல வகையான துன்பத்தைச் செய்ய எண்ணும் கீழான மக்கள் கொள்ளும் நட்பாம். இந்நட்பு, விரைவில் அழிந்து ஒழியும் தன்மையது; நீடித்திராதது. பொய் பேசி எல்லோருக்கும் கெடுதியும் பகையும் விளைவிப்பது; பொறாமை, கோள் சொல்லல், தூஷணமாகப் பேசுதல், திருடுதல் முதலிய தீக்குணங்களுக்கு உறைவிடமானது. இதுவே கூடா நட்பு என்றும் கூறப்படும். இக் கடை நட்புக் குணமுடையவர் தம்மால் செய்யக்கூடாத காரியங்களையும் செய்து முடித்து விடுவதாகப் பொய்க் கூறி நேசிக்க வருவர். அதனை நம்பி அவரோடு நட்புக்கொள்ளுதல் கூடாது.

ஒருவன் ஒருவனோடு நட்புக்கொள்ள நேரிடின், அவன் மேற்சொன்ன முத்திறத்தில் எத்திறத்தைச் சேர்ந்தவன் என்பதை முதலில் நன்கு ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் ஆராயாது நட்புக்கொள்ளுதல் கூடாது. அப்படிக் கொள்ளின், அது தீமையாக முடியும். நாம்,

> "ஆய்ந்தோய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
> தான்சாந் துயரம் தரும்"

என்ற வள்ளுவனார் எச்சரிக்கையை மறத்தல் கூடாது.

நாம் ஒரு முறை ஒருவனோடு நட்புக் கொண்டு விட்டால், பின்பு அவனை விட்டுப் பிரிதல் கூடாது; அவனிடம் குற்றம் கண்டபோதும் அதனைத்திருத்த முயலவேண்டும். "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" அல்லவா? "நெல்லுக்கும் உமி உண்டு; நீர்க்கும் நுரை உண்டு; புல் இதழ் பூவுக்கும் உண்டு" என்பதைக் கவனத்தில் வைத்தல் வேண்டும்; இங்ஙனம் கவனித்துக் குற்றத்தைப் பொறுத்தல் வேண்டும். எத்தனை முறை நம் நண்பன் குற்றம் செய்யினும், அத்தனை முறையும் அவற்றைப் பொறுத்தலே உத்தமக் குணமாம்.

நாம் நட்பின் பெருமையை விளக்கும் பல பெரியார் சரித்திரங்களைப் படித்து நலம் பெறுவோமாக.

---

## 3. பள்ளிக்கூட விடுமுறை நாட்களை நல்வழியில் கழிக்கும் முறை

குறிப்பு: 1. முன்னுரை, 2. விடுமுறை ஏற்படும் காலங்கள், 3. விடுமுறை நாட்களைக் கழிக்கும் முறை, 4. முடிவுரை.

விடுமுறை என்பது உலகில் தொழில் புரியும் மாந்தர்க்குக் கிடைக்கக்கூடிய ஓய்வு நாளாம். அவ்வோய்வு நாளில் இங்கு மாணவர்களுக்குரிய ஓய்வு நாட்களைப் பற்றிக் கூறுவோம்: மாணவரும் கற்றலாகிய தொழில் புரிபவரே யாவர்.

மாணவர்களுக்கு விடுமுறைகள் ஓய்வின் பொருட்டும் உற்சாகத்தின் பொருட்டும் விடப்படுகின்றன. மாணவர்கள் நாள் முழுதும் தங்கள் மனத்தைக் கல்வி அறிவிலேயே செலுத்தி வருவதால், அவர்களுக்கு இடையிடையே விடுமுறை விட வேண்டுவது அத்தியாவசிய

மாகும். மாணவர்களுக்கு வருஷத்தில் மூன்று முறை தொடர்ச்சியான விடுமுறைகள் விடப்படுகின்றன. இந்துப் பள்ளிக்கூடங்களாயிருப்பின் தசராக் காலத்திலும், கிறிஸ்தவப் பள்ளிக்கூடம் ஆயின் மைகல்மஸ் பண்டிகைக் காலத்தில் ஒரு முறையும், இந்துப் பள்ளிக்கூடமாயினும் கிறிஸ்தவப் பள்ளிக்கூடமாயினும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு ஒரு முறையும், கோடை காலத்தில் ஒரு முறையும் விடுமுறை விடப்படுகின்றது. இந்த விடுமுறைகள் முகமதியப் பாடசாலைகளில் மாறியும் விடப்படும்.

எந்தப் பள்ளிக்கூடத்தில் எந்த முறையில் விடுமுறை விடப்பட்டாலும், அந்தந்தக் காலங்களில் மாணவர்கள் தங்கள் விடுமுறை நாட்களை ஒழுங்கான முறையில் கழிக்க வேண்டும்; மனத்துக்கும் உடற்கும் ஓய்வு ஏற்படக் கூடிய முறையில் கழிக்கவேண்டும். அதாவது, சோம்பித் தூங்க வேண்டும் என்பதன்று. உல்லாசமான சில விளையாட்டுகளை ஆடவேண்டும்; புத்தகத்தையும் அடியோடு மறந்துவிடக்கூடாது. சிறந்த இலக்கியங்களையும், அறிவை விளக்கும் நவீனங்களையும், அறிஞர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களையும் படிக்க வேண்டும். இங்ஙனம் பொது நூல்களைப் படிப்பதனால் அறிவு விசாலப்படும். அவை சம்பந்தமான விஷயங்களை நன்றாக எழுதுவதற்கு அனுகூலமாகும். பள்ளிக்கூடப் பழம்பாடங்களையும் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அப்படிப் பழகவில்லை என்றால், பள்ளிக்கூடம் திறந்ததும் அவைகள் எல்லாம் புதுப்பாடமாகத் தோன்றும். மேலும் அவர்கள் எந்தப் பாடத்தில் போதுமான தேர்ச்சி பெறவில்லையோ, அதைத் திருப்பித் திருப்பிப் படிக்க வேண்டும். இங்ஙனம் படிப்பதற்கு விடுமுறை நாட்களே சரியான நாட்களாம்.

படிப்பு ஒன்றுதான் விடுமுறை நாட்களைக் கழிப்பதற்குரிய முறை என்று கொள்ளுதல் கூடாது. தேச சஞ்சாரம் செய்வதும், விடுமுறை நாட்களைச் சரியான வழியில் கழிப்பதற்குரிய முறையாகும். நாம் நூலில் கற்கும் இடங்களை நேரில் காண்பது நல்லது. அதனால் இயற்கைக் காட்சியை நேரில் கண்டு ஆனந்திக்கலாம்; அவ்வந்நாட்டு நகர வாழ்க்கையை நன்கு உணரலாம்; உலகறிவும் மிகும். நம் நட்பினர் உறவினர் வசிக்கும் ஊர்களுக்குச் சென்றும் விடுமுறை நாட்களைக் கழிக்கலாம். அவர்களோடு அளவளாவிப் பேசுதற்கு இக்காலமே தகுதியானது.

ஆகவே ஒவ்வொரு மாணவரும் மேற்சொன்ன முறையை அனுசரித்துத் தம் விடுமுறை நாட்களைக் கழித்துவரின், அவர் தமது பிற்கால வாழ்க்கையில் பேரறிஞராய், உலகானுபவம் மிகுந்தவராய்த் திகழ்வர் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

---

## 4. பள்ளிக்கூடக் கேளிக்கைப் பிரயாணத்தின் நன்மை

குறிப்பு: 1. முன்னுரை, 2. கேளிக்கைப் பிரயாணம் இன்னது என்பது, 3. பிரயாணத்தின் நோக்கம், 4. முடிவுரை.

மாணவ வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள பிள்ளைகள் தங்கள் காலங்களையெல்லாம் கல்வி கற்பதிலேயே கழிக்கின்றார்கள். அதனால், அவர்கள் மனம் குழம்பி, மூளை சிந்தனையாகிய வேலையில் ஆழ்ந்து கிடக்கிறது. இதனால் பிள்ளைகளுக்குக் கல்வியில் உற்சாகம் குறையவும் கூடும். பிள்ளைகள் எப்பொழுதும் கவலையின்றி இன்பமாகவே இருக்க விரும்பும் மனப்பான்மையுடையவர்கள். அப்படி

அவர்களைக் களிக்கச் செய்ய வேண்டுமானால், பள்ளிக்கூடங்களில் ஆண்டுக்கு ஒரு முறையோ, இரு முறையோ, கேளிக்கைப் பிரயாணம் போக ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால், இப்பிரயாணத்தின் நன்மையை அறிந்த சில பள்ளிக்கூட அதிகாரிகள் இதனை அடியோடு மறந்துவிடுவதில்லை. அடிக்கடி இத்தகைய பிரயாணங்களைச் சிற்சில பள்ளிக்கூடங்களில் ஏற்பாடு செய்கிறார்கள்.

கேளிக்கை என்பது சந்தோஷம், உற்சாகம் என்று பொருள்படும். ஆகவே, கேளிக்கைப் பிரயாணம் என்பது உற்சாகமாகப் பிரயாணம் செய்தல் என்பதாம் இப்பிரயாணம் தம்மை ஒத்த இள மாணவர்களோடும், தம்மோடு தினம் பழகும் உபாத்திமார்களோடும் செய்யப்படுகின்றமையின், உண்மையிலேயே அளவிறந்த உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதுதான். பள்ளிக்கூடங்களில் கட்டுத்திட்டங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும். இப்பிரயாணத்தில் அப்படி நடக்கவேண்டிய நியதி இல்லை. இச்சந்தர்ப்பங்களில் மாணவர்கள் சிறிது சுதந்திரம் பெற்றவர்கள் என்றே கூறலாம். மாணவர்கள் இத்தருணங்களில் தங்கள் இஷ்டம் போல ஆடிப்பாடி மகிழ்வார்கள். இயற்கையிலேயே ஓர் இன்பம் அவர்கள் மனத்தில் முகிழ்த்து எழும்.

இங்ஙனம் பிரயாணம் செய்வதன் முக்கிய நோக்கம் என்ன எனில், பள்ளிக்கூடப் பிள்ளைகள் தாங்கள் படிக்கும் தேச சரித்திரமோ, பூகோள படமோ, மற்றும் சில பாடங்களோ, ஏட்டுப் படிப்பேயாகும். ஒருவன் தாஜ்மஹாலைப் பற்றிப் படிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அதனால் அவனுக்கு அம்மஹாலைப் பற்றி அவ்வளவு பிரியம் ஏற்படாது. அதனையே அவன் நேரில் காண்பானானால், அவனுக்கு உற்சாகம் முதலியன உண்

டாகும்; அங்குள்ள விசித்திரமான விஷயங்களை என்றும் மறவான். இதுபோலவே ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டே போகவேண்டும். இப்பிரயாணம் ஒரு நாட்டின் இயற்கைக் காட்சிகளைக் காணத் துணையாக இருக்கிறது. இப்பிரயாணத்தால் அவ்வந்நாட்டு மக்கள் நாகரிக நிலையை அறியலாம். ஏட்டில் கற்றவைகள் அப்போது நம்பிக்கையுறும்; அறிவு விசாலமாகும்; ஒரு நாட்டின் உயர்வு தாழ்வை அறிந்து கூற இயலும்; நாம் சில ஒழுக்கங்களில் தவறி இருந்தால், பிற நாட்டாரை நேரில் காண்பதனால் நாம் அத்தவற்றினின்றும் திருந்திவிடலாம்; ஒற்றுமையும் ஏற்படும்.

இன்னும் இத்தகைய பயன்கள் பலவாக இருப்பதனால், பள்ளிக்கூடத்தில் இப்பிரயாணம் ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களில், இதில் பிள்ளைகள் அதிகமாகக் கலந்துகொள்ள வேண்டும். பெற்றோர்களும் இவ்விஷயத்தில் தடை ஏதும் செய்தல் கூடாது. பிள்ளைகள் இப்பிரயாணத்தில் கலந்துகொள்ள இஷ்டமில்லாமலிருந்தாலும், அவர்களைத் தூண்டி, இதில் சேர்ந்து போகும்படி செய்யவேண்டும். பிள்ளைகள் பிரயாணத்தில் கலந்து கொள்ளல் மாத்திரம் போதாது; தாங்கள் செல்லும் இடங்களில் ஏதேனும் அதிசயம் காணின், அதைத் தங்கள் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொள்ள வேண்டும். எவையேனும் அபூர்வப் பொருள்கள் கிடைப்பின், அவற்றை எடுத்து வந்து, தங்கள் பள்ளிக்கூடப் பொருட்காட்சி சாலையில் வைக்கவேண்டும்.

# 5. காலத்தின் அருமை

குறிப்பு: 1. முன்னுரை, 2. காலத்தின் அருமையை அறிவதனல் ஏற்படும் நன்மைகள், 3. அறியாமையால் ஏற்படும் தீமைகள், 4. முடிவுரை.

உலகில் சிலர் கல்வி அறிவுள்ளவராயும், சிலர் கல்வி அறிவில்லாதவராயும், சிலர் பலசாலிகளாயும், சிலர் பலவீனராயும், சிலர் ஏழைகளாயும், சிலர் பணக்காரர்களாயும் இருக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம் காலத்தின் அருமை பெருமைகளை அறிந்து, அதனைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டமையும், பயன்படுத்திக் கொள்ளாமையுமே யாகும் என்பது ஒவ்வொருவரும் உள்ளத்தில் அமைத்துக்கொள்ள வேண்டிய உண்மையாகும். ஆனல், சிலர் இவற்றிற்கெல்லாம் ஊழ்தான், அதாவது தலைவிதிதான் காரணம் என்று மேற்போக்காகக் கூறிவிடுவர். ஊன்றி நோக்கின், அவ்வாறு கூறுவது அடாது என்பது அவர்களுக்குத் தெரியவரும். இல்லை என்றால் திருவள்ளுவர்,

> "ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
> கருதி யிடத்தாற் செயின்."

என்று கூறுவரா? ஆதலின், அவனவன் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் காலத்தின் அருமையை அறிவதும், அதை அறியாமையுமே ஆகும் என்று அறிக.

ஆங்கிலத்தில் காலத்தின் அருமையைப் பற்றி ஒரு பழமொழி வழங்கி வருகிறது. அது "Time is gold" என்பது. இதன் பொருள் "காலமே காசு," என்பதாம். இப்பழமொழியில் சொற்கள் அமைந்த நிலையை நன்கு சிந்திக்க வேண்டும். காலமே காசு, காசே காலம். காலத்

யைப் பொன்னாக்கினர். பொன் செய்யும் மருந்து காலம் என்பது இப்பழமொழியின் கருத்தாம். காலத்தின் அருமை தெரிந்து அதனைப் போற்றுபவனே கற்றவன் என்றும், அறிஞன் என்றும் கருதப்படுவான்; தனக்கும் பிறர்க்கும் நன்மை தேடுபவனாவான்; பொருளைச் சம்பாதிப்பதற்குரிய மார்க்கத்தைக் கண்டவனாவான். இவன் எப்போதும் சுறுசுறுப்புள்ளவனாகவும், எந்த வேலை செய்வதற்கும் பின்னடையாதவனாகவும் விளங்குவான்.

காலத்தின் அருமையை அறியாதவன் உலகில் ஒரு பலனையும் அடையான். அவனைக் கொலைஞன் என்றும் கூசாமல் கூறிவிடலாம். ஏன்? அவன் விலைமதிக்க முடியாத காலத்தை வீணாகக் கழித்துக் கொலை செய்கிறான் அன்றோ? எந்தப் பொருளை அழித்தாலும், அதனை மீண்டும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், உயிரை அழித்துவிட்டால், மீண்டும் பெற இயலாது. அது போன்றதே காலமும். நாம் வீணாகக் கழித்த காலத்தை மறுபடியும் அடைய முடியாது. காலத்தின் அருமையை அறியாது சோம்பி இருப்பவனின் அறிவு பெருகாது. அவன் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்துவிட்டு, அதனைச் செய்து முடிக்க இயலாது, அதைச் செய்ய நேரம் இல்லையே என்று வருந்துவான். இஃது எவ்வளவு அறியாமை! இது, விதைக்க வேண்டிய நாட்களில் வீட்டில் உறங்கிவிட்டு, அறுக்கவேண்டிய காலத்தில் அரிவாள் கொண்டு போகிறவன் செயலுக்குச் சமம் அன்றோ? இன்றைக்குச் செய்யும் வேலையை நாளைக்குச் செய்யலாம் என்று விட்டு வைத்தல் ஆகாது. நாளை நாளை என்றால், அது நம்முடைய நாளாக இருக்குமோ, அன்றி நமனுடைய நாளாக இருக்குமோ, நாம் அறியோம்! மேலும், நாள் வாரமாகவும், வாரம் மாதமாகவும், மாதம் வருடமாகவும்

பெருகிக் கழியும். இதனுல் தொடங்கிய காரியமும் முற்றுப் பெருது போகும். இம்மட்டோ காலத்தின் அருமை அறியாதவன் மனம் பல விதத் தீய எண்ணங்கள் புகுவதற்கும் இடமாகும்.

இங்ஙனம் காலத்தின் அருமையை அறிவதால் ஏற்படும் நன்மைகளைக் கண்கூடாகப் பார்க்கின்றமையால், அதனை மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; தேனீ, எறும்பு முதலிய பிராணிகளை உற்று நோக்கியேனும் அறிவு பெறுதல் வேண்டும். ஒருவன் தன் வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியில் வீண் காலக் கழிவையும் தன் ஆயுளையே கொலை செய்வதாகக் கருதவேண்டும். காலம் என்பது நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்காகக் கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு நற்கருவி என்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே, உலகில் ஒருவர் உண்மையில் இன்பம் பெற விரும்பினுல், மேற்சொன்ன முறைகளை அனுசரித்து நடக்கக் கடவர்.

---

## 6. தேகப் பயிற்சி விளையாட்டுகளினுல் ஏற்படும் நன்மைகள்

குறிப்பு: 1. முன்னுரை, 2. ஆட்டத்தின் வகைகள், 3. ஏற்படும் நன்மைகள், 4. முடிவுரை.

பிள்ளைகள் தங்கள் சரீரம் உரம் பெற்றுச் சுறுசுறுப்பாக இருக்க வேண்டினுல், தேகப் பயிற்சிக்குரிய விளையாட்டுகளை விளையாட வேண்டும். ஆட்டத்தில் நாட்டம் இல்லாமல் படிப்பில் மட்டும் காலத்தைப் போக்கும் மாணவன், அறிவில் சிறந்து காணப்படினும் உடல் வன்மையில் குறைபாடுடையவனுகவே இருப்பான். அவன் தன் பிற்கால வாழ்க்கையைச் செம்மையாக நடத்துவ

தற்கு இயலாதவனாவான். அங்ஙனம் ஆயின், அவன் பெற்ற அறிவினால் அவனுக்கும் பிறர்க்கும் ஏற்படும் நன்மை யாது? இவற்றையெல்லாம் நன்கு அறிந்தே கலாசாலையார் தம் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் நன்றாக விளையாட வேண்டுமென்றே பல ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். கல்வி இலாகா அதிகாரிகளும் இதைக் குறித்து அதிகமாகக் கவனம் செலுத்தி, இதனைக் கட்டாயமான பாடங்களில் ஒன்றாக வற்புறுத்தி வருகின்றார்கள். ஆகவே, பிள்ளைகள் இதில் அவசியம் ஈடுபடுதல் வேண்டும்.

தேகப் பயிற்சிக்குரிய ஆட்டங்களை ஆங்கிலத்தில் 'ஸ்போர்ட்ஸ்' (sports) என்றும், 'கேம்ஸ்' (games) என்றும் இரு பெரும் பிரிவுகளில் அடக்கிக் கூறுவர். ஸ்போர்ட்ஸ் என்ற பகுதியில் ஓட்டப் பந்தயமும் (Running race), குதிக்கும் பந்தயமும் (Long and High Jump), இடையிடையே தட்டிகளை வைத்துத் தாண்டி ஓடும் பந்தயமும் (Hurdle race), கோணிகளில் புகுந்து நடக்கும் பந்தயமும் (Sack race), உருளைக்கிழங்கைச் சேர்த்துவிட்டு ஓடும் பந்தயமும் (Potato gathering), இரு பிள்ளைகள் ஒன்று சேர்ந்து வலக் காலையும் இடக் காலையும் கட்டிக்கொண்டு ஓடும் மூன்றுகால் பந்தயமும் (Three-legged race), கரண்டியில் எலுமிச்சம்பழம் வைத்து ஓடும் பந்தயமும் (Lime and Spoon race), கயிறு இழுக்கும் பந்தயமும் (Tug of war) பிறவும் இதனுள் அடங்கும். கேம்ஸ் என்ற பகுதியில் துடுப்பு ஆட்டமும் (Cricket), வளைகழி ஆட்டமும் (Hockey), உதை பந்தாட்டமும் (Foot Ball), பிடி பந்தாட்டமும் (Rugby), சல்லடைப் பந்தாட்டமும் (Tennis), கூடைப் பந்தாட்டமும் (Basket Ball) இவைபோல்வன பிறவும் அடங்கும்.

மேற்சொன்ன ஆட்டங்களை ஆடுவதனால் பிள்ளைகளுக்கு மன உற்சாகமும் தேக திடமும் ஏற்படுகின்றன. ஆட்டத்தில் கலந்துகொள்ளாதவனின் கை கால்கள் உரமின்றிச் சோர்ந்து போகும்; நோய்க்கும் இடமாகும். மேற்சொன்ன ஆட்டங்கள் காற்றோட்டமான வெளி இடங்களில் ஆடப்படுவதனால், பிள்ளைகள் சுத்தக் காற்றைச் சுவாசிப்பதற்கு அனுகூலமாகின்றன. பிள்ளைகள் நற்பழக்கத்திற்கும் இது காரணமாகும்; கோபம் முதலியன எழுந்தாலும் அடங்கிவிடும்; விரோதிகளையும் நண்பனாகக் கருதும் தன்மையை உண்டாக்கும். எவன் ஆட்டத்தில் மிகுதியாகக் கலந்து கொள்ளுகிறானோ, அவன் மனம் குதூகலமாகவும், தீய எண்ணங்கள் இன்றியும் விளங்கும். அவனுக்கு எப்போதும் பரந்த நோக்கம் இருக்குமே ஒழிய, குறுகலான நோக்கமிராது. ஒற்றுமையும் உண்டாகும்.

ஆகவே, பிள்ளைகள் இத்தகைய ஆட்டங்களில் ஈடுபடுதல் நலம். பெற்றோர்களும் பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் போகும் வேளை போக, மீதி நேரங்களில் விளையாடத் தூண்ட வேண்டும். சில பெற்றோர் பிள்ளைகளை எந்த நேரமும் படித்துக்கொண்டே இருக்கும்படி தூண்டுவர். அது நல்லதன்று. அங்ஙனம் செய்வோர் உண்மையில் பிள்ளைகளுக்குத் தீமை புரிகிறவரே யாவர். ஆங்கிலத்தில் ‘All work and no play makes Jack a dull boy’ என்று வழங்கும் பழமொழியையும் நன்கு அறிய வேண்டும். இதனால், எப்பொழுதும் விளையாடவேண்டும் என்பது கருத்தன்று. விளையாடும்போது விளையாட வேண்டும்; வேலை செய்யும்போது வேலைசெய்யவேண்டும். ‘ஓடி விளையாடு பாப்பா! நீ ஓய்ந்திருக்கலாது பாப்பா!’ என்ற நம் தேசீயக் கவிஞர் காலஞ்சென்ற சுப்பிர

மணிய பாரதியார் வாக்கையும் ஞாபகப்படுத்திக் கொள்வோமாக.

---

## 7. பெண் கல்வி

குறிப்பு: 1. முன்னுரை, 2. கல்வி இரு பாலாருக்கும் பொது என்பது, 3. பெண் கல்வியின் இன்றியமையாமை, 4. பெண்களுக்குரிய கல்வி, 5. முற்கால தற்காலக் கல்வி அறிவு உடைய பெண்மணிகள், 6. முடிவுரை.

கல்வி மக்களுக்கு இன்றியமையாதது. கல்வி அறிவு இல்லாதவர் கண்ணில்லாதவர்க்குச் சமம். முகத்தில் கண்ணிருந்தும் சூரியனது உதவி இல்லாவிட்டால் எப்படிப் பிரயோசனப்படாதோ, அதுபோலக் கண்ணிருந்தும் கல்வி அறிவில்லாதவர் குருடரே ஆவார். இதனாலேதான் திருவள்ளுவர், ‘கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்’ என்று கூறி இருக்கின்றனர். கல்வி அறிவு இல்லாதவர் மாந்தரே ஆயினும், விலங்குகள் என்றே அறிவுடையோரால் மதிக்கப்படுவர். ஆதலின், உலகில் மக்களாகப் பிறந்தார் ஒவ்வொருவரும் கல்வியைக் கற்றல் வேண்டும். ‘கல்வியை யார் கற்பது? ஏழைகள் கற்பதா? தனவந்தர் கற்பதா? பெண்கள் கற்பதா? ஆண்கள் கற்பதா?’ என்று வினவலாம். கல்வியை இன்னார் கற்கலாம், இன்னார் கற்றல் ஆகாது என்னும் நியதி இல்லை; ஆண்களும் கற்கவேண்டும்; பெண்களும் கற்க வேண்டும்; அனைவரும் கற்க வேண்டும்.

ஆனால், பெண்களுக்குக் கல்வி இன்றியமையாதது. பெண் சமூகம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால்,

ஒவ்வொரு பெண்ணும் கற்றிருக்கவேண்டும். பெண்கள் கல்வி ஆகிய அழகைப் பெற்றிருந்தால், அப்பெண்கள் மேற்கொண்ட இல்லறமானது நல்லறமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. தனக்கு வாய்த்த கணவன் கல்வி அறிவில்லாதவனுயினும், அவள் தன் கல்வி அறிவால் குடும்பத்தை ஒழுங்காக நடத்துவாள். வாழ்க்கையும் செம்மையாக நடக்கும். கல்வியறிவு, நல்லொழுக்கம் முதலிய நற்குணங்கட்குச் சாதனமாதலின், பெண்கள் ஒழுக்க முறைகளை மேற்கொண்டு நடக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, கல்வியைப் பெண்கள் அவசியம் கற்றல் வேண்டும் சிவாஜி மன்னர் சிறந்த போர் வீரராய்த் திகழ்ந்தமைக்கு அவர் தம் தாயரே காரணராவார். அவ்வம்மையார் தாம் கற்ற இராமாயணம், பாரதம் முதலிய கதைகளை அடிக்கடி சொல்லி வந்தமையாலேதான், சிவாஜி மன்னர் இராம இலக்குமணர்களைப் போலவும், பீமார்ச்சுனர்களைப்போலவும் வீரராகத் திகழ வேண்டும் என்னும் மனேதிடங்கொண்டு, அவ்வாறே விளங்கினுர். இங்ஙனம் பெண் கல்வியினுல் ஏற்பட்ட பெரும் பயனை விளக்க இன்னும் இதைப் போன்ற கதைகள் பல நம் நாட்டுச் சரித்திரங்களில் உண்டு. ஆதலின், தங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் முன்னேற்றமடைய வேண்டுமானுல், பெண்கள் அவசியம் கற்கவேண்டும் என்பது கூறுமலே அமையும்.

'பெண்களுக்கு எத்தகைய கல்வியைக் கற்பிக்க வேண்டும்?' என்று சிலர் வினவலாம். அவர்களுக்கு நம் நாட்டுப் பழைய இலக்கியங்களையும், தேச சரித்திரங்களையும், பண்டைக் காலத்துப் பெண்மணிகளது வாழ்க்கைச் சரித்திரங்களையும் கற்பித்தல் வேண்டும்; சிக்கன முறையைக் கையாளும் விதத்தையும், குடும்பப் பாதுகாப்பு

முறைகளையும், பிள்ளைகளை வளர்க்கும் விதங்களையும், வரவு இவ்வளவு, செலவு இவ்வளவு என்று கணக்கு வைக்கும் பழக்கத்தையும் கற்பிக்க வேண்டும்; வீட்டை அழகு படுத்தும் முறையையும், சுத்தம் செய்துகொள்ளும் முறைகளையும், வந்த விருந்தினரை முகங்கோணுது உபசரிக்கும் முறைகளையும் கற்பிக்க வேண்டும்; கணவனிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும், மாமன் மாமி முதலியோர்களை எப்படி உபசரிக்கவேண்டும் என்ற விதங்களையும் ஒழுங்காகக் கற்பிக்க வேண்டும். பெண்கள் தங்கள் காலங்களை வீணுகக் கழிக்காமல் இருக்கும் பொருட்டுத் துணி தைத்தல், துணி நெய்தல், சங்கீதம் கற்றல், சித்திரம் வரைதல், பின்னல் முதலியவற்றைக் கற்றிருத்தலும் நலம்.

பழைய நூல்களால் நம் நாட்டில் பெண்கள் கற்று விளங்கினர் என்பது தெரிய வருகிறது. நமக்குத் தெரிந்த வரையில் ஔவையார் கல்வி அறிவில் சிறந்து விளங்கினர். அவ்வம்மையார் அமுதவாக்கன்றே, இன்னும் பாலர் முதல் விருத்தர் வரையில் பயின்று வருகின்றனர்! சைவ சமயத்தின் காரைக்கால் அம்மையார் ஆழ்ந்த கல்வி யறிவுடையவர். அவ்வம்மையார் பல பாடல்களையும் பாடியுள்ளார். அப்படியே வைணவ சமயத்தைச் சார்ந்த கோதையார் பாடிய பாடல்களை அல்லவா, இப்பொழுதுங்கூட மார்கழி மாதம் தினந்தோறும் பாடுகின்றனர்! ஆகவே, முற்காலத்திலும் பெண்மணிகள் கல்வியறிவில் ஆண் மக்களைப் போலவே சிறந்தும், சில சந்தர்ப்பங்களில் ஆண் மக்களைக் காட்டிலும் விஞ்சியும் இருந்தார்கள் என்பதை அறிகிறோம். இக்காலத்திலும் சரோஜினி தேவியார் போன்ற கல்விக்கரசியர் பலர் கல்வி கற்றுச் சிறந்து விளங்குவதை நாம் காண்கிறோம்.

ஔவையாரும், காரைக்கால் அம்மையாரும், கோதையாரும், சரோஜினி தேவியாரும் போன்ற கல்விக் கரசியர் பலர் நம் நாட்டில் தோன்ற வேண்டும். அதற் காகப் பெண்டிர் எல்லோரும் படிக்க ஊக்கம் கொள்ள வேண்டும். அதற்காகப் பெற்றோர்களும் துணையாய் இருக்கவேண்டும். அவர்களுள் ஆண் பெண் ஆகிய இரு பாலருக்கும் தகுந்த கல்வியைக் கற்பித்தல் வேண்டும்.

---

## 8. வாசகசாலை நூல்நிலையங்களின் பயன்

குறிப்பு: 1. கல்வி மாந்தர்க்கு அவசியம், 2. கல்வியைத் தேடல், 3. பொதுமக்கள் கல்வியறிவு பெறுவதற்கு உதவியாய் இருப்பவை யாவை? 4. வாசகசாலையும், நூல்நிலையமும் அமைத்தற் குறிய இடம், 5. இவற்றின் பயன், 6. முடிவுரை.

உலகிலுள்ள ஆண் பெண் ஆகிய இருபாலரும் கல்வியைக் கற்கவேண்டும். கல்வியே கண். கல்வியே பொருள். கல்வியே இன்பம். சுருங்கக் கூறின், எல்லா நன்மைக்கும் கல்வியே காரணமாம். கல்வியறிவுடைய வரையே உலகம் மதிக்கும்; அரசனும் விரும்புவான். ஆதலின், கண்போன்ற கல்வியை ஒவ்வொருவரும் கற்றல் வேண்டும். இது குறித்தன்றே திருவள்ளுவரும்,

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

என்று கூறினர்.

'இத்தகைய கல்வியை எங்ஙனம் பெறுவது? பாட சாலையில் பெறுவதா? அன்றி, வீட்டில் பெறுவதா?' என்று கேட்கலாம். நீர் வேட்கை மிக்கவன் நீருள்ள இடத்தைத் தேடிப் போகவேண்டுமே ஒழிய, நீர் அவனைத்

தேடி வராது. அதுபோலக் கல்வியுள்ள இடத்தில் கல்வி கற்க விரும்புபவன் போகவேண்டும். கல்வி பாடசாலையி லும் உண்டு; வீட்டிலும் உண்டு; தெருவிலும் உண்டு. ஆகவே, கல்வியை கற்க விரும்புபவன், அது கிடைக்கும் இடமெல்லாம் சென்று கற்றுக்கொள்ள வேண்டும். கல்வி யைப் பலரும் கற்றுப் பயனடைய வேண்டுமென்ற நன் னோக்கங் கொண்டே, அரசாங்கத்தார் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

வாசகசாலை: அரசாங்கத்தார் கல்வி அபிவிருத்திக் காக ஏற்படுத்திய பல மார்க்கங்களில் நூல்நிலையமும் வாசகசாலையும் அடங்கும். வாசகசாலைக்குச் சென்றால், அங்கும் பலவகையான பத்திரிகைகளைக் காணலாம்; ஒருவன் தினசரிப் பத்திரிகைகளையும், வார மாதப் பத் திரிகைகளையும் வாங்கிப் படிப்பது முடியாத காரியம். அத்தகையவன் இத்தகைய வாசகசாலைக்குச் சென்று தனக்கு விருப்பமான பத்திரிகைகளைப் பெற்று வாசிக்க லாம். பத்திரிகைகளைப் படிப்பதனால், உலகிலுள்ள பல நாட்டு விஷயங்களை அறியலாம். விளம்பரங்களைக் காண லாம். ஒருவன் இரயில் வண்டி எப்பொழுது வரும், எப் பொழுது புறப்படும் என்று அறிய வேண்டுமானால், அவ னுக்குப் பத்திரிகை துணை செய்யும். இப்படியே ஒவ் வொன்றையும் அறியலாம். வாரப் பத்திரிகைகளிலும், மாதப் பத்திரிகைகளிலும் பல நூல்களைப்பற்றி ஆராய்ச் சிக் கட்டுரைகளையும், தொடர் கதைகளையும், ஹாஸ்யப் பகுதிகளையும் படிக்கலாம் ஒருவன் ஒரு நூலைப் படித் திருக்கலாம்; அதற்குப் பொருள் சொல்லலாம்; ஆனால் அந்நூலின் உட்பொருள்களை அறியச் சக்தியில்லாதவனாக இருக்கலாம். அத்தகைய நூல்களின் உட்பொருள்களை அவன் இத்தகைய மாத வாரப் பத்தரிகைகளில் கண்டு

அறியலாம். பத்திரிகைகளால் அறிவு விசாலமாகிறது. அனுபவ உணர்ச்சி அதிகப்படுகிறது.

நூல்நிலையம்: இது பல நூல்கள் சேமித்துவைக்கப் பட்ட இடம். இங்கு பல பாஷைப் புத்தகங்களைக் காணலாம்; பல மத நூல்களைக் காணலாம்; பல விஞ் ஞான நூல்களையும், மேனாட்டுக் கீழ்நாட்டுக் கலைகளையும் பார்க்கலாம். விலையுயர்ந்த புத்தகங்களும் உண்டு; விலை குறைந்த புத்தகங்களும் உண்டு; ஆகவே, இதனுள் நுழைந்தால் யார் யாருக்கு எந்தெந்த மொழியில் எந்தெந்த நூலை வாசிக்க விருப்பமோ, அவரவர் அந்தந்த நூலைப் பெற்று வாசிக்கலாம். ஒருவன் எல்லா நூல்களை யும் பொருள் கொடுத்து வாங்க இயலாது. அத்துன் பத்தை அவன் நூல்நிலைய வாயிலாகப் போக்கிக்கொள்ள லாம். நாம் இதற்காகக் கட்டணம் ஒன்றும் செலுத்த வேண்டுவதில்லை. நூலை எடுத்துப் படிக்க வேண்டுவதே நமது வேலை. இந்நூல் நிலையத்தில் சென்று வாசிப்ப தால் உலக ஞானம் மிகும்; பொருள் தேடும் வழியும் புலனாகும்; ஒழுக்கமும் ஏற்படும். இந்நிலையத்தில் சென்று வாசிப்பது மக்களுக்கு உலக முன்னேற்ற வழிகளையும், பல நாட்டு மக்கள் வழக்க ஒழுக்கங்களையும் அறிவதற்கு அனுகூலமாகிறது.

நூல் நிலையமும் வாசகசாலையும் எங்கெங்கு இருக்க வேண்டும் எனில், ஒவ்வொரு வீதியிலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு வீதியிலும் இவ்விரண்டையும் அமைக்க இயலாவிட்டாலும், வாசக சாலையாவது அவசி யம் இருந்தே தீர வேண்டும். அதற்காக நகராண்மைக் கழகத்தார் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். நூல் நிலையங்கள் தெருத்தோறும் இல்லாவிட்டாலும்,

டிவிஷன்தோறுமாவது இருந்தே தீரவேண்டும். இதற்காக நகரக் காப்பாளர் உதவி செய்யவேண்டும். அந்தந்த டிவிஷன் பொதுமக்கள் நகரக் காப்பாளரையே எதிர் நோக்கி இருத்தல் கூடாது. பல தனவந்தர்களை அடுத்து உதவி பெற்று, நூல் நிலையத்தை ஸ்தாபித்துச் சீர் பெற நடத்தவேண்டும். இப்பொழுது சென்னையில் கன்னிமாரா நூல் நிலையமும், யூனிவர்சிடி நூல் நிலையமுந்தான் பொதுமக்கள் நன்மையின் பொருட்டு இருக்கின்றன. அங்கு எத்தனை பேர் சென்று படிக்க இயலும்? உத்தியோகத்தை விட்டு வீடுவந்து ஏதேனும் நூலைப் படிக்க விரும்பினால் அவ்வளவு தூரம் யார்தான் செல்ல விரும்புவார்? ஆதலின், நூல் நிலையம் டிவிஷன்தோறும் அமைய வேண்டும்.

இங்ஙனம் தங்கள் வீட்டுக்கு அருகே வாசகசாலையும் நூல் நிலையமும் அமைந்திருந்தால், மக்கள் அங்குச் சென்று படிக்க மனங் கொள்வார்கள்; அதைத் தங்கள் பொழுது போக்காகக் கொள்வார்கள்; அதனால் படிக்கும் பழக்கத்தையும் பெறுவார்கள்.

ஆயினும் மக்கள், 'நூல் நிலையம் எங்கள் தெருவில் ஏற்படட்டும்; அப்போது சென்று படிப்போம்' என்று காலத்தை வீண் போக்குதல் கூடாது. இது, 'அலை ஓய்ந்த பிறகு சமுத்திரத்தில் நீராடுவோம்' என்று சொல்லுவதற்குச் சமம். ஆதலின், 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்,' என்ற முதுமொழிப்படி, தங்களுக்கு ஓய்வு நேர்ந்த காலங்களிலெல்லாம் நூல் நிலையத்திற்கும் வாசகசாலைக்கும் சென்று வாசிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அதனால் ஏற்படும் நன்மை பல என்பதைப் பின்பு அவர்களே அறிவார்கள்.

# 9. சிக்கனம்

குறிப்பு: 1. முன்னுரை, 2. சிக்கனமாவது யாது? 3. சிக்கனத்தைக் கைக்கொள்ளும் முறை, 4. சிக்கனத்தின் இன்றியமையாமை, 5. சிக்கனத்தினுல் ஏற்படும் நன்மை, 6. முடிவுரை.

ஒருவன் உலகில் நல்வாழ்வை அடைய வேண்டினுல், அவன் பொருளைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். பொருள் இல்லாதவன் நடைப்பிணத்துக்குச் சமான மானவன் என்பது பெரியோர் கொள்கை. பொருள் இல்லாதவனுக்கு இன்பமும் புண்ணியமும் இல்லை; கீர்த்தி இல்லை; மக்களுக்குள் பெருமை இல்லை; எண்ணிய காரியங்களை ஈடேற்ற வழியும் இல்லை. இதனுலன்றே, தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும்,

> "பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருள் அல்ல(து)இல்லை பொருள்."

என்று கூறினர். ஆதலின், இத்தகைய சிறப்புடைய பொருளை ஒவ்வொருவனும் பாடுபட்டுச் சம்பாதிக்க வேண்டும்; 'திரை கடலோடியும் திரவியந் தேடு,' என்ற நம் ஔவை மூதாட்டியார் அமுத வாக்கைக் கடைப் பிடித்து ஒழுகவேண்டும்.

இவ்வளவு பெருமை வாய்ந்த செல்வத்தை நாம் சம்பாதித்துவிடுவது மாத்திரம் போதாது. இங்ஙனம் சம்பாதித்த பொருளைப் பாதுகாக்க வேண்டும். இதனை வற்புறுத்தவே, 'பொருள்தனைப் போற்றி வாழ்,' என்ற பழமொழியும் நிலவுவதாயிற்று. நாம் சேகரித்த பொருளை அவசியமான செலவுகளுக்குப் பயன்படுத்தி, அப்பொருளை விருத்தியாக்குவதற்கான முறைகளையும் கையாள

வேண்டும். செல்வத்தைப் போற்றி நல்ல முறையில் செலவு செய்யவில்லை என்றால், ஒருவனிடமுள்ள செல்வமானது வகையறியாமல் தாராளமாகச் செலவு செய்யப்பட்டுச் சீக்கிரத்தில் முழுவதும் அழிய, அவன் தரித்திரனாகித் திண்டாட வேண்டி வரும். எவ்வளவு செல்வமிருப்பினும் அளவறிந்து செலவு செய்தல் வேண்டும். 'வளவனாயினும் அளவறிந்து அழித்து உண்' என்பது நம் நாட்டுப் பழமொழியன்றோ? இப்படி முறை அறிந்து பொருளைப் போற்றிச் செலவழிக்கும் முறையே சிக்கனம் எனப்படும். இதுவே செட்டு என்றும் கூறப்படும்.

'சிக்கனத்தை எங்ஙனம் கையாளுவது?' என்று சிலர் வினவலாம். அதற்கு விடை கூறுவது சுலபம். ஒவ்வொருவரும் பின் காணும் முறைகளைக் கையாண்டு வரின், சிக்கனத்தைச் சுலபமாக அனுபவத்தில் கொண்டு வரலாம். ஒவ்வொருவரும், 'விரலுக்குத் தக்க வீக்கம்' என்றபடி வரவுக்குத் தக்க செலவு செய்ய வேண்டும். வாய்க்குச் சுவையான பல பண்டங்களையும், பெருந்தீனியையும் விரும்பிக் கடன் கொண்டாவது தேடிக்கொள்ளுதல் கூடாது. ஒரு பொருளை வாங்குவதற்கு முன் அப்பொருள் அவசியமா என்பதையும், அது இல்லாமல் தமது வாழ்க்கை நடவாதா என்பதையும் நன்கு யோசித்து, பிறகே அப்பொருளை வாங்கவேண்டும். அவசியமில்லாத பொருளை வாங்குதல் பயனற்ற செய்கையும் வீண் செலவும் ஆகும். தினமும் ஏற்படும் வரவு செலவுகளை ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைக்கும் வழக்கத்தைக் கையாள வேண்டும். இவ்விஷயத்தில் அசிரத்தையாக இருத்தல் கூடாது. எந்த வேலை எப்படி இருந்தாலும், இதனைத் தவறாது செய்யவேண்டும்' 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்றும், 'எழுதி வழங்காதான்

வாழ்க்கை, கழுதை புரண்ட களம்' என்றும வழங்கும் முதுமொழிகளைக் கவனிக்க.

சிக்கனமாக வாழ்தலால் ஏற்படும் நன்மைகள் பல. இவ்வாழ்வால் கடன் படாமல் வாழலாம்; உலகில் நம் வாழ்நாளைச் சீர்பெற நடத்தலாம். பொருளை நாளுக்கு நாள் விருத்தி செய்து கொள்ளலாம்; உத்தியோகம் முதலிய சாதனங்களினால் பொருள் வருவாய் இல்லாத காலங்களிலும், நமது வாழ்நாளில் இடையிடையே நிகழக் கூடிய வாழ்வு தாழ்வுகளுக்கும் ஈடு கொடுக்கலாம். இப்படிப் பல நன்மைகளைச் செய்யும் சிக்கன முறையை ஒவ்வொருவரும் கையாளவேண்டுமென்ற கருணை கொண்டன்றோ நம் ஔவை மூதாட்டியாரும்,

“ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.”

என உபதேசம் செய்துள்ளார்.

---

## 10. சுகாதாரப் பாதுகாப்பு

குறிப்பு: 1. சுகத்தின் இன்றியமையாமை, 2. சுகத்தைக் கைக்கொள்ளும் முறை, 3. முடிவுரை.

உலகில் மக்களாகப் பிறப்பது அரிதினும் அரிது. அப்படிப் பிறந்தாலும் நோயின்றிச் சுகமாக வாழ்வதோ அதனினும் மிக அரிது. இதனாலன்றோ, ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்,’ என்று நம் பெரியோர் கூறிச்சென்றனர். முருகனிடம் இராமலிங்க சுவாமிகள்

வேண்டிய வரங்களில், 'நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்,' என்பது ஒன்றன்றோ!

சுகத்துக்கு நிலைக்களனாக இருப்பது சரீரம். ஆகையால், இச்சரீரம் நோய் வாய்ப்படாது இருக்க ஒவ்வொருவரும் கவனித்துக்கொள்ள வேண்டும். நோய் நொடி இல்லாதவரே மனச்சாந்தியும், ஆறுதலும் உடையவராவர். தேக சுகமுள்ளவராலேயே உலகில் எல்லா வித நன்மைகளையும் அனுபவிக்க இயலும். உதாரணமாக, ஒரு தனவந்தனை எடுத்துக்கொள்வோம்; அவன் வெளியே போகவேண்டுமானால், மோட்டார் வண்டி, எடுக்கப் பிடிக்க ஆள், வேளைக்கு நல்ல உணவு ஆகிய இவைகள் எல்லாம் இருந்தாலும், அவன் எப்பொழுதும் படுத்த படுக்கையாய் நோய்கொண்டு வருந்தினால், மோட்டாரில் சென்றும், வேளை உண்டியுண்டும் அவன் சுகத்தை அனுபவிக்க இயலுமா? ஆதலால், முதலில் தேக சுகத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பிறகு இன்பம் அனுபவிப்பதற்கான முறைகளில் முயலவேண்டும். சுவரை வைத்துக்கொண்டன்றோ சித்திரம் எழுதவேண்டும். தேக சுகம் உடையவனே எடுத்த காரியத்தை இனிது முடிக்கும் ஆற்றல் உடையவனாவான். அவனே உற்சாகமும், முக வசீகரமும், உரமான மனமும் பெற்றுத் திகழ்வான். சுகங்கெட்டவன், தானும் ஒரு பயனும் அடையான்; உலகினருக்கும் சிறிதும் பயன்படான்.

இங்ஙனம் பல வகையிலும் நன்மை தரும் சுகத்தைப் பெறுவதெப்படி? சுகாதார முறைகளைச் சரியான முறையில் கையாளுவதே சுகத்தைப் பெறுவதற்குரிய வழியாம். சுகாதார முறைகளாவன: சுத்தக் காற்று, சுத்த நீர், சுத்த ஆகாரம், தேகப் பயிற்சி, உறக்கம் முதலியவற்றை

ஏற்படுத்திக் கொள்ளும் முறைகள் இந்த விஷயங்களில் அடிக்கடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

**சுத்தக் காற்று :** சுகத்துக்கு இன்றியமையாது வேண்டப்படும் சாதனங்களுள் காற்று முக்கியமானது. காற்றுலேதான் உயிர் உடலில் நிலைத்திருக்கிறது. ஒருவன் நீரும் ஆகாரமும் இல்லாமலே காற்றைச் சுவாசித்து உயிர் வாழலாம். அத்தகைய காற்றுச் சுத்தமாக இருக்கவேண்டும். அதனையே உட்கொள்ளவேண்டும். சுத்தமான காற்றில் ஜீவாதாரமான வாயு கலந்திருப்பதனால், நாம் சுவாசிக்கும் போது அது உட்சென்று இரத்தத்தைச் சுத்தி செய்யும். அசுத்தக் காற்றைச் சுவாசித்தலால், இரத்தம்கெட்டு, வியாதி உண்டாகும். சுத்தக் காற்றை விரும்புவோர் வெட்ட வெளிகளில் உலாவச் செல்லவேண்டும்; இருட்டைறயில் படுக்கக் கூடாது; காற்றோட்டமான அறைகளில் படுக்க வேண்டும்; முகம் மூடிப் படுத்துறங்கக் கூடாது; நெருங்கிய ஜனத்தொகுதிக்கு இடையே இருத்தலும் ஆகாது.

**சுத்த நீர் :** இரண்டாவது இன்றியமையாது வேண்டப்படுவது நீர். நாம் எப்பொழுதும் சுத்த நீரையே பருக வேண்டும். நீரை நன்றாகக் காய்ச்சி, வடிகட்டி ஆறவைத்துப் பருக வேண்டும். நீருள்ள கிணறு குளங்களின் அருகில் குப்பை கூளங்களைக் கொட்டி வைத்தல் கூடாது. அங்கு மலஜலம் கழித்தல் ஆகாது; ஆடுமாடுகளைக் கழுவுதல் கூடாது; வஸ்திரம் துவைத்தல் கூடாது; நீர் நிலைகளைச் சுற்றி நீரைத் தேங்க வைத்தல் கூடாது. இம்முறைகளைக் கையாளவில்லை என்றால், நமக்குச் சுத்தநீர் கிடைக்காது. நீர் அசுத்தப்பட்டால், அந் நீரில் வியாதிக்குரிய கிருமிகள் பல பெருகி, அதனை உட்கொள்ளுவோருக்கு விஷபேதி, வயிற்றுவலி முதலிய நோய்களை

உண்டாக்கி, அவர்கள் தேக சுகத்தைக் கெடுத்துவிடும். ஆகையினால், நீர் விஷயத்தில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

சுத்த உணவு: மூன்றாவதாக வேண்டப்படுவது உணவு. 'அன்ன மயம் பிராண மயம்,' என்பது பழமொழி. ஆகவே, தேகாரோக்கியத்திற்கு உணவு இன்றியமையாதது. இவ்வாகாரம் சுத்தமானதாய் இருக்க வேண்டும். புதிதாய்ச் சமைத்துச் சூடாக உள்ள உணவையே உட்கொள்ளவேண்டும். இரவில் சமைத்ததைப் பகலிலும், பகலில் சமைத்ததை இரவிலும் உண்ணலாகாது. நன்கு வேகாத பொருள்களைப் புசித்தல் கூடாது. உடலுக்கு ஏற்றதும், எளிதில் ஜீரணிப்பதற்குரியதுமான உணவையே உட்கொள்ளவேண்டும். அளவுக்கு மிஞ்சியும் உண்ணுதல் ஆகாது. இதனாலேதான், 'மீதூண் விரும்பேல்,' என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். இந்த முறையில் ஒவ்வொருவரும் பழகி, உணவினை உண்டுவரின், சுக தேகிகளாகித் திகழ்வர் என்பது உண்மையாம். இம்முறைக்கு மாறி நடப்பவர் நோய் வாய்ப்படுபவர் என்பதில் சந்தேகம் இல்லை.

தேகப் பயிற்சி: மேற்சொன்ன முறைகளைக் கவனிப்பதோடு தேகப் பயிற்சியையும் செய்தல் வேண்டும். தேகப் பயிற்சி கொள்வதால் சரீரம் திடப்படும்; நரம்புகள் எல்லாம் தத்தம் வேலைகளைச் செய்யச் சித்தமாய் இருக்கும்; இரத்த ஓட்டம் செம்மைப்படும்; வியாதி வரினும் அதிக கஷ்டத்தைக் கொடுக்காது. ஆதலின், மக்கள் தங்கள் வயதுக்கும் சரீர நிலைக்கும் ஏற்றவாறு சிலம்பப் பயிற்சி, மல்யுத்தம், உலாவுதல், நீந்துதல், நந்தவனம் பயிரிடல் முதலிய பயிற்சிகளைச் செய்யவேண்டும். தேகப் பயிற்சி

செய்யாதவர் தேக பலமின்றி உடல் மெலிந்து அஜீரணங் கொண்டு பாரிச வாய்வு முதலிய நோய்களுக்கு ஆளாவர். ஆதலின், தேகப் பயிற்சியும் சுகாதாரப் பாதுகாப்புக்கு ஆதாரமாகும்.

உறக்கம்: தேக சுகத்திற்கு உறக்கமும் இன்றியமையாததாகும். பகலில் உழைப்பதால் சில தாதுக்கள் தேய்வடைகின்றன. அவை நித்திரை செய்வதினாலும், இரத்த ஓட்டத்தின் உதவியினாலும் சரி செய்யப்படுகின்றன. மேலும், இவ்வுறக்கம் உழைப்பால் வந்த அயர்ச்சியைப் போக்குகிறது. ஆனால், பகலில் உறங்குதலும், காலையில் அதிக நேரம் உறங்குதலும் கூடா. ஒருவர் இரவில் ஏழு மணி நேரமே உறங்கவேண்டும். வயிறு நிரம்ப உண்ட பின்பும், ஒன்றும் உண்ணாது பட்டினியாய் இருக்கும்போதும் உறங்குதல் கூடாது.

சுகாதாரப் பாதுகாப்பு விஷயத்தில் கவனம் செலுத்தும் மனமுடையவர் மேற்சொன்ன முறைகளைக் கையாண்டு வரின், சுக சரீரத்தைப் பெறுவர். வாலிபர் இந்த விஷயத்தில் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

---

## 11. தெருவில் நடந்த ஓர் விபத்து

குறிப்பு: 1. சென்னையில் உள்ள தெருக்களில் ஆபத்து ஏற்படுவதற்குக் காரணம், 2. நாம் தெருவில் நடக்கும்போது கவனிக்க வேண்டியவை, 3. நான் போய்க்கொண்டிருக்கையில் நடந்த ஆபத்து, 4. நான் செய்த வேலை, 5. முடிவுரை.

சென்னை ஒரு பெரிய நகரம். இங்குப் பல தொழிற்சாலைகளும், கல்லூரிகளும், கடை வீதிகளும் இருக்கின்றன; ஜன நெருக்கமும் அதிகம்; அதனால், போக்கு

வரவுக்குரிய சாதனங்கள் மிக்குள்ளன. எந்தத் தெருவில் பார்த்தாலும் மோட்டார் வண்டிகளும், மாட்டு வண்டிகளும், குதிரை வண்டிகளும், துவிச்சக்கர வண்டிகளும், ஜட்கா வண்டிகளும் போவதும் வருவதுமாயிருக்கும். பெரும் பாதைகளாய் இருந்தால், பஸ் வண்டிகளும், டிராம் வண்டிகளும் போக்குவரவாய் இருக்கும். இத்தனை வண்டிகளுக்கும் இடையே ஜனங்கள் தங்கள் அலுவல்களுக்குப் போய்வர வேண்டும். அப்படிப் போய் வருபவர் பாதைகளில் வெகு ஜாக்கிரதையாக நடந்து போய் வரவேண்டும். அங்ஙனம் ஜாக்கிரதையின்றி நடப்பவர், ஆபத்துக்கு ஆளாகின்றனர்.

நாம் தெருவில் நடந்து போகையில் சில விஷயங்களைக் கவனித்து நடக்கவேண்டும். ஜனக் கூட்டத்தில் பிறரை இடித்துத் தள்ளிக்கொண்டு வேகமாகப் போதல் கூடாது. புத்தகங்களையேனும் கடிதங்களையேனும் படித்துக்கொண்டே நடக்கலாகாது. தலை குனிந்துகொண்டே போதலும் கூடாது. சிரித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும் நடத்தல் பெருந்தவறு. திடீர் என்று நடந்து வந்த பாதையை விட்டு எதிர்பாதைக்குப் போதல் கூடாது. அப்படிப் போக அவசியம் நேர்ந்தால், முன்னும் பின்னும் பார்த்தும், வண்டிகள் வாராத சமயம் பார்த்தும் போய்விடவேண்டும். நடுத்தெருவில் செல்லுதல் கூடாது. இருவர் பேசிக்கொண்டே போகையில் வண்டி வந்துவிட்டால், ஒருவரையொருவர் இழுத்தல் கூடாது. நாம் எப்பொழுதும் பாதைக்கு வலப் பக்கமாகவே போக வேண்டும். ஏனெனில், பாதைகளில் செல்லும் வண்டிகள் எல்லாம் இடப் பக்கமாகவே செல்லும். அவை அப்படிச் செல்லவேண்டும் என்பது அரசாங்கத்தார் உத்தரவு ஆகும். நாம் வலப்பக்கமாகப் போனால், எதிரில்

வரும் வண்டிகளைக் கவனித்து, வண்டிகள் தூரத்தில் வரும்போதே விலகிப் போகலாம்; இதனால் ஆபத்துக்கு ஆளாகாமல் தப்பலாம்.

மேற்சொன்ன முறைகளைக் கவனித்து நடவாவிட்டால், நாம் ஆபத்துக்கு ஆளாவோம். இதற்கு ஓர் உதாரணமாகத் தெருவில் நடந்த சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன்.

ஒரு நாள் தெருவழியே போய்க்கொண்டிருந்தேன். அப்போது ஒரு சிறுவன் நான்கு தெருக்கள் கூடுமிடத்தில் (சதுக்கத்தில்) அவசரமாய் ஓடினான். அப்போது ஒரு மோட்டார் வண்டி வேகமாக வந்துகொண்டிருந்தது. பையன் ஓடும்போது காலில் கல் தடுக்கி, கீழே விழுந்துவிட்டான். வேகமாக வந்த மோட்டார் வண்டி சிறுவன் காலின்மேல் ஏறியது. சிறுவன் கால் முறிந்தது. அதனால் அச்சிறுவன் நோய் பொறுக்கமாட்டாமல் அழ ஆரம்பித்தான். உடனே கூட்டம் கூடிவிட்டது. நான் அக்கூட்டத்தின் இடையே சென்று, சிறுவனை எடுத்துத் தகுந்தவாறு சிகிச்சை செய்தேன்; ஈரத்துணியை நன்றாகக் காலில் சுற்றினேன். பிறகு எந்த வண்டியால் சிறுவனுக்கு ஆபத்து நேரிட்டதோ, அந்த வண்டியிலேயே அவனை ஏற்றி, அருகேயுள்ள மருத்துவசாலைக்குக் கொண்டுபோனேன். அங்கு அவனைச் சேர்ப்பித்துப் பிறகு அவன் பெற்றோர் இருப்பிடம் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு விஷயத்தை அறிவித்துவிட்டு, நான் என் காரியத்திற்குச் சென்றேன்.

---

# 12. ஆகாய விமானம்

குறிப்பு: 1. பண்டைக் காலத்து ஆகாய விமானங்கள், 2. இக்காலத்து ஆகாய விமானங்கள், 3. தற்காலத்து ஆகாய விமானங்கள் ஏற்பட்ட வரலாறு, 4. ஆகாய விமானம் இயங்கும் விதம், 5. ஆகாய விமானத்தினுல் ஏற்படும் நன்மைகள், 6. முடிவுரை.

ஆகாய விமனம் என்பது விசையினுல் ஆகாயத்தில் இயங்கும் விமானமாம். பண்டைக்காலத்தில் இத்தகைய விமானங்கள் இருந்தனவாகப் பழைய நூல்கள் கூறுகின்றன. குபேரன் என்பவன் புஷ்பக விமானத்தில் நினைத்த இடத்துக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. சீவக சிந்தாமணி என்னும் தமிழ்க் காவியத்தில் சச்சந்தன் என்னும் அரசன் மயிற்பொறியாகிய ஆகாய விமானம் ஒன்றைச் செய்வித்து, அதில் தன் மனைவியை ஏற்றி, வேற்றிடம் செல்ல விடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இன்னும் இவை போன்ற ஆகாய விமானங்களில் முன்ஞேர் பலர் சென்றதாக நாம் பிற நாட்டுச் சரித்திர வாயிலாக அறிகிறோம்.

முற்காலத்து விமானங்களைப்பற்றி நூல்கள் சொல்லுபவைகளை நாம் படித்தும் கேட்டும் வருகின்றோம்; இப்போது அவ்வாறின்றி அவற்றைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். இக்காலத்து ஆகாய விமானங்களாய் விளங்குபவை ஜெப்ளின், ஏரோபிளேன் என்பன.

ஜெப்ளின்: இது முதன்முதல் ஜெர்மனித் தேசத்திலேதான் செய்யப்பட்டது. இதற்கு ஆகாயக் கப்பல் என்னும் வேறொரு பெயரும் உண்டு. இஃது ஏறக்குறைய 800 அடி நீளமும், 80 அடி உயரமும் உள்ளதாய் இருக்கும். இதில் சிறு சிறு கூண்டுகள் உண்டு. அவற்றில் காற்று நிரப்பப்பட்டிருக்கும். இதனைத் திசையறிந்து

திருப்புவதற்கும், முன்னும் பின்னும் தள்ளுவதற்கும் ஏற்ற விசைக்கருவிகள் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரயாணிகள் அமரும் இடமும், இயந்திரங்கள் இருக்குமிடமும் காற்றுப்பைக்குக் கீழே அமைந்திருக்கும். ஒரே சந்தர்ப்பத்தில் இதில் நூற்றுக்கணக்கான மக்கள் ஏறிப் போகலாம்.

ஏரோப்பிளேன்: இவ்விமானம் அமெரிக்க நாட்டில் வாழ்ந்த இரண்டு சகோதரர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. அவர்கள் ஓர்வில்ரைட்டு, வில்பர்ரைட்டு என்ற பெயருடையவர்கள். அவர்கள் பெட்ரோல் என்னும் மண் தைலச் சக்தியைக்கொண்டு ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்கள். அவ்வியந்திரத்தைப் பூர்த்திசெய்து, 1903-ஆம் ஆண்டு உயரப் பறக்கவிட்டார்கள். அஃது ஏறக்குறைய 59 விநாடிகளில் 852 அடி உயரம் பறந்து கீழே இறங்கியது. மீண்டும் அவர்கள் அதில் ஈடுபட்டு நல்ல முறையில் ஊக்கம் செலுத்துவதற்குத் தங்கள் தாய் நாடாகிய அமெரிக்கா நாட்டில் உதவி கிடைக்காமையால், அவர்கள் பிரான்ஸ் தேசம் சென்றார்கள். அவர்கள் முதல் முதலில் செய்து பறக்கவிட்ட விமானம் பெருங்காற்றில் அகப்பட்டுச் சேதமாய்விட்டபடியால், பிரான்ஸ் தேசத்தார் உதவிபெற்று, அங்கு ஒரு விமானம் செய்தார்கள். அது 1906-ஆம் ஆண்டு முடிவடைய அதில் வில்பர்ரைட்டு என்பவர் ஏறி, 2 மணி 20 நிமிஷம் வரை 77 மைல் பறந்தார். பிறகு அவர்களைப் பின்பற்றிப் பலரும் இத்தகைய விமானங்களைச் செய்ய ஆரம்பித்தனர்; வெற்றியுமடைந்தனர். இல்லை என்றால் ஐரோப்பாவில் யுத்தத்திற்கு முன்பு 82 விமானங்களிருந்த இங்கிலாந்தில் அப்போருக்குப் பிறகு பல்லாயிர விமானங்கள் வெளி வந்திருக்குமா!

இது பறக்கும் விதத்தைப் பற்றிச் சிறிது கூறு வோம்: இது காற்றாடி பறப்பதைப்போலப் பறக்கிறது. காற்றாடி பறப்பதற்குக் காற்று அவசியம். இவ்விமானத் திற்கும் காற்று அவசியம். காற்றாடியைச் செயற்கைக் காற்றைக் கொடுத்துப் பறக்க வைக்க இயலாது. ஆனால், இவ்விமானத்தில் செயற்கை காற்றை உண்டுபண்ணி இதைப் பறக்கவிடலாம். அதற்கு இவ்விமானத்திலுள்ள பெட்ரோல் இயந்திரம் பெரிய சுழல் காற்றை உண்டு பண்ணும். அதுவுமின்றி, இவ்விமானத்தின் எதிரில் காந்தத்தின் சக்தியால் சுழலும் விசிறியைச் செய்தமைத் திருக்கின்றனர். அது வேகமாகச் சுழலும்போது விமான மும் தரையில் வேகமாகப்போய் போதுமான காற்று ஏற்பட்டுவிட்டால், மேலே கிளம்பும். இவ்விமானம் சாயாமல் நேரே பறக்க இறக்கை போன்ற கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இவ்விமானம் பக்கங் களில் திருப்பப்பட வேண்டுமானால் அதற்குறிய கருவி களும் செய்து அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விமானம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு பலர் அறி வும் ஆற்றலும் துணையாகக்கொண்டு பலவகை விமானங் களைச் செய்தனர். அவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை மூன்று. அவை, ஒருசிறை விமானம் (Mono-plane), இருசிறை விமானம் (Bi-plane), முச்சிறை விமானம் (Tri-plane) என்பன. ஒவ்வொன்றும் ஒவ் வொரு தன்மையை உடையது. ஒருசிறை விமானம் வேகமாய்ப்பறக்கும். இருசிறை விமானம் ஆகாயத்தில் ஆடாமல் பறக்கும். முச்சிறை விமானம் மிகுந்த பாரத் தைச் சுமந்து செல்லும்.

இவ்விமானத்தினால் நல்ல பயனும் ஏற்படுகின்றது; தீய பயனும் ஏற்படுகின்றது. இது, காண முடியாத

இடங்களைக் கண்டுபிடிப்பதற்கும், இங்கிலாந்து முதலிய மேனுடுகளினின்றும் தபால் கொண்டு வருவதற்கும், தூரதேசத்திலுள்ள நோயாளிகளுக்கு வெகு விரைவாகச் சென்று மருந்து கொடுத்து சொஸ்தப்படுத்துவதற்கும், பெரிய காடுகள் தீப்பற்றிக்கொண்டால், மேலிருந்து மருந்துகளைத் தூவி வெகு சீக்கிரத்தில் தீயை அணைப்பதற்கும் பயன்படுகிறது. 1931-ஆம் ஆண்டில் வங்காளத்தில் கொசுக்களால் ஏற்பட்ட மலேரியாவை அழிக்க, சீமைத் தைலத்தைத் தெளிக்க இவ்விமானமே உதவியாய் இருந்தது. ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் வெட்டுக் கிளிகளால் பயிர்களுக்கு ஏற்படும் நாசங்களை நீக்க இவ் விமானத்தின்மூலம் மேலிருந்து மருந்துகளைத் தூவி அவ்வெட்டுக்கிளிகளைக் கொல்கின்றனர். தூரதேசப் பிரயாணத்திற்கு இதனைத் துணைகொண்டால், சுருங்கிய கால அளவில் சென்றுவிடலாம்.

இவ்வளவு நன்மை தரக்கூடிய இதனால் சில தீமையும் உண்டு: யுத்த காலங்களில் பல்லாயிரம் போர் வீரர்களை, ஆகாயத்தில் பறந்துகொண்டே இது விஷக்காற்றைப் பிரயோகித்து மடியச் செய்யும். பகைவர் நாட்டில் வெடிகுண்டுகளைப் போட்டு நாட்டைத் தீக்கிரையாக்கவும், எதிரிகள் இருப்பிடம் தெரிந்து அவர்களைக் கொல்லவும் இது பயன்படுகிறது.

## 13. கிராம வாழ்க்கை

குறிப்பு: 1. கிராமம் என்பது யாது? 2. கிராம வாழ்க்கைச் சிறப்புக்குக் காரணம், 3. கிராம வாழ்க்கையின் பயன், 4. முடிவுரை.

நகரத்திற்குப் புறம்பேயுள்ளதும், சில குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழ்வதுமான இடமே கிராமம் எனப் படும். வீடுகள் மிகுதியாக உள்ளது பெரிய கிராமம் எனப்படும். வீடுகளின் தொகுதி குறைவாயிருந்தால், அது குக்கிராமம் அதாவது சிறு கிராமம் என்று கூறப்படும். அங்குள்ள வீடுகள் அநேகமாக ஓலைகளால் அமைந்தன வாய் இருக்கும். ஆங்காங்குச் சிற்சில கல் வீடுகள் காணப் படும். பல தோப்புகள் அங்கு உண்டு; ஏரி, குளம், துரவு நிறைந்திருக்கும். அங்கு வேளாளர் வீதி, அந்தணர் வீதி, மற்றும் தொழில் செய்வோர் வீதி முதலியன தனித்தனியாய் அமைந்திருக்கும். அந்தணர் என்பவர் கோவிலில் பூசை செய்பவர். ஆதலின் கோவிலுக்கு அருகே வசிப்பவர். வேளாளர் உழுதுண்டு வாழ்பவ ராதலின், அவர்கள் வீடுகள் வயல்களை அடுத்தே இருக்கும். அங்குப் பிள்ளைகள் படிக்க, ஒரு சிறு பாடசாலையும் இருக்கும்.

கிராம வாழ்க்கையின் சிறப்பிற்குப் பல காரணங்கள் உண்டு. அங்கு ஜன நெருக்கம் இராது. வீடுகள் எல்லாம் நெருக்கிக் கட்டப்பட்டிரா. அங்கு உணவுப்பொருள் கள் புத்தம் புதியனவாகக் கிடைக்கும். ஏனெனில், அவைகள் குடியானவர்களின் தோட்டங்களிலேயே பயிரிடப்படுகின்றன. அங்குப் பால், தயிர், நெய் முதலிய உடலுக்குக் கொழுப்பைத் தரும் பொருள்கள் மலிவாகக் கிடைக்கும்.

நகர வாழ்க்கையில் உழைத்து அலுத்தவர் கிராம வாழ்க்கையையே கடைசியாக விரும்புவர். கிராமமே அவர்கள் ஓய்வுக்குரிய இடம். அங்கு ஜன நெருக்கம், போக்கு வரவுக்குரிய சாதனம் முதலியன இன்மையால், காற்றுச் சுத்தமாய் இருக்கும். அதனைச் சுவாசிப்பதால் நோய் நொடி யின்றி வாழலாம். தூம்பு தூசுகளால் ஏற்படக்கூடிய உபத்திரவம் அங்கு இல்லை. அங்கு ஊற்று நீரும், ஆற்று நீரும் சுத்தமாகக் கிடைக்கும். அங்கு வாழ்வதனால் உயர்ந்த உடையும் வேண்டுவதில்லை. நாலு முழத் துண்டு மேலுக்கு ஒன்றும் கீழுக்கு ஒன்றும் இருந்தால் போதுமானவை. வீணான செலவுக்கும் அஃது இடமன்று. தோப்புத் துரவுகள் நிறைந்திருப்பதனால் வெளியே உல்லாசமாகச் சென்று உலவி, தூய காற்றைத் துய்க்கலாம். மன அமைதிக்கும் அதுவே ஏற்ற இடம். பயிர் பச்சைகளின் பசுமையையும், பறவைகளின் இனிய கீதத்தையும் அங்குக் கண்டும் கேட்டும் இன்புறலாம். இயற்கைக் காட்சியை அனுபவிப்பதற்குக் கிராமமே தக்க இடம். நகரத்தைப் போலப் போக்குவரவுக்குரிய சாதனங்களால் ஏற்படும் பயம் அங்கு இல்லாமையால் சின்னஞ்சிறிய பிள்ளைகளும் வீதிகளில் சிறிதும் அச்சமின்றி ஆடி ஓடி விளையாடுவதற்குச் சௌகரியமாய் இருக்கிறது. பணிசெய்ய வண்ணான், அம்பட்டன், கருமான் முதலிய தொழிலாளர் காத்துக் கொண்டிருப்பர். அவர்களுக்கு உடனுக்குடன் பணம் கொடுக்க வேண்டுமே என்னும் கவலையில்லை. அவர்கள் வருஷத்திற்கொரு முறை நெல்லைக் கொடுத்தாலே திருப்தியாய் வாங்கிக் கொள்வார்கள்.

ஆகவே, எல்லா வகையிலும் கிராம வாழ்க்கையே நல்ல வாழ்க்கை. அங்குள்ளோர் நிலத்தைப் பண்படுத்தி

விளைவுப் பொருள்களை உண்டாக்குவதனாலும், ஆடு, மாடு களைப் பராமரிப்பதனாலும் தங்கள் வாழ்க்கையை அமைதி யாக நடத்தி வருகின்றார்கள். கிராம வாழ்க்கையினால் மக்களுக்கு ஒற்றுமையும் சகோதர பாவமும் மிகுந்து காணப்படுகின்றன.

---

## 14. சாதுரியம்

[குறிப்பு: 1. சாதுரியம் என்பது யாது? 2. சாதுரியத் தால் ஏற்படும் பயன், 3. முடிவுரை.

சாதுரியம் என்பது இடம், பொருள், ஏவல்களை அறிந்து, சமயோசிதமாக பேசுவதும் நடந்துகொள்ளு வதுமே யாகும். ஒருவன் தனது சாமர்த்தியம் ஒன்றைக் கொண்டே காரியத்தை முடித்துக்கொள்ள முடியாது. சாதுரியமே காரியம் முடிவதற்கு ஏற்ற கருவியாம். சில சந்தர்ப்பங்களில் ஒன்றும் பேசாது சும்மா இருப்பதும் சாதுரியமேயாகும். சந்தர்ப்பம் வாய்த்தபோது காரி யத்தை முடித்துக்கொள்வதும் சாதுரியமாம். ஆனால், இக்குணம் எல்லோருக்கும் பொருந்தியிருக்கும் என்று சொல்ல இயலாது; சிலருக்கே அமைந்த இயற்கைக் குணமாம்.

சாதுரியமாகப் பழகுவதற்கான முறைகள் பல உண்டு. எல்லோருடைய தன்மைகளையும் அறிந்து அவரவர்களிடத்து மரியாதையாகவும் உபசாரமாகவும் நடக்க வேண்டும். எல்லோருக்கும் மகிழ்ச்சி உண்டாகும் படி நடந்துகொள்ளவேண்டும். இப்படி நடப்பதனாலேயே நாம் முடித்துக்கொள்ள வேண்டிய காரியங்களை எளிதில் முடித்துக்கொள்ளலாம். நாம் பிறரோடு அளவளாவும் போது யார் யார் இடத்தில் எதைப் பேச வேண்டும்

என்பதை நன்கு அறிந்து பேச வேண்டும். இதனாலன்றோ, 'பேசப் புகுந்தனையோ, சாகப் புகுந்தனையோ,' என்னும் பழமொழியும் வழங்குகிறது? நாம் பேசுவதை எதிரி கவனிக்கும் விதமாகப் பேச வேண்டும். நம்மிடமுள்ள விஷயங்களை அறிய எதிரிகள் சமயம் பார்த்து ஒன்றைக் கேட்டு ஒன்றை வெளியிட வைப்பர். ஆதலின், எதிரிகளுடைய நோக்கத்தை அறிந்து, வெளியிடக்கூடிய விஷயங்களை வெளியிட வேண்டும். எதிரிகளுடைய உள்ளக் கருத்தை முகத்தால் மாத்திரமே அறிந்துகொள்ள இயலாது; கண்ணின் மூலமாகவும் அறியவேண்டும். இதனை எல்லோரும் அறிய முடியாது. சிறந்த யூகியே அறிவான். அப்படி நடந்து அதற்கேற்ப வார்த்தையாடவேண்டும். எதிரிகள் கோபமாகப் பேசும்போது நாமும் கோபமாகப் பேசக்கூடாது; சாந்தமாகப் பேச வேண்டும். 'ஒருவர் பொறை இருவர் நட்பு,' என்ற நம் அருமைத் தமிழ் நாட்டுப் பண்டைப் பழமொழியையும் கவனிக்க வேண்டும். ஆதலின், பிறர் அளவு கடந்து பேசும்போதும் நடக்கும்போதும் நாம் பொறுத்துக்கொள்ளவேண்டும் நாம் பேச்சிலும், நடையிலும், கல்வியறிவிலும், உலகப் பொது அறிவிலும், மற்றும் பல விஷயங்களிலும் சாதுர்யமுடையவர் என்பதை உலகத்தார் அறிந்துகொண்டால், பலர் நம்மிடம் அணுகித் தம் கஷ்டங்களை நம்மிடம் முறையிட்டுத் தக்க யோசனை கேட்பர். அவர்கள் காரியமும் சித்தியடையும். நாமும் அவர்களால் ஏதேனும் அடைய விரும்பின், அடையலாம். நம்மை விவேகி என்று உலகம் புகழும்.

ஆகவே, இயற்கையில் சாதுரியமாக நடக்கும் தன்மைகள் நம்மிடம் இல்லை என்றாலும், உலகப்போக்கை அனுசரித்துப் பலர் நடந்துகொள்ளும் முறைகளைப்

பின்பற்றியும் ஒழுகி வரின், பெருநலம் அடைய முடியும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

---

## 15. இன்சொல்

குறிப்பு : 1. இன்சொல் இன்னது என்பது, 2. இன்சொல்லால் ஏற்படும் நன்மை, 3. முடிவுரை.

உலகில் மாந்தர் ஒருவரையொருவர் நாடியே தம் வாழ்க்கையை நடத்த வேண்டியவராய் இருக்கின்றனர். யாரும் தாமாகவே ஒரு காரியத்தைச் சாதிக்க இயலாது. ஒருவன் எவ்வளவு தனவந்தனாயினும், ஏழை மக்கள் உதவியைப் பெற்றே தீரவேண்டும். ஆதலால், ஒவ்வொருவரும் இனிய சொற்களைப் பேசியே தீரவேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்குகிறது. இன்சொல்லாவது, பிறருக்கு எவ்விதத்திலேனும் தீமை பயவாமல் இருக்கும்படி பேசப்படுவதேயாம்.

இன்சொற்களைப் பேசுவதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் பல. இன்சொல் பேசுபவனை உலகம் விரும்பும். எல்லா நன்மைகளும் இன்சொல்லால் விளையும். கோபத்தைப் போக்குவதற்கும் இன்சொல்லைப்போன்ற துணைக் கருவி எதுவும் இல்லை என்றே கூறலாம். இன்சொல்லால் பகை ஏற்படாது ; பகைவனும் பணிந்து செல்வான். குடும்பத்தில் வாழ்பவருக்கு, இன்சொல் இன்றியமையாதது. ஒரு பொருளைப் பிறர்க்குத் தானம் பண்ணுவதைக் காட்டிலும் இனிய சொற்களைச் சொல்லுதல் நன்மை தரவல்லது என்று பெரியோர் கூறுவர். இன்சொல் பேசுவோர் தரித்திரத்தால் அல்லற்பட மாட்டார். அவர்களுக்கு உலகிலுள்ள ஒவ்வொருவரும் உதவி செய்வர்.

இவ்வின்சொல்லை இப்போது சொல்ல வேண்டும், இன்னாரிடத்துச் சொல்லவேண்டும் எனும் நியதி இல்லை. எப்போதும் இன்சொல் சொல்ல வேண்டுவதுதான். யாரிடத்திலும் இன்சொல் கூறவேண்டுவதுதான். அரசனாயினும், தன் குடிகளிடத்தில் இன்சொல் சொல்லியே தன் அரசைச் செலுத்தவேண்டும். உயர்ந்த உத்தியோகத்திலுள்ளவரும் தமக்குக் கீழ், தொழில் செய்யும் வேலைக்காரர்களிடத்தில் இன்சொல் கூற வேண்டும். பட்டம் பதவி பெற்றுவிட்டோம் என்று துர்வார்த்தைகளைப் பேசினால், எசமானனுக்கும் சேவகனுக்கும் மன ஒற்றுமை இன்றி, அல்லல் விளையும். எசமானனிடத்தில் அன்பாய் இருக்கிற சேவகனும், சேவகனிடத்தில் அன்பாயிருக்கிற எசமானனும் சுகமடைவார்கள் என்பது பெரியோர் கொள்கை. ஆதலின், இன்சொல்லுக்கு ஒரு கட்டுப்பாடு இல்லை.

இம்முறையைத் தோட்டி முதல் தொண்டைமான் வரையில் உள்ள சகலரும் கையாளுவராயின், உலகில் உள்ள எந்த உயிர்க்கும் தீமை உண்டாகாது; எல்லோரும் ஒற்றுமையுடன் வாழலாம்; சகோதரத்துவமும் ஏற்படும்; ஐஸ்வரியமும் தானே வந்தடையும் என்பது பெரியோர் கருத்து. ஒருவன் எவ்வளவோ செல்வமும், வீடு வாசலும், தொழிற் செய்வோரும் உடையவனாய் இருப்பினும், இன்சொல்லாகிய ஒன்றைப் பெறவில்லை என்றால், அவற்றால் அவன் பயனடைய மாட்டான் என்பது நிச்சயம்.

> "இனிய உளவாக இன்னாத கூறல்
> கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

என்னும் திருக்குறள் இங்கு நினைவு கூர்தற்குரியது.

## 16. செல்வத்தைச் சரியான வழியில் செலவிடும் முறை

குறிப்பு: 1. முன்னுரை, 2. பொருளைச் சம்பாதிக்கும் முறை, 3. சம்பாதித்த பொருளைச் செலவழிக்கும் முறை, 4. முடிவுரை.

உலகில் மக்கள் அடையவேண்டுபவை மூன்று: அவை அறம், பொருள், இன்பம் என்பன. அறத்துக்கும் இன்பத்துக்கும் காரணமாய் இருப்பது பொருள். பொருள் இன்றி அறத்தையும் இன்பத்தையும் ஒருவன் பெற இயலாது. அது நோக்கியே முன்னோர்களும் பொருளை அறத்துக்கும் இன்பத்துக்கும் நடு நாயகமாகச் சொல்லி வருகின்றனர் மேலும், 'பணம் பத்துவிதமும் செய்யும்'; 'பணமே உலகை ஆள்கிறது'; 'பணமே சுவாதீனத்துக்கு வழி'; 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பன போன்ற வாக்கியங்கள் பணத்தின் சிறப்பை விளக்க வழங்கி வருகின்றன. ஆகவே, பொருள் இலௌகிக மக்களுக்கு இன்றியமையாதது என்பது தெரிய வருகிறது. இத்தகைய பொருளைச் சம்பாதிக்க ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். பொருள் சம்பாதிக்கவேண்டும் என்று சொன்னால், எந்த விதத்திலேனும் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்பதன்று. ஒருவன் பொய்ச்சாட்சி சொல்லியும், மோசம் செய்தும், அதிக வட்டி வாங்கியும், நம்பிக்கைத் துரோகம் செய்தும், பொருளைச் சம்பாதிக்கலாமாயினும் இவைகளெல்லாம் அறமாகா. அறவழிகளில் சம்பாதிப்பதே நல்லது உடலை வருத்தியோ, நியாய முறையில் வியாபாரம் செய்தோ, உத்தியோகம் செய்தோ, பொருளைச் சம்பாதித்தல் வேண்டும்.

இங்ஙனம் கிடைத்த பொருளைத் துர்விநியோகம் செய்தல் கூடாது ; சூதாடித் தோற்றலும் குடிக்கச் செல

வழித்தலும், கேளிக்கை விளையாட்டில் செலவு செய்தலும் கூடா. நல்ல வழியிலேயே செலவு செய்யவேண்டும். சுயநலத்தைக் கருதியோ, பரநலத்தைக் கருதியோ பொருளைச் செலவு செய்தல் வேண்டும். முதலில் தன்னைக் காப்பாற்றிக்கொண்டே பிறரைக் காப்பாற்ற வேண்டும் என்பது உலக வழக்காகும். தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய முறையில் முதலில் செலவு செய்யவேண்டும் "தனக்கு மிஞ்சியது தானம்," என்னும் பழமொழியையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால், இதையே பிரதானமாகக் கொண்டு சுய நலம் பாராட்டக்கூடாது. செல்வத்தை உலகப் பொது நன்மைக்காகவும் செலவு செய்தல் வேண்டும். ஏழை எளியவர்களுக்கும் உதவவேண்டும் ஆங்காங்கு அன்ன சத்திரம் கட்டிக் கூன், குருடு, செவிடு, நொண்டிகளை ஆதரிக்கவேண்டும்; மருத்துவச் சாலைகளை ஏற்படுத்தி, அவைகளைப் பரிபாலிக்கும் முறையில் செலவு செய்தல் வேண்டும். கல்விச் சாலைகளை ஏற்படுத்தி, அவற்றைச் சீர்பெற நடத்தப் பொருளைச் செலவு செய்தல் வேண்டும். உயர்தரப் படிப்புக்குப் படிக்க விரும்பும் மாணவர்களுக்குப் பொருள் உதவி செய்தல் வேண்டும். மற்றும் எந்தெந்த முறையில் செலவழித்தால் உலகுக்கு நன்மை பயக்குமோ, அந்தந்த முறைகளில் செலவு செய்தல் நல்லது.

மேற்சொன்ன முறைகள் சிறந்த பொருள் உடையார்க்கே முடியும் என்று இருத்தல் ஆகாது. ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கேற்ற வழியில் செலவு செய்தல் வேண்டும்.

---

## 17. உத்தியோகத் தேர்வு

குறிப்பு: 1. முன்னுரை, 2. தொழில் முறைகள், 3. உத்தியோகம் தேர்ந்தெடுத்தல், 4. பெற்றோர் கடமை, 5. தவறான வழிகளில் தேர்ந்தெடுப்பதனாலுண்டாகும் தீமைகள், 6. முடிவுரை.

உலகில் ஒவ்வொருவனும் எப்படியேனும் ஜீவனம் பண்ணவேண்டியவனாய் இருக்கிறான். ஆனால், சிலர் தம் புண்ணிய வசத்தால் பிதிரார்ச்சித சொத்தைக் கொண்டு சுகமாக ஜீவனம் பண்ணுவர். பலர் உடல் வருந்தி உழைத்து ஜீவனம் செய்ய வேண்டியவராய் இருக்கின்றனர். ஆனால், இப்பொழுது எந்தத் தொழிலை மேற்கொள்வது என்பதுதான் கேள்வி.

இந்தக் கேள்வி அநேகமாகக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்விப் பயிற்சி முடிந்து வெளிவரும் மாணவர்களுக்கு ஏற்படுவது இயல்பு. அங்ஙனம் வெளிவரும் மாணவர்கள் எல்லாம் ஒரே தொழிலை ஏற்றுக் கொள்ள இயலாது. பொருள் உள்ளவர் தம் பிள்ளைகளுக்கு ஒரு தொழிலைக் கற்றுக்கொடுக்கப் பணத்தை ஏராளமாகச் செலவு செய்வர்; தம் பிள்ளைகளை மருத்துவராக ஆக்க வேண்டுமென்றும், வழக்கறிஞராக ஆக்க வேண்டுமென்றும், இஞ்சினியராக ஆக்க வேண்டுமென்றும் தம் பொருளைச் செலவிடுவர். ஏழை மக்கள் அங்ஙனம் செலவு செய்ய இயலாது. ஏழைப் பிள்ளைகள் சிறந்த அறிவாளிகளாக விளங்கி, அரசாங்கத்தாராலோ, சிறந்த வள்ளல்களாலோ உபகாரம் பெற்றால் அன்றித் தங்கள் உத்தியோகத் துறையில் முன்னேறப் பொருள் செலவிட முடியாது. பணந்தான் உத்தியோகம் பெறுவதற்குரிய சாதகமானது என்று கொள்ளவும் இயலாது. கல்வி கற்றால் அதற்கேற்ற உத்தியோகமும், கல்வி அறிவு இல்லை

என்றால் அதற்கேற்ற வேறு தொழில்களும் உலகில் உள்ளன.

உத்தியோகம் தேர்ந்தெடுப்பதை மிகவும் யோசித்துச் செய்யவேண்டும். அவர் அவர் மனத்துக்கும், பொருள் நிலைக்கும், உடல் வன்மைக்கும் ஏற்ற தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒருவர் மனமானது முதல் முதலில் எதை நாடுகிறதோ, அதையே அவர் மேற்கொள்ளவேண்டும். மேலும், 'இந்தத் தொழிலை மேற்கொண்டால், பொருள் வருவாய் கிட்டுமா' என்றும் கவனிக்கவேண்டும். 'அத்தொழில் உடலுக்கு ஒத்து வருமா' என்பதையும் யோசிக்க வேண்டும். ஒருவர் முதலில் வழக்கறிஞராகத் தொழில் புரியவேண்டும் என்று படித்துத் தேறிய பிறகு, தாம் படித்ததற்கும் மேற்கொண்ட தொழிலுக்கும் ஒருவித சம்பந்தமு மில்லாத தொழிலை மேற்கொள்வர். அங்ஙனம் அவர்கள் மேற்கொள்வதற்குக் காரணம், அவர்கள் முதலில் தம் தொழிலைத் தேர்ந்தெடுத்தபோது தம் இயல்புக்கேற்ற தொழிலை மேற்கொள்ளாததே ஆகும்.

இப்படிச் சில முறைகளைக் கையாளாமல் தொழிலைத் தேர்ந்தெடுப்பதால் பொருட் செலவும், வீண் முயற்சியும் ஏற்படுகின்றன. அதனால், தமது அருமையான தனத்தையும் வீணான வழியில் செலவிட்டவ ராவர். பின்னால் எந்தத் தொழிலில் பிரவேசித்து நன்கு செய்து வருகின்றனரோ, அந்தத் தொழிலை முதன்முதலிலேயே ஆரம்பித்துச் செய்து வந்திருந்தால், அந்தத் தொழிலில் தேர்ச்சியும், தனிச் சிறப்பும், பெரும் புகழும் உண்டாயிருக்கும்.

பெற்றோர் இந்த விஷயத்தில் பிள்ளைகளுக்கு உதவி செய்யவேண்டும். வீணாகப் பணத்தைச் செலவழித்துத்

தம் பிள்ளைகளுக்குக் கல்வியை மட்டும் கற்பிப்பதில் பயனில்லை. பெற்றோர் தம் பிள்ளைகளோடு அதிகமாகப் பழகுவதனால், அவர்களுடைய மன நிலையை நன்கு அறிய வழியுண்டு. அப்படி அறிந்து அவர்களை அவ்வத் துறையில் பயிற்றுவித்தல் தலையாய கடமையாகும். ஒரு பிள்ளை தன் பாடத்தைப் படியாமல் எப்பொழுதும் சித்திரமே எழுதுகிறான் என்று கவனித்தால், அவனுக்குப் பணத்தைச் செலவழித்து உயர்தரப் படிப்புக் கற்பிப்பதில் யாது பயன்? உடனே அவனை அத்துறையில் மேன்மேல் அபிவிருத்தி அடைவதற்கான மார்க்கத்தைத் தேடி, அதில் அவனை புகுத்த வேண்டும். இப்படியே ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகள் செயலை அனுசரித்து அவர்களை ஊக்கவேண்டும். சிலர், 'நம் கல்வி அறிவென்ன! செல்வச் சிறப்பு என்ன! உத்தியோகப் பெருமை என்ன! இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த நம் பிள்ளையையா நாம் சித்திரம் எழுதுவதற்கும், மற்றும் சில தொழில்களைச் செய்வதற்கும் பயிற்றுவிப்பது' என்று கருதுதல் கூடும். அப்படிக் கருதுதல் இயற்கைக்கு விரோதமானதாம். உலகறிந்த புலவராகிய திருவள்ளுவர்,

> "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
> அதனை அவன்கண் விடல்."

என்று கூறியதை யாவரும் மறுத்தல் கூடாது. ஆகவே, உத்தியோகத் தேர்வுக்குப் பெற்றோரும் உதவி செய்ய வேண்டும்.

ஒருவன் இங்ஙனம் எல்லாம் ஆராய்ந்து அறிந்து ஓர் உத்தியோகத்திற்குப் போய்விட்டால், அதனைச் சரிவரச் செய்து முடிக்க முயலவேண்டும். அதனை விட்டு விலகக்

கூடாது. வேறு ஒரு தொழிலில் மோகங்கொண்டுவந்த வேலையைக் கைவிடுதல் கூடாது. இங்ஙனம் முயன்றால், 'அன்ன நடை கற்கப்போய்த் தன்னடையும் இழந்தாற் போல,' ஆகும். ஒரு தொழிலை மேற்கொண்டால், அதில் மன உறுதியும் ஊக்கமும் இருக்க வேண்டும். இக்குணம் இருக்குமாயின், ஒருவன் மேற்கொண்ட வாழ்க்கை சீரும் சிறப்பும், பேரும் புகழும் பெறும். முதலில் பலனளிக்காத தொழிலைத் தேர்ந்தெடுத்தாலும், அதை விட்டு விடுதல் கூடாது. அதுவே பின்னால் பலன் கொடுக்கும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். ஒருவன் தொழிலில் மாறிக்கொண்டே இருந்தால், ஒன்றிலும் முழு அறிவு பெறாது, வாழ்வில் சங்கடப்படுவான்.

---

## 18. விடா முயற்சியே யாவற்றையும் வெல்லும்

குறிப்பு: 1. விடா முயற்சி என்பது என்ன? 2. விடா முயற்சியின் இன்றியமையாமை, 3. விடா முயற்சி எதையும் வெல்லும் என்பதை விளக்க ஒரு கதை, 4. முடிவுரை.

ஒருவர் ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்ற எண்ணமுடையவராய், சரீர கஷ்டம், பசித் துன்பம், உறக்கம், காலத்தின் அருமை முதலியவற்றைக் கவனியாது, தாம் எடுத்த காரியத்துக்கு இடையே எவ்வளவு இடையூறுகள் ஏற்படினும், அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது, மேலும் மேலும் முயன்று செய்வதே முயற்சி எனப்படும். இதனையே இடைவிடாது முயலுவது, விடா முயற்சி எனப்படும். இந்த விடா முயற்சிதான் உலகில் பல அதிசயப் பொருள்களையும்

விஞ்ஞான சாத்திரத்தின் விசித்திரங்களையும் விளங்கச் செய்கிறது.

உலகில் உள்ள சகல பொருள்களுக்கும், சகல காரியங்கட்கும், சுக துக்கங்களைக் கொடுப்பதற்கும், ஒருவன் உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் என்று கூறப்படுவதற்கும் முயற்சியே காரணமாம். இம்முயற்சி விதியையும் எதிர்க்க வல்லது. இதனாலன்றோ திருவள்ளுவ நாயனாரும்,

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

என்று கூறியுள்ளார். (இங்குத் தெய்வம் என்றது கடவுள் என்ற பொருளில் அன்று; ஊழ் என்ற பொருளிலாகும்). மீண்டும் அவர், 'இடைவிடாது முயன்றால் ஊழைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யலாம்,' என்றும் கூறியுள்ளார். ஒருவர் ஒரு காரியத்தைச் செய்து முடித்தே தீர வேண்டும் என்று முயன்றால், அதனைச் செய்தே முடிப்பார். அதில் ஐயமே இல்லை. இன்றேல், 'முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்,' என்ற உலக வழக்குப் பொய்யாகுமன்றோ? இப்போது மேனாட்டார் எந்நாட்டினரினும் மேம்பட்டு விளங்குதற்குக் காரணம் என்ன? அவர் தம் விடாமுயற்சியேயாம். முயற்சி இல்லாதவர் சோம்பேறிகள் ஆவர்; மூதேவிக்கும் இருப்பிடம் ஆவர்.

"முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

என்னும் திருவள்ளுவனார் பொன்மொழியை ஒவ்வொருவரும் தம் உள்ளத்தில் பொறித்து வைக்க வேண்டும்.

முயற்சியே ஒருவனுக்கு வரக்கூடிய எல்லாக் கஷ்டங்களை யும் வெல்லும். முயன்று பெருமை அடைந்தவர் பலரை நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். நம் நாட்டுக் கம்பர் முதலிய கவிஞர் பெருமக்களும், அயல் நாட்டு ஜகப் பிரியர் (Shakespeare) முதலிய புலவர் பெருமக்களும், தங்கள் இடைவிடா முயற்சியினால் உலகத்தைத் தங்களுக் குக் கடமைப்படுத்தியவர்களே ஆவார்கள். முயற்சியே எல்லாவற்றையும் வெல்லும் என்பதற்கு மேனாட்டுச் சரித்திர சம்பந்தமான ஒரு கதையைக் கவனிப்போம்.

முன்னொரு காலத்தில் ஸ்காட்டுலாந்தில் ஓர் அரசர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் ராபர்ட் புரூஸ் என்பது. அவர் தம் நாட்டுக்காக மிகவும் ஈடுபட்டு வந்தார். தம் நாடு முழுச் சுதந்திரம் பெற்று நிலவவேண்டும் என்பது அவரது கொள்கை. அக்காலத்தில் ஸ்காட்டுலாந்து ஆங்கில அரசாட்சியின் கீழ் இருந்தது. அதனை விடுதலை செய்ய அவர் ஆங்கிலேயர்களோடு போர் புரிய நேர்ந்தது; இப்படி அவர்களோடு ஆறு முறை சண்டை செய்தார்; ஒரு முறையும் வெற்றி கொள்ளவில்லை. அதனால், அவருக்குப் பொருள் நஷ்டமும், சேனை வீரர்களுக்கு உயிர்ச்சேதமும், மற்றும் பல இடையூறுகளும் நேர்ந்தன. அவர் ஒவ்வொரு முறையும் விடாமுயற்சியோடு போர் புரிந்தும் தோற்றுப்போனதைக் குறித்து மிகவும் வருந் தினார். அப்படி வருந்தியவர், 'இனிப் போர்வேண்டா; நாடு வேண்டா; காடே கதி,' என்று வெறுத்து, ஒரு மலைக்குகைக்குப் போய் ஒளிந்துக்கொண்டார்.

அம்மலைக் குகையில் ஒரு சிலந்திப் பூச்சி குகையின் முகட்டை அடைய ஆறு முறை முயற்சி செய்தது. ஒவ் வொரு முறையும் அஃது எவ்வளவு பிரயாசைப்பட்டும்

தான் அடைய வேண்டிய இடத்தை அடையவில்லை. ஆனால் அது தன் முயற்சியில் ஊக்கம் குறையவில்லை; ஏழாவது முறையும் முயன்றது. அந்த முறை குகையின் முகட்டை அடைந்தது.

அதன் செய்கைகளை எல்லாம் போர் புரிந்து அலுத்த அரசர் உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார்; அஃது ஏழாவது முறை வெற்றி கொண்டதை உள்ளத்தில் கொண்டார். உடனே அவர் உள்ளத்தில் ஓர் ஊக்கம் பிறந்தது; 'நானும் இம்முறை முயன்றால் வெற்றி பெறுவேன்,' என்று மனோதிடங்கொண்டு எழுந்தார்; உடனே படைகளைத் திரட்டினார்; புறப்பட்டார்; போர் தொடுத்தார்; வெற்றி கொண்டார்; களிகூர்ந்தார்.

இக்கதையை நாம் கூர்ந்து கவனித்தல் வேண்டும். சிறு ஜந்துவாகிய சிலந்தி, தான் பல முறை முயன்று கடைசியில் வெற்றி பெற்றது. அதுபோலவே, ராபர்ட்டு புரூஸும் எவ்வளவோ கஷ்டப்பட்டும், இடைவிடா முயற்சியின் பயனால் தம் கஷ்டங்களைப் போக்கி, இன்பம் அடைந்தார். அப்படியே ஒவ்வொருவரும் தளர்ச்சி அடையாது முயலவேண்டும். அப்படி முயன்றால், எத்தகைய கஷ்டங்கள் வரினும், அவற்றை எல்லாம் வெல்லலாம்.

## 19. நான் விரும்பிக் கொண்டாடும் ஒரு திருவிழா

குறிப்பு: 1. முன்னுரை, 2. கலைமகள் திருவிழாவின் வரலாறு, 3. நான் இத்திருவிழாவைக் கொண்டாடிய முறை, 4. இவ்விழாக் கொண்டாடுவதனாலுண்டாகும் பயன், 5. முடிவுரை.

உலகிற் பல திற மாந்தர் உளர். அவர்களுக்கு ஏற்றவாறு மதங்களும் உண்டு. அம்மதங்களுக்குத் தகுந்த வாறு விழாக்களும் ஏற்படுத்தப்பட்டு கொண்டாடப்படு கின்றன. இவ்விழாக்கள் மக்கள் மகிழ்ச்சியை உணர்த்து வனவாம். நான் தமிழன்; மேலும் மாணவன்; ஆதலின் நான் விரும்பிக் கொண்டாடும் விழா, கலைமகள் திருவிழா வாகும். மாணவனாகிய நான் இதை ஏன் கொண்டாட வேண்டும் எனில், அவ்விழாவிற்குரிய தேவதைகள் பார்வதி, இலக்குமி, சரஸ்வதியாகிய மூவர் எனினும், கல்விக்குரியவளாகிய சரஸ்வதியை முன்னிட்டு இத் திரு விழாவை நான் விரும்புகிறேன். முதலில் இவ்விழாவின் வரலாற்றைக் கூறிவிட்டுப் பிறகு நான் இதைக் கொண் டாடிய விதத்தையும் கூறுகிறேன்.

முன்னொரு காலத்தில் மகிஷாசுரன் என்னும் ஓர் அரக்கன் இருந்தான். அவன் பல வரங்களைப் பெற்று, தேவர்களை துன்புறுத்தி வந்தான். அதுகண்ட தேவர்கள் பிரமன், விஷ்ணு, ருத்திரன் என்னும் மும்மூர்த்திகளிடம் முறையிட்டார்கள். அவ்வசுரன் வரம் பெறும்போதே ஆண்மகன் எவனும் தன்னைக் கொல்லக்கூடா தென்னும் வரம்பெற்று இருந்தான். ஆகவே முத்தேவர்கள் தங்கள் நாயகிமாராகிய சரஸ்வதி, இலக்குமி, பார்வதி ஆகிய இவர் களிடம் முறையிட்டுக்கொள்ளும்படி தேவர்களுக்கும் கட்டளை யிட்டார்கள். அவர்களும் அவ்வாறே முறையிட, அம்மூவரும் மனமிரங்கி, அம்மகிஷாசுரனைக் கொல்லச்

சூழ்ச்சி செய்தனர். அதற்காக அவர்கள் ஒன்பது தினம் தவம் செய்தனர். கடைசியில் மூவரும் ஒன்று சேர்ந்து துர்க்கையின் வடிவோடு தோன்றி, அவனை எதிர்க்க வேண்டும் என்று தீர்மானித்தனர். அங்ஙனமே அவனோடு துர்க்கை போராடிக் கொன்றாள்.

அப்போது தேவர்களும் முனிவர்களும் அவளைத் துதித்தார்கள். துர்காதேவி அவர்களை நோக்கி, 'எங்கள் மூவரையும் நீங்கள் ஒன்பது தினங்களில் பூசியுங்கள்,' என்று கட்டளை இட்டாள். அவ்வாறே அவர்கள் இந்த ஒன்பது தினங்களை மூன்று பாகமாக்கி, முதல் மூன்று நாள் துர்க்கைக்குரிய நாளாகவும், நான்காம் நாள் முதல் ஆறும் நாள் வரையில் இலக்குமிக்குரிய நாளாகவும், ஏழாம் நாள் முதல் ஒன்பதாம் நாள் வரையில் சரஸ்வதிக்குரிய நாளாகவும் ஏற்படுத்திக்கொண்டு, பூசனை செய்தார்கள். இந்நாட்களே நவராத்திரி எனப்படும். இவ்வொன்பது நாட்களிலும் பூசனை புரிந்து பத்தாம் நாள் ஒரு காரியத்தை ஆரம்பித்தால் வெற்றியுண்டாகுமென்று, அந்நாளை விஜயதசமி என்னும் பெயரால் குறிப்பிட்டார்கள். இப்பத்துத் தினங்கள் சேர்ந்தே தசரா எனப்படும். ஆனால், மக்கள் எல்லோரும் இப்படித் தனித்துப் பிரித்து மூன்று தேவதைகளுக்கும் பூசனை புரிய இயலாதவர்களானபடியால், ஒன்பதாம் நாள் இம்மூவரையும் நினைத்து, இலக்குமிக்குரிய நவரத்தினங்களையும், துர்க்கைக்குரிய ஆயுதங்களையும், சரஸ்வதிக்குரிய புத்தகங்களையும் வைத்துப் பூசிப்பது வழக்கம். இது புராண வரலாறு.

நான் மாணவன் ஆதலின், சரஸ்வதி பூஜையில் எனக்குத் தனி மதிப்புண்டு. அதற்காக அப்பூசையை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டும் என்பது என்

எண்ணம். நான் சிறிது பணம் சேர்த்து வைத்திருந்தேன். அதைக்கொண்டு பல நிறக் காகிதங்களை வாங்கினேன்; அவற்றால் பல அழகிய பொருள்களைச் செய்து, என் வீட்டை அலங்கரித்தேன்; தென்னங்குருத்துக்களைக் கொண்டுவந்து, கிளிகள் முதலியன செய்து, மாவிலைத் தோரணங் கட்டித் தொங்கவிட்டேன். புத்தகங்களை எல்லாம் ஒழுங்காக என் வீட்டில் அடுக்கிவைத்தேன். மைக்கூடு, எழுதுகோல் முதலியவற்றையும் வைத்தேன். இதற்குள் வீட்டிலும் பண்டு பலகாரங்களைச் செய்து நடு வீட்டில் வைத்தனர். நான் சரஸ்வதியைப் பற்றிய பல பாடல்களைப் பாடினேன்; சகல கலாவல்லி மாலை என்னும் நூலைப் படித்தேன்; பிறகு தூபதீப ஆராதனைகளைச் செய்தேன். இப்படிச் சிறப்பாகப் பூசை நடந்தேறியது. வீட்டிலுள்ள எல்லோரும் உணவு அருந்தினோம். அன்று மாலை என் நண்பர் சிலரைக்கொண்டு பாட்டுக் கச்சேரி நடத்தினேன்; அது முடிந்ததும் அவர்களுக்குச் சிற்றுண்டி பரிமாறினேன்.

இந்துக்களால் கொண்டாடப்படும் ஒவ்வொரு திருவிழாவுக்கும் ஒவ்வொரு பலனுண்டு என்று பெரியோர் கூறுகின்றனர். அப்படியே இச்சரஸ்வதி பூசை பண்ணுவதனால் கல்வி பெருகும் என்றும், அறிவு அபிவிருத்தியாகும் என்றும் முன்னோர் கூறியிருக்கின்றனர்.

## 20. நாய் காட்டிய நன்றியறிவு

குறிப்பு: 1. முன்னுரை, 2. நாய் மக்களுக்குச் செய்யும் உதவி, 3. இதை விளக்கும் ஒரு கதை, 4. முடிவுரை.

கடவுள் மக்கள் உதவிக்காக மிருகங்களையும், பறவைகளையும், ஊர்வனவற்றையும், நீர்வாழ்வனவற்றையும், தாவரங்களையும் படைத்துள்ளார். ஆனால், அவற்றைக் கொண்டு பயன் அடைகின்றவர் வெகு சிலரே. சிலர் அவைகளைக்கொண்டு பயனடையாவிட்டாலும், அவற்றிற்குத் தீங்கு இழைக்க முன்வருகின்றனர்.

மிருகங்கள் மக்களுக்குச் செய்யும் உதவிகள் அனந்தம். அவற்றுள் நாய் மனிதனுக்குப் பல வகைகளில் நன்மை புரிகின்றது. அது வீட்டைப் பாதுகாக்கிறது; உண்மைத் தோழனாய் இருந்து உதவி செய்கிறது; நன்றி மறவா நன்னயமுடையதாயும் உளது. அதன் ஒவ்வொரு குணத்தையும் விளக்கப் பல கதைகள் உண்டு. அவற்றுள் அதன் நன்றியை விளக்கும் கதை ஒன்றை இங்குக் கூறுகிறேன்:

கௌப்பர் என்ற ஆங்கில அறிஞர் ஒருவர் இருந்தார். அவர் தம் வாழ்க்கை அனுபவங்களைக் கவியாகப் பாடுவது வழக்கம். அக்கவிகளுள் 'நாயும் அல்லி மலரும்' என்பது ஒன்று: அதில் அவர் தாம் வளர்த்து வந்த நாய் தமக்குச் செய்த நன்றியைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாளும் புலவர் பெருமானார் மாலைப் பொழுது வெளியே உலாவப் போவது வழக்கம். அப்பொழுது அவரது நாயும் உடன் செல்லும். ஒருநாள் அவர் ஓர் ஆற்றங்கரை ஓரமாக நடந்து சென்றார். நாயும் அவரைத் தொடர்ந்தது. ஆற்றில் அல்லி மலர்கள் வெகு

அழகாய் மலர்ந்திருந்தன. அம்மலர்களின் அழகு புலவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆதலின் அவர் அம்மலர்களில் ஒன்றைப் பறிக்க எண்ணினார். அம்மலர்கள் அவரால் எட்டிப் பறிக்க முடியாத தூரத்தில் மலர்ந்திருந்தன. ஆதலின், அவர் தமது வளைதடியால் அப்பூக்களில் ஒன்றை இழுத்துப் பறிக்க முயன்றார். ஆனால் அம்மலர் அவர் பறிக்கக் கைநீட்டிய போது தவறிப் போய்விட்டது. இப்படி இரண்டு மூன்று முறை அவர் முயன்றும், அது கிடைக்கப்பெறவில்லை. புலவர் மனம் வெறுத்து அம்முயற்சியைக் கைவிட்டார்; பின்பு ஆற்றோரமாக நடக்க ஆரம்பித்தார்.

புலவர் இங்ஙனம் புஷ்பத்தைப் பறிக்கச் செய்த முயற்சிகளை எல்லாம் அவருடன் வந்த நாய் கவனித்துக் கொண்டே இருந்தது. புலவர் மீண்டும் தாம் வந்த வழியே திரும்பினார். அப்போது நாய் அவருக்கு முன் ஓடியது. புலவர் எந்த இடத்தில் எந்தப் புஷ்பத்தைப் பறிக்க முயன்றாரோ, அவ்விடத்தில் சென்றது; அங்கிருந்து ஆற்றில் குதித்தது. ஆறோ, ஆழமானது. வெள்ளமோ, புரண்டு கொண்டிருந்தது. அந்த நாயோ, நீந்திப் பழகியதும் அன்று; எனினும், தன் எஜமானர் விரும்பியதைத் தான் முடிக்கவேண்டும் என்ற ஒரே எண்ணத்தை மனத்தில் கொண்டது; அதனால், உயிரையும் மதியாது, நீரில் குதித்தது; தன் எஜமானர் எந்தப் பூவைப் பறிக்க முயன்று விட்டு விட்டாரோ, அதையே பறித்துக்கொண்டு, வாயில் கௌவி வந்து புலவர் பாதத்தில் வைத்து வாலை அசைத்தது. இதுகண்ட புலவர் மனம் பூரித்தது. அவர் தமது நாயின் அறிவையும், நன்றியறியும் குணத்தையும் கண்டு ஆனந்தங்கொண்டு மெச்சினார்.

இக்கதையால் நாம் அறியும் நீதி யாது? நாய் தன் எஜமானர் அபீஷ்டத்தை நிறைவேற்றத் தன் உயிரையும் மதியாது ஆழமான நீரில் குதித்து, அப்புஷ்பத்தைக் கொண்டுவந்து கொடுத்துத் தன் நன்றியறிதலான குணத்தை நன்கு காட்டியதன்றோ? அது போலவே நாமும் நன்றியறியும் தன்மை உடையராய் இருக்க வேண்டும்.

---

## 21. 'அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது'

குறிப்பு: 1. முன்னுரை, 2. பழமொழியை விளக்கும் ஒரு கதை, 3. முடிவுரை.

'அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது,' என்பது ஒரு பழமொழி. இதன் பொருள் கரையை மீறிச் சென்ற நீர்ப் பெருக்கு மீண்டும் வரவேண்டும் என்று வருந்தினும் வராது என்பதாம். இதனால் விளங்கும் கருத்து, கையைவிட்டு நழுவிய பொருள் மீண்டும் வராது என்பதாம். இதனால், நாம் பொருளை இழந்தோமே என்று அதையே மனதில் வைத்துக்கொண்டு வருத்தப்படக்கூடாது. இழந்த பொருளை மீண்டும் பெற முயற்சி செய்ய வேண்டும். அன்றேல், பொருள் இழிவு வாராதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அப்படியில்லாமல், கைவிட்டு நழுவிய பிறகு வருத்தப் படுவது உசிதமன்று. இதனை விளக்க ஒரு கதை கூறுகின்றேன் :

முன் ஒரு காலத்தில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் தன் மனைவியோடு பூவும் மணமும், மணியும் ஒளியும், நகமும் தசையும் போல ஒருமனப்பட்டு வாழ்ந்து வந்தான். அவன் மனைவியோ, கற்பில் அருந்ததி என்றே

சொல்லத் தகுந்தவள். அவள் தன் கணவனை விட்டு அரைக்கணமும் பிரிய மனமில்லாதவள்; தன் கணவனைத் தெய்வமாக எண்ணியவள். ஆகவே இருவரும் ஒரு மனப்பட்டு இல்லறத்தை இனிது நடத்தி வந்தனர். ஒரு நாள் அவர்கள் வசிக்கும் அரசு வீதி வழியாக மக்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கிடையே இரண்டு பிணங்கள் தூக்கிச் செல்லப் பட்டன. அவற்றைக் கண்ணுற்றாள் அரச மாதேவி; இரு பிணங்கள் ஒரே சமயத்தில் செல்லுதற்குக் காரணத்தை அறிந்துவரத் தன் வேலையாள் ஒருவனை அனுப்பினாள். அவன் விஷயம் அறிந்து வந்து, 'இப்பொழுது பிணமாகத் தூக்கிச் செல்லப்பட்டவர்கள் நம்மூரில் வாழ்ந்தவர்களே. கணவன் சிலகாலம் நோயால் பீடிக்கப்பட்டுப் பிறகு இறந்தான். அது கண்ட அவன் மனைவி, தான் இனி உலகில் இருந்து பயனில்லை என்று அறிந்து, தற்கொலை புரிந்து உயிர் விட்டாள். அவளது கற்பின் தன்மையை மெச்சிய நகரமாந்தர் இப்படித் திரண்டு போகின்றனர்,' என்றான். இதைக் கேட்ட அரச மாதேவி, 'சீ! இதுதானா அதிசயம்! நல்ல கற்புடைய மனைவியாய் இருப்பின், கணவன் பட்டான் எனின், விட்டாள் உயிர் என்ற நிலையில் கணவனோடு உயிர் விடவேண்டும்,' என்று கூறினாள்.

இவற்றை யெல்லாம் அரசன் கேட்டு மனத்தில் தன் மனைவியின் உண்மைக் கற்பைச் சோதிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். இது நடந்த பல நாள் கழித்து, ஒரு நாள் அரசன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். சென்றவன் ஒரு வேலையாளனை அழைத்துத் தான் ஒரு புலியால் கொல்லப்பட்டதாக அரசிக்குத் தெரிவித்து, என்ன நடக்கிறது என்பதையும் அறிந்து வரக் கட்டளையிட்டான். அவனும் அங்ஙனமே அரசியிடம்

தெரிவிக்க, அரசி, 'ஆ! அப்படியா! என்று கீழே விழுந்தாள். உடனே உயிர் போய்விட்டது. வேலையாள் இதனை ஓடோடியும் சென்று அரசனிடம் தெரிவித்தான். அரசன் வந்து பார்த்தான்; மனைவியின் உண்மைக் கற்பைக்கண்டு வருந்தினான்; அழுதான்; அலறினான்; விம்மினான்; 'ஐயோ!' என்றான்; 'ஆராயாது செய்தேனே!' என்றான். என்ன செய்தும் என்ன பயன்! 'அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வருமா?'

அரசன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களைச் செய்வித்தான். அரசன் பித்தங்கொண்டவன் போலப் பிதற்றத் தொடங்கினான்; நாட்டு விவகாரங்களையும் சரிவரக் கவனிப்பதில்லை; மந்திரி பிரதானிகள் எவ்வளவோ சொல்லியும் கேட்டிலன்; எப்பொழுதும் சிங்காரத் தோட்டத்திலேயே வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில் அவ்வூருக்கு ஒரு முனிவர் வந்தார். அவரிடம் அரசன் தன் விஷயத்தைக் கூறினான். அரசனுடைய மனத்தை மாற்றும்படி மந்திரி முதலானவர் முனிவரை வேண்டினர். முனிவரும் அதற்கு ஒவ்வி, புது மண் பாண்டம் ஒன்றை வாங்கிக்கொண்டார்; அரசனிருக்கும் தோட்டத்தை அடைந்தார். அரசன் பார்க்கும்படி அக்குடத்தால் கிணற்றினின்றும் நீர் முகந்தார், முகந்து வருகையில் வேண்டுமெனவே குடத்தைக் கீழே நழுவ விட்டார், அது உடைந்தது, முனிவர் அங்கேயே உட்கார்ந்து வருத்தப்படத் தொடங்கினார்; "ஐயோ! என் புதுப் பானையே, உன்னைப் போல எனக்கு வேறொன்று கிடைத்தாலும், உனக்கு நிகராகுமா? உன்னுடைய அகன்ற வாயையும் அழகையும் என்று காண்பேன்!" என்று பலவாறு கூறிப் புலம்பினார்.

இவ்வாறு முனிவர் புலம்பியதைக் கேட்ட அரசன் அருகே வந்து, 'பெரியீர், நீர் இந்தப் பானைக்காக இப்படி வருந்தலாமா? போனது வருமா? இது போனால் வேறு பானையை வாங்கிக்கொள்ளக் கூடாதா? இப்படி இருக்க, நீர் வருந்துவானேன்?' என்று வினவினான்.

முனிவர், "அரசனே, உண்மைதான்; நான் பானை உடைந்ததற்காக வருந்தவில்லை. உன் மனக் கஷ்டத்தைப் போக்கவே இப்படிச் செய்தேன். நீ எனக்குச் சொன்னவையெல்லாம் நீயே யோசித்துப் பார். மனைவியை இழந்ததால் இப்படி வருந்தி மெலிகின்றனையே! இதனால் அரச காரியங்களையும் மறந்தனையே! இனி இப்படி வருந்தாதே; போனகாரியத்தைக் குறித்துக் கவலைப்படாதே. உன் காரியங்களைக் கவனி," என்று கூறினார். அரசனும் உண்மை உணர்ந்து, முன்போல அரசாண்டு வந்தான்.

இக்கதையினால் நாம் அறிவதென்ன? போனதைக் குறித்து வருந்துதல் கூடாது. இனி நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்துச் சிந்தித்து இழந்த பொருளை மீண்டும் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். என்ன முயற்சி செய்தாலும், அதைப் பெற இயலாது என்று தெரிந்தால், அதை விட்டு, அதற்கு நிகரான வேறு பொருளைப் பெற முயற்சி செய்ய வேண்டும் என்பதாம்.

## 22. நான் கண்ட ஒரு திருமணக் காட்சி

குறிப்பு: 1. திருமண அழைப்பு 2. திருமணக் காட்சி 3. முடிவுரை.

சென்ற ஆண்டு சித்திரை மாதம் என் மைத்துனர் தம்பியாருக்குத் திருச்சிராப்பள்ளியில் செல்வக் கலியாணம் நடைபெற்றது. அதற்காக என் தந்தையாரும் தாயாரும் அழைக்கப்பட்டிருந்தனர். நானும் அவர்களோடு புறப்பட்டேன். அதற்காக நான் பள்ளிக்கூடத்தில் மூன்று நாள் விடுமுறை பெற்றுக்கொண்டேன். திருமணம் திங்கட்கிழமை நடந்ததாலின், நாங்கள் இரண்டுநாளைக்கு முன்னமே போக வேண்டுமென்று வெள்ளிக்கிழமை இரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏறிப் புறபட்டோம். வண்டி மறு நாள் விடியற்காலையில் திருச்சிராப்பள்ளியில் எங்களை இறக்கியது. நாங்கள் ஸ்டேஷனிலிருந்து ஒரு வண்டி பேசித் திருமணம் நடக்கும் இல்லத்தை அடைந்தோம். எங்கள் பந்து மித்திரர் எங்களை அன்புடன் வரவேற்றனர்.

மாப்பிள்ளைக்குப் பெண் கொடுப்பவர் அவ்வூரில் சிறந்த தனவந்தர். ஆகையால், திருமணப் பந்தல் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டது; மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. ஞாயிற்றுக்கிழமை இரவு பல பந்து மித்திரர் வந்துகொண்டிருந்தனர். பலர் காலையில் திருமணத்துக்கு வேண்டிய சடங்குகளைத் தயாரித்துக் கொண்டும், வெற்றிலைப் பட்டியை மடித்துக்கொண்டும், வருகின்றவர்களை வரவேற்றுக்கொண்டுமிருந்தனர். அன்றிரவு முழுதும் திருமணத்திற்குரிய முக்கியமானவர் சிலர் விழித்துக்கொண்டே இருந்தனர். நானும் விழித்துக் கொண்டே இருந்தேன்.

பொழுது விடிந்தது. மணமக்கள் திருமணக்கோலத்தோடு மணப் பந்தலில் வந்து அமர்ந்தார்கள். பலர் திருமணத்திற்கு வந்தபடியே இருந்தனர். இங்குள்ளவர்களுக்கு ஓய்வு என்பதே இல்லை. வருகின்றவர்களை உபசரிப்பதிலும், வந்து விடை பெறுகிறவர்களுக்குத் தாம்பூல சந்தனங்களைக் கொடுப்பதிலும், உணவுக்கு ஏற்பாடு செய்வதிலுமாகப் பலர் ஈடுபட்டிருந்தனர். என்னையும் வருகின்றவர்களை வரவேற்பவரில் ஒருவனாக நியமித்தனர். திருமணம் நல்ல முகூர்த்த வேளையில் முடிவடைந்தது. பலர் மணமகனுக்கும் மணமகளுக்கும் பல பரிசு வழங்கினர்.

பிறகு போஜனத்திற்கு ஏற்பாடாயிற்று. கைதேர்ந்த சமையல் ஆட்களைக்கொண்டு சமையல் செய்யப்பட்ட உணவு பரிமாறப்பட்டது. முப்பழத்தோடும், உயர்ந்த பலகாரத்தோடும் எல்லோரும் உணவு அருந்தினர். பிறகு சிலர் சிரம பரிகாரம் செய்துகொள்ளச் சற்றுக் கண் அயர்ந்தனர். சிலர் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தனர்.

மாலை நான்கு மணி ஆனதும் கச்சேரிக்கு ஏற்பாடாயிற்று. அன்று கச்சேரிக்குச் சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் வாய்ப்பாட்டும், இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் பிடிலும், சென்னை வேணு நாயகர் அவர்கள் மிருதங்கமும் ஏற்பாடு செய்திருந்தனர். ஆதலின், அவர்கள் மாலை நாலு மணிக்கெல்லாம் வந்து சேர்ந்து விட்டார்கள். கச்சேரியும் ஆரம்பமாயிற்று. பாடகர் வெகு நேர்த்தியாகப் பாடிக்கொண்டிருந்தார். அவருக்கேற்ற பக்க வாத்தியங்களும் வெகு விமரிசையாக அமைந்திருந்தால் கச்சேரி நல்ல மாதிரியாகவே நடந்தது. கச்சேரிக்கு வந்தவர்களுக்குச் சிற்றுண்டி அளிக்கப்பட்டது. இப்படி முதல்நாள் கழிந்தது.

மறுநாள் காப்புக்களைவு முடிந்தபின் மாலையில் மணமகனும், மணமகளும் மோட்டாரில் ஊர்வலம் வந்தனர். அவ்வூர்வலத்திற்குத் திருவீழிமிழலைச் சகோதரர்கள் நாதஸ்வரமும், நீடாமங்கலம் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை தவல் வாத்தியமும் ஏற்பாடு செய்திருந்ததால், அன்று தெருவில் ஜனங்கள் நிறைந்து இசைக்கடலில் திளைத்தார்கள். வழி முழுதும் பாணவேடிக்கைகள் நடந்துகொண்டே இருந்தன. பிறகு இரவு 10 மணிக்கு வீடு வந்தோம். அன்று இரவு போஜனமும் ஆயிற்று.

நானும் என் பெற்றோரும் புதன்கிழமை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏறிச் சென்னை வந்து சேர்ந்தோம். என் நண்பர் சிலர் திருமண விசேடத்தைக் கேட்டனர். நானும் அதன் சிறப்பை அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

---

## 23. நான் பார்த்த ஒரு திருவிழா

குறிப்பு: 1. முன்னுரை, 2. நான் பார்த்த ஒரு திருவிழா, 3. அத்திருவிழாவின் வரலாறு.

'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்,' என்பது ஒரு முதுமொழி. இதன் பொருள் கோயில் இல்லாத ஊரில் குடித்தனம் செய்தல் கூடாது என்பதாம். ஏனெனில், கோயில் இல்லாத ஊர், திரு இல்லாத, (அழகு இல்லாத) ஊர் என்பது பெரியோர் கொள்கை. இதனைத் திருநாவுக்கரசர், 'திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்,' என்று திருவாய் மலர்ந்துள்ளார். கோயில் இல்லாத ஊரில் குடியிருப்பவர் தெய்வ பக்தி

குறைந்தவராய், பழிபாவங்கட்கு அஞ்சாதவராய், நாஸ்திகக் கொள்கையுடையவராய்த் திகழ்வர் என்ற காரணங்கொண்டே இத்தகைய அருள் வாக்குகள் எழுந்தன. இதனால் அநேகமாக ஒவ்வோர் ஊரிலும் எம்மதத்தினருக்கும் கோயில் ஒன்று இருப்பதை நாம் காணலாம். ஆனால் நம் தென்னிந்தியா, திருக்கோயில் மகிமையில் தலை சிறந்தது. இங்குக் காணப்படும் கோயில்களின் தொகையைப் போல வேறெங்கும் காணப்படாதென்றே துணிந்து கூறலாம்.

இப்படி எண்ணிறந்த திருக்கோயில்களில் சென்னைக்கு வடக்கே ஏழு மைல் தூரத்தில் திருவொற்றியூர் என்னும் திவ்விய சைவ க்ஷேத்திரம் ஒன்று உளது. இது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், பட்டினத்தடிகள், அருணகிரி நாதர், இராமலிங்க சுவாமிகள் முதலிய பெரியோர்களால் பாடல் பெற்றது. மேலும், பட்டினத்தடிகள் முத்தி பெற்ற தலமும் இதுவே ஆகும். இங்கு வருடா வருடம் பல திருவிழாக்கள் நடைபெறுவதுண்டு. அவற்றுள் மாசி மாதம் நடைபெறும் பிரமோற்சவமே சிறப்பானது. அதற்கு வெளியூரினின்றும் மக்கள் திரள் திரளாக வருவார்கள். அவ்வுற்சவம் பத்து நாட்கள் நடைபெறும். அவற்றுள் எட்டாம் நாள் உற்சவமாகிய மகிழடி சேவையே பெரிய திருவிழா. இதற்கே பல ஊர் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள். இந்தத் திருவிழாவுக்கு நானும் போயிருந்தேன். இவ்விழாவுக்கென இரயில்வே கம்பெனியாரும் ஸ்பெஷல் வண்டிகள் ஏற்பாடு செய்து, ஜனங்களுக்கு வசதி செய்வார்கள். தங்கசாலையினின்றும் பஸ் வண்டிகள் செல்லும். நான் துவிச்சக்கர வண்டியில் சென்றேன். ஆதலால், வழியில் ஜனங்கள் ஆணும்

பெண்ணுமாகக் குழந்தைகளுடன் அணி அணியாகச் சென்றதையும் வழி முழுவதும் தரும கைங்கரியமாக ஆங்காங்கு வழிப்போக்கர்களுக்கு நீர்மோரும், பானக நீரும் வழங்குவதையும் பார்த்துக்கொண்டே போனேன். ஊர் அணுக அணுக மக்களின் தொகுதி நெருக்கமாய் இருந்தமையின், நான் துவிச்சக்கர வண்டியில் போக முடியாமல் போயிற்று. நான் உடனே கீழே இறங்கி, அங்கு எனக்கு நண்பனான ஒருவன் வீட்டில் வண்டியை வைத்துவிட்டுக் கால் நடையாகவே சென்றேன். அப்படிப் போயுங்கூட, ஜனநெருக்கத்தில் வேகமாகப் போக முடியவில்லை. நான் தனியாகச் சென்றமையால், சமாளித்துக்கொண்டு போய்விட்டேன். திருவொற்றியூர்த் தேரடி முதல் கோயில் உள்புறம் வெளிப்புறம் வரையில் எள் போட்டால் எள் இறங்காதபடி அவ்வளவு மக்கள் நெருங்கியிருந்தார்கள். கடைகளும் இராட்டினங்களும் ஆங்காங்கு இருந்தன. சிறு பிள்ளைகள் எல்லாம் இராட்டினத்தில் ஏறுவதும் கடைகளிலுள்ள தின்பண்டங்களை வாங்கித் தின்பதுமாகக் குதூகலத்தோடு இருந்தார்கள். கோயிலுக்குள் சுலபமாகப் போக முடியவில்லை எனினும், கஷ்டப்பட்டு நான் உள்ளே நுழைந்து, சுவாமி தரிசனம் செய்து, வெளியே வந்துவிட்டேன். மணி நாலு அல்லது ஐந்து இருக்கும். அப்போது சுவாமியை அலங்காரம் செய்து மகிழ மரத்தடியில் கொண்டுவந்தனர். அத்தருணம் எங்கும் 'அர அர' என்ற ஓசையே நிறைந்தது. எல்லோரும் தரிசித்தனர். நானும் தரிசித்துக் கும்பிடு போட்டுவிட்டு, விபூதி குங்குமப் பிரசாதம் பெற்றுக்கொண்டு, திரும்பி விட்டேன். பிறகு நான் என் நண்பர் வீட்டுக்கு வந்து, என் வண்டியை எடுத்துக்கொண்டு இரவு ஏழு மணிக்கு என் வீடு வந்து சேர்ந்தேன். பிறகு

என் தகப்பனாரை அவ்விழாவின் ஆதி காரணத்தைப் பற்றி வினவினேன். அவர் அதன் வரலாற்றைக் கூறினார். அது வருமாறு :

திருநாவலூரில் சடையனார் என்ற ஒருவர் இருந்தார். அவருக்குச் சிவபெருமான் திருவருளால் நம்பியாரூரர் என்ற புதல்வர் பிறந்தார். அவருக்குத் திருமண வயது வந்ததும் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியார் திருக்குமாரத்தியாரை மணம் பேசி முடித்தனர். திருமணம் நடக்கின்ற சந்தர்ப்பத்தில் சிவபெருமான் விருத்த கோலங்கொண்டு திருமணத்தைத் தடுத்து, மணமகனார் தமக்கு அடிமை என்று வாதிட்டு, அப்படியே அவரை அடிமையாக்கிக் கொண்டார். அப்போது வந்தவர் சிவபெருமான் என்று அறிந்த சுந்தரர், சிவபெருமான்மீது பாடலைப் பாடி மகிழ்ந்தனர். சிவபெருமானும் அசரீரியாய் "அன்பனே இங்ஙனமே நாம் எழுந்தருளியுள்ள தலங்களைப் பாடுக," என்று அருள் செய்ய, அங்ஙனமே பல தலங்களுக்குச் சென்று தேவாரப் பாடலைப் பாடித் திருவாரூரில் வந்து சிவபெருமான் துணைகொண்டு அங்கு வாழ்ந்துவந்த பரவையாரை மணந்தனர்; பிறகு தலயாத்திரை செய்து கொண்டே திருவொற்றியூரை அடைந்தனர். அங்குச் சுவாமி தரிசனம் செய்து வாழ்ந்திருக்கையில் சங்கிலியார் என்னும் அம்மையாரையும் திருவருள் தூண்டியபடி மணக்க விரும்பினார். அவ்வம்மையார் அப்படியே அன்பரை மணக்க ஒவ்வி, ஒரு வார்த்தை மட்டுங் கேட்டனர். அதாவது, 'இந்தத் திருவொற்றியூர் எல்லையை விட்டு நீர் பிரிதல் ஆகாது,' என்பதாம். அங்ஙனமே அவர் செய்வதாக ஒப்புக்கொண்டு, மகிழ மரத்தடியில் சுவாமிகள் முன்பாக அங்ஙனமே சத்தியஞ்செய்து கொடுத்தனர். உடனே இருவருக்கும் திருமணம் நடந்தது. சிவபெரு

மான் அம்மகிழ மரத்தடியில் காட்சி கொடுத்தனர். இச் சம்பவம் அனைத்தும் மகிழ மரத்தடியில் நிகழ்ந்தமையின், இது மகிழடி சேவை என்று வழங்கலாயிற்று. இதுவே இதன் வரலாறு.

---

## 24. நான் கண்ட ஒரு கிராமக் காட்சி

குறிப்பு: 1. நான் கிராமத்துக்குப் போக நேரும் சமயம், 2. நான் கிராமத்தில் கண்ட காட்சி, 3. முடிவுரை.

நான் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் மாணவனாதலின் எனக்கு அடிக்கடி விடுமுறை வருவதுண்டு. அந்த விடு முறை நாட்களை நான் கிராமங்களில் கழிப்பது வழக்கம். ஏனெனில், என் பெற்றோர் அங்குதான் வாழ்கின்றனர். ஆனால், நான் எல்லா விடுமுறை நாட்களிலும் அங்குச் செல்லமாட்டேன். நீண்ட விடுமுறைகளாகிய தசரா, கிறிஸ்மஸ், வெயில் காலம் ஆகிய இந்த நாட்களிலேதான் என் கிராமத்துக்குச் செல்வேன். தசரா, கிறிஸ்மஸ் விடு முறைகளில் போகத் தவறினும், கோடைகால விடுமுறை நாட்களில் நான் கட்டாயம் அங்குப் போய்விடுவேன். அங்குச் சென்றால், அங்குள்ள என் மாமாவோடு புறப்பட் டுப் பல இடங்களுக்குச் சென்று, பல இயற்கைக் காட்சி களைக் கண்டு இன்பம் அடைவேன். அவற்றுள் ஒன்றை இங்குக் குறிப்பிடுகின்றேன்.

எங்கள் ஊர் பாலூர். அது செங்கற்பட்டுக்கு அடுத் தாற்போல் 7 மைல் தூரத்தில் உள்ளது. அங்குப் பாலாறு வெகு அருகே ஓடுகின்றமையின், அவ்வூர் பாலூர் என்னும் பெயர் பெற்றது. ஒரு நாள் நான் தனியாகக் காலை 6 மணிக்கு ஓர் ஆலவிழுதைப் பல் துலக்க அறுத் துக் கொண்டு ஏரி கரை ஓரமாகச் சென்றேன். ஏரி நீர்

நிறைந்து கடல்போலக் காணப்பட்டது. ஏரிக்கு அருகே நன்செய் நிலங்கள் நன்கு விளைந்து, உயர்ந்த மரகதக் கற்களின் ஒளிபோலப் பச்சைப் பசேல் என விளங்கின. அவற்றைக் கண்ட என் கண்கள் பரமசந்தோஷம் அடைந்தன. எனக்கு உள்ளும் புறமும் ஒருங்கே பூரித்தன.

அப்போது கிழக்கே சூரியன் தனது காலைக் கிரணங்களை வீசித் தோன்றிய காட்சியும் கண்ணைக் கவர்ந்தது. வயலில் எங்குப் பார்த்தாலும் உழவர்கள் தங்கள் வேலையில் கண்ணுங் கருத்துமாய் இருந்தார்கள். கதிர் முதிர்ந்த நிலங்களில் பலர் அறுவடை செய்துகொண்டிருந்தனர். சிலர் நெற்களத்தில் நெல்லைப் போர் போராகக் குவித்துக் கொண்டிருந்தனர். சிலர் உழுதுகொண்டிருந்தனர்; அங்ஙனம் உழும்போது சில பாடல்களைப் பாடிக் கொண்டே உழுதனர். அப்பாடல்கள் என் செவிக்கு இனிமையாய் இருந்தன. வேறு சிலர் உழுத நிலத்தில் பரம்படித்துக் கொண்டிருந்தனர். வேறு சிலர் விதை விதைத்துக் கொண்டும், சிலர் நிலங்களில் நாற்றுப் பிடுங்கி நட்டுக்கொண்டும் இருந்தனர்.

வயல்களில் ஆண்களும் பெண்களும் வேலை செய்வதைக் காண எனக்கு மிகவும் ஆனந்தமாய் இருந்தது. வயலில் பெண்டிர் அறுவடை செய்வதும், நாற்றைப் பிடுங்கி நடுவதுமாகிய மென்மையான வேலைகளையே செய்தனர். ஆடவர்கள் மட்டும் கடினமான தொழில்களையே மேற்கொண்டு செய்தார்கள். அவர்கள் பாடிக் கொண்டே வேலை செய்வதினால் அவர்களுக்கு அந்த வேலையில் களைப்புத் தோன்றுவதற்கு இடம் இல்லை. நானும் பத்துச்சால் ஏற்றம் இறைத்தேன். இதற்கே என்

பாடு திண்டாட்டமாயிற்று. இந்தக் காட்சிகளை எல்லாம் பார்க்கப் பார்க்க எனக்கு வெகு ஆனந்தமாய் இருந்தது. இவற்றை எல்லாம் பார்த்துவிட்டு, காலைப் பத்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன்.

அன்று முதல் எனக்குத் தினமும் வயல் ஓரம் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அங்ஙனமே சென்று இயற்கைக் காட்சிகளைக் கண்டுவந்தேன்; தினம் வெவ்வேறு இடத்துக்குச் சென்று, அங்கு நடப்பவைகளைக் கவனித்து வந்தேன்; ஒரு நாள் நெல் குற்றும் இடத்துக்குச் சென்றேன்; ஒரு நாள் கிராமப் பள்ளிக் கூடத்துக்குச் சென்றேன்; ஒரு நாள் இரவு நடந்த தெருக் கூத்தையும் கண்டேன். கிராமத்தில் காணும் ஒவ்வொரு காட்சியும் மனத்துக்கு இன்பமாகவே இருந்தது.

---

## 25. குதிரையின் அறிவு

குறிப்பு: 1. முன்னுரை, 2. குதிரையின் குணங்கள், 3. குதிரையின் பயன், 4. குதிரையின் அறிவை விளக்கும் கதை, 5. முடிவுரை.

மக்களுக்கு உதவி செய்யும் பிராணிகளில் குதிரையும் ஒன்று. இது மக்களுக்குப் பல வகையிலும் உதவி செய்கின்றது. இதனால் ஏற்படும் பல நன்மைகளைக் கண்டே ஏழைகள் முதல் பணக்காரர் வரையில் இதை வளர்த்து வருகின்றனர்.

குதிரை உருவத்திலும் செய்கையிலும் கம்பீரமானது. இதன் சரீரக் கட்டே இதன் வீரத்தையும் சுறுசுறுப்பையும் நன்கு விளக்குகின்றது. இது புத்திக்கூர்மை

யுள்ள பிராணி. இதனிடத்தில் அமைந்த குணங்களில் முக்கியமானது ஒன்று; அதுதான் எசமானனிடத்தில் உள்ள விசுவாசம். இது தனக்கு ஆபத்து நேர்ந்த காலத்திலும், தன் எசமானனுக்கு ஆபத்து வராதபடி பார்த்துக் கொள்ளும்.

குதிரையால் ஏற்படும் பயன் பல. இது ஏறிச்சவாரி செய்வதற்கும் நிலங்களை உழுவதற்கும் பயன்படுகிறது. இருப்புப் பாதைகள் ஏற்படுவதற்குமுன் குதிரையே தபால் கொண்டுபோவதற்கும், வெகு தூரம் பிரயாணிகளை வண்டியில் ஏற்றிச் செல்வதற்கும் பயன்பட்டது. இது பந்தயத்திலும் பயன்படுகிறது. போர் முனையில் இதனால் ஏற்படும் பயன் அதிகம். இது இறந்த பிறகும் இதன் தோலால் எத்தனையோ பொருள்கள் செய்யப்படுகின்றன. இதன் பிடரி மயிரும், வால் மயிரும் பிடில் தண்டுக்கு அமைக்கப்படும் தந்திகளாக உபயோகப்படுகின்றன. இதன் கால் குளம்புகள் உருக்கப்பட்டு ஒட்டும் பசையாக உபயோகப்படுகின்றன. இதன் எலும்புகள் பல பொருள்கள் செய்ய உபயோகப்படுகின்றன.

குதிரையின் அறிவை விளக்க ஒரு கதை கூறுவோம்: உதயபுரத்தில் உதய சிங்கு இராணா என்னும் ராஜபுத்திர வீரர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பிறகு இராணா பிரதாப சிங்கு பட்டத்திற்கு வந்தார். அவர் ஒரு முறை அக்பர் சக்கரவர்த்தியோடு போர் புரிய நேர்ந்தது. அப்போரில் பிரதாப சிங்கு காட்டிய வீரம் சொல்லொணாப் பெருமை வாய்ந்தது. அவரிடம் அருமையான குதிரை ஒன்று இருந்தது. அது அவருக்குப் போர் முனையில் செய்த உதவி பல. ராஜா தேசிங்குக்கு அவன் குதிரை எப்படி உபகாரம் செய்ததோ, அப்படியே அதுவும் உதவி செய்தது. பிரதாப சிங்கின் குதிரை

அழகும், அஞ்சா நெஞ்சமும் உடையது. பிரதாப சிங்கு அக்குதிரை மீதேறி, எதிர்த்து நின்ற சேனையை எதிர்த்து அடித்துத் துரத்தி, மொகலாயர் சேனைத் தலைவன் ஏறியிருந்த யானைப் பாகனையும் கொன்று நிலத்தில் தள்ளினர். அம்பாரியில் உட்கார்ந்திருந்த சேனைத் தலைவன் தன் கை வாளுக்கு எட்டாமையால், அவனைக் கொல்லவில்லையே என்று வருந்தினர். எனினும் தம் கைக்கு எட்டிய வீரர் பலரைக் கொன்று ஆண் சிங்கம்போன்று ஆரவாரித்து நின்றார். ஆனல், அவர் பகைவர்களால் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை காயப்படுத்தப்பட்டார். இதனை நன்கு அறிந்தது அவரது குதிரை; தன் எஜமானருக்கு ஆபத்து நேர்ந்துள்ளது என்பதை அறிந்துகொண்டது; தானும் எதிரிகளுடைய படைகளால் காயமடைந்திருந்தது; ஆனலும், தன் காயத்தைப் பாராட்டாமல், தன் எஜமானரைப் பகைவரிடமிருந்து காப்பாற்ற அவரைச் சுமந்துகொண்டே வெகு வேகமாகச் சென்று, இனி நம் வீரருக்கு ஆபத்தில்லை என்று உணர்ந்து, தன் எஜமானனை இறக்கிவிட்டுக் கீழே விழுந்து இறந்தது.

வாயில்லாப் பிராணியாயினும், தன் எஜமானரிடத்தில் விசுவாசம் காட்டித் தன் உடல் வருத்தத்தையும் பாராது, அவரைக் காப்பாற்றும் வரையில் உயிர் வைத்திருந்து, அவர் தப்பியதும் உயிர் விட்டதல்லவா? இது போன்ற குதிரைகளின் அறிவு ஆற்றல்களை விளக்கும் கதைகள் பல உள.

## 26. தேகப்பயிற்சி

குறிப்பு: 1. முன்னுரை, 2. தேகப்பயிற்சி இன்மையால் ஏற்படும் தீமை, 3. தேகப்பயிற்சியினால் ஏற்படும் நன்மை, 4. அவரவர்களுக்கேற்ற தேகப்பயிற்சி.

மக்கள் நோய் நொடியில்லாமல் இருக்கவேண்டுமானால் தேகப்பயிற்சி செய்தல் வேண்டும். உடலுக்கு ஆகாரம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் தேகப் பயிற்சியும். நமது தேக ஆரோக்யத்தை நிலைநிறுத்துவதற்கு இது துணை செய்கிறது. நம் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்குக் கல்வி எங்ஙனம் இன்றியமையாததோ, அதுபோலவே தேகத்தைப் பெருக்குவதற்குத் தேகப் பயிற்சி இன்றியமையாதது கல்வி அறிவால் மனத்தைப் பெருக்கிக்கொள்வதால் மட்டும் பயன் இல்லை; உடனுக்குடன் தேகத்தையும் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். மனமும் உடலும் ஒருங்கே பலப்பட வேண்டும். தேக பலத்தைப் பெருக்காது மன அறிவைப் பெருக்கினால், உடல் தனது தொழிலைச் செய்ய இயலாது. ஒருவன் கல்வியிலேயே தனது கருத்தைச்செலுத்தி வரின், அஃது அவனது தேக ஆரோக்யத்தைக் கெடுத்து, நோயையும் பலவீனத்தையும் கொடுக்கும். அதனால், கல்வியை மேன் மேலும் கற்க உற்சாகம் உண்டாகாது. ஆகவே தேகப் பயிற்சி ஆரோக்யத்திற்கும் மனோபலத்திற்கும் இன்றியமையாததாம்.

இத்தகைய தேகப் பயிற்சியைச் செய்யாமையால். உடலுக்குப் பல கெடுதல்கள் உண்டாகும். முதலாவது உண்ணும் உணவு ஜீரணமாகாது. ஜீரணம் இன்றேல் பசி இல்லாமல் பலவித வியாதிகளுக்கும் இடமாகிறது. மேலும், தேகப் பயிற்சியின்மையால் நமது உடலிலுள்ள

தசைகளும் மெலிந்து வலுவின்றி தம் வேலையைச் சரி வரச் செய்யாமல் சோர்வடையும். சீமான் சீமாட்டிகள் தங்கள் உடம்புக்குப் பயிற்சி கொடுக்காமல் எங்கேனும் போவதாய் இருந்தால், வாகனங்களின் மீதேறி வெளியே சென்று வருவதால், அவர்கள் உடம்பில் இரத்த வேகம் குறைந்து போகிறது. அதனாலவர்கள் உண்ணும் உணவு ஜீரணமாகாது. பசி மந்தித்து, இரவில் நல்ல தூக்கமில்லாமல் வருந்துகின்றார்கள். சாதாரண மக்களும் தேகப் பயிற்சியைச் செய்யாமல் சோம்பி இருந்தால், தாங்கள் மேற்கொண்ட வேலையைச் சரிவரச் செய்து முடிக்கப் பலமற்றவர்களாகிறார்கள். அப்படி அந்த வேலையைச் செய்து முடிக்க வேண்டுமே என்று கஷ்டப்பட்டு வேலை செய்தால் உடலில் போதுமான பலம் இல்லாமையால், நோய் வந்துவிடுகிறது. சுருங்கக் கூறுமிடத்துத் தேகப்பயிற்சி இன்மை ஆயுளைச் சீக்கிரத்தில் குறைத்து விடுமென்னலாம்.

தேகப்பயிற்சி செய்யும்போது ஆழ்ந்து நன்றாகச் சுவாசிக்கிறோம். அப்படிச் செய்வதால் காற்றுச் சுவாச கோசத்திற்குள் சென்று இரத்தத்தைச் சுத்தமாக்குகிறது. இதனால் சுவாச கோசமும் பலப்படுகிறது இரத்தம் அதிக வேகமாக ஓட ஆரம்பிக்கிறது. அசுத்தங்கள் அங்கங்கே தங்காமல் இரத்தத்தோடு கலந்து சுவாச கோசத்திற்குக் கொண்டுவரப்பட்டு வெளியே தள்ளப்படுகின்றன. மேலும் தேகப்பயிற்சி செய்வதனால் உடலில் வியர்வை அதிகமாக வெளிவருகிறது. இதனாலும் இரத்தம் சுத்தமடைகிறது. நமது இருதயம், இரைப்பை, குடல்கள் முதலியன பலப்படுகின்றன. அதனால் அவைகள் தங்கள் வேலையைச் சரிவர செய்கின்றன. தேகப் பயிற்சி செய்வதனால் அஜீரணம், பசியின்மை, கை, கால்

பிடிப்பு முதலிய நோய்கள் வாரா. அப்படி நோய்வாய்ப் பட்டாலும் தேகப்பயிற்சி செய்து உடம்பைப் பலப் படுத்தி இருந்தால், நோயினால் அதிக கஷ்டப்பட வேண்டி இராது. தேகப்பயிற்சியை மேற்கொண்டவர் எத்தகைய மனச்சோர்வுக்கும், கஷ்டங்கட்கும் பின்னடையார். சுருங்கக் கூறினால், தேக பலம் உள்ளவன் எத்தகைய இன்னல்களையும் எதிர்க்கும் தன்மை வாய்ந்தவனாகவே இருப்பான் என்று கூறலாம்.

எத்தகைய தேகப்பயிற்சிகளைச் செய்யலாமெனச் சிலர் வினவலாம். அவரவர் உடல் நிலைக்கும், மன உற்சாகத்திற்கும் ஏற்ற நிலையில் தேகப்பயிற்சிகள் செய்யலாம். தண்டால் பஸ்கி முதலிய நம் தேசத்துப் பயிற்சிகளைச் செய்யலாம்; ஓடியாடி விளையாடலாம். உடலில் சிறிது பலமுள்ளவர் சிறிது கஷ்டமான பயிற்சிகளையே செய்ய வேண்டும். பலவீனர்கள் சாதாரணமான பயிற்சிகளையே செய்யவேண்டும். சிறிது தூரம் நடத்தலும், உள்ளேயே விளையாடக்கூடிய பில்லியர்டு முதலிய ஆட்டங்களை ஆடுதலும் செய்யலாம். பலமுள்ளவர்கள் நீந்துதல், சிலம்பம், குதிரைச் சவாரி முதலியவற்றைச் செய்யலாம். எல்லோரும் காலை மாலைகளில் நடக்கும் பயிற்சியை மேற்கொள்வது போதுமானது. இப்பயிற்சி விடாமல் செய்யப்பட்டுவரின் இது உடல் முழுவதற்கும் பலத்தைத் தந்து அஜீரணத்தைப் போக்கிப் பசியை உண்டாக்கும்.

## 27. பசு

குறிப்பு: 1. முன்னுரை, 2. பசுவின் தோற்றமும், குணமும், அஃது அகப்படும் இடமும், 3. பசுவினல் ஏற்படும் பலன், 4. முடிவுரை.

கடவுளால் படைக்கப்பட்ட எல்லாப் பிராணிகளும் மக்களுக்குப் பயன்படக் கூடியவைகளே. அவற்றுள் மிருகங்களால் மனிதன் அடையும் பயன் சொல்லி முடியாதது. ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு விதத்தில் பயன்படுகிறது. சிங்கம் முதலிய கொடிய விலங்குகளாலேயே பலனுண்டு என்றல், மற்றைச் சாதுவான மிருகங்களின் உதவியைப் பற்றிச் சொல்லுவானேன்? அத்தகைய சாதுவான பிராணிகளில் பசு ஒன்று. இது குழந்தை முதல் விருத்தர் வரையில் உள்ள மக்கள் தொகுதிக்குச் செய்யும் உதவிகள் பல. பசுவினிடம் உண்டாகும் ஒவ்வொரு பொருளும் பயன்படக் கூடியதே ஆகும்.

பசு நாற்கால் பிராணி. அது கன்றுபோட்டுப் பால் கொடுக்கும் பிராணி இனத்தைச் சார்ந்தது. பசு, பருத்த உடலும், நீண்டு முனையில் மயிர் அடர்ந்த வாலும், பிளவு பட்ட குளம்பும் உடையது. இஃது உலகில் எங்கும் காணப்படும் பிராணி. ஆனல், அவ்வந்நாட்டுக்கு ஏற்றவாறு இதன் உருவம் முதலியன அமைந்திருக்கும். இது புல், வைக்கோல், கொள், தவிடு, பிண்ணாக்கு முதலிய பொருள்களைத் தின்னும். இது தன் ஆகாரத்தை உட்கொள்ளும்போது எல்லாவற்றையும் விழுங்கி வயிற்றில் அடக்கிக்கொண்டு, பிறகு தனி இடத்தில் இருந்து, தான் உண்ட ஆகாரத்தை மீண்டும் தன் வாயில் கொணர்ந்து அசைபோட்டு மென்று, பிறகு ஜீரணப் பைக்கு அனுப்பும் குணம் வாய்ந்தது. இது சாதுவான பிராணி. மனிதர்களில் யாரேனும் சாதுவாக நடந்துகொண்டால், 'பசு

போலச் சாதுவானவர்' என்று கூறுவதுண்டல்லவா? இது தன் கன்றுக்குட்டியிடம் மிகவும் அன்பு வாய்ந்தது; தன் கன்றைப் பிரிந்திருக்கச் சிறிதும் மனம் இசையாதது. இதனை இந்துக்கள் பகவதி என்னும் தேவதையாகக் கருதிப் பூசிக்கின்றார்கள் என்றால், இதன் குணத்தைச் சொல்லவும் வேண்டுமா!

பசு மனிதனுக்குச் செய்யும் உதவி பல என்று முன்னமே சொன்னோம் அல்லவா? எல்லா மிருகங்களைக் காட்டிலும் மனிதனுக்கு இது மிகவும் உபயோகமான தென்றே கூறலாம். அமிர்தம் என்று சிறப்பிக்கக்கூடிய பாலை இப்பசுவினிடமே பெறுகிறோம். பால் தாயற்ற சிறு குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரமாகிறது. விருத்தர்களும் இப்பாலைக் குடித்து ஜீவிக்கின்றார்கள். நோயாளிகளுக்குப் பால் இன்றியமையாதது. பாலிலிருந்து தயிர், மோர், நெய் முதலியன செய்யப்படுகின்றன. பாலால் செய்யப்படும் பலகாரங்களுக்கு அளவே இல்லை. அப் பலகாரங்கள் சுவை மிகுந்தவை.

பசுவின் கழிவுப் பொருள்களான மூத்திரமும், சாணமும் பல வகையில் உபயோகப்படுகின்றன. இதன் மூத்திரத்தை ஏழை மக்கள் தங்கள் ஆடைகளைச் சுத்தம் செய்வதற்குச் சோடா, சோப்பு முதலியவற்றிக்குப் பதிலாக உபயோகிக்கின்றார்கள். இதனால் தீராத குடர் வியாதிகள் தீர்க்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. பசுச் சாணம் எருவாகவும், வரட்டியாகவும் உபயோகப்படுகின்றது.

பசுவின் மாமிசத்தையும் சிலர் விரும்பித் தின்கின்றனர். பசு இறந்த பிறகும் அதன் தோல் பதம் செய்யப்பட்டுப் பல பொருள்கள் செய்யப் பயன்படுகின்றது.

பசுவின் தலைக்கொம்பும் எலும்புகளும் சீப்பு, பொத்தான் முதலிய பல அழகிய பொருள்கள் செய்யப் பயன்படுகின்றன. பசுவின் எலும்பு நன்கு தூளாக்கப்பட்டு எருவாகவும் நன்கு எரிக்கப்பட்டுக் கரியாக்கி உப்பு, சர்க்கரை முதலியவற்றைச் சுத்தம் செய்யும் பொருளாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. சுருங்கக் கூறு மிடத்துப் பசுவின் ஒவ்வொரு பாகமும் உபயோகமான தேயாம்.

இப்படியே மக்களுக்குப் பல பிராணிகள் உதவி செய்கின்றன. எந்தப் பொருளையும் அசட்டையாகத் தள்ளுவதற்கு இல்லை. இத்தகைய பிராணிகளுக்கு நாம் நன்றி செலுத்தவேண்டியிருக்க, அதை விடுத்து அவற்றிற்குத் துன்பம் செய்தால் செய்ந்நன்றி கொன்ற பாவத்திற்கு ஆளாவோம் என்பதை அறியவேண்டும்.

---

## 28. சாரணர் இயக்கம்

குறிப்பு: 1. முன்னுரை, 2. இவ்வியக்கத் தோற்றமும் வளர்ச்சியும், 3. இவ்வியக்கத்தின் சட்ட திட்டங்கள், 4. இவ்வியக்கப் பயன், 5. முடிவுரை.

உலகம் மேம்பட்டு விளங்குவதற்கு இளைஞர்களிடையே சில முக்கிய குணங்கள் அமைந்திருத்தல் வேண்டும். அம்முக்கிய குணங்கள் தெய்வ பக்தி, ராஜ பக்தி, குரு பக்தி, தேச பக்தி, பெற்றோர் பக்தி முதலியன. இக்குணங்கள் வளர்ந்தோங்குவதற்குச் சாரணர் இயக்கம் துணை செய்கிறது.

சாரணர் இயக்கம் சீரும் சிறப்பும் வாய்ந்த பெரியார் ஸர் ராபர்ட்டு பேடன் பவல் என்னும் ஆங்கில அறிஞர் ஒருவரால் 1909-ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில்

முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கத்தின் நன்னோக்கத்தையும் பயனையும் கண்கூடாகக் கண்ட உலகில் பல இடங்களிலும் உள்ள பலரும் இதனை மேற்கொண்டு ஒழுகினர். இதனாலேதான் இவ்வியக்கம் வெகு விரைவில் உலகெங்கும் பரவியது; அப்படியே இந்தியாவுக்குள்ளும் நுழைந்தது. இவ்வியக்கம் சென்னைக்கும் வரவேண்டும் என்று அரும்பாடு பட்டவரும், நாட்டின் பொதுநல நன்மையின் பொருட்டு உழைத்தவரும், எம்மதமும் சம்மதமே என்று சமரச நன்னிலையைப் பரவச் செய்தவரும் ஆன அன்னி பெஸண்டு அம்மையார் ஆவார். இவ்வியக்கத்தைச் சென்னையில் 1919-ம் ஆண்டு அவ்வம்மையார் ஆரம்பித்தனர். இவ்வியக்கம் பல ஜாதியரும் பல மொழிகளும் நிரம்பிய சென்னையில் நுழைந்த பிறகு, ஜாதிச் சண்டை, சமயச் சண்டை, உயர்வு தாழ்வு என்ற வேற்றுமையுணர்ச்சி குறைந்து ஒற்றுமை, ஒழுக்கம், மனோதைரியம், பொறுமை, சத்தியம், ஈகை முதலியன ஓங்கின என்று கூறலாம். இவ்வியக்கம் பொதுவாக நகரம் எங்கும் பரவி இருந்தும், சிறப்பாக பள்ளிக்கூடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நற்பயனை உணர்ந்த கல்வி இலாக்கா அதிகாரிகளும் இதில் மாணவர்கள் அதிகமாக ஊக்கம் செலுத்த அனுமதியும் பொருள் உதவியும் புரிகின்றார்கள்.

இவ்வியக்கத்தில் பல சட்ட திட்டங்களை ஏற்படுத்தி இருக்கின்றனர். இவ்வியக்கத்தில் சேர்வதற்கு முன் சில வாக்குறுதிகளைச் செய்வதுடன் சட்டதிட்டத்திற்கும் அடங்கி நடப்பதாகவும் சம்மதிக்க வேண்டும். அவ் வாக்குறுதிகள் பின் வருவன:

1. கடவுளுக்கும், அரசனுக்கும், தேசத்திற்கும் என்னால் கூடிய மட்டும் எனது கடமையை ஆற்றுவேன்.

2. எப்பொழுதும் அன்னியருக்கு உதவி செய்வேன்.

3. சாரணச் சட்டத்திற்கு அடங்கி நடப்பேன். இதற்கு என் கௌரவமே ஈடாகும்.

இச்சாரண இயக்கத்தில் பத்து வித சட்டங்கள் உண்டு. அவை :

1. சாரணர்களின் நன்மதிப்பு எல்லோராலும் நன்கு மதிக்கப்பட வேண்டும்.

2. சாரணர் அரச பக்தியும், பெற்றோர் பக்தியும், நாட்டுப் பக்தியும் வாய்ந்தவராயிருத்தல் வேண்டும்.

3. சாரண வாலிபர் பிறருக்குக் கடமைப்பட்டவரா யிருத்தல் வேண்டும்.

4. சாரண வாலிபர் எல்லோருக்கும் நல்லவராயும் தமக்குள் சிறிதும் ஜாதி வித்தியாசமும், உயர்வு தாழ்வும் கருதாத சகோதரராயும் இருத்தல் வேண்டும்.

5. சாரணர் யாவரிடத்தும் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும்.

6. சாரணர் ஜீவராசிகளுக்கும் நண்பராகிக் கருணை செய்யவேண்டும்.

7. சாரணர் தம் பெற்றோர், தலைவர், ஆசிரியர் முதலிய பெரியோர் கட்டளைக்கு அடங்கி, எதிர்த்துக் கூறாது நடத்தல் வேண்டும்.

8. சாரணர் எத்தகைய பெருந்துன்பத்திலும் மனங் கலங்குதல் கூடாது.

9. சாரணர் பொருளை அனுவசியமாகவும், மித மிஞ்சியும் செலவு செய்தல் கூடாது.

10. சாரணர் மன மொழி மெய்களிற் சுத்தமுடைய வராய் இருத்தல் வேண்டும்.

இப்பத்துச் சட்டங்களுக்கும் அடங்கியே சாரணர் நடக்கவேண்டும். சாரணர் இப்பத்துச் சட்டங்களுக்கு

அடங்கி நடப்பதோடு பிறர்க்கு உதவி, தேக பலம், மதி யூகம், மனத்துணிவு முதலிய குணங்களையும் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வியக்கத்தின் முதல் நோக்கம் ஆயத்தமாய் இரு (Be prepared) என்பதே. அதாவது, சாரணன் எந்த வேலையிலும், எவ்விதத்திலும் பிறர்க்கும், தன்னுட்டிற்கும் தன்னுலானமட்டும் உதவிபுரிய ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்பதாகும். இச்சட்ட திட்டங்களைச் செம்மையாக நடத்துவதற்குத் தேசக் கமிஷனர்களும், மாகாணக் கமிஷனர்களும், ஜில்லாக் கமிஷனர்களும், ஆசிரியர்களும் உண்டு. இவர்கள் இவ்வியக்கத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயரை அமைப்பர். அப்பெயர் எவ்வூரில் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அவ்வூரின் பெயராகவே அமைந்திருக்கும். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைவர் உண்டு. அத்தலைவர் அவ்வப் பிரிவினருக்கு உரிய பாடங்களைக் கற்பிப்பார்; அவற்றில் பரீக்ஷையும் வைப்பர். அதில் தேறுபவர்களுக்கு அப்பிரிவின் அடையாளச் சின்னம் (Badge) கொடுப்பர்.

இவ்வியக்கத்தார் ஒரே விதமான ஆடையை அணிந்திருப்பர். மரியாதை செய்யும்போது சுண்டுவிரலை மடக்கி, அதன்மேல் பெருவிரலை அமைத்து மற்ற மூன்று விரல்களையும் நிமிர்த்திக் கையைத் தமது தோள் மட்டத்திற்கு உயர்த்தி, ஸலாம் செய்வர். அதற்கு, "நான் மேற்சொன்ன மூன்று வாக்குறுதிகளுக்கும் அடங்கியவன்" என்பது பொருளாம். இவர்கள் சட்டைகளை ஒழுங்காக அணிவதற்கும், ஆபத்துக் காலத்தில் பிறருக்கு ஒழுங்காகச் சிகிச்சை செய்வதற்கும் கற்றிருக்க வேண்டும்.

இவ்வியக்கத்தால் ஏற்படும் நன்மைகள் பல. இவ்வியக்கத்தில் ஈடுபட்டவர் பொறாமை, சோம்பல், ஜாதி மதச் சண்டை, உயர்வு தாழ்வு என்று கருதும் வேற்றுமை உணர்ச்சி முதலியன இன்றி, பிறருக்கு உதவி செய்தல், தேச பக்தி, அரச பக்தி, பெற்றோர் பக்தி, தேக பலம், நுண்ணறிவு, மனோதிடம், பொறுமை, ஒற்றுமை உணர்ச்சி, சுக வாழ்வு, மன வன்மை, தன் முயற்சி, எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் முதலிய நற்குணங்களில் மேம்பட்டு விளங்குவர். சென்ற ஐரோப்பியப் பெரும்போரில் ஆங்கிலக் கடற்படை எதிரிகளைத் திறம்படத் தாக்கியபோது ஏறக்குறைய 2,000 சாரண வாலிபர் தமது தாய்நாட்டைக் கரையோரமாக அணி வகுத்து நின்று, வெகு பரபரப்புடன் காத்தனர் என்றால், இவர்களால் நாட்டுக்குப் பெரும்பயன் உண்டு என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இவ்வியக்கத்தில் ஒவ்வொரு மாணவரும் சேரவேண்டும். பெற்றோர்களே இவ்வியக்கத்தில் தங்கள் பிள்ளைகளைச் சேரும்படி தூண்ட வேண்டும். இவ்வியக்கத்தில் சேர்ந்தவன் தனக்கும் பிறருக்கும் நன்மை புரிபவனாகின்றான். ரோஸ்பரி என்ற ஆங்கிலப் பெரியார், "எந்த நாடு இளமையில் சாரணராய் இருந்த மக்களை அதிகம் பெற்றுள்ளதோ, அதுவே தனிப்பெரும்பேறு பெற்றதாகும்," என்று கூறியதை ஒவ்வோர் இள மாணவனும் மறத்தல் கூடாது.

## 29. நான் விரும்பும் விளையாட்டு

குறிப்பு : 1. முன்னுரை, 2. நான் விரும்பும் விளையாட்டு, 3. காரணம், 4. முடிவுரை.

நான் என் படிப்பு விஷயத்தில் எவ்வளவு கவனம் செலுத்துகிறேனோ, அவ்வளவு கவனம் விளையாட்டிலும் செலுத்துகிறேன். இதனால் படிப்பில் சூனியமாக அதிக அம்சம் (Marks) பெறாது விளையாட்டில் ஈடுபடுகிறேன் என்பதன்று. என் வகுப்பு உபாத்தியாயரும், விளையாட்டு உபாத்தியாயரும் என்னை விரும்பும்படி நான் நடந்து கொள்வேன். நான் பலவித விளையாட்டுகளிலும் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறேன். துடுப்புப் பந்தாட்டம், வளை கழி பந்தாட்டம், உதை பந்தாட்டம் முதலிய ஆட்டங்களையும், மற்றும் இந்தியர்களுக்குரிய பளிங்குடுகுடு என்னும் ஆட்டத்தையும் நன்றாக ஆடுவேன். எங்கள் பள்ளிக்கூட மாணவர்கள் வேறொரு பள்ளிக்கூட மாணவர்களோடு விளையாட நேரிடும்போதெல்லாம் நாங்கள் அநேகமாக வெற்றி பெற்றே திரும்புவோம். அச் சந்தர்ப்பங்களில் நான் வெகு உற்சாகத்தோடு விளையாடுவேன்.

ஆனால், எனக்குப் பலவித விளையாட்டுகள் விளையாடப் பழக்கம் ஏற்பட்டிருந்தாலும், பிரத்யேகமாக ஒரு விளையாட்டை நான் அதிகமாக விரும்பி விளையாடுவேன். அதுவே பளிங்குடுகுடு என்பது. இப்படியே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விளையாட்டிலும் நாட்டமிருக்கும் என்று நினைக்கிறேன்.

நான் இவ்வாட்டத்தை விரும்புவதற்குச் சில காரணங்கள் உண்டு. இவ்விளையாட்டுக்கு வேறொரு துணைக் கருவியும் வேண்டுவதில்லை. மேனாட்டு விளையாட்டுகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு துணைக் கருவி வேண்டும்.

இதற்கு அது தேவை இல்லை. வளைகழி பந்தாட்டம், உதைபந்தாட்டம் முதலிய ஆட்டங்களுக்கு விசாலமான இடம் தேவை. இவ்வாட்டத்திற்குச் சிறு இடம் இருத்தல் போதுமானது. இவ்வாட்டத்திற்கு அதிகமான ஆட்களும் தேவையில்லை. ஒவ்வொரு பக்கத்துக்கு இரண்டு இரண்டு பேர் இருந்தாலும், ஆட்டத்தை ஆரம்பித்துவிடலாம். ஏனைய ஆட்டங்கள் ஆடுவதற்கு நீண்டநேரம் பிடிக்கும். அவ்வாட்டங்களை முடிவடையாமல் நிறுத்தவும் மனம் இடங்கொடுக்காது. ஆனால், இவ்வாட்டத்தில் அந்தத் தொந்திரவு இல்லை. நாம் இஷ்டமானபோது இதை நிறுத்திவிடலாம். அப்படி ஆடினாலும், ஒரு மணி நேரம் ஆடினாலே மனம் திருப்தியாய்விடும். மற்ற ஆட்டங்களில் அதிகமாகக் கஷ்டப்பட்டு விளையாடவேண்டும். மனம், மெய் இவைகளை அதே கவனமாய் இருந்து விளையாடவேண்டும். ஆனால், இவ்வாட்டத்தில் அப்படிக் கஷ்டப்பட வேண்டுவதில்லை. தேக பலமும், சிறிது நுண்ணறிவும், ஆடும் தந்திரமும் இருந்தால் போதும். மற்றைய ஆட்டங்களிலே ஆபத்து நேரிடினும் நேரலாம். சில ஆட்டங்களில் மண்டை உடைபடுவதையும், கை கால்களில் பலத்த காயம் ஏற்படுவதையும் நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். இந்தக் குடுகுடு ஆட்டத்தில் அவ்வளவு அபாயகரமான அடிகளுக்கு வழியில்லை என்று கூறுவேன். இவ் விளையாட்டில், விளையாடும்போது சிறிது நேரம் ஓய்வும் கிடைக்கும். மற்றைய ஆட்டங்களில் ஆட்டம் முடிகிற வரையில் விளையாடிக்கொண்டே இருக்க வேண்டும். இவ்விளையாட்டு ஆடுவதனால் உடல் முழுதும் பலம் ஏற்படுகிறது. மற்றைய ஆட்டங்களை நாம் கிராமத்திலிருக்கும்போது ஆடமுடியாது. கிராமத்தில் அயல்நாட்டு நாகரிக ஆட்டங்களை விளையாடத் தெரிந்தவர்க

ளைக் காண்பது அரிது. ஆனால், இந்த ஆட்டந் தெரிந்தவர் பலர் அங்கும் இருப்பார். ஆதலின், எங்குச் சென்றாலும் இவ்வாட்டத்தை விளையாடலாம். இந்த ஆட்டத்திற்குப் பொருட்செலவும் இல்லை. மற்றைய ஆட்டங்களுக்குப் பொருள் வேண்டும். இத்தகைய பல காரணங்களால் நான் இந்த ஆட்டத்தை விரும்பி விளையாடுகிறேன். இதுவே நம் நாட்டு விளையாட்டும் ஆகும்.

நான் கூறுவது போலவே, அவரவர் விரும்பி ஆடும் ஆட்டத்திற்கு காரணம் கூறுவர் என்று நினைக்கின் றேன். அந்தத் தீர்மானத்தை அவர் அவர்களுக்கு விட்டு விடுகிறேன். "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" அல்லவா?

---

## 30. அயல் நாட்டுப் பிரயாணமும் அதன் பயனும்

குறிப்பு: 1. முன்னுரை, 2. அயல் நாட்டுப் பிரயாணம், 3. முற்காலமும் பிற்காலமும், 4. முடிவுரை.

கல்லூரிகளிலும், உயர்தரக் கலாசாலைகளிலும் கற்கும் கல்வி, மாணவர்களின் அறிவைப் பெருக்காது. அங்குப் பயிலப்படும் கல்வி வெறும் ஏட்டுப் படிப்பாகும். 'ஏட்டுச் சுரைக்காய் கறிசமைக்க உதவாத' தைப்போல, ஏட்டுக் கல்வி அனுபவத்துக்குக் கொண்டுவருகின்ற வரையில் பயன்படாது. அக்கல்வியால் பலன் அடைய வேண்டின், அக்கல்வியை அனுபவிக்கும் முறைகளை அனுசரிக்க வேண்டும். 'வெப்பம் இறுகச் செய்யும்; தட்பம் பெருகச் செய்யும்' என்று மாணவனுக்குக் கற்பிக்கப்பட்டால், அதை அவன் அப்படியே மனப்பாடம் பண்ணி ஒப்பிப்

பானே ஒழிய, அஃது எப்படி அவ்வாறு மாறுகிறது என்று அறியான். அதனை உபாத்தியாயர் இயற்கைப் பொருள்களைக்கொண்டு கண்கூடாகக் காட்டுவாரானல், அதனை மாணவன் என்றும் மறவான்; மற்றவர்களுக்கும் தான் கண்ட உண்மையை எடுத்து விளக்கிக் காட்டுவான். இதுபோலவே, தாம் கற்ற ஒவ்வொன்றையும் கண் முன் பாகக் காணின், மாணவர் அதை என்றும் மறவார். இப்படி ஒவ்வொன்றையும் கண்ணுல் கண்டு அறியத் தேச சஞ்சாரம் இன்றியமையாதது. இதனுல் ஏற்படக்கூடிய நன்மைகள் சொல்லியமையா. மேலும், கற்ற கல்வி முழு உருவத்தை அடையும் என்றும் கூறலாம்.

நாம் அயல்நாட்டுக்குப் பிரயாணம் செய்வதால், பல ஜாதி மக்களைப் பார்க்கலாம். அவர்களது நடை, உடை, பாவனை முதலியவற்றை அறியலாம். அவர்களுடைய வாழ்வு, மொழி முதலியன நமக்கு நன்கு புலனுகும். இவற்றை அறிவதனுல், நம் அறிவு விசாலப்படும். எப்படி எனில், அவர்களது உடை முதலியவற்றைப் பார்க்கும் பொழுது, 'நாம் இப்படி உடையணிந்திருக்கின்ருேமே! இவர்கள் மட்டும் இத்தகைய உடைகளை ஏன் அணிய வேண்டும்?' என்று யோசித்து, அவ்வந்நாட்டுச் சீதோஷ்ணமே அதற்குக் காரணம் என்பதை யூகிப்போம். இப்படியே ஒவ்வொன்றையும் யோசித்தறிவதற்குப் பிர யாணம் நம் அறிவைத் தூண்டும்; 'அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்தம்,' என்று நம்மையும், நம் நாட்டையும், நம் நாட்டு மக்களையும் பற்றி அன்னிய நாட்டை நோக்காமல் சிறப்பாகப் பேசிக்கொண்டிருந்த குணம் மாறுபடும். அன்னிய நாட்டார் குண நலங்கள் எவையேனும் விஞ்சி இருப்பின், நாம் அவற்றைக் கைக் கொண்டு நடக்க அனுகூலமாகும்.

பிரயாணம் நமது நாகரிகத்தை விருத்தி செய்வதற்கும் துணையாய் நிற்கிறது. நமக்குப் பேர் ஊர் தெரியாத இடமெல்லாவற்றையும் பிரயாணத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். இதன் பயனை நன்கு அறிந்தல்லவா பாஹியான் என்னும் சீன யாத்திரிகர் பல நாடுகளுக்குச் சென்று, தாம் கண்ட உண்மைச் செய்திகளை அறிவித்துள்ளார்? அவர் கண்டு அறிவுறுத்திய உண்மைச் செய்திகளன்றோ, இப்போது தேச சரித்திரங்களாக நிலவுகின்றன? தேச சஞ்சாரம் செய்ததாலல்லவா கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அவர் பயணப் பட்டிராவிட்டால் அந்நாடு மற்றும் பல வருடங்கள் வரையில் நம் அறிவுக்கு மறைபட்டே கிடக்குமன்றோ?

முற்காலத்தில் தேச சஞ்சாரம் செய்வது கஷ்டந்தான். அக்காலத்தில் இப்பொழுதைப் போல வண்டிச் சாதனங்கள் இல்லை. சாலைகளும் நன்கு அமைக்கப்படவில்லை. அப்படித் தட்டுத்தடுமாறிப் புறப்பட்டாலும், வழியில் கள்ளர் பயமும், காடாக இருப்பின் மிருக பயமும் ஏற்படும். இதனால் மக்கள் தங்கள் நாட்டை விட்டுப் பெரும்பாலும் எங்கும் போக்கு வரவு வைத்துக்கொள்ளவில்லை. ஆங்கில அரசாட்சி ஏற்பட்ட பிறகு போக்கு வரவு சாதனத்துக்குக் குறைவே இல்லை. ஆகாயத்தின் மூலமும் செல்லலாம். நீரிலும் செல்லலாம், நிலத்திலும் செல்லலாம். சொற்ப நாளில் குறைந்த பொருட்செலவில் பல ஊர்களைத் தட்டுத்தடையின்றிக் கண்டு மகிழலாம். இத்தகைய பல சௌகரியங்கள் இருப்பதனாலேதான் இப்போது பல பிரயாணிகள் தேச சஞ்சாரம் செய்கிறார்கள்.

நாமும் நம்மால் உலக முழுவதும் சுற்றி வர இயலாவிட்டாலும், சில முக்கிய இடங்களையாவது சென்று

பார்க்கவேண்டும். "நேப்பில்ஸைப் பார்த்துவிட்டு மரி," (See Naples and die) என்னும் ஆங்கில வழக்கின் கருத்தென்ன? நாம் சில அற்புதமான இடங்களைக் காணுமல் இவ்வுலக வாழ்வைக் கழித்தல் கூடாது என்பதேயாம். இப்பொழுதுங்கூட அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும் கேளிக்கை நிமித்தமாகவும், கல்வியறிவு சம்பந்தமாகவும் உலகத்தையே சுற்றி வருகின்ருர்கள். ஆகவே, ஒவ்வொரு வரும் பிரயாணத்துக்கு ஆயத்தப்பட வேண்டும்.

---

## 31. மிருகங்களிடத்தில் இரக்கங் காட்டுதல்

குறிப்பு: 1. முன்னுரை, 2. மிருகங்கள் மக்களுக்குச் செய்யும் உதவி, 3. அவற்றிடம் இரக்கம் காட்டும் விதம், 4. முடிவுரை.

மக்கள் மிருகங்கட்குப் பல விதத்திலும் கடமைப்பட்டுள்ளார்கள். அவைகள் நமக்குச் செய்யும் நன்மைகளைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால், எவனும் அவைகளுக்குத் தீமை செய்ய மனந்துணியான். அவைகளும் நம்மைப் படைத்த கடவுளாலேயே படைக்கப்பட்டவை என்ற உணர்ச்சி ஒவ்வொருவனுக்கும் தோன்றவேண்டும். ஒருவன் தனக்குத்தானே எப்படித் தீமை செய்துகொள்ள விரும்பமாட்டானே, அப்படியே பிற உயிர்களுக்கும் தீமை செய்ய எண்ணுதல் கூடாது. தன்னுயிர்போல மன்னுயிரையும் நினைக்கவேண்டும். 'நம்மைப்போலவே மிருகங்களுக்கும் சுக துக்கங்களை அனுபவிக்கும் ஆற்றல் உண்டு' என்பதை நாம் உள்ளத்தில் வைக்கவேண்டும். 'அவைகளுக்குத் துன்பம் செய்தால் என்ன தெரியப்

போகிறது!' என்று தீமைசெய்ய நினைக்கலாகாது. அவைகளுக்குப் பேசுந் தன்மை ஒன்றில்லையே ஒழிய, மற்ற எல்லாத் தன்மைகளும் மனிதர்களுக்கு அமைந்திருப்பன போலவே அமைந்திருக்கின்றன. நாம் அவற்றிற்குத் தீமை செய்ய எண்ணும்போது,

"வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து."

என்ற குறளை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது, 'ஒருவன் தன்னினும் மெலியாரை அருள் இல்லாதவனாய்த் துன்பப்படுத்தச் செல்லும்போது அவன், தன்னினும் வலியார் தன்னை வருத்த வரும்போது தான் அஞ்சி நிற்கும் நிலையை நினைக்கக் கடவன்' என்பதாம். இப்படி ஒருவன் நடவாது மிருகங்கள் முதலிய வாயில்லா ஜீவராசிகளுக்குத் தீங்கு செய்து வருவானாயின், அவன் எத்தகைய பேரறிஞனாயினும், அறிவுடையன் ஆகான் என்பதைக் கீழ்வரும் திருக்குறளே மீண்டும் அறிவுறுத்துகின்றது.

"அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை."

இதன் பொருள்: ஒருவன் வேறோர் உயிருக்கு நேரிட்ட துன்பத்தைத் தனக்குற்ற துன்பத்தைப் போலப் பாவித்து அதைக் காப்பாற்றானாகில், அவன் எவ்வளவு அறிவாளனாய் இருப்பினும் பயனில்லை என்பதாம்.

உதாரணமாக நமக்கு உதவி செய்யும் சில மிருகங்களைக் கவனிப்போம்: பசு இனிய பாலைத் தந்து, குழந்தை முதல் விருத்தர் வரையில் மக்களைக் காப்பாற்றி வருகிறது. அத்தகைய பசுவைச் சிலர் எத்தகைய துன்பப்

படுத்துகின்றனர்! அதன் அருமைக் கன்றுக்கும் பால் விடாது கறந்து, சரியாகத் தீனியும் போடாது, அதனால் அது மெலிந்திருக்கும்போது அதனை அடிமாட்டுக்கு விற்றுவிடுவது எவ்வளவு நன்றி கொன்ற பாவமாகும்! இந்தப் பாவத்துக்கு எங்கேனும் பிராயச்சித்தம் உண்டா?

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்பது நம் வேத வாக்கன்றோ? எருதுகள் நம் நிலத்தை உழுது, தானியம் விளைவிப்பதற்குத் துணையாகின்றன; வண்டி இழுத்து நம்மை வேறிடத்திற்குக் கொண்டுபோகின்றன. சிலர் அவற்றிற்குச் சரியான தீனி போடுகின்றனரா? அவை மெல்ல நடக்க ஆரம்பித்தால், மனம் போனவாறு, கை ஓயும் வரையிலும் அடித்துத் துன்புறுத்துகின்றனர் அன்றோ? இம்மட்டுமா! தாற்றுக்கோல் என்ற முனையில் முள்ளுடைய கழியால், அதனைக் குத்தி இரத்த காயப்படுத்திச் சித்திரவதை செய்கின்றனர் அன்றோ? இப்படியே ஒவ்வொரு மிருகமும் நமக்கு உபகாரம் செய்ய, நாம் மட்டும் அவைகளுக்கு அன்பு, இரக்கம், தயை, கருணை காட்டாது அபகாரம் செய்தல் தகுதியா? புலி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களுக்கு நாம் உபகாரம் செய்தால், அதனை மறவாது நமக்கு நன்றி செய்வதாக நாம் கதைகளில் வாசிக்கின்றோம் அல்லவா? இப்படிப் பலவிதத்திலும் நமக்கு நன்மை செய்யும் மிருகங்களிடத்தில் நாம் இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நாம் மிருகங்களுக்கு இரக்கங் காட்டவேண்டுமானால், அவைகள் துன்பப்படுதலைக் கண்டால், அத்துன்பம் நமக்கு வந்ததைப் போல எண்ணி, அதனை நீக்க முயல

வேண்டும். நாம் நடத்தல், விளையாடுதல் முதலிய சந்தர்ப்பங்களில் பிற உயிர்களுக்குக் கேடு வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

"கொல்லா விரதம் குவலயம்எல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே."

என்று தாயுமானவர் கூறியபடி, ஆங்காங்கு நம்மால் ஆன வரையில் ஜீவகாருண்யத்தைப் பற்றி எடுத்துக் கூறிச் சீவ வதை செய்பவரைத் தடுக்கவேண்டும். இதற்கெனப் பல கழகங்கள் நிறுவ வேண்டும். எவன் ஒருவன் இப்படி ஒழுகுகின்றானோ அவனை எல்லா உயிரும் மனமார வாழ்த்தும் என்பது பெரியோர் கொள்கை. ஜீவகாருணியம் உள்ளவன் வாழ் நாளும் நீடிக்கும்.

---

## 32. விளையாட்டினால் விளையும் நன்மை தீமைகள்

குறிப்பு: 1. முன்னுரை, 2. விளையாட்டினால் ஏற்படும் நன்மை, 3. விளையாட்டினால் ஏற்படும் தீமை, 4. முடிவுரை.

கல்வியிலேயே கவனமாகப் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்குச் சிறிது ஓய்வு வேண்டும். அதனை விளையாட்டின் மூலம் பெறலாம். இதனாலேதான் பள்ளிக் கூடங்களில் இதனைக் கையாண்டு வருகின்றனர். ஆனால், விளையாட்டுகளை விளையாடுவதனால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு.

விளையாட்டினால் ஏற்படும் நன்மை: விளையாடுவது உடலுக்குப் பலத்தை உண்டுபண்ணுகிறது. ஆடி ஓடி விளையாடுவதனால் உடலில் உள்ள அசுத்தம் எல்லாம் வியர்வையாய் வெளியே தள்ளப்படுகிறது. மேலும், நன்கு ஓடி ஆடுவதனால், வேகமாகச் சுவாசிப்பதற்கு அனு

கூலமாகிறது. அதனால் மார்பு விரிந்து, இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. விளையாடிய பிறகு, புத்தகத்தைக் கையில் எடுத்தாலும் சுறுசுறுப்பாகப் படிக்கவும் மனம் இடந் தருகிறது. இரவில் தூக்கமும் ஆரோக்கியமாக வருகிறது. விளையாட்டுக்களில் நல்ல பேர் எடுத்தால், நம் புகழ் உலகெங்கும் பரவுவதற்கும் ஏதுவாகிறது. பிள்ளைகளுக்குள்ளே ஒற்றுமை உணர்ச்சியும், வெற்றிகொள்ள வேண்டும் என்னும் முன்னேற்ற உணர்ச்சியும் உண்டாகின்றன; பகைவரையும் நேசிக்கும் குணம் உண்டாகிறது. விளையாட்டில் பிறர் செய்தது தவறாயினும் 'சரிதான்,' என்று பொது மனிதன் சொன்னால், உடனே அதற்கு ஒப்பிப் போகும் பொறுமைக் குணமும் பெருகுகிறது.

ஆனால், இவ்வித விளையாட்டுகளினால் சில தீமையும் உண்டு. ஒருவன் விளையாட்டிலேயே பெரிதும் நாட்டமுற்றிருந்தால், கல்வியில் அவன் மனம் செல்லாது. அவனுக்கு அருமையாகக் கிடைத்த நேரம் எல்லாம் விளையாட்டிலேயே கழிந்துவிடும். எத்தனை மாணவர்கள் படிக்கவேண்டிய நேரத்தில் காலத்தை வீணாக விளையாட்டில் கழித்துவிட்டுப் பரீக்ஷைக் காலங்களில் இரவில் கண் விழித்துப் படித்து உடம்பைக் கெடுத்துக்கொள்கிறார்கள்! மேலும், ரக்பி, கிரிக்கட்டு, ஹாக்கி, புட்பால் முதலிய சிரமந்தரும் ஆட்டங்களில் அதிக நாட்டம் செலுத்தினால், சில வேளைகளில் அபாயகரமான ஆபத்துகளும் நேரிடுவதுண்டு. இத்தகைய விளையாட்டுகளினால் எத்தனையோ பேர் கால் ஒடிந்தும், கை ஒடிந்தும் இருக்கின்றனர். மழை என்றும் வெயில் என்றும் பாராமல் விளையாடுவதால் உடல் நலம் கெட்டுப் போகிறது. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்,' என்பது முதுமொழி அல்லவா?

இதனால் விளையாடுவதையே நிறுத்திவிடக்கூடாது. நீருக்கு நுரையுண்டு என்று அதைப் பருகாமல் இருக்கிறோமா? நெல்லுக்கு உமியுண்டு என்று அதை உண்ணாமல் இருக்கிறோமா? பூவுக்கும் புல்லிதழ் உண்டு என்று அதைச் சூடாமல் இருக்கிறோமா? இல்லை. ஆதலால், ஆட்டத்திலேயே அதிகம் கருத்தைச் செலுத்தாது மிதமாகவே ஆடவேண்டும்.

---

## 33. தமிழ்ப் பெருமை

குறிப்பு: 1. முன்னுரை, 2. தமிழ்ப் பெருமைக்குக் காரணம், 3. தமிழும் இலக்கண இலக்கியமும், 4. தமிழ்ப் பெருமையைப் பாராட்டிய பெரியோர்கள்.

ஒரு தாய் தான் பெற்ற மகவை எந்த மொழியில் தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டினாளோ, அம்மொழியே அக்குழவிக்குத் தாய் மொழியாம். பல்லாயிர ஆண்டுகளாக நம் இந்தியாவில் வடக்கே திருவேங்கட மலை முதற்கொண்டு தெற்கே கன்னியாகுமரி வரையில் வாழ்ந்துவந்த மக்கள் தமிழ் என்னும் தனிப்பெரு மொழியைப் பேசியும் போற்றியும் வந்தார்கள் என்று நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். ஆகையால் அவ்வெல்லைக் குட்பட்ட நாமும் தமிழ் மொழியைத் தாய் மொழி என்று கூறிக்கொள்வதற்கு உரிமை உடையவராவோம். ஆகவே தமிழராகிய நாம் நமக்குத் தாய் மொழியாய் அமைந்த தமிழ் மொழியின் சீரையும் சிறப்பையும், பேரையும், புகழையும் எடுத்துப் பேசுவது சாலப் பொருத்தமானது.

தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள். 'தமிழ் மாருதம்' என்று சேக்கிழாரும், 'தமிழ் தழீஇய சாயலவர்'

என்று திருத்தக்க தேவரும், 'வண்டு தமிழ்ப் பாட்டு இசைக்கும் தாமரை' என்று கம்பரும் கூறிய தண்டமிழ்த் தொடர்களில் இவ்வினிமை என்ற பொருள் அமைந்திருப்பதையும் காண்க. இம்மொழி எழுத்து நுட்பமும், சொற் பெருக்கமும், பொருள் பொலிவும், யாப்பமைதியும், அணியழகும், ஒலி இனிமையும், தெய்வத் தன்மையும் அமைந்தது என்பது ஆழ்ந்து அறிந்த பேரறிஞர் துணிபாகும். மொழியாராய்ச்சியில் வல்லுநரான மேனாட்டு அறிஞர் கால்டுவெல் துரைமகனார், கிரியர்ஸன் முதலியவர் இம் மொழியின் ஒலி அமைப்பு, வரி அமைப்பு முதலிய சிறப்பியல்புகளைப் பலபடப் பாராட்டி எழுதியுள்ளமையும் இதன் பெருமையை நன்கு தெரிவிப்பதாகும். இவ்வினிய பைந்தமிழைக் கற்றுச் சீரிய செந்தமிழ்ப் பாக்களைப் பாடிய இன்றமிழ்ப் புலவர்கள் கூறிய வசைகளை வள்ளல் களும் பொறுத்தனர் என்றால், இதன் பெருமையை என்னென்று எடுத்தியம்புவது! 'தமிழ்' கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு, என்றும் 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே,' 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் புலவர் கூறுவாராயின், தமிழ் எத்தகைய பெருமையுடையதாய் இருக்கவேண்டும்!

இந்த மொழிக்கு இலக்கணம் அமைந்திருப்பது போன்று எந்த மொழிக்கும் அமைந்திலது என்று தர்க்க முறைப்படி பல பழைய மொழிகளையும் கற்று வல்ல புலவர்கள் மொழிகின்றார்கள். ஒரு தமிழ்ப் பெரியார்,

"கண்ணு தல்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."

என்று தெரிந்து பாராட்டிய பெருமை உண்மையே அன்றி உபசாரமில்லை. இம்மொழி நாட்டுப்பற்றையும், ஒற்றுமை உணர்ச்சியையும், வீர எழுச்சியையும் அளிக்கும் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இது தேசப் பற்றை உண்டுபண்ணும் என்பதற்கு நம் பாரதியார்,

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே;—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.'

என்று கூறிய வீரமொழியே சான்றாகும்.

நம் தமிழர் கிரேக்கர்களோடும், எகிப்தியர்களோடும் பெரு வாணிபம் செய்துவந்தனர் என்ற சரித்திர உண்மையையும், தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகு காட்டி இறந்தான் என்று சொல்லக்கேட்டு, 'ஆ! அப்படியா! அத்தகைய பேடிக்குப் பால் கொடுத்த என் மார்பை இதோ அறிந்து எறிகிறேன்!' என்று வாளேந்தி உண்மை காணப் போர் முனை நாடிச்சென்ற பெண்மணியின் வீர மொழிகள் நிறைந்த இலக்கியங்களையும் ஓர்க.

ஒழுக்கம் என்னும் நன்னடக்கையைப் போதிக்கும் தனிப்பெரு மாண்பு வாய்ந்தது நம் தமிழ் மொழியே என்பது மிகையாகாது. G. U. போப்புப் பெரியார், 'தென்னிந்தியர் எந்நாட்டாரினும் நல்லொழுக்கத்தில் சிறந்து முன்னணியில் நிற்றற்குறியர். அதற்குக் காரணம் நாலடி நானூறும் திருக்குறளுமே,' என்று கூறிப் போந்தனர். அவ்விரண்டு நூலும் தமிழ் மொழியில் அமைந்து, இம்மொழியைப் பெருமையுறச் செய்கின்றன. இதனால் பாரதியாரும், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்

புகழ் கொண்ட தமிழ் நாடு,' என்றனர். கடவுள் பக்தியை உணர்த்தும் தேவார, திருவாசக, நாலாயிரப் பிரபந்தங்களும் இம்மொழியில் அமைந்திருப்பது இதன் பெருமைக்கு ஓர் அடையாளமாம். இம்மொழிப் பாட்டுகள் கடவுள் பக்தியை ஊட்டிக் கல்லான நெஞ்சையும் கரைந்துருகச் செய்யும் என்பது உண்மை. இத்தகைய மாண்பு எம்மொழிக்கும் இல்லை என்று துணிந்து கூறலாம். இதனால் அல்லவா சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் "சொற்றமிழ் பாடுக," என்று கட்டளையிட்டருளினர்? இதனால் தெய்வமே விரும்பும் பெருமை வாய்ந்த மொழி நம் தமிழ் மொழி என்பது தெரிகிறதல்லவா? இப்படியே இம்மொழியைப் பற்றி நீளச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், இம்மொழியின் பெருமையை நாமே சொல்லிக்கொள்ளுவதில் பயன் யாது? தமிழ் மொழிக்கு அன்னியரான பேரறிஞர் புகழ்ந்த சில பொன்னுரைகளையும் இங்குக் கூறுவோம்:

கனம் வின்ஸ்லோ என்னும் மாபெரும் புலவர் பெருமான், 'தமிழ் மொழி, செய்யுள் அமைப்பில் கிரேக்க மொழியினையும், இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும், வெல்லவல்லது,' என்றும், கால்டுவெல் துரைமகனார், 'தமிழ் மொழி பண்டையது; நலஞ்சிறந்தது; உயர் நிலையிலுள்ளது; இதைப்போன்ற திராவிட மொழி வேறெதுவும் இல்லை,' என்றும், G. U. போப்பு என்னும் பெரியார், 'தமிழ் எம்மொழிக்கும் இழிந்ததன்று,' என்றும், சிலேட்டர் பெருந்தகையார் 'திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் மக்கள் பேசும் மொழிக்கு உரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ் மொழியே, தர்க்க அமைப்பை உடையதும் தமிழ் மொழியே,' என்றும், மர்டாக்குப் புலவர் பெருமானர், 'தூரானிய

மொழிகள் பலவற்றுள்ளும் மிகச் சிறிய மொழியாயும், அழகிய இலக்கியங்களைப் பொருந்தப் பெற்றதாயும் விளங்குவது தமிழே,' என்றும், காந்திப் பெரியாரும் தாம் எழுதிய சிறைச்சாலை அனுபவங்கள் என்னும் கட்டுரையில், 'தமிழர்கள் மொழியைக் கருத்தூன்றிக் கற்பதில் சென்ற மாதத்தைக் கழித்தேன். எவ்வளவுக்குக் கற்றேனோ, அவ்வளவுக்கு அதன் அழகுகளை உணர்ந்தேன். அது விரும்பத் தக்கதும், இன்பமானதுமான மொழி. நான் கற்றதிலிருந்து தமிழர்கள் தங்களுக்கு இடையில் பண்டும் இன்றும் அறிவும், சாதுரியமும், ஞானமும் வாய்ந்த மக்களைக் கொண்டவர்கள் என்பதை அறிகிறேன். பின்னும் இந்தியாவில் மக்கள் தொகுதி ஒன்றுகுமானால், சென்னை ராஜதானிக்குப் புறம்பே வாழும் மக்கள் தமிழ் அறிதல் வேண்டும்,' என்றும் பல படப் புகழ்ந்துள்ளார்கள்.

இத்தகைய மாண்பு வாய்ந்த மொழியைத் தமிழ் மாணவர்கள் கருத்தூன்றிக் கற்கவேண்டும்; கற்றுப் பண்டைத் தமிழர் நாகரிகத்தை உணர்ந்து, அவர்களை அடியொற்றி நடக்கவேண்டும்.

---

## 34. என் ஊர்ச் சுகாதாரப் பாதுகாப்பு

குறிப்பு: 1. என் ஊர் அமைப்பு, 2. சுகாதார வசதிக் குறைவுக்குக் காரணம், 3. சுகாதார விஷயமாக நகரபரிபாலன சபையார் எடுத்துக்கொள்ளும் கவலை, 4. முடிவுரை.

நான் சென்னையில் வசிக்கிறேன். சென்னை கடற்கரையைச் சார்ந்துள்ளது. சென்னையில் பல அழகிய கட்டடங்களும், உத்தியோகசாலைகளும் நிறைந்துள்ளன; கடைகளுக்கும் குறைவேயில்லை. சென்னையில் உள்ள வீடுகள் எல்லாம் நெருக்கமானவை. சுகாதார விஷயங்களையும் மற்றும் நகரத்துக்கு வேண்டிய நன்மைகளையும் கண்காணித்துவர நகர பரிபாலன சபை ஒன்று அமைந்திருக்கிறது. அது பெரியமட்டில் ஓர் அழகிய கட்டடமாய்த் திகழ்கிறது. அதுவே ரிப்பன் கட்டடம் எனப்படும்.

இத்தகைய அழகிய கட்டடங்களும், உத்தியோகசாலைகளும் நிறைந்த இச்சென்னை, சுகாதார விஷயத்தில் குறைவுடையதேயாகும். ஏனெனில், இங்கு ஜனத்தொகை அதிகம். சுற்றுப் பக்கத்திலுள்ளவர்களும், கிராம வாசிகளும் இச்சென்னையில் உத்தியோகம் செய்து பிழைக்கலாம் என்று நாளுக்கு நாள் வந்துகொண்டே இருக்கின்றனர். அவர்கள் வசிப்பதற்குப் போதுமான வீடுகள் இல்லாமையால், வீடுகள் எல்லாம் நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ளன. அதனால், காற்றோட்டத்திற்குத் தக்க வசதி இல்லாமற் போகிறது. ஜன நெருக்கத்தாலும், வீடுகளின் மிகுதியாலும் காற்று அசுத்தப்பட்டுச் சுகாதாரம் குறைபடுகிறது. இச்சென்னையில் ஒரு வீட்டில் பலர் குடியிருக்கவேண்டி இருக்கிறது. இதுவும் சுகாதாரத்திற்குத் தடையன்றோ? சென்னை சிறந்த வர்த்தக ஸ்தல

மாகவும், உத்தியோக சாலைகள் நிறைந்த ஸ்தலமாகவும் அமைந்திருப்பதால், போக்குவரவுச் சாதனங்கள் பெருகு வதற்குக் காரணமாகிறது. அதனால், மூலை முடுக்குகளி லெல்லாம் மோட்டார், பஸ், கை வண்டிகள், டிராம் முதலியன அடிக்கடி நடமாடிக்கொண்டிருக்கின்றன. அவற்றால் தும்பு தூசுகள் மலிந்து, இங்கு வாழ்பவருக்கு அடிக்கடி வியாதி உண்டாகின்றது. சென்னையின் மின்சாரப் பிரயோகம் அதிகமாக இருப்பதனால் அதுவும் மக்களுக்குச் சுகாதார விஷயத்தில் பிரதிகூலமாகவே இருக்கிறது. இத்தகைய பல காரணங்களால் சென்னை சுகாதார விஷயத்தில் குறைவுடையதேயாகும்.

ஆனால், நகர பரிபாலன சபையார் சென்னை நகரச் சுகாதாரப் பாதுகாப்பு விஷயத்தில் அதிக ஊக்கங்காட்டி வருகின்றனர். மக்கள் தூய காற்றைப் பருகுவதற்கு ஒவ் வொரு டிவிஷனிலும் சிங்காரத் தோட்டங்களை அமைத் துப் பல வித மரஞ்செடி கொடிகளை வளர்த்து வருகின் றனர். அங்கு மக்கள் மாலை வேளைகளில் சென்று, தூய காற்றைச் சுவாசிக்கிறார்கள். நகர வாசிகள் சௌகரிய மாக உட்காருவதற்குத் திண்ணைகளும், மேடைகளும் கட்டப்பட்டுள்ளன. உடல் இன்பத்தோடு செவி இன்ப மும் அனுபவிக்க ரேடியோ என்னும் ஒலிபரப்பும் கருவி யின் மூலம் இசையின்பத்தையும் ஊட்டுகின்றனர். வீதி களில் தும்பு தூசு மேல் ஓங்கி எழா வண்ணம் தார் ஊற் றிச் சாலைகளைப் பராமரிக்கின்றனர். காலை, மாலை வேளை களில் தண்ணீர் தெளிக்கின்றனர். வாந்திபேதி, வைசூரி முதலிய தொத்து வியாதிகளான கொள்ளை நோய்கள் நகரத்தில் உண்டாகுங் காலத்தில் மக்கள் எச்சரிக்கையாக இருக்க நோட்டீஸ் மூலம் விளம்பரப்படுத்துகின்றனர். கடைகளில் அழுகின பண்டங்கள் முதலியன விற்காதபடி

செய்கின்றனர். வீதிகளை நன்கு சுத்தம் செய்து, சுண்ணாம்பு தூவி, பெனுயில் ஊற்றி, நோய் பரவாவண்ணம் பாதுகாக்கின்றனர். வீடுதோறும் சென்று, ஒவ்வொருவருக்கும் அம்மை குத்துகின்றனர். நீரில் மருந்தைக் கலந்து, குழாய்களின் மூலம் விடுகின்றனர். கொள்ளை நோய் கண்ட வீட்டில் நுழைந்து, அந்நோய் அவ்வீட்டிலுள்ள மற்றவரைப் பற்றுவண்ணம் நோய் கண்டவர் வீட்டிலுள்ள துணி முதலியவற்றைக் கொளுத்திப் 'பெனுயில்' மூலம் வீட்டைச் சுத்தம் செய்கின்றனர். மக்கள் சுகாதார முறைகளை அனுசரிக்காமையால் ஏற்படும் நோய்கள் பரவி ஆபத்து விளைவிப்பதைப் படக்காட்சிகளின் மூலம் காண்பித்து, ஜனங்களை எச்சரிக்கின்றனர்.

ஆக்வே, நகர பரிபாலன சபையார் சென்னையில் சுகாதார விஷயத்தில் அதிகமாகக் கவனம் செலுத்துகின்றனர் என்றே சொல்லலாம். ஒவ்வொரு டிவிஷனிலும் சுகாதாரப் பாதுகாப்பு இலாக்கா அமைத்து இருக்கின்றனர். நான் வசிக்கும் சென்னை சுகாதார விஷயத்தில் குறைபாடு உடையதாயினும், சுகாதாரப் பாதுகாப்பு இலாக்காவின் உதவியால் அக்குறைவு ஒருவாறு நீக்கப்படுகிறதென்றே கூறலாம்.

## 35. யுத்தத்தினால் ஏற்படும் நன்மை தீமைகள்

குறிப்பு: 1. முன்னுரை, 2. யுத்தத்தினால் ஏற்படும் நன்மை, 3. யுத்தத்தினால் உண்டாகும் தீமை, 4. முடிவுரை.

உலகம் ஒருவன் ஆளுகையில் இல்லை இது பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதனால், பல பேருடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறது. பலபல பாகங்களையும் ஒருசேரப் பரிபாலிக்கின்றவர்களே சக்கரவர்த்திகள் என்றும், தனித்தனி ஆள்பவர்கள் அரசர்கள் என்றும், அரசப் பிரதிநிதிகள் (Viceroys) என்றும் கூறப்படுவார்கள். இங்ஙனம் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த நாட்டை மட்டும் வைத்துக்கொண்டு ஆளச் சம்மதிப்பதில்லை. ஏனைய நாடுகளையும் தங்கள் நாட்டோடு சேர்த்து ஆள ஒவ்வொருவரும் எண்ணுகின்றனர்; அகிலமெல்லாம் கட்டி ஆளினும், கடல் மீது சென்று அதற்கப்பாலுள்ள நாடும் தம் ஆட்சியின் கீழ் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இது காரணமாக ஒருவரோடொருவர் போர் தொடுக்கின்றனர். இப்படிப் போர் நிகழ்வதனால் நன்மையா தீமையா என்று உன்னிப் பார்த்தால், இரண்டும் உண்டு என்பது அறியக்கிடக்கிறது. முதலில் போரினால் ஏற்படும் நன்மைகளைக் கூறுவோம்.

ஒரு நாட்டில் போர் ஏற்படுவதனால் அந்நாடு அதில் வெற்றி கொண்டால் சிறிய நாடாய் இருந்தது பெரிய நாடாய் விளங்குகிறது. போருக்காக நாட்டு மக்கள் போர் வித்தைகளைக் கற்றுக்கொள்ளுகின்றார்கள். நாட்டுப் பற்றையும், அரசப் பற்றையும் குடிகள் காட்டுவதற்கு இது ஒரு சாதகமாயிருக்கிறது. போரில் இறப்பவர்க்கு உலகம் பொன்றும் துணையும் புகழ் நிலவுகிறது. போர் ஏற்படுவதனால் மக்களுக்கு வீர உணர்ச்சி எழுகிறது.

இதனை நம் பண்டையோர் 'போர் என்ன வீங்கும் பொலங்கொள் தோளினன்,' என்று கூறிச் சிறப்பித்துள்ளனர். போர் ஏற்படுவதனால் பல ஜாதி மக்கள் போருக்கெனப் பழக்கப்படுகின்றனர். அதனால், சகோதர நேய ஒருமைப்பாடு நிலவுகிறது. போர் நிமித்தம் பல நாடுகளுக்குப் போகச் சந்தர்ப்பம் ஏற்படுவதால், ஒரு நாட்டினர் பல பாஷைகளைப் பேசவும், அவ்வந் நாட்டு மக்களின் வழக்க ஒழுக்கங்களை அறியவும் அனுகூலமாகிறது. இப்போரானது அன்னிய அரசர்களுக்கு ஒரு நாட்டைப் பற்றியும், அந்நாட்டு அரசனைப் பற்றியும், மக்களைப் பற்றியும் உள்ள உண்மை மனப்பான்மையை அறியத் துணை செய்கிறது.

போரினால் எவ்வளவு நன்மை இருந்தாலும், தீமைகளே மிகுதியாக உள்ளன. போர் ஏற்படுவதனால் முன்னேற்றமடைந்த பட்டினங்களும், நகரங்களும், கிராமங்களும், பெரிய கட்டடங்களும் அழிக்கப்படுகின்றன; கொளுத்தப்படுகின்றன. பெற்றோர்களும், குழந்தைகளும் கஷ்டத்திற்குள்ளாகின்றார்கள். வீரர்கள் போர் முனையில் மடிந்து, வீர சுவர்க்கம் புகுவதால், பெண்கள் விதவைகளாகவும், பிள்ளைகள் தந்தையாரை இழந்தவர்களாகவும் பரிதபிக்கும் நிலையை அடைகின்றார்கள். மேலும், இக்கால விஞ்ஞானக் கலையின் துணையால் பலவித விஷக் காற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டு, யுத்தகாலங்களில் பயன்படுத்தப்படுகின்றமையால், பல்லாயிர உயிர்கள் ஒரே சமயத்தில் மடிந்தொழிகின்றன. இதனால் நோய்கள் பரவி, எஞ்சி நின்ற மக்களும் அழிய ஏதுவாகின்றன. போர் முனையில் மிகுந்த பலசாலிகளே சண்டை செய்ய நேர்வதனால், அவர்கள் இறந்தால் நாட்டில் பல ஈனர்களே எஞ்சி இருக்கவேண்டியிருக்கிறது. போர்க் காலங்களில்

வியாபாரம்,தொழில் முயற்சி முதலியன தடைபடுகின்றன. நாட்டுக்குப் பொருள் நஷ்டமும் அதிகரிக்கின்றது. இப் போரினுல் நாகரிகம் குறைவு படுகிறது. போர் உண்டான போது மக்களுக்குச் சந்தோஷ நிலேயே தென்படாமல் அச்சம் குடிகொண்டு விடுகிறது. 'இங்கு ஓடலாமா? அங்கு ஓடி வாழலாமா?' என்ற சஞ்சலமுற்ற மனம் உண்டாகிறது. மனச் சமாதானமே ஏற்படுவதில்லே. எல்லாப் பொருள்களும் யுத்த விஷயமாகவே அந்தப் போர்ச் சந்தர்ப்பத்தில் செலவிடப்படுவதனுல், நாடு பஞ்சத்தினுல் வருந்தி நிற்கிறது.

ஆகவே, ஓர் அரசன் தன் நாட்டைப் போர் வராத படி சமாதான முறையில் அரசாண்டு வரவேண்டும். இவ் விஷயத்தில் ஒவ்வொரு நாட்டு மன்னரும் ஒத்து நடக்க வேண்டும். நம் முன்னேர்களுங்கூடத் திடீரென்று போருக்குச் சென்றதில்லே. அவர்கள் சாம பேத தான தண்ட முறைகளே அனுசரித்தே நடந்து வந்தார்கள். சேனேப்பலம், பொருட்பலம் அற்ற அரசர்கள்மீது போர் தொடுக்கக் கூடாது என்பது அந்நாள் கொள்கை. இந் நாள் அரசுகள் சர்வ தேச சங்கத்தின் சட்டதிட்டங் களுக்கு அடங்கி நடக்க வேண்டும்; தங்களுக்குள்ள மன வேறுபாடு முதலியவற்றைச் சமாதான வழிகளே அனு சரித்து வெற்றியுடனும் கௌரவத்துடனும் பெறலாம். போரே நடவாமல் இருந்தால் கல்வி, கைத்தொழில், வாணிபம், விஞ்ஞான வளர்ச்சி முதலியன தட்டுத் தடை யின்றி வளர்ந்தோங்கும்.

## 36. ‘புத்திமானே பலவான்’

குறிப்பு: 1. முன்னுரை, 2. புத்திமான் பலவான் என்பது எப்படி? 3. உதாரணக் கதை. 4. முடிவுரை.

கடவுளால் படைக்கப்பட்ட உயிர்களில் மனிதப் பிறப்பே எவ்வகையினும் சிறப்பு உடையது. இதனையே சிறந்த தத்துவ ஞானிகள் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள். ‘எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவியே யாதினும் அரிதரிது,’ என்று தவராஜ யோகியாராகிய தாயுமான வரும், ‘அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது.’ என்று நம் ஔவை மூதாட்டியாரும் வியந்து கூறியுள்ளனர். ஏனெனில், மானிடப் பிறவியே இயற்கை அறிவைப் பெருக்கிக்கொள்ளுதற் குரியதாகும். யானை, சிங்கம், புலி முதலிய நிலப் பிராணிகளும், சுறா, திமிங்கலம் முதலிய நீர்வாழ் ஜந்துக்களும் மனிதனைக்காட்டிலும் ஆயிர மடங்கு உடல் வன்மையில் சிறந்தனவாயினும், மனிதன் தன்புத்தி பலத்தினால் அவற்றை அடக்கியாள்வதனால், அவனே அவற்றைக் காட்டிலும் சிறந்தவனாகின்றான். இதனாலேதான் உலகில், ‘புத்திமானே பலவான்’ என்னும் அனுபவ பூர்வமான இம்முதுமொழி வழங்குவதாயிற்று. இனிப் புத்திமான் பலவானாவது எப்படி என்பதைக் கவனிக்கலாம்.

ஒரு மனிதனுக்குப் புத்தி பல விதத்திலும் வளர லாம். சிலருக்கு அனுபவத்தாலும், வேறு சிலருக்குக் கல்வியறிவாலும் புத்தி வளரும். இங்ஙனம் பல்வேறு துறைகளில் பெற்ற அறிவால் மனிதன் பலவானாகின்றான். கற்றவன், கல்லா அறிவினரை அடக்கி ஆள்கின்றான். உதாரணமாக ஆப்பிரிக்காத் தேசத்திலுள்ள லக்ஷக்கணக் கான காட்டு மிராண்டிகள், தங்களுக்குத் தேக பலம்

முதலியன இருந்தும், அறிவு பலம் ஒன்றேயுடைய சிறு தொகையினரான ஐரோப்பியரால் அடக்கி ஆளப்பட்டு வருகின்றார்கள். வீரர்கள் உண்மையில் பலமுள்ளவர்கள்; போர் முனையில் புறமுதுகிடாது புகழ் கொள்பவர்கள். ஆனால், அவர்கள் பலவீனர்களான அறிஞர்களுக்குப் பயந்தே நடப்பவராகிறார்கள். இதனாலன்றோ நம் வள்ளுவரும்,

> “ வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
> சொல்லே ருழவர் பகை. ”

என்று கூறியுள்ளார்.

மனிதன் தன் அறிவைக்கொண்டு எல்லாவற்றைக் காட்டிலும் பலமுள்ளவனாய் இருக்கின்றான். மிருகங்கள், பறவைகள் முதலியவைகள் தம்மைத்தாமே காத்துக் கொள்ள நகம் அலகு முதலிய இயற்கைக் கருவிகளைப் பெற்று விளங்குகின்றன. ஆனால், மனிதனோ, தன் புத்தி பலத்தினால் ஆயுதங்களைக் கண்டுபிடித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறான்; குதிரை முதலியவற்றைப்போல ஓடத்தக்க தேக பலம் இல்லாவிட்டாலும், தன் புத்தி பலத்தினால் நீராவி முதலியவற்றையும், மின்சார சக்தியையும் கண்டுபிடித்து, அவற்றின் மூலம், குதிரைகளைக் காட்டிலும் வேகமாக ஓர் இடத்தினின்றும் மற்றோர் இடத்திற்குச் செல்கிறான். மிருகங்கள் பற்களின் உதவியைப் பெற்றால், மனிதன் எஃகு முதலியவற்றை உபயோகித்துக் கத்தி முதலிய கருவிகளைச் செய்து கொள்ளுகிறான். நீரில் மீன்கள் நீந்துவதைப் போல மனிதன் நீந்திப் போகாவிட்டாலும், படகு, புகைக்கப்பல் முதலியவற்றைக் கண்டுபிடித்து, அவற்றின் மூலம் நீரைக் கடந்து செல்கின்றான்; பறவைகளைப் போலப் பறக்கும்

பலம் பெருவிட்டாலும், ஆகாய விமானம் முதலியவற்றின் மூலம் பறந்து செல்கின்முன்; வெகு தூரத்திலுள்ள பொருளேப் பார்க்கும் கழுகு முதலியவற்றைப் போலக் கூரிய பார்வை பெருவிட்டாலும், தூரதிருஷ்டிக் கண்ணுடி முதலியவற்றைக் கண்டுபிடித்துத் தூரத்திலுள்ள பொருள்களேக் காண்கின்முன்; துஷ்ட மிருகங்களாகிய புலி, கரடி, சிங்கம் முதலியவற்றைத் தன் புத்தி பலத்திஞல் அடக்கிப் பழக்கித் தனக்குக் கீழ்ப்படுத்துகிருன். இப்படியே மனிதனது புத்திபலத்துக்குப் பல உதாரணங்களே எடுத்துக் காட்டலாம். புத்தியுள்ள மனிதன் பல முள்ளவனுவான் என்பதை விளக்க ஒரு சிறு கதை கூறலாம்.

வடநாட்டில் தென்னுலி என்னும் ஊரில் இராமன் என்னும் பெயருடைய வடம பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் எப்போதும் விகடம் செய்வதில் விருப்பம் உள்ளவன். அதனல், அவனே விகட ராமன் என்று வழங்கி வந்தனர். அவன் புத்தி சாதுரியத்திஞல் எல்லோரையும் தனக்குக் கீழ்ப்படுத்தி வந்தான். அவன் அரச சபையில் இடம் பெற்று விகடம் செய்து, அரசனே மகிழ்வித்து வந்தான்; அதனல், அரசனுல் நன்கு சன்மானிக்கப்பட்டுப் பொருள் மிகப் படைத்தவனுய் இருந்தான். இதையறிந்த திருடர் பலர் அவன் வீட்டில் திருட எண்ணங்கொண்டு, ஒருநாள் இரவு அவன் வீட்டில் நுழைந்தனர். இதை எப்படியோ அறிந்தான் இராமன். திருடர்கள் பலாஷ்டிகர்கள். அவன் அவர்களே எதிர்த்தால், தன் பொருள் அபகரிக்கப்படுவதே அல்லாமல், உயிருக்கும் ஏதம் வரும் என்பதை அறிந்தான். தேகபலத்திலும் புத்தி பலம் சிறந்ததல்லவா? உடனே ஒரு யோசனே செய்தான்; திருடர்கள் காதில் கேட்கும்படி

தன் மனைவியோடு பேசலானான்: "பெண்ணே ஊரில் திருடர் மலிந்து இருக்கின்றனர். அவர்கள் நம் சொத்தைக் கொள்ளை இடினும் இடுவார்கள். ஆகையால், நம் சொத்தையெல்லாம் ஒரு பெட்டியில் போட்டுப் பூட்டி, நம் புறக்கடைக் கிணற்றில் போட்டு வைப்போம். திருடர் பயம் நீங்கியதும் எடுத்துக்கொள்வோம்," என்று சொல்லி, ஒரு பெட்டியில் கற்களை நிரப்பித் தன் வீட்டுக் கிணற்றில் திருடர்கள் அறியும்படி போட்டுவிட்டான். இவற்றை எல்லாம் கேட்டும் கண்டும் இருந்த திருடர்கள் கிணற்றண்டை போய் நீரை இறைக்கத் தொடங்கினார்கள். இறைத்துக்கொண்டே இருக்கக் கிணறு சுரந்து கொண்டே இருந்தது. இதற்குள் பொழுதும் விடிந்து விட்டது. இதனை அறிந்த திருடர் ஓட்டம் பிடித்தனர்.

இக்கதையினால் நாம் அறிவதென்ன? புஜபலமுள்ள திருடர்களைப் புத்தி பலம் ஒன்றேயுடைய இராமன் வென்ற சாதுரியமேயாகும்.

இப்படியே ஒவ்வொரு மனிதனும் செய்யக்கூடும். புத்தி பலத்தினால் ஒருவன் எத்தகைய ஆபத்தினின்றும் மீட்கப்படலாம். தனவந்தனுக்குப் பொருள் உள்ளவரையில் பெருமையுண்டு. புத்திபலம் உள்ளவன் என்றும் புகழுடையான். ஆகவே, தேக பலத்தைவிடப் புத்தி பலத்தைப் பெற ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

## 37. ஒருவரைப் பெரியவராக்கும் குணங்கள்

குறிப்பு : 1. முன்னுரை, 2. கைக்கொள்ள வேண்டிய குணங்கள், 3. முடிவுரை.

மக்கள் உலகில் பிறந்துவிட்டால் மட்டும் போதாது; நல்லொழுக்கம் உடையவர்களாகவும் நடந்துகொள்ள வேண்டும். இவ்வொழுக்கமே விருப்பம் தரவல்லது. இதனை உயிரைக்காட்டிலும் சிறந்ததாக மதித்துக் கைக்கொள்ள வேண்டும். நமக்குத் துணையாய் இருப்பதும் இவ்வொழுக்கமேயாகும். உயர் குடிப் பிறப்பினாலேயே மட்டும் ஒருவன் சிறந்தவன் ஆக இயலாது. ஒழுக்கமே உயர் குடிப் பிறப்பாகும். உயர் குலத்தில் பிறந்தவன் ஒழுக்கந் தவறி நடப்பின், அவன் இழிந்தவனாகக் கருதப் படுவான். ஒழுக்கம் கெட்டவன் உயர்வை அடைய இயலாது. ஒழுக்கம் கெடுவதனால், இழுக்கே உண்டாகும்; எய்தாப் பழி ஏற்படும். நன்மையை வளர்ப்பதற்கு நல்லொழுக்கம் விதைபோன்றதாகும். மக்கள் இந்த ஒழுக்கத்தினின்றும் தவறாமல் நல்வழியில் நடந்துகொள்ள வேண்டும்.

நன்னடக்கை எனினும், ஒழுக்கம் எனினும் ஒன்றே. ஒழுக்க முறைகளைப் பலவேறு வழிகளில் பெறலாம். முதலாவது, 'கடவுள் ஒருவர் உண்டு. அவர் நாம் செய்யும் நன்மை தீமைகளைக் கவனித்து வருகின்றார்,' என்று அறிந்து, புண்ணிய பாவங்களுக்குப் பயந்து, நடக்க வேண்டும். காலை மாலைகளில் கடவுளைத் தொழ மறத்தல் கூடாது. எக்காரணங் கொண்டும் பொய் பேசுதல் ஆகாது. 'சரீர அழுக்கை நீரினால் சுத்தமாக்கிக்கொள்ளலாம்; மன அழுக்கைப் பொய் பேசாமையாகிய குணத்தினால் சுத்தப்படுத்திக்கொள்ளலாம்,' என்பது பெரி

யோர் துணிபாதலின், மெய்ம்மையே பேசுதல் வேண்டும். நமக்கு ஒருவர் செய்த நன்றியை எக்காரணத்தாலும் மறத்தல் கூடாது. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை', என்பது நம் நாட்டுப் பழமொழியன்றோ? இந்நன்றியை மறத்தலினால் ஏற்படும் பாவத்தைப் போக்குவதற்குப் பிராயச்சித்தமே இல்லை என்று கூறப்படுவதனால், செய்ந் நன்றியை மறத்தல் ஆகாது. பிறர் செல்வத்தை அபகரிக்கக் கருதுதல் கூடாது. பிறர் பொருளை வேம்பைப்போல வெறுக்கவேண்டும். பிறரது பொருளாக்கத்தைக் கண்டு பொறாமைப்படுதல் ஆகாது. பிறரைக் கண்ட இடத்து இனியனாயும் காணாத இடத்து அவரைப் பழிப்பவனாயும் நடந்துகொள்ளக்கூடாது. அயலார், நண்பர், பகைவர் ஆகிய முத்திறத்தாரிடத்தும் நியாயத்தினின்றும் தவறி நடத்தல் ஆகாது. பிறர் நம்மை வைதாலும் நாம் அவரை வைதல் ஆகாது. பொறுமையோடு இருக்க வேண்டும். பிறருக்குத் தீங்குசெய்ய எண்ணுதல் கூடாது. பிறருக்கு வந்த தீங்கை நீக்க முந்த வேண்டும். நல்ல நட்பை மேற்கொள்ள வேண்டும். தீ நட்பை ஒருவி நிற்கவேண்டும். தாய் தந்தையார், பெரியார் முதலியவர்களிடம் வெகு மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் வார்த்தைகளைத் தட்டி நடத்தல் ஆகாது. பெரியோர்கள் கூடிய சபையில் அடிக்கடி சிரித்தலும், ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருத்தலும், வெளியே எழுந்து போதலும் ஆகா. பிறர் இரகசியம் பேசுகையில் அதனை உற்றுக் கேட்டல் ஆகாது. வீதியில் போகிறவர்களைக் கைதட்டிக் கூப்பிடுதல் ஆகாது. அப்படி அவர்களோடு பேச வேண்டி இருந்தால், அருகே விரைந்து சென்று பேச வேண்டும். வயதானவர்களும், சுமை தூக்கிகளும், பசுக்கள் முதலியவைகளும், நாம் நடந்து போகும்போது

வழியில் குறுக்கிட்டால் நாம் விலகி வழிவிட வேண்டும். அங்கஈனர், வியாதியாளர், படியாதவர், குருபிகள், தரித்திரர் முதலியோர்களை இகழ்ந்து பேசிப் பரிகசித்தல் ஆகாது. பெரியோர்கள் நித்திரை செய்யும்போது அவசியம் இருந்தாலன்றி அனுவசியமாக அவர்களை எழுப்பல் ஆகாது. கல்வியில் கருத்தைச் செலுத்திக் கற்றல் வேண்டும். உலக நடையை அறிந்து, அதற்குத் தகுந்தபடி நடத்தல் வேண்டும். அறிவை நாளுக்குநாள் பெருக்கிக்கொள்ள வேண்டும். இவைபோன்ற செயல்களே நல்லொழுக்கத்திற்குக் கருவிகளாம்.

இங்ஙனம் ஒழுக்கத்தினின்றும் தவறாமல் நடப்பவர்கள் நல்ல குடிப்பிறப்பை அடைவார்கள். அவர்கள் வாழ்வு உலகத்தில் நீடித்திருக்கும். அவர்களுக்குச் செல்வமும், அழகும், செல்வாக்கும், கல்வியும் பெருகும். இம்மையில் புகழும், மறுமையில் நற்கதியும் ஏற்படும் என்பது நிச்சயம். இத்தகைய நல்லொழுக்கங்களே ஒருவரைப் பெரியவராக்கும் குணங்களாம்.

---

## 38. நான் விரும்பும் கைத்தொழில்

குறிப்பு: 1. முன்னுரை, 2. கைத்தொழிற் சிறப்பு, 3. நான் விரும்பும் தொழிலும் அதற்குக் காரணமும், 4. முடிவுரை.

உலகில் உள்ள மக்களுள் ஒவ்வொருவரும் கண்ணைப் போன்ற கல்வியைக் கற்றுக்கொள்ளவேண்டும். இக்கல்வியைப் பெறாதவர் கற்றோரை நோக்கக் கடையவரே யாவர். அவர்களுக்கும் விலங்குக்கும் ஒரு பேதமும் இராது. தம் இயற்கையறிவைப் பெருக்கிக் கொள்ளுவதற்கும் கல்வி துணை செய்கிறது. ஒரு சன்மத்தில் தான்

கற்ற கல்வி, தான் வினைவயத்தால் பிறக்கும் ஏழு பிறவிகளில் வந்து துணை செய்யும் என்பது பெரியோர் கருத்து. கற்றவர்கள் தாங்கள் பெற்ற இன்பத்தை இவ்வுலகமும் பெறவேண்டுமென்னும் நன்னோக்கங் கொண்டு உழைக்க முன் வருவார்கள். கல்வியே அழியாத செல்வம். கல்வி அறிவைப் பெறாதவர் உயிரோடிருப்பினும் ஒன்றுக்கும் உதவா நடைப்பிணமாவார். கற்றவனையே உலகம் விரும்பும். அரசனும் கற்றவன் வழி நடப்பான். இதனால் அன்றோ, 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு,' என்றும், 'அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்னும் அருமைத் திருவாக்குகள் எழுந்தன? ஆகவே, ஒவ்வொருவரும் எப்பாடுபட்டேனும் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதனை உணர்ந்தவேதான், 'கற்கை நன்றே கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே,' என்று வற்புறுத்திக் கூறியுள்ளார் நம் மூதாதையர்.

இத்தகைய பெருமை வாய்ந்த கல்வி ஏட்டுக் கல்வி, தொழிற் கல்வி என்று இருவகைப்படும். இவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பெறினும் சிறப்பே ஆகும். ஒவ்வொன்றும் தனிச் சிறப்புடையதேயாம்.

ஏட்டுக் கல்வி பட்டம் பதவிகளுக்கு படிக்கப்படுவதும், உயர்ந்த அரசாங்க உத்தியோகம் பெறுவதற்குப் பயன்படக்கூடிய வழியில் கற்கப்படுவதுமாகும். தொழிற் கல்வி வியர்வை நீர் நிலத்தில் விழும்படி உடல் வருந்திக் கற்கப்படுவது. இத்தொழிற் கல்வி பல. இத்தொழிற் கல்விகளே காடுகளை அழித்து நாடாக்குகின்றன; கரடு முரடான நிலங்களைப் பண்படுத்தி, தானியங்களை விளைவித்து, உலகிலுள்ள உயிர்களை வளர்க்கின்றன; அழகிய கட்டடங்களை அமைக்கின்றன; கடலைக்கடக்கும் நீராவிக்

கப்பல்களைச் செய்கின்றன; பாலங்களை அமைக்கின்றன; பூமியில் மறைந்து கிடக்கும் உலோகங்களை எடுத்து மக்களுக்கு உதவுகின்றன. இப்படியே பல புதுமைகளை நாள் தோறும் கணக்கின்றிச் செய்துவருகின்றன. சுருங்கக் கூறுவோமானால், உழைப்பினால் மக்களுக்கு உண்டாகாத நன்மை இவ்வுலகில் ஒன்றுமே இல்லை எனக் கூறலாம்.

இத்தகைய கைத்தொழில்கள் பல நம் நாட்டில் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் நம் நாட்டுக்குச் சிறப்புத்தரும் கைத்தொழில்கள் இரண்டு. அவை உழவு, நெசவு என்பன. நாம் உழவுத் தொழிலால், 'உணவும்' நெசவுத் தொழிலால் ஆடையும் பெறுகிறோம். எவை இல்லாவிட்டாலும், இவை இரண்டும் மக்களுக்கு இன்றியமையாதன அல்லவா? இது குறித்து அன்றோ 'உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்,' என்று ஔவையார் குறிப்பிட்டுள்ளார் ?

இந்த இரண்டு தொழில்களில் நான் நெசவுத் தொழிலையே மிகுதியாக விரும்புகின்றேன். ஏனெனில், உழவுத் தொழிற்குப் பலவித சௌகரியங்கள் வேண்டும்; நிலம் வேண்டும்; உழவுக் கருவிகள் வேண்டும்; அதே தொழிலாக உழவும் வேண்டும். ஆனால், நெசவுத் தொழிற்கு அத்தகைய சாதனம் வேண்டுவதில்லை. நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாலும், அன்றிப் படிப்பு முடிந்து தொழிலை மேற்கொண்டாலும் நெசவுத் தொழிலை இடை ஈடின்றிச் செய்து வருவேன். இதற்குப் பொருட் செலவும் அதிகம் இல்லை. பஞ்சும், நூல் நூற்கும் கருவியும், ஆடை நெய்யும் கருவியும் இருந்தால் போதும். வழியில் போகும்போதும் நூல் நூற்றுக்கொண்டே போகலாம்; வீட்டில் தறி அமைத்து ஆடையை நெய்துகொள்ளலாம் இத்தொழிலினால் பல நன்மைகள் உண்டு. நமக்கு

வேண்டிய ஆடையை நாமே செய்துகொள்ளலாம். நம் நாட்டுக் கைத்தொழிலாகிய இதை அபிவிருத்தி செய்யலாம். நம் நாட்டுப் பொருள்களினால் ஏற்படும் பயனை நன்கு உணரலாம். இதனால் நாட்டுப் பற்றும், தொழிற் பற்றும் ஏற்படும். இத்தொழில் எப்பொழுதும் பயனளிக்கும். நாடு கருப்புற்ற காலத்தில் இத்தொழிற்குப் பங்கம் ஏற்படாது. வானம் மழை பெய்யாது வறண்ட காலத்திலும் இத்தொழில் தடையின்றி நடைபெற வல்லது. இத்தொழிலை ஆடவரே அன்றிப் பெண்டிரும் தமக்கு ஒய்ந்த நேரத்தில் செய்யலாம். இப்படிப் பல நன்மைகள் ஏற்படுவதனால் நான் இத்தொழிலை விரும்பிச் செய்து வருகின்றேன்.

ஒவ்வொருவரும் இப்படியே இத்தொழிலை மேற்கொண்டு, இவ்வுலகில் மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அடைவாராக.

---

## 39. பெரியோர்களின் சரித்திரங்களைப் படிப்பதனால் ஏற்படும் நன்மைகள்

குறிப்பு: 1. பெரியோர் யாவர்? 2. பெரியோர் சரித்திரம் என்பதின் பொருள், 3. படிப்பதின் பயன், 4. முடிவுரை.

கல்வியை அபிவிருத்தி செய்வது சரித்திர பாடம். சரித்திர பாடத்தைப் படிப்பதால் ஒரு நாட்டின் முன்னைய நிலையை அறிய ஏதுவாயிருக்கிறது. அதனால் அவ்வந்நாட்டு மக்கள் ஒழுகலாற்றை அறிகிறோம்; அதன்படி நாமும் நடக்க நம்முடைய மனம் முந்துகிறது; நம் நாட்டை ஒழுங்கு படுத்திக்கொள்ளுவதற்குத் துணை

யாகிறது. சரித்திரம் படிப்பதனால் நாட்டுப் பற்றும் உண்டாகிறது. சிவாஜி முதலியவர்கள் சிறந்த வீரர்கள் ஆனமைக்குச் சரித்திர உணர்ச்சியே காரணமாகும். இப்படியே பெரியோர்களின் சரித்திரம் படிப்பதினாலும் பலவித நன்மைகள் உண்டு.

பெரியோர் எனப்படுவார் யாவர் எனில், சிலர் அனுபவத்தில் பெரியவராய் இருக்கலாம்; சிலர் வயதில் பெரியவராய் இருக்கலாம்; சிலர் அறிவில் பெரியவராய் இருக்கலாம்; சிலர் உத்தியோகத்தில் பெரியவராய் இருக்கலாம்; சிலர் பட்டம் பதவிகளில் பெரியவராய் இருக்கலாம்; சிலர் பணத்தில் பெரியவராய் இருக்கலாம். எதில் பெரியவராயிருப்பினும், அப்பெரியார் சரித்திரங்கள் படிப்பவர்களுக்கு நன்மை பயப்பனவேயாம். பெரியாரின் சரித்திரம் என்பது பெரியாரின் வாழ்க்கை வரலாறாகும்.

பெரியோர்களின் சரித்திரத்தைப் படிப்பதனால், அவர்களுடைய பெற்றோர்களின் வாழ்க்கையையும், அவர்கள் பிறந்த நாடு நகர வளப்பத்தையும் அறிகிறோம்; அக் கதா நாயகரின் இளமையும், பிற்கால வாழ்க்கையும் உணர்கிறோம். அவர் செய்த நன்மைகளையும் அறிந்து கொள்ளலாம். இவற்றை எல்லாம் அறிவதனால் நாம் பல நன்மைகளைப் பெறலாம். நாம் ஒரு பெரியாரைப் பற்றிப் படிக்கும்போது, நமக்கு அவர் பிறந்த நாட்டை நேரில் காண அவா எழுகிறது. ஒவ்வொரு சமயம் அவ்வவா நிறைவேறுவதும் உண்டு. திருவாதவூரர் அவதரித்த திருவாதவூரை அடைந்தால், அங்குள்ளவர், 'இதுதான் அவர் வாழ்ந்த இடம்; இங்குத்தான் அவர் வீடு இருந்தது,' என்றால், அதைக் கேட்டதும் உண்மையில் அவ்வாதவூரரிடத்தில் அன்புள்ள ஒருவருக்கு அன்பு

மேலிட்டு, அவர் அவ்விடத்தில் புரண்டேனும் எழுந்து தம் உள்ளன்பை வெளிப்படுத்துவர். மேலும், நாம் கதா நாயகரின் இளமை வாழ்க்கையை உணர்ச்சியோடு படிக்கும்போது அவரைப் போலவே நாமும நடந்துகொள்ள முந்துகின்ளும். பக்தர்களாகிய பெரியோர்களின் சரித்திரத்தைப் படித்து, எத்தனையோ பேர்கள் பக்திமான்களாகவும் மாறியிருக்கிருர்கள். வீரர்களாகிய பெரியோர்களின் சரித்திரம் படிப்பதினுல் வீர உணர்ச்சி எழுகிறது.

சரித்திரத்தின் பெரும் பயனை நன்குணர்ந்தன்ருே நம் நாட்டில் பல பெரியோர்களின் சரித்திரங்கள் வெளி வருகின்றன? பள்ளிக்கூட மாணவர்கள் பெரியோர்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்றே வரலாற்று நூல்கள் அவர்களுக்கு உபபாடமாக அமைக்கப்படுகின்றன. பாடப் புத்தகங்களிலும் பல பெரியோர்களின் சரித்திரங்களை இடையிடையே எழுதப்படுகின்றதன் நோக்கமும் இதுவே ஆகும்.

---

## 40. பொது நன்மை

குறிப்பு: 1. முன்னுரை, 2. பொது நன்மை இன்னது என்பது, 3. பொது நன்மை எப்படிப் பயன் தருகிறது? 4. முடிவுரை.

நம் முன்னேர் நன்மைசெய்து நலம் பெறற்பொருட்டுப் பல தரும முறைகளை அமைத்துக் காட்டியுள்ளனர். அவற்றுள் தலை சிறந்தனவாக முப்பத்திரண்டறங்களைக் கூறியுள்ளனர். இம் முப்பத்திரண்டறங்களையும் மக்கள் எங்ஙனம் நடத்திக் காட்டுவதென்று அறியாது தயங்கு

வரே என்று பார்வதி தேவியே ஆண்டவனிடத்தில் இரு நாழி நெல்லைக் கொண்டு காஞ்சியில் வளர்த்துக் காட்டினர் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆகவே, மக்கள் இம் முப்பத்திரண்டு அறங்களைச் செய்ய இயலாவிட்டாலும், சிலவற்றையேனும் செய்ய வேண்டும். 'தருமம் தலை காக்கும்,' என்பதை மறத்தல் கூடாது. இதனைக் கன்னன் சரித்திரத்தினாலும் அறியலாம். கன்னன் ஏழைகளுக்கு ஈந்து ஈந்து புண்ணியத்தைச் சம்பாதித்து வைத்திருந்தமையால், அருச்சுனன் அம்பு அவனை ஒன்றும் செய்ய இயலாமல் போயிற்று. அப்புண்ணியங்களைக் கிருஷ்ணன் வாங்கிக்கொண்ட பிறகே, அவன் அருச்சுனன் அம்பால் மாய்ந்தான். இப்படியே எத்தனையோ கதைகள் தருமத்தின் பலனை நன்கு உணர்த்துவனவாகும்.

இத்தகைய தருமங்கள் செய்கையில் பலனை நோக்காது செய்தல் வேண்டும்; பொது நன்மைக்கென்றே செய்தல் வேண்டும். பலனைக் கருதிச் செய்யப்படுவன எல்லாம் ஆரவாரத் தன்மையுடையன. பொது நன்மைகள் எனப்படுவன கல்வி, அன்ன சத்திரம், தங்கும் விடுதி, மருத்துவ சாலை முதலியனவாம்.

மக்கள் கல்வியறிவாகிய கண்ணைப் பெறுவதற்கு ஆங்காங்குப் பல பாடசாலைகளைக் கட்டுவித்து, அவைகள் நன்றாக நடைபெறுவதற்கான முறைகளை ஏற்படுத்த வேண்டும். கல்விதானம் அஞ்ஞானமாகிய படுகுழியில் விழுந்தவர்களை மேலே எடுத்து விடுவதற்குத் துணையாய் இருப்பது. கல்வியைக் கொடுத்தவன் கண்ணையே கொடுத்தவனாவான்.

அன்னதானமும் அங்ஙனமே செய்யப்படவேண்டும். எல்லாத்தானங்களிலும் இதுவே சிறந்த தானம் என்று பெரியோர் கூறுவதனால், இதனைச் சரிவர நடத்த

வேண்டும். ஆங்காங்கு அன்ன சத்திரங்கள் கட்டி, வந்து கேட்கின்றவர் எவராயினும், அவருக்கு இல்லை என்னாது அன்னம் அளிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

தங்கும் விடுதிகளும் கட்டிவைக்க வேண்டும். அவற்றில் எந்த வேளையில் எவர் வரினும் தங்கிப் போவதற்கு இடவசதிகள் ஏற்படுத்தவேண்டும். சிலர் சில இடங்களில் தரும சத்திரங்கள் என்ற பெயரால் சில கட்டடங்களைக் கட்டிவைத்துக்கொண்டு, தங்களைச் சார்ந்தவர்களுக்கும், கடிதம் கொண்டு வருபவருக்கும், வாடகை கொடுப்பவர்களுக்கும், இன்னின்ன சாதியாருக்குத்தான் விடப்படும் என்னும் ஏற்பாட்டையும் செய்து வருகின்றனர். இது பொது நன்மையாகாது. இது சுயநலம் எனப்படும்.

பொது நன்மைக்காகவே மருத்துவ சாலைகளும் ஏற்படவேண்டும். இந்நாளில் நோய்கள் அளவின்றி மல்கி வருவதனால் இந்நன்மையும் அபரிமிதமாக நடந்து வர வேண்டும். ஏழை எளியவர்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் இலவசமாக மருந்து கொடுத்து உதவ வேண்டும். சில வள்ளல்கள் மேற்சொன்ன பொது நலத்தின் பொருட்டுப் பலவித சௌகரியங்கள் செய்து வைத்து, அவை நடைபெறுவதற்கு வேண்டிய பொருளையும் வைத்துச் சென்றால், அவற்றைச் சரிவர பரிபாலிக்காமல், தருமத்தையும் சரிவர நடத்தாமல், சிலர் முதற் பணத்தையே சாப்பிட்டுவிட்டு ஏப்பமிடுகின்றனர்.

ஆகவே, பொது நன்மைக்கென அமைக்கப்பட்டதான தருமங்களை நன்கு பரிபாலித்துவர வேண்டும். அத்தருமங்கள் மேன்மேலும் பெருகுவதற்கு வழி தேட வேண்டும். பொது நன்மை இன்னும் என்னென்ன உண்டோ அவற்றை எல்லாம் செய்து, மக்களுக்கு நன்மை செய்யவேண்டும். தருமங்களை ஏற்படுத்தியவர்

களைக் காட்டிலும் அவற்றை வைத்து நிர்வகிக்கிறவர்களே அதிக சிரமம் எடுத்து உழைக்கவேண்டும். இப்படிச் செய்வதும் ஒரு பொது நன்மையேயாம்.

---

## 41. பத்திரிகையின் பயன்

குறிப்பு: 1. பத்திரிகைத் தோற்றம், 2. தோன்றியதின் நோக்கம், 3. பயன், 4. முடிவுரை.

பத்திரிகை ஆதி காலத்தில் இருந்தே தோன்றியது அன்று; இடைப்பட்ட காலத்திலேதான் தோன்றியது. முதன் முதல் பத்திரிகை வெனிஸ் நகரத்திலேதான் ஜனனம் ஆயிற்று. அந்நகரைப் பார்த்தே ஏனைய நாடுகளும் பத்திரிகையின் பயனை உணர்ந்து பல பத்திரிகைகளைப் பரப்பத் தொடங்கின. பொதுவாகக் கூறுமிடத்து 16-ஆம் நூற்றுண்டே பத்திரிகையின் தோற்ற காலம் என்னலாம். பிறகு 1633-ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் 'பப்ளிக்கு இன்டெலிஜென்ஸ்' என்னும் பத்திரிகை வெளிவரலாயிற்று. இந்தியாவில் இதற்கு முன் பத்திரிகையே தலை காட்டவில்லை. இங்கிலாந்தில் தோன்றிய பிறகே 'இந்தியா கெஜட்' என்னும் பத்திரிகை தோன்றலாயிற்று. பிறகு இதன் பயனை அறிந்து இந்து பெருமக்களான ராஜாராம் மோகனராய், ஈஸ்வர சந்திர வித்தியாசாகர் முதலியவர் வெளியிட்டனர். இங்ஙனம் 1835-ஆம் ஆண்டு, பத்திரிகை இந்தியாவில் ஊர்ஜிதமாயிற்று; பிறகு நாளடைவில் பெருகிவிட்டது.

மக்கள் அன்றுடம் அங்கங்கு நடக்கும் விஷயங்களை அறிந்துகொள்ளவும், மதாசாரம், விளையாட்டு விஷயம்,

இலக்கிய உணர்ச்சி, கலையுணர்ச்சி, இசையின்பம், ராஜ்யச் செய்தி முதலியவற்றைப் பலரும் அறிந்துகொள்ளவுமே பத்திரிகைகள் ஏற்படலாயின. பத்திரிகைகளில் பல விஷயங்கள் காணப்படுகின்றமையால், படிப்பவர்கள் உற்சாகமாகப் படிப்பார்கள். பொழுது போக்குக்கேனும் பத்திரிகை வேண்டி இருக்கிறது.

பத்திரிகையினால் பல நன்மைகள் உண்டு. ஒரு நாடு கல்வி அறிவில் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், அந்நாட்டில் பல பத்திரிகைகள் தோன்ற வேண்டும். விஷயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்கு ஊட்டுவதற்கும் பத்திரிகை பெரிதும் பயன் செய்யும். உள் நாட்டுச் செய்திகளும், அயல்நாட்டுச் செய்திகளும் அறிந்துகொள்வதற்குப் பத்திரிகையின்றி வேறு வழியில்லை. ஒரு நாட்டார் ஒரு விஷயத்தை அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து முறையிட வேண்டுமானால், பத்திரிகையின் மூலம் எழுதித் தெரிவிக்கலாம். அரசாங்கத்தாரும் ஒரு செய்தியை உலக முழுவதும் அறிவிக்கவேண்டுமாயின், பத்திரிகையே சிறந்த தூதுவனாக நின்று தெரியப்படுத்தும். இப்பத்திரிகை நாட்டுக்குப் பெரும்பயன் அளிக்க வல்லது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கொடுங்கோல் மன்னர்களையும், அநீதி அரசாங்கமுறைகளையும் திருத்தி, ஒழுங்கு பெறச் செய்ய வல்லது பத்திரிகை ஒன்றே. மக்களுக்கு ஒன்றன் இடத்து உணர்ச்சியை ஊட்ட வல்லது பத்திரிகையே. நாடு முன்னேற்றமடையப் பத்திரிகை துணை செய்யும். மக்களுக்குள்ளே சுதந்திர உணர்ச்சியையும், தனி உரிமையையும் ஊட்டவல்லது பத்திரிகையாகும். மூலை முடுக்குகளில் எல்லாம் பத்திரிகைகள் பரவினால், நாட்டு மக்களில் பலரும் விஷயத்தை உணர்ந்து, தமது வாழ்க்கையைச் சீர்படுத்திக்கொள்ள ஏதுவாகும். இப்படி

ஒவ்வொருவரும் அறிந்துவரின், நாடு முன்னேற்றமடையும் என்பதில் ஐயமுண்டோ?

பத்திரிகையின் மூலம் வியாபாரத்தை விருத்தி செய்து, நல்ல ஊதியம் பெறலாம். ஒரு வியாபாரி உள்நாட்டாரிடமே வாணிபம் செய்தால், நல்ல வருமானம் பெற இயலாது. அவன் தன் வியாபாரம் செழித்து, ஓங்க வேண்டுமானல், நன்கு விளம்பரம் செய்து, வெளியிலுள்ளவர்களும் வாங்கும்படி செய்துகொள்ளவேண்டும். அப்படி விளம்பரப் படுத்துவதற்குத் துணையாய் இருப்பது பத்திரிகையேயாம்.

அறிவின் வளர்ச்சிக்கும் பத்திரிகை உதவி செய்கிறது. தினந்தோறும் இயற்கை விஞ்ஞானத் துணைகொண்டு பேரறிஞர் கண்டு பிடித்த அரும்பெருஞ்செயல்கள் பத்திரிகைகளில் வருகின்றன. சிறந்த தத்துவ ஞானிகள் கண்ட உண்மைகளும் வெளிவருகின்றன. இவைகளையெல்லாம் படிப்பதனல் அறிவு விசாலப்படுகிறது. மக்கள் பிரதி தினமும் படித்து வருவதனல், சிறிது சிறிதாக அறிவைப் பெற்று, பிறகு பேரறிஞர்களாய்த் திகழ்ந்து, நாட்டுக்கு நன்மை விளைவிப்பவர்களாவார்கள்.

ஆகவே, பத்திரிகை நாட்டு நாகரிகத்துக்கும், மக்கள் நல்லுணர்ச்சிக்கும் காரணமாகிறது. பத்திரிகைகளுக்குச் சகல உரிமைகளும் அரசாங்கந் தரவேண்டும். அப்படித் தந்தால்தான் பத்திரிகாசிரியர்கள் தங்கள் உள்ளக் கருத்தை ஒளியாமல் எழுத இயலும். பத்திரிகைகள் உலகறிவையும், கல்வியறிவையும் பெற்றவர்களாலேயே நன்கு நடத்தப்படவேண்டும். இலக்கியத்திற்கும், வியாபாரத்துக்கும், நாட்டுச் செய்திகளை அறிவதற்கும், சமூகத்திற்கும், மதசித்தாந்தத்திற்கும், தனித்தனி பத்திரிகை

கள் ஏற்படவேண்டும். உண்மைச் செய்திகளே பத்திரிகைகளில் பிரசுரிக்கப் படவேண்டும். வெறும் பொய், பித்தலாட்டங்கள் பத்திரிகைகளில் இடம் பெறுதல் கூடா. மக்கள் எல்லாவற்றையும் நேரிற் கண்டு, கேட்டு உணர்ந்துகொள்ள வசதியற்றவர்களாதலின், பத்திரிகையில் வருவதையே உண்மை என்று எடுத்துக்கொள்வர். ஆதலின், அவர்களுக்கு உண்மையையே எடுத்துரைக்க வேண்டும். பத்திரிகைகள் அதிக விலையில் வெளி வருதல் கூடா; ஏழை எளியவர்கள் வாங்கும் நிலையில் குறைந்த விலைக்கே அச்சிட்டு வழங்கப்படல் வேண்டும். அதிக பக்கம் இருக்க வேண்டுமென்ற நியதியும் வேண்டா. பிரதி தினமும் நான்கு பக்கங்கள் வந்தாலும் போதும். இத்தகைய பத்திரிகைகளை ஒவ்வொருவரும் வாசித்துப் பலன் பெறுதல் வேண்டும்.

---

## 42. உழவுத் தொழிலின் சிறப்பு

குறிப்பு: 1. முன்னுரை, 2. உழவுத் தொழிலின் சிறப்பு, 3. உழவுத் தொழிலின் பயன், 4. முடிவுரை.

'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை,' என்றபடி ஒவ்வொருவரும் பொருளைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். பொருளை எவ்விதத்திலேனும் சம்பாதிக்கலாம். திருடிச் சம்பாதிக்கலாம்; வஞ்சித்தும் அதிக வட்டி வாங்கியும் சம்பாதிக்கலாம். அவை எல்லாம் பொருள் சம்பாதிப்பதற்குரிய நல்ல முறைகள் ஆகா. பொருளைச் சம்பாதிப்பதற்கு அற வழிகளே நல்ல வழிகளாம். வியாபாரம், வேளாண்மை முதலிய தொழிற் செய்தும், உத்தி

யோகம் செய்தும் சம்பாதிக்கலாம். பொருள் சம்பாதிப்பதும், தொழிற் செய்வதும் வயிற்றுக்கே யாகும். வயிற்றுக்கு உணவளிக்கும் தொழிலாக உழவு இருப்பதனால், எல்லாத் தொழிலினும் உழவுத் தொழிலே தலை சிறந்தது.

இவ்வுழவுத் தொழில் உயிர்ப்பாதுகாப்புக்கு இன்றியமையாதது. பொய் முதலிய குற்றக் கலப்பிற்கு இடந்தாராதது. இத்தொழிலின் சிறப்பை உணர்த்த நம் செந்தமிழ் மொழியில் எத்தனையோ முதுமொழிகள் நிலவுகின்றன. 'ஓதுவார் எல்லாரும் உழுவார்தம் தலைக்கடைக்கே,' என்றும், 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது,' என்றும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்,' என்றும், 'உழுகுலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தார்,' என்றும், 'எந்நாளும் காப்பாரே வேளாளர்' என்றும் அறிஞர் உழவின் சிறப்பையும் உழவர் சிறப்பையும் பலபடப் புகழ்ந்துள்ளனர்.

இத்தகைய உழவுத் தொழிலினால் ஏற்படும் நலங்கள் பல உள. இதனால், தேவாலய பூசை இனிது நடைபெறும்; வேண்டியபோது மழைபெய்யும்; உலகம் நல்ல நெறியில் நடக்கும்; இயல், இசை, நாடகமாகிய முத்தமிழும் குறைவின்றி நடக்கும்; சுபகாரியங்கள் ஒழுங்காக நடைபெறும்; வீரர்கள் போர் முனையில் வீரத்தோடு சண்டை செய்ய இயலும்; தருமங்கள் நிலைபெறும்; குடி ஓங்கும்; அரசு ஓங்கும்; உலகில் எவரையும் பசி என்னும் நோய் அணுகாது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த உழவுத் தொழிலைக் கைவிட்டு, வேறு தொழிலைச் செய்தல் உயி குற்றி, கை வருந்தியவாறும். இத்தொழிலை மேற்கொண்டால் தரித்

திரம் இராது. ஏனெனில், நிலம் உண்டு நாம் உண்டு. உழுது சீவனம் பண்ணலாம். இதனாலேதான் 'பூமி திருத்தி உண்,' என்று நம்மவர் கூறியுள்ளார். உலகில் மற்றைய தொழில்களுக்குக் கேடு வரினும், இத்தொழிலுக்கு யாதொரு கெடுதியும் வராது. இதனை,

> " ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
> வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ?—ஏற்றம்
> உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு."

என்ற அமுத வாக்காலும் அறிக. 'மேழிச் செல்வம் கோழை படாது,' என்பதும் இத்தொழிலின் சிறப்பைக் குறிப்பதேயாகும். இத்தொழிலின் மேன்மையை இதற்கு அமைந்த சொல்லே விளக்கிக் காட்டும். உழவு எனினும், வேளாண்மை எனினும் ஒன்றே. 'வேளாண்மை' என்னுஞ் சொல், ஈகை, உண்மை முதலிய பொருள்களில் வழங்கப் படுகிறது. இதனால் இதுவே உண்மையான தொழில் என்பதும், ஈகையுள்ள தொழிலென்பதும் விளங்கவில்லையா ?

இப்படி இருக்க, நம்மவரில் பலர் உத்தியோக வேட்கை கொண்டு, நாட்டுப் புறங்களில் உள்ள மக்களையும் நகருக்கு அனுப்பிப் படிக்க வைத்துப் பிறருக்கு அடிமைத் தொழில் புரியப் பழக்கி வருகின்றனர். இஃது எவ்வளவு அறியாமை ! நம்முன்னோர் தொழில்களை அசட்டை செய்து வருவதனாலேதான், மக்களில் பலர் உத்தியோகம் இன்றித் தவிக்கின்றனர். ஒவ்வொருவரும் இத்தொழிலைச் செய்துவரின், நாட்டில் பஞ்சமும் இராது; உத்தியோகம் இல்லாக் குறையும் நீங்கும்.

## 43. பள்ளிக்கூட நூல் நிலயம்

குறிப்பு : 1. முன்னுரை, 2. நூல் நிலயத்தின் அவசியம், 3. பயன்படுத்தும் முறை, 4. முடிவுரை.

மக்கள் கண்ணைப் போன்ற கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும். கல்லாதவன் தனக்கும் பிறனுக்கும் பயன்படான். ஆதலின், அவன் உயிரோடு இருப்பினும், நடைப்பிணமே யாவான். அத்தகையவன் இறந் தொழிதலே நலம். ஆகையால், எப்பாடு பட்டாயினும் கல்வியைக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படிக் கல்வியைக் கற்பதற்கு நூல்கள் கருவியாக இருக்கின்றன. அத்தகைய நூல்களைப் போதிப்பதற்குக் கலாசாலைகள் இடமாக அமைந்திருக்கின்றன. அவ்விடத்தில் மக்களைப் படிக்கத் தூண்டுவதற்கு உபாத்தியாயர்கள் ஏவுதற் கருத்தாக்களாய் இருக்கின்றார்கள்.

பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படும் கல்வி ஓர் அளவுக்கு உட்பட்டது. ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் இவ்வளவுதான் போதிக்க வேண்டும் என்ற திட்டமுண்டு. ஆகையால், கலாசாலைப் படிப்பு முழு அறிவையும் பெறக் கருவியாகாது. அதற்காகக் கலாசாலையார் பள்ளிக்கூட நூல் நிலயங்களை அமைத்து அவற்றில் பலவேறு நூல்களை வாங்கி வைத்திருக்கின்றனர்; பள்ளிக்கூடப் பாடத்தோடு, மற்றும் பல விஷயங்களையும் பிள்ளைகள் தங்கள் ஒய்வு நேரங்களில் படித்துப் பயன்பெற ஏற்பாடு செய்திருக்கின்றனர். அங்கு மாணவர்களுக்கு ஏற்ற நூல்களை வாங்கி அமைக்கப்பட்டிருப்பதனால், ஒவ்வொரு மாணவனும் தனக்கு வேண்டிய நூலைப் பெற்றுப் படிக்கலாம்.

மாணவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்கூட நூல் நிலயத்தைப் பயன் படுத்திக்கொள்ள முயலவேண்டும். தான் படிப்பதற்கு எது தக்கது என்று தன் ஆசிரியரைக் கேட்டு, அந்நூலை வாங்கிப் படிக்க வேண்டும். அங்ஙனம் வாங்கிப் படிக்கும் நூல்களைப் படிப்பதோடு அமையாது, தான் படித்தவைகளை ஒரு குறிப்புப் புத்தகத்தில் பெயர்த்து எழுதி, அவற்றை அடிக்கடி மனனம் செய்யவும் வேண்டும். இப்படிச் செய்யவில்லை என்றால், தான் நூல்களைப் படிப்பது ஒன்றும் பயனில்லாமல் போகும். 'வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்,' என்னும் பெரியோர் வார்த்தையை மறத்தல் கூடாது. தான் கற்றதை ஒருவன் அவ்வப்போது மறந்துவிடுவானாயின், அவன் கல்லாதவனே என்று கற்றோரால் கருதப்படுவான்.

ஆகவே, மாணவர்கள் பள்ளிக்கூட நூல் நிலயத்தில் பல புத்தகங்களை வாங்கிப் படிக்க முயலவேண்டும். விடுமுறை நாட்களிலும், ஓய்ந்த நேரங்களிலும் சும்மா இராமல் நூல் நிலயங்களில் புத்தகங்களைப் பெற்று வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்து வரின், கல்வி அறிவில் தேர்ச்சி பெறலாம். இல்லை என்றால் உபாத்தியாயர் சொன்னவைகளைத் தவிர வேறொன்றையும் அறியாது இருப்பார்கள்; 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை,' என்பதைப் போல ஆவார்கள்.

---

## 44. 'திரைகடலோடியும் திரவியம் தேடு'

குறிப்பு: 1. முன்னுரை, 2. திரவியம் சம்பாதிக்கும் முறை, 3. செலவழிக்கும் முறை, 4. முடிவுரை.

மக்கள் உலக வாழ்வில் ஈடுபட்டுள்ள வரையில் திரவியம் இன்றியமையாததாகும். பொருள் இல்லாதவன் மனிதனாயினும், பெருநிலந்தனில் சஞ்சாரப் பிரேதமேயாவன். பொருள் இல்லாதவனுக்குப் புகழ் இல்லை; மக்களுள் பெருமை இல்லை. அவன் தான் எண்ணியதை எய்த முடியாது. கல்லாதவனாயினும், பொருள் பெற்றிருப்பின், எல்லோரும் அவனுக்கு மரியாதை செய்வர். ஒருவனிடம் பொருள் இன்றேல், அவனை ஈன்ற தாயும் வேண்டாள்; இல்லாளும் விரும்பாள். பலர் கூடிய சபையில் செல்லவும் அவன் உடல் கூசும்; வீரம் குறையும்; விருந்தினரைக் காணவும் நாணம் உண்டாகும்; அற்பர்களுக்கு அடங்கி நடக்க நேரிடும்; அறிவு குறையும். ஆகவே, பணம் மக்களுக்கு அவசியமானவற்றில் மிக முக்கியமானது. பணத்தின் பெருமையை விளக்க எந்நாட்டிலும் பல சொற்றொடர்கள் வழங்கி வருகின்றன. 'பணமே உலகை ஆள்கிறது,' 'பணமே சகல வல்லமையுள்ளது,' பணமில்லாத மனிதன் நடைப்பிணம்,' 'ஈட்டி எட்டின மட்டும் பாயும்; பணம் பாதளம் மட்டும் பாயும்,' 'கடல் ஞாலம் கைத்துடையான் கீழ் ஒதுங்கும்,' 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பன பணத்தின் சிறப்பைக் குறிப்பனவேயாம். ஆகவே, ஒவ்வொருவரும் பணத்தைச் சம்பாதிக்க முயல வேண்டும். இதற்காகவே மக்கள் சோம்பி இராது சுறுசுறுப்பாய் இருக்க, 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு,' 'வளைகடல் திரிந்து, பொருள் தேடவேண்டும்'

என்று உணர்ச்சியுள்ள பெரியோர்கள் பொருளீட்டும் முறையை நமக்கு ஊட்டிச் சென்றனர்.

எவ்வழியிலேனும் பொருள் தேடவேண்டும் என்பது நம் கருத்தன்று. தீய வழிகளில் தேடிய பொருள் நெடு நாள் நீடித்திராது. அறநெறியில் ஈட்டிய பொருளே என்றும் நிலைத்துப் பயனைத்தரும். பொருளை ஈட்டுதற்கு வேளாண்மை, வாணிகம், இராச சேவை, வித்தை கற்பித்தல் முதலியவை சாதனங்களாகும்.

ஒருவன் இங்ஙனம் தேடிய பொருளை நல்ல வழிகளில் செலவு செய்யவேண்டும். இதைக்கொண்டு தன்னையும் தன் சுற்றத்தாரையும் ஓம்ப வேண்டும். ‘செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்’ அன்றோ? கடவுள் அருளால் அதிக செல்வம் தேடினால், அதனை வீணான வழிகளில் செலவு செய்யாது தரும சத்திரம் கட்டுவித்தல், கலாசாலை ஏற்படுத்தல், மருத்துவ சாலை உண்டாக்கல் முதலிய நிலையான தருமங்களுக்குச் செலவிட வேண்டும்.

இப்படிப் பொருளைப் பல விதத்திலும் சம்பாதித்து நல்ல வழியில் செலவழித்தால், அஃது அறத்தையும், இன்பத்தையும் தரும்; நட்பையும், அரசன் நன்மதிப்பையும் கொடுக்கும். பகைவரின் செருக்கை அடக்கச் செல்வமே ஆயுதமாகவும் இருக்கும். ஆதலால், உலகில் ஒருவன் நல்ல புகழையும், எண்ணியதை முடிக்கும் ஆற்றலையும் பெற விரும்பினால், பொருளைப் பெறுதல் வேண்டும்.

## 45. கற்றவர்கள் நாட்டுக்குச் செய்யவேண்டிய நன்மைகள்

குறிப்பு : 1. *முன்னுரை,* 2. *கற்றவர்க்கும் மற்றவர்க்குமுள்ள வேறுபாடு,* 3. *கற்றோர் செய்யவேண்டுபவை,* 4. *முடிவுரை.*

*இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் பிறப்பளவில் நோக்கும்போது எல்லாம் ஒன்றே என்பதும், அவை அவை செய்கின்ற தொழில் வேற்றுமையால் சிறப்படைகின்றன என்பதும் வெள்ளிடை மலைபோல விளங்குகின்றன.*

*உலகிற்குக் கற்றவன் செய்யும் நன்மையே மற்றவர்கள் செய்யும் நன்மைகளுக்கு முன் வழி காட்டியாகும். உடல் வியர்க்க, உறுப்புக்கள் சோரக் கஷ்டப்பட்டு வேலை செய்யும் தொழிலாளிக்கும், அத்தொழிலை, 'இப்படிச் செய்; அப்படிச் செய்' என்று செயல் முறைகளைத் தன் நுண்ணறிவினால் அளந்து கொடுக்கும் கற்றவனுக்கும் எவ்வளவு பேதம் இருக்கிறது என்பதைப் பாருங்கள்! கஷ்டப்பட்டு வேலை செய்பவனுக்குத் தினக்கூலி ரூபாய் ஒன்றோ, அன்றி ஒன்றரையோ ஆகும். ஆனால், கற்ற அறிவினால் வேலை வாங்குபவர்க்குக் கொடுக்கும் ஊதியம் அக்கூலியினும் பன்மடங்கு அதிகமாகும். இது நியாயமே. கல்லாத கூலியாட்கள் கிளிப் பிள்ளைகளைப் போன்றவர்கள். கிளிப்பிள்ளை சொன்னதைச் சொல்லும். அப்படியே இவர்கள் சொன்னதைச் செய்வார்கள்; தாங்களே சிந்தித்து எதையும் செய்ய மாட்டார்கள்.*

*கற்றவர், ஒன்று நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று கண்டால், அதனை முதலில் அனுபவ முறையில் பயின்று காட்ட வேண்டும். அப்படி அவர்கள் செய்தால், நாட்டில் உள்ள மக்கள் அதனைப் பின்பற்றி நடக்க ஏதுவாயிருக்கும். அப்படி அனுபவத்தில் கண்ட நன்மைகளை*

அனுசரிப்பதோடு அமையாது, அவைகள் என்றும் உலகில் நிலவ வேண்டும் என்ற எண்ணங்கொண்டு, அவைகளை எழுதி நூல் வடிவாக்க வேண்டும். அத்தகைய நூல்கள் பின்னால் வருகின்ற மக்கள் படித்துணர்ந்து, தாங்களும் தங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ளுவதற்கு வழிகாட்டிகளாகும். எல்லா மக்களும் கல்வியறிவைப் பெற்று வாசித்துக்கொள்ள இயலாதவர்களாகையால், கற்றோர் ஆங்காங்குச் சென்று, மக்கள் முன்னேற்ற மடைவதற்குரிய வழிகளைப் பற்றிப் பிரசங்கம் செய்யவும் வேண்டும்.

இப்படிச் செய்வதனால் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் பெரும்பயன் உண்டாகிறது. சில மக்கள் செல்வந்தர்களாய் இருப்பார்கள். ஆதலின், அவர்களிடம் கற்றோர் தாமே சென்று அவர்களுக்குத் தமது இனிய நல்லுரையால் அறிவுச் சுடர் கொளுத்தி, அவர்களால் நாட்டுக்குச் செய்து கொள்ள வேண்டிய நன்மைகளைச் செய்து முடித்துக் கொள்ளவேண்டும்.

---

## 46. மழை

குறிப்பு: 1. முன்னுரை, 2. உற்பத்தி, 3. மழையின் சிறப்பு, 4. பலன், 5. முடிவுரை.

உலகில் மக்கள் உயிர் வாழ்வதற்குக் காற்று, நீர், உணவு ஆகிய இம்மூன்றும் முக்கியமானவை. இவற்றுள் நடுநாயகமான நீர் காற்றுக்கு அடுத்தபடி முக்கியமானதாம். இந்த நீருக்கு மழையே முக்கிய ஆதாரமாதலின், அதனைப்பற்றி இங்குச் சிறிது கூறுவோம்.

மழை உண்டாவதற்கு மேகம் காரணம். இம்மேகம் எப்படி உண்டாகிறதெனில், ஏரி, குளம், குட்டை, ஆறு, கடல் முதலிய நீர் நிலைகளில் உள்ள நீர் சூரியனுடைய வெப்பத்தினால் நீராவியாக மாறிக்கொண்டே சென்று, மேலே ஒன்று சேர்ந்து மேகமாகிறது. இந்த நீராவி சாதாரண வாயுவைக் காட்டிலும் வெகு இலேசாய் இருப்பதனால், மேலே எழும்பி ஒன்று கூடுகிறது. இப்படி மேல் செல்லும்போது கருநிறமாகி, எந்தக் காரணத்தினாலாவது குளிர்காற்றுப் பட்டால் மழைத்துளியாய்ப் பூமியில் விழுகிறது.

மழையின் சிறப்பு அளவிலடங்காதது. இதன் பெருமையைக் குறித்துப் பல பழமொழிகள் நம் நாட்டில் வழங்கி வருகின்றன. 'மாரியல்லது காரியம் இல்லை' என்றும், 'வானம் சுருங்கின் தானம் சுருங்கும்' என்றும், 'வானம் வறக்குமேல் சிறப்போடு பூசனை செல்லாது' என்றும், 'வானம் வழங்காதெனில், தானம், தவம் இரண்டும் தங்கா' என்றும் பல படக் கூறி உள்ளனர்.

மழையால் உலகம் அழியாது, என்றும் உய்ந்து வருவதால் இம்மழை தேவாமுதம் போன்று விளங்குகிறது. இஃது உணவுப்பொருள் உண்டாவதற்கு முதற் காரணமாகித் தானும் உணவாக விளங்குகிறது; வறண்ட நாடுகளைச் செழிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது. இதனால், கிணறு குளம் ஆறு முதலியன நீர் நிரம்பப் பெற்று, இது பெய்யாத காலத்தில் பயனளிக்கின்றன. இம்மழை பெய்வதனால் புல் பூண்டுகளும், மரஞ் செடி கொடிகளும் செழித்து வளர்கின்றன; இம்மழை இன்றேல் ஓரறிவு உயிராகிய புல்லும் தலை காட்டாது என்னும் பொருள் பட,

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது."

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். மழை பெய்யாமல் இருப்பின், உழவர் ஏரால் உழுதலைச் செய்யார். அவர் உழவில்லை என்றால், உலகம் தானிய மணிகளைப் பெறாது, அதனால், மக்கள் பசியால் பரிதவிப்பார்கள். மழைக்கு முதற்காரணமாகிய கடலிலும் மழை பெய்யவில்லை என்றால் கடல்படு பொருள்களான முத்து, பவழம் முதலியன உற்பவியா; கடல் வாழ் பிராணிகளும் பல்கா.

இந்த மழை எங்கும் ஒரே அளவாய்ப் பெய்வதில்லை. மலையடர்ந்த நாடுகளிலும், மரங்கள் அடர்ந்த காடுகளிலும் மேகங்கள் தவழ்ந்து, மழை அதிகமாகப் பெய்யும். இம்மழை தக்க காலத்தில் பெய்வதால், பயிர் பச்சைகள் செழித்து வளரும். அப்படிக்கின்றி மழை பெய்யாது இருந்தாலும், வேண்டாத போது அதிகமாகப் பெய்தாலும் நாட்டுக்கு நஷ்டமே ஆகும். இதனாலேதான் திருவள்ளுவரும்,

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை."

என்று கூறியுள்ளார்.

## 47. மதுபானத்தால் விளையும் தீமைகள்

குறிப்பு : 1. முன்னுரை, 2. குடிப்பதற்குக் காரணம், 3. குடிப்பதனால் ஏற்படும் தீமைகள், 4. முடிவுரை.

அறிஞர் உலக மக்கள் செய்யும் பாதகங்கள் எல்லாவற்றையும் கவனித்து, ஐந்து பாதகங்களே கொடூரமானவை என்று எடுத்துக் காட்டியுள்ளனர். அவை, 'பஞ்சமகா பாதகம்' என்னும் தொடரால் வழங்கப்பட்டு வருகின்றன. அவை: காதல், களவாடல், கள்ளுண்ணல், பொய்ம்மொழிதல், ஈதல், மறுத்தல் என்பன. மக்கள் செய்யும் ஏனைய பாதகங்கள் எல்லாம் இவ்வைந்தினுள் அடங்கி விடுமாதலின், இங்ஙனம் தொகுத்துக் கூறினர். இவற்றுள் தீமை செய்வதில் நடு நாயகமாய் விளங்குவது கள்ளுண்ணலாகும். கள்ளுண்ணல் எனினும் மதுபானம் எனினும் ஒன்றே. மது என்னும் பதத்திற்குத் தேன் என்னும் பொருள் இருப்பினும், அஃது இங்கு அப்பொருளை வைத்துக் கள், சாராயம், பிராந்தி, பீர் முதலிய மயக்கந் தரும் பானங்களையே உணர்த்தி நிற்கிறது. தென்னை, பனை, ஈந்து முதலிய மரங்களினின்று இயற்கையாகக் கிடைக்கும் கள்ளைப் பருகுவதாலும், சாராயம், பீர், பிராந்தி முதலிய செயற்கையால் ஏற்பட்ட பானத்தையும் மக்கள் பருகுவதாலும் பலவித தீமைகளை அடைகிறார்கள். இப்பாவச் செயல் ஒன்றே ஏனைய காதல், களவாடல், பொய்ம் மொழிதல், ஈதல், மறுத்தல் என்னும் பாதகங்களுக்குத் தாயகம் என்று சொல்லலாம். இப்பாதகச் செயலே மற்றப் பாதகச் செயல்களைச் செய்யத் தூண்டும் என்க.

அறிவீனர்கள் மது பானம் பண்ணுவதால் தேகத்தில் சுறுசுறுப்புண்டாகிறதென்றும், மனத்தில் கவலை

கள் நீங்கிச் சந்தோஷம் உண்டாகிறதென்றும், உடலில் சோர்வு நீங்குகிறதென்றும், தேகம் உறம் பெறுகிறதென்றும், பகலெல்லாம் உழைப்பதனால் ஏற்படும் சோர்வு இரவில் மதுபானத்தினால் நீங்கி ஆரோக்கியமாக உறக்கம் ஏற்படுகிறதென்றும் கருதிக் குடிக்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளார்கள். அவர்கள் இவைகளெல்லாம் வெறும்பொய் என்பதை அனுபவ பூர்வமாக அறிவார்களாயின், இத்தீப்பழக்கத்தை அறவே ஒழித்திடுவார்கள் என்பது திண்ணம். மேற்சொன்ன நன்மை போலத் தோன்றுகின்றவை எல்லாம் கள்ளுண்ட மயக்கத்தால் ஏற்பட்டவை என்பதை உணர வேண்டும் அம்மயக்கம் ஒழிந்தால், மேற்சொன்ன குணங்களெல்லாம் உடனே மாறிவிடும். இனி, மதுபானத்தினால் ஏற்படும் தீமைகளைக் கவனிப்போம்:

மதுவையுண்ட உடன் அது உண்டவருக்கு மயக்கத்தைக் கொடுத்து, அவர் புத்தியைக் கெடுத்துவிடுகிறது. புத்தி கெட்டதும், இன்னது செய்வதென்று தெரியாமல் எத்தகைய பாதகத்தையும் செய்ய அவர் மனம் துணிகிறது. அதனால், அவர் வழியில் வருவார் போவாருடன் சண்டை இடுவர்; கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான வழிகளில் சென்று கஷ்டப்படுவர். அவர்களைப் போலீசுக்கு அழைத்துச் சென்றால், அவர்கள் தங்கள் மதி மயக்கத்தால் அங்குள்ள அதிகாரிகளையும் எதிர்த்துப் பேசுவார்கள்; வீட்டுக்குச் சென்றால், தங்கள் மனைவி மக்களையும் துன்புறுத்துவார்கள். குடிப்பழக்கம் பணம் இல்லாத போது திருடச் செய்யும்; 'ஒருவனைக் கொலை செய்துவந்தால் உனக்கு வேண்டிய மதுபானம் வாங்கித் தருவேன்' என்று ஒருவன் கூறினால், குடிப்பவன் அதையும் செய்ய மனம் துணிவான்; சூதாடிப் பொருள் சேக

ரிக்க முயல்வான். குடி, குடியை ஈடேற ஒட்டாது. தரித்திரம் குடியர்களை விட்டொழியாது. குடிப்பவர் உலகில் நல்வாழ்வையும், செல்வாக்கையும் எய்தார். இம் மது, உலகிற்கே இயமன் போன்றது என்னலாம். இயமன் கையில் அகப்பட்ட உயிர் மீண்டும் திரும்பி வாராததைப் போலக் குடிப்பழக்கம் மேற்கொண்டவர், இதனை விட மனங்கொள்ளார். அஃது இம்மையில் பெரும்பழியையும், மறுமையில் அழியாத் துன்பத்தையும் அளிக்கும். குடியே ஒரு நாட்டின் குற்றவாளிகளை அதிகரிக்கச் செய்கிறது. நாட்டு மக்கள் மதுபானத்தால் வெகு விரைவில் தளர்ச்சி அடைந்து, பலமெல்லாம் குன்றித் தேகம் ஒடுங்கி, ஒளி இழந்து, அற்ப ஆயுளில் இறக்கின்றார்கள்; குடிக்கப் பண மில்லாதபோது வீட்டில் உள்ள பொருள்களை அடகு வைத்தேனும் குடித்து, மனைவி மக்களைப் பசியால் வாடச் செய்கின்றார்கள்.

ஆகவே, நாடு செழிக்கவேண்டுமானால், யாரும் குடித்தல் கூடாது. குடிக்கும் பழக்கம் உடையவர் உடனே இதனை மறந்து வரவேண்டும். இக்கொடிய பழக்கம் ஒழியச் சங்கங்கள் நிறுவப்பட்டு உலக மக்களுக்குக் குடியின் கொடுமைகளை எடுத்துக் கூறவேண்டும். இக் கொடும்பழக்கம் ஒரு நாட்டினின்றும் துரத்தப்படுமானால் அந்நாடு திடகாத்திரமும், தீர்க்காயுளும், நல்லொழுக்கமும் வாய்ந்த மக்களைப் பெற்று, கல்வித் துறையிலும், கைத்தொழில் அபிவிருத்தியிலும், செல்வச் சிறப்பினும் மேம்பட்டு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

---

## 48. ஆறுகளும் அவற்றின் பயனும்

குறிப்பு : 1. முன்னுரை, 2. உற்பத்தி, 3. பயன், 4. முடிவுரை.

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது ஔவை மூதாட்டியார் அமுத வாக்கு. ஊர் என்று பொதுப்படக் கூறினும் உலகத்துக்கே ஆறுகள் முக்கியமானவை என்பதையும், அவற்றால் ஏற்படும் பயன்கள் பல என்பதையும் நாம் அறிகிறோம். இத்தகைய ஆற்றைப்பற்றி ஒரு சிறிது கூறுவோம் :

ஏரி, குளம், குட்டை, கடல் முதலிய நீர் நிலைகளில் உள்ள நீர் சூரிய வெப்பத்தினால் ஆவியாய் மாறி, மேலே கிளம்பிச் சஞ்சரித்துக்கொண்டே மலையுச்சிக்கு வரும் போது அங்குக் குளிர்காற்றுப்பட உடனே மழையாகப் பெய்கிறது. அப்படிப் பெய்யும் மழைநீர் மலையின்மேல் விழுந்து, மலை மேடாய் இருப்பதனால், அங்கிருந்து பல பாகங்களாகப் பிரிந்து பூமியை நோக்கிக் கீழே ஓடி வருகிறது. அதுவே அருவி அல்லது சிற்றாறு எனப்படும். அது பூமியை நோக்கி வரும்போது மலையை அறுத்துக்கொண்டு வருவதனால் 'ஆறு' என்னும் பெயரைப் பெற்றது. இப்படி ஆறு ஓடிவரும்போது வழியில் வேறு சில ஆறுகள் இந்த ஆற்றுடன் வந்து கலக்கும். அவற்றை உபநதிகள் என்பர். அப்படிப் பல ஆறுகள் சேர்ந்து பாய்கையில், சிலபிரிவுகளாகப் பாய்வதுண்டு. அப்பிரிவுகள் கிளை நதிகள் என்னும் பெயர் பெறும். நதிகள் பூமியில் பாயும்போது அகலமும் ஆழமும் உடைய பெரிய நதிகளாகப் பாய்கின்றன. இந்நதிகள் என்றும் நீர் வற்றாது ஓடிக்கொண்டே இருக்குமானால், இவற்றை ஜீவ நதிகள் என்கின்றோம்.

நம் நாட்டில் கங்கையும், காவிரியும் ஜீவ நதிகளாய்த் திகழ்கின்றன.

ஆற்றினால் பல நன்மைகள் உண்டு. அவை நிலங்களுக்கு நீர்பாய்ச்ச உபயோகப்படுகின்றன ; மக்கள் நீராடவும், ஆடைகளின் மாசை நீக்கவும், கால் நடைகளைக் கழுவவும், விளை பொருள்களைப் படகின் மூலம் கொண்டு போகவும் ஆறுகள் பெரிதும் பயன்படுகின்றன. கைத்தொழிற்சாலைகளுக்கு ஆற்றின் நீர் வெகு அவசியமானது. இதன் வேகத்தினால் மின்சாரத்தை உண்டாக்கிப் பயன்படுத்திக்கொள்கின்றனர். ஆற்று நீரைக் குழாய்களின் வழியே கொண்டு சென்று, மாந்தர்க்குப் பருகும் நீராக அளிக்கின்றனர். ஆற்றின் மூலம் மரங்களை வெட்டி அனுப்பலாம். ஆற்றின் சிறப்பை அறிந்தன்றோ, 'கான் யாற்று அடை கரை ஊர் இனிது' என்றும், 'ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்' என்றும் அறிஞர் சிறப்பித்துள்ளனர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஆறு மலையில் உற்பத்தியாகிக் கடலில் சங்கமம் ஆகிறது. அப்படிச் சங்கமம் ஆகும் இடத்திற்கு முகத்துவாரம் என்பது பெயர். ஆறு மழை பெய்து புதுவெள்ளத்தோடு பாயும்போது, பார்க்க அழகாய் இருக்கும். அப்போது ஜனங்கள் அதற்குப் பூசை செய்வதும் உண்டு.

---

## 49. இருப்புப் பாதைப் பிரயாணம்

குறிப்பு: 1. முன்னுரை, 2. இருப்புப்பாதைப் பிரயாணத்தின் நன்மைகள், 3. தீமைகள், 4. முடிவுரை.

பண்டைக் காலத்தில் நம் முன்னோர் போக்கு வரவு சாதனங்களுக்கு மிகவும் கஷ்டப்பட்டனர். அவர்கள் ஓரூரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போக வேண்டுமானால், கால் நடையாகவோ, மாட்டு வண்டிகளிலோ சென்றார்கள். அதனால், கால தாமதமும், ஆபத்தும் நேர்ந்தன. அவர்கள் போகும் வழிகளில் திருடர் வழிமறித்துக் கொள்ளையிட்டு வந்தனர். இப்போது அப்படிக்கின்றிக் குறைந்த பொருட் செலவில் குறித்த இடத்திற்குக் கால தாமதமின்றியும் பயம் இன்றியும் இரயில் மூலம் போய் வரலாம்.

இரயிலில் பிரயாணம் செய்வதனால், பல நன்மைகள் உண்டு. இரயிலில் பிரயாணம் செய்வதே இன்பகரமானது. இரயிலில் பிரயாணம் செய்வதால் பல இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். வழியில் பயிர் பச்சைகள் வளர்ந்திருப்பதையும், உழவர்கள் வயலில் வேலை செய்வதையும் கண்டால், மனம் மிக மகிழும். இரயில் பல பாலங்களையும், மலைகளையும் கடந்து செல்வதனால், ஆறுகள் வெள்ளம் புரண்டு பாலத்தின் கண்களை நிரப்பி ஓடும் அழகும், மலைகளில் ஆடுமாடுகள் புல் பூண்டுகளை மேய்வதையும், மலைகளில் உள்ள கோவில்களையும் காணக் காண உள்ளம் பூரிக்கும். இரயில் பல ஊர்களைக் கடந்து செல்வதனால், ஆங்காங்கு வாழும் பலவித மக்களைக் காணலாம். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஜனங்கள் அவசரமாக வந்து வண்டியில் ஏறுவதும் இறங்குவதும் வெகு வேடிக்கையாய் இருக்கும். நாம் இரயிலில் பிரயாணம் செய்வதால், பல நாட்டு மக்களுடன் அளவளாவ நேரிடும்.

அதனால், அவர்கள் மூலம் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இரயில் பிரயாணத்தினால் பல தீமைகளுண்டாகின்றன. சில சந்தர்ப்பங்களில் வெளி ஊர்களில் திருவிழா முதலியன நடக்கும்போது, ஜனங்கள் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வந்து ஏறுவார்கள். ஆதலின் ஜனங்களுக்குப் போதுமான இடமின்மையால், மிகவும் கஷ்டம் நேரிடும். இந்தியர்கள் அநேகமாக மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்வதனால் இந்தக் கஷ்டம் நேரிடுகிறது. பிரயாணிகளுக்குத் தங்கள் தங்கள் சௌகரியப்படி இடம் கிடைக்காவிட்டால், ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொள்ளுவர். இப்படிப் பல விதத்தில் இரயில் பிரயாணத்தில் தீமைகளும் ஏற்படுகின்றன.

இதனால் இரயில் பிரயாணம் செய்யக் கூடாது என்பது கருத்தன்று. நாம் வண்டியில் ஏற முயலும் பிராணிகளுடன் சண்டையிடாமல் கூடுமான வரையில் அவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும். நம்முடைய சௌகரியத்தையே கவனித்தல் கூடாது. சிலர் பிரயாணம் செய்கையில் மக்கள் உட்காருமிடத்தில் தமது படுக்கையை விரித்துப் போட்டுப் படுத்துக்கொள்வர். அதனால், சில பிரயாணிகள் அமர இடமின்றி நின்று கொண்டிருப்பார்கள். வேறு சிலர், பிரயாணிகள் அவசரமாக இரயிலில் ஏறும்போது, 'இங்கு இடம் இல்லை; அங்குப் போங்கள்,' என்று வழியிலிருந்தே சொல்லிவிடுவர். அவர்கள் பாவம் இங்குமங்கும் திரிந்து கஷ்டப்படுவார்கள். இத்தகைய கஷ்டங்களைப் பிரயாணிகளுக்குக் கொடுத்தல் கூடாது. நாம் இரயிலில் இரவில் பிரயாணம் செய்ய நேர்ந்தால், கையில் புத்தகமோ, பத்திரிகையோ எடுத்துச் சென்று, நமக்குத் தூக்கம் வருகின்ற வரையில்

படித்துக்கொண்டிருத்தல் நலம். அனுவசியமாகப் பிர யாணிகளிடத்தில் பேசுதல் கூடாது.

---

## 50. இருப்புப் பாதை

குறிப்பு: 1. முற்காலப் போக்கு வரவு, 2. இருப்புப் பாதை, 3. நன்மைகள், 4. முடிவுரை.

முற்காலத்தில் மக்கள் தங்கள் போக்கு வரவுகளைப் பல வழிகளில் செய்து வந்தார்கள். சிலர் மாடு, குதிரை பூட்டிய வண்டிகளிலும், கழுதைகளிலும், ஒட்டகங்களிலும் சவாரி செய்து வந்தனர். அரசர்கள் இரதங்களிலும் பிரயாணம் செய்து வந்ததாகத் தெரிய வருகிறது. மக்கள் இப்படிப் பிரயாணத்திற்கும், மற்றும் பொருள்களைக் கொண்டுபோவதற்கும் மிருகங்களைப்பழக்கி, அவற்றால் தம் தம் காரியங்களை முடித்து வந்தார்கள். இப்படிச் செய்வதனால் கால தாமதமும், பொருள் நஷ்டமும் உண் டாயின. இப்படிப் பல ஆண்டுகள் கழிய, நீராவியின் சக்தியால் வண்டிகளைச் செலுத்த முயன்றனர்.

நீராவியின் வல்லமையை முதல் முதல் கண்டு பிடித் தவர் கிரீனிச்சு நகரத்தில் பிறந்த ஜேம்ஸ் வாட்டு என்பவரே யாவர். இவர் ஒரு நாள் தம் தாயார் நீர் கொதிக்க வைத்திருந்த பாத்திரத்தின் மேல் மூடிய தட்டு நீராவியின் பலத்தினால் பல முறை மேலே கிளம்புகிறது என்று அறிந்து, அதிகமாக நீராவியை உபயோகித்தால் அதற்கு மிகுந்த பலம் ஏற்படும் என்று தெளிந்து, நீராவி இயந் திரம் ஒன்றைச் செய்தனர். அது பஞ்சாலைகளுக்கும், அச்சுச்சாலைகளுக்கும் பெரிதும் பயன் அளித்தது. அதன் பயனை அறிந்த இயந்திர நிபுணர் பலர் இயந்திரங்களைச்

செய்தனர். அவற்றுள் ஜார்ஜ் ஸ்டீவென்சன் என்பவர் கண்டு பிடித்ததே சிறப்புடையது. இவர் தண்டவாளங்களில் செல்லத்தக்க நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். ஆதலின், இப்போதுள்ள இருப்புப் பாதைகளுக்கு ஏற்பட்டுள்ள பெருமைக்கு இவரே காரணராவர். இவர் 1825-ஆம் வருஷம் இங்கிலாந்தில் ஸ்டாக்டன் டார்லிங்டன் என்னும் ஊர்களுக்கிடையில் 38 மைல் நீளமுள்ள இருப்புப் பாதையில் 80 டன் நிறையுடைய 34 வண்டிகளைச் சேர்த்துத் தாம் கண்டுபிடித்த நீராவியந்திரத்தைப் பூட்டித் தாமே ஓட்டிக் காட்டினர். அது மணிக்குப் பன்னிரண்டு மைல் ஓடியது. அதன் பிறகு பலருடைய முயற்சியினால் பலவகை இயந்திரங்கள் செய்யப்பட்டு, விருத்தி அடைந்து விட்டன.

டல்ஹௌசி பிரபுவாகிய ராஜப்பிரதிநிதி காலத்திலே தான் இந்தியாவிலும் புகை வண்டிகள் ஏற்பட்டன. முதல் முதல் பம்பாயில் இருக்கும் 'தாணா' என்னும் இடத்திலே தான் இவ்வண்டி ஓடியது; அதன் பிறகு சென்னையிலும், மற்றுமுள்ள இடங்களிலும் ஓட ஆரம்பித்தது.

இந்தியாவில் பல இருப்புப் பாதைக் கம்பெனிகள் ஏற்பட்டன. முதல் முதல் இந்தியாவில் இருப்புப் பாதைகளை அமைத்தவை கிரேட் இந்தியன் பெனின்ஸுலார் இரயில்வே கம்பெனியும், ஈஸ்டு இந்திய இரயில்வே கம்பெனியும் ஆகும். அதன் பிறகு தென் இந்தியா இரயில்வே கம்பெனியாரும், தென் மகாராஷ்டிர இரயில்வே கம்பெனியாரும், தென்னிந்தியாவிலும் சென்னையிலிருந்து பம்பாய் நகருக்கும் முறையே இருப்புப் பாதைகளை அமைத்தனர். இப்படி இரயில்வே கம்பெனிகள் தோன்றி 1849-ஆம் வருஷத்திலிருந்து 1880-ஆம் வருஷத்திற்குள் இந்தியாவில் எல்லாப் பாகங்களிலும் இருப்புப் பாதைகள்

போடப்பட்டன. பம்பாயிலிருந்து பரோடா, கராச்சி முதலிய இடங்களின் மூலமாக டில்லி வரைக்கும் பி. பி. ஸி. ஐ. இரயில்வே கம்பெனியாரின் வண்டிகள் ஓடுகின்றன.

இக்கம்பெனி வண்டிகள் எல்லாம் நீராவியின் சக்தியால் பூமியில் புதைக்கப்பட்டுள்ள தண்டவாளக் கம்பியின் மேல் ஓடுகின்றன. இப்போது மின்சார சக்தியின் பலன் விருத்தியடைந்து வருவதனால், நீராவி இயந்திரங்களோடு மின்சார சக்தி இயந்திரங்களையும் உபயோகிக்கின்றனர். இம்முறை அதிகமாக இலண்டன்மா நகரிலும், ஐரோப்பா அமெரிக்காவிலும் கையாளப்பட்டு வருகிறது. இந்தியாவில் வெகு காலமாக இல்லாமலிருந்து சமீப காலத்திலே தான் ஜி. ஐ. பி. இரயில்வே கம்பெனியார் பூனாவுக்கும் பம்பாய்க்கும் மின்சார இரயில்வேயை அமைத்தனர். சென்னையிலும் பீச் ஸ்டேஷனில் இருந்து தாம்பரம் வரையிலும் ஓடும் மின்சார இரயிலை அமைத்தனர். பூமியில் பதித்துள்ள தண்டவாளங்களின்மேல் வண்டிகளைச் செலுத்துவதற்குப் பதிலாகப் பாலங்களைப் போல அமைக்கப்பட்ட பாதைகளில் வண்டிகளைச் செலுத்தி வருகின்றனர். இதனை ஒற்றைத் தண்டவாளப் பாதை என்பர். இது ஜெர்மனியிலும், இத்தாலியிலும் அதிகமாக இருக்கின்றது. நமது இந்தியாவிலும் இமயமலை மீது நேபாள தேசத்திற்குப் போகும் வழியில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இது மலைப் பிரதேசங்களிலும், நதிகளைக் கடப்பதற்கும் அதிகமாகப் பயன்படுகிறது. மலைகள் மீது செல்வதற்கும் ஏற்ற வண்டிகளை அமைத்திருக்கின்றனர். மலையின்மீது போடப்பட்ட பாதை மூன்று தண்டவாளங்களால் ஆகியது. அவற்றில் நடுத்தண்டவாளத்தில் இடையிடையே குழிகள் அமைந்திருக்கும். இஞ்சினும் வண்டியும் நடுவில் பல் சக்கரம் அமைந்து,

அதன் வழியே போகும்போது, அப்பல்லில் தங்கித் தங்கிக் கீழே நழுவாது செல்லும். இஞ்சின் பின்புறத்திலிருந்து வண்டியைத் தள்ளும். இத்தகைய மலை வண்டிகள் ஐரோப்பாவில் அதிகம். இந்தியாவில் டார்ஜிலிங்கு, ஸிம்லா, உதகமண்டலம் ஆகிய இவ்விடங்களில் இம்மலை வண்டிகள் ஓடுகின்றன.

இரயில்வேயினால் பல நன்மைகள் உண்டாகின்றன. ஒரு தேச மக்கள் பல தேசத்து மக்களைச் சந்திக்கவும், பல நாடுகளுக்குச் சென்று உத்தியோகம் பெறவும், வியாபாரங்களைப் பெருக்கிக்கொள்ளவும் இரயில் மிகவும் பயன்படுகின்றது. முற்காலத்தில் தோன்றிய பஞ்சம் தற்காலங்களில் தோன்றாமைக்கு இரயில்வேயே முக்கிய காரணமென்று சொல்லலாம். இரயில் இல்லாத காலங்களில் ஒரு நாட்டில் பஞ்சம் உண்டானால், அப்பஞ்சத்தை நீக்கப் பொருள்களை வெளிநாட்டினின்றும் சீக்கிரத்தில் கொண்டு வருவது கஷ்ட சாத்தியமாய் இருந்தது. அப்பொருள் வருவதற்குள் மக்கள் பஞ்சத்தினால் இறந்தொழிந்தார்கள். இக்காலத்தில் அப்படிக்கின்றி, ஒருநாட்டில் பஞ்சம் என்றால், உடனே வெளி நாடுகளினின்று அந்நாட்டுக்கு வேண்டிய பொருள்களை இரயில் மூலமாகக் கொண்டு வரலாம். இன்றேல், பஞ்சத்தில் கஷ்டப்படுபவர்களைச் செழிப்புள்ள நாடுகளுக்கு அனுப்பிவிடலாம். வெளிநாடுகளில் கிடைக்கும் பொருள்களை நாம் வசிக்கும் இடத்திலேயே பெறுவதற்கும் இரயில் பலனளிக்கிறது. புண்ணிய ஸ்தலங்களைச் சென்று காணவும் இரயில் துணை செய்கிறது. அரசாங்கத்தார் தம் விரோதிகளை வெல்லுவதற்குத் தம் படைகளைச் சீக்கிரமாய் அனுப்புவதற்கும் இது பயன்படுகிறது.

## 51. தாய் மொழியை வளர்த்தற்குரிய அவசியம்

குறிப்பு : *தாய் மொழி இன்னது என்பது, 2. தாய் மொழியின் அவசியம், 3. தாய் மொழியை வளர்க்கும் விதம், 4. அதனலேற்படும் நன்மைகள்.*

*உலகத்திலுள்ள மக்கள் தங்கள் உள்ளக் கருத்தை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்ள ஒலிகளை உபயோகித்தார்கள். இவ்வொலிகளே பின்னர் மொழி என்னும் பெயரைப் பெற்றன. அவ்வொலி முதல் முதலில் ஒலி வடிவிலேயே இருந்து, பிறகு மக்களின் அறிவாற்றலிஞல் வரி வடிவைப் பெற்றது. இவ்விரு வடிவம் பெற்ற மொழி அவ்வந்நாட்டுக்கு ஏற்றவாறு பல்வேறு வகையினவாய்ப் பயின்று வருகின்றன.*

*ஒரு தாய் தான் பெற்ற குழந்தையைத் தொட்டிலிலிட்டு எம்மொழியில் சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டி வளர்த்து வருகின்றனளோ, அம்மொழியே அக்குழவிக்குத் தாய் மொழியாம். ஒரு தெலுங்குத் தாய் தனக்குக்கிடைத்த ஒரு தமிழ் வளர்ப்பு மகனைத் தெலுங்கு மொழியால் தாலாட்டிஞல், அத்தெலுங்கு மொழியே அத்தமிழ்ப் பிள்ளைக்குத் தாய் மொழியாகும்.*

*இத்தகைய தாய் மொழியை இந்திய மக்கள் நன்கு கவனித்துக் கற்பதில்லை. அன்னிய மொழியின்மீது தங்கள் கருத்தை அதிகமாகச் செலுத்தித் தங்கள் தாய் மொழியை அறவே வெறுத்து விடுகின்ருர்கள். அந்தோ! தாய் மொழியைப் புறக்கணிப்பது தம் சொந்தத் தாயைப் போற்ருது கொலை செய்வதற்குச் சமம் என்பதைச் சிந்திப்பார்களாயின், அவர்கள் ஒரு போதும் அப்படிச் செய்ய மாட்டார்கள். பல வகையிலும் தாய் மொழியை வளர்த்தற்கான வழிகளில் முந்த வேண்டும். நாம் நம்*

இனத்தவரைக் கண்டு பேச நேர்ந்தாலும், அவர்களுக்கு விஷயத்தை எழுதித் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வாய்த்தாலும் நம் தாய் மொழியிலேயே பேசியும் எழுதியும் தெரிவிக்கவேண்டும். இரவீந்தர நாத டாகூர் உலக கவிஞர் என்னும் பட்டத்தோடு நோபல் பரிசு என்னும் பெரும் பரிசையும் பெற்றதற்குக் காரணம் அவர் தாம் எழுதிய கீதாஞ்சலியே ஆகும். அவர் அவ்வரிய நூலை எம்மொழியில் முதல் முதலில் எழுதினார்? தம் தாய் மொழியாகிய வங்க மொழியிலன்றோ! ஆகையால், ஒருவர் பெருமையடைதற்குத் தாய் மொழியே காரணமாம். 'தாய் மொழியில் பல நூல்கள் இல்லையே! ஆகையால், பிற நாட்டு மொழியிலுள்ள அறிய நூல்களைப் படிப்பதற்கு அந்நிய மொழிகளைக் கற்றல் அவசியமல்லவா!' என்று சிலர் கேட்கலாம். அவர்கள் அப்படி எண்ணுதல் கூடாது. கலைகள் இரு விதம்: ஒன்று பொதுக்கலை; மற்றொன்று சிறப்புக்கலை. உயிர் நூல், தாவர நூல், மொழி நூல் முதலியன எந்நாட்டார்க்கும், எம்மொழியினர்க்கும் உரியவை. அத்தகைய நூல்கள் பொதுக்கலையைச் சார்ந்தனவாகும். ஷேக்ஸ்பியர் நாடகம், சாகுந்தலம், சிலப்பதிகாரம் முதலியன அவ்வந்நாட்டுக்குரிய சிறப்பு நூல்கள். இவைகள் சிறப்புக் கலையைச் சேர்ந்தனவாகும். ஆகவே, பொதுக்கலைகளை அவ்வம்மொழியில் மொழி பெயர்த்துக் கொள்ள வேண்டும்.

மேனாட்டறிஞர் அந்நிய நாட்டு மொழியில் அரிய நூல்கள் வெளிவரின், அவற்றை உடனே மொழி பெயர்த்துத் தம் நாட்டுக்கு வழங்குகின்றனர். அவர்களைப் போலவே கற்ற அறிஞர்கள் பொதுக் கலைகளைத் தங்கள் தாய்மொழியில் மொழி பெயர்த்து மற்றவர்களுக்கு உதவ வேண்டும். ஆங்காங்குத் தாய்மொழியின் இன்றியமை

யாமையைப்பற்றி உபந்நியாசம் செய்ய வேண்டும். அரசாங்கத்தினரும் தாய் மொழிக்கு ஆதரவு காட்ட வேண்டும். பள்ளிக்கூடங்களில் தலைமையாசிரியர்களும், ஆசிரியர்களும் பிள்ளைகளுக்குத் தாய் மொழியில் ஆர்வம் பிறக்கும்படி செய்யவேண்டும்.

தாய்மொழியை நன்கு உணர்வதனால் பலவித நன்மைகள் ஏற்படுகின்றன; அவரவர் நாட்டின் நாகரிகத்தை அறிவதற்கு முதலாவது தாய்மொழி துணை செய்கிறது. முன்னோர்களின் ஒழுக்க வரலாறுகளை அறிவதற்கும், நாட்டின் பண்டைய நிலையை உணர்வதற்கும் தாய் மொழியே ஏற்ற கருவியாகிறது. ஏனெனில், அவைகள் எல்லாம் தாய் மொழியிலேதான் எழுதப்பட்டுள்ளன. அவற்றை மொழிபெயர்ப்பு நூல்களின் மூலம் படிப்பதால், அவற்றின் உண்மைத் தன்மை சிறிது குறைந்தே காணப்படுகிறது. திருவாசகத்தைத் தமிழில் கற்பதே மாண்புடைத்து அன்றி போப்புத் துரைமகனார் எழுதிய மொழி பெயர்ப்பில் வாசிப்பதனால் பயனின்றாம். இப்படியே ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஆங்கிலத்தில் படிக்க வேண்டும். அவற்றை மொழிபெயர்த்துப் படிப்பதால் அவ்வளவு பிரயோசனம் இல்லையாம்.

# 52. நான் விரும்பும் நூல்

குறிப்பு: 1. முன்னுரை, 2. நான் விரும்பும் நூல், 3. விரும்புவதன் காரணம், 4. முடிவுரை.

உலகில் மக்கள் நல்லறிவைப் பெற விரும்பினுல், கண் போன்ற கல்வியைக் கற்றுக்கொள்ள வேண்டும். கல்வி கற்பதற்குத் துணையாய் நிற்பன நூல்கள். பண்டைக் காலத்தில் நூல்கள் பனை ஓலைகளில் எழுத்தாணியால் எழுதப்பட்டன. அவ்வெழுத்துக்கள் நன்கு கண்ணுக்குப் புலப்படா. அவ்வேட்டுச் சுவடிகளைப் பாதுகாப்பதும் அரிது. அவற்றைச் செல்லரித்துவிடும். அருமையான நூற்கள் சிலரிடத்திலேதான் இருக்கும். அத்தகைய நூல்களைப் படிக்க விரும்புகின்றவர்கள் நூல் வைத்திருப்பவரைத் தேடிப் பிடித்து, அந்நூலை இரவல் பெற்றுப் படித்துக் கொடுத்துவிட வேண்டும். இன்றேல், அதனை அப்படியே வேறு ஏட்டில் எழுதிக்கொண்டு படிக்க வேண்டும். இப்பொழுது அந்தக் கஷ்டங்கள் எல்லாம் தொலைந்தன. மை, அச்சு, இயந்திரம் முதலியவற்றின் உதவியால் ஆயிரக் கணக்கான அச்சு நூல்களை ஒரே சந்தர்ப்பத்தில் நாம் பெறலாம். இதனுல், இந்நாளில் பல்வேறு துறைகளில் நூல்கள் எல்லா மொழிகளிலும் மல்கி இருக்கின்றன.

ஒருவன் எல்லா நூல்களையும் படித்தறிய இயலாது. அப்படிப் படிக்கப் போதிய அறிவும் இருப்பது அரிது. அப்படி அறிவு இருந்தாலும் ஆயுள் இடந்தராது. ஆகவே, ஒவ்வொருவரும் தாம் அவசியம் படிக்கவேண்டிய நூல்கள் இன்னவை என்பதைக் கற்ற அறிஞரைக் கேட்டுத் தெளிந்து, அந்நூல்களைப் படித்தல் வேண்டும். இக்

கருத்தே நாலடியார் என்னும் நூலில்,

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகில் தெரிந்து."

என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தாம் விரும்பும் நூலை ஆழ்ந்து கற்றல் வேண்டும். அது போல நான் விரும்பிக் கற்கும் நூல் திருக்குறள் என்னும் திவ்விய நூலாகும்.

திருக்குறள் என்னும் இவ்வொப்புயர்வில்லா நூலை நான் விரும்புவதற்குப் பல காரணங்கள் உண்டு: நான் கலாசாலையில் வாசிக்கும்போது ஒவ்வொரு வகுப்பிலும் இந்நூலினின்று சில பாக்கள் தேர்ந்தெடுத்துத் தமிழ்ப் புத்தகங்களில் பதிப்பிக்கப்பட்டு வந்தன. அப்பொழுதே எனக்கு இந்நூலினிடத்துத் தனி மதிப்பு ஏற்பட்டது; 'இது தமிழில் சிறந்த நூலாய் இருக்கவேண்டும். இல்லை எனில் இங்ஙனம் அடிக்கடி பாடப் புத்தகத்தில் வருவதற்கு நியாயமில்லை' என்ற எண்ணம் உதித்தது. மேலும், என் தமிழ் ஆசிரியரும் இக் குறளைப் பாடமாக நடத்தும்போது இதன் சிறப்பையும இதனை இயற்றிய ஆசிரியர் சிறப்பையும் சொல்லிக்கொண்டே வருவார். அதுவும் அன்றி, நான் தமிழ் அறிஞர்களும் மற்றுமுள்ள அறிவாளிகளும் தமிழ் விரிவுரையாற்றும் இடங்களுக்குப் போய், அவர்கள் பேசுவதைக் கேட்பதுண்டு. அக்காலங்களில் அவர்கள் இத்திருக்குறளினின்றும் அநேக மேற்கோள் எடுத்துக்கூறித் தாம் எடுத்த விஷயங்களை இனிது முடிப்பார்கள். இப்படி நான் பன்முறை இதன் சிறப்பைக் கேட்டும், நான் படித்த சில குறட்பாக்களிற்

கண்டும் வந்தமையின், எனக்கு இந்நூல் முழுவதையும் படிக்கவேண்டும் என்னும் அவா எழுந்தது. அங்ஙனமே இந்நூல் ஒன்றை விலைக்குப் பெற்று வாசித்து வரலானேன்.

நான் இந்நூலை வாசிக்க ஆரம்பித்ததும், இதுவரையில் இதன் சிறப்பைப் பிறர் கூறக் கேட்டது போதுமானது அன்று என்பதை உணர்ந்தேன். இந்நூல் உலகிலுள்ள எல்லா நூல்களிலும் தனிச்சிறப்பை உடையதென்றே துணிந்து கூறுவேன். இஃது உலகிற்கே தனி நலம் பயக்கத் தகுந்த நூல் என்பதை யாரும் மறுக்க மாட்டார் என்னும் துணிபுடையேன். இன்றேல், பாரதியார், 'வள்ளுவன்றன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று கூறியிருப்பாரா? இந்நூலைப் படிப்பதனால் மதத் துவேஷமோ, தீய உணர்ச்சியோ நேராது என்பதை நான் என் அனுபவ வாயிலாக அறிந்துள்ளேன். சைவ சம்பந்தமான நூலோ, அன்றி வைஷ்ணவ சம்பந்தமான நூலோ படிக்க நேரின், ஒரு மதத்துக்கும் இன்னொரு மதத்துக்கும் வேற்றுமையுணர்ச்சியை உண்டு பண்ணும். இஃது அத்தகையதொன்றன்று. இதில் அமைந்த கடவுள் வாழ்த்துக் குறட்பாக்கள் எம்மதமும் சம்மதம் என்னும் முறையில் அமைந்திருக்கின்றன. இந்நூலில் உலக அனுபவ விஷயங்கள் அத்துணையும் சொல்லப்பட்டுள்ளன. இல்லறத்தான், துறவறத்தான், அரசன், அரச அங்கத்தினர் முதலியவர்களின் இலக்ஷணமும், அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் இதில் தெள்ளிதின் கூறப்பட்டுள்ளன. இதனாலன்றோ, இதன் சிறப்பைக் கூற வந்த ஒரு புலவர், 'எல்லாப் பொருளும் இதன் பாலுள; இதன்பாலில்லாத எப்பொருளும் இல்லையால்' என்று கூறியுள்ளார். இந்

நூலைப் படிக்கப் படிக்க என் செய்கைகள் எவ்வளவோ மாறுதலடைந்தன என்று கூறுவேன்.

---

## 53. கலாசாலைச் சஞ்சிகையும் அதன் பயனும்

குறிப்பு: 1. முன்னுரை, 2. சஞ்சிகையின் பயன், 3. சஞ்சிகையை நடத்தும் முறை, 4. முடிவுரை

கலாசாலையில் கற்கும் மாணவர்கள் தங்கள் அறிவை ஆசிரியர் கற்றுக்கொடுக்கும் கல்வியின் மூலம் மட்டும் விருத்தி செய்துகொள்ள இயலாது. அவர்கள் தங்கள் பாட சம்பந்தமான நூலையும், அதனைக் கற்பிக்கும் ஆசிரியரின் போதனையையும் பெறுகிறார்கள். இதனால் பூரண அறிவு பெறுவதற்கு இயலாது. மாணவர்கள் பூரண அறிவைப் பெற விரும்பினால், அறிவைப் பெருக்கிக் கொள்ளுவதற்கான முறைகளில் பல சஞ்சிகைகளைப் (magazines) படிப்பதும், அவைகளில் தாங்கள் அறிந்த நூதன விஷயங்களை எழுதுவதுமான முறைகளை அனுசரித்தால்தான் கல்வி அறிவு பெருகும். அதிலும் மாணவர்கள் எந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்களோ, அப் பள்ளிக்கூடத்திற்கெனத் தனிச் சஞ்சிகை இருக்க வேண்டும். இத்தகைய சஞ்சிகையினால் ஏற்படக்கூடிய பலனை நன்குணர்ந்துதான் சிற்சில பள்ளிக்கூடங்களிலும், எல்லாக் கல்லூரிகளிலும் சஞ்சிகைகளை நடத்தி வருகின்றனர். மேனாடுகளில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், சஞ்சிகைகள் நடத்தப்படுகின்றன.

பள்ளிக்கூடத்தினராலோ கல்லூரியினராலோ நடத்தப்படும் சஞ்சிகைகளினால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. பிள்ளைகள் தங்கள் மனத்தில் தோன்றும் விஷயங்

களைக் கட்டுரைகளாக எழுதிப் பிரசுரிக்க விரும்புவார்கள். மாணவர்கள் தங்கள் பேரும், தாங்கள் எழுதிய வியாசமும் அச்சில் வரக் காண்பார்களானால், உள்ளம் பூரித்து விடுவார்கள். அதற்காகவே எப்பாடு பட்டேனும் விஷயங்களைத் திரட்டி எழுத முன்வருவார்கள். உண்மையில் உழைப்பும், ஊக்கமும், முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணமும் உடைய மாணவன், புதிய விஷயங்களையே எழுத முயற்சி செய்வான்; அதற்காகப் பல புத்தகங்களைப் படித்து விஷயங்களைத் திரட்டுவான். இப்படித் திரட்டி எழுதிச் சஞ்சிகைக்குக் கொடுப்பான். இதனால் அவன் கல்லூரியில் கற்கும் அறிவினும் பன்மடங்கு அறிவைப் பெற வழியுண்டாகிறது. ஆசிரியர்களும் பாட சம்பந்தமான எல்லா விஷயங்களையும் சுருங்கிய கால அளவான பாடம் போதிக்கும் நேரத்தில் விளக்கிச் சொல்ல இயலாது. தாங்கள் கண்ட உண்மைகளை இத்தகைய சஞ்சிகையில் எழுதுவதனால், பிள்ளைகள் அவற்றைப் படித்து உணர்ந்துகொள்ள வழியுண்டாகிறது. எல்லா மாணவர்களின் உள்ளக் கருத்தும் வெளி வருவதற்குப் பள்ளிக்கூடச் சஞ்சிகை துணை செய்கிறது. ஒரு பள்ளிக்கூடத்தார் மற்றைய பள்ளிக்கூடத்தாருக்குத் தமது சஞ்சிகையை அனுப்பி அதற்குப் பதிலாக அப் பள்ளிக்கூடங்களின் சஞ்சிகைகளைப் பெறுகிறார்கள். ஆதலினால், சஞ்சிகைகளைப் படிக்கும் மாணவர்கள் அவ் வப் பள்ளிக்கூட மாணவர்களின் மனப்பான்மையையும் அறிய ஏதுவாகிறது.

சஞ்சிகையானது சாதாரணமாக வெளிவரும் தினசரிப் பத்திரிகை போலல்லாமல் மாணவர்களுக்கென பிரசுரிக்கப்படுவதனால், அன்னியரால் நடத்தப் படுதல் கூடாது; பள்ளிக்கூட மாணவர்களாலேயே நடத்தப்பட

வேண்டும். உயர்ந்த வகுப்பு மாணவர்களுக்குள்ளேயே பலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களையே சஞ்சிகையை நடத்துதற்குரிய முக்கிய அங்கத்தினராய் அமைத்து நடத்தப்பட வேண்டும். ஆனால், அவர்கள் பெரிதும் ஆசிரியர்களின் துணைகொண்டே ஒவ்வொன்றையும் செய்தல் வேண்டும். சஞ்சிகைக்கெனச் சந்தாத்தொகை வசூலிக்கப்பட வேண்டும். மாணவர் ஒவ்வொருவரையும் சஞ்சிகையை வாங்கக் கட்டாயப்படுத்த வேண்டும். சஞ்சிகையில் அரசாங்கத்தாருக்கு விரோதமான கட்சி விஷயம் யாதொன்றும் காணப்படுதல் கூடாது. சஞ்சிகையின் விஷயத் தலைப்புகள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். ஆங்கிலம், கணிதம், இயற்கை விஷயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய ஒவ்வொன்றிற்கும் தனித் தனிப் பகுதி அமைந்திருத்தல் வேண்டும். இளமாணவர்களுக்கெனத் தனிப் பகுதியில் சின்னஞ்சிறு கதைகளும், விநோதப் பாடல்களும் காணப்படுதல் வேண்டும். கூடுமான வரையில் படங்கள் எவ்வளவு அமைக்க முடியுமோ, அவ்வளவும் அமைத்து, நல்ல கடிதத்தில் பார்வைக்கு அழகாக அச்சிடப்பட வேண்டும். மாணவர்கள் எழுதும் கட்டுரைகளை முதலில் ஆசிரியர்கள் கவனித்துத் திருத்தம் இருப்பின் திருத்திய பிறகு அச்சிட வேண்டும். சஞ்சிகையைப் பண வருவாய்க்கேற்ப மாதத்திற்கொரு முறையோ, மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ, ஆறு மாதத்திற்கொரு முறையோ வெளியிட வேண்டும்.

சஞ்சிகை நன்கு நடப்பதற்கான முறைகளில் பள்ளிக் கூட அதிகாரிகளும், ஆசிரியர்களும் ஊக்கங் காட்டுதல் வேண்டும். பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளைப் பத்திரிகைகளில் விஷயங்களை எழுதி வெளியிடத் தூண்டுதல் வேண்டும். மாணவர்களும் நல்ல கட்டுரைகளை எழுத

முன்வர வேண்டும். இப்படிப் பள்ளிக்கூடச் சஞ்சிகைகளில் அடிக்கடி எழுதும் பழக்கம் வைத்துக்கொண்டால், பிற்காலத்தில் ஒரு சிறந்த சஞ்சிகையை நடத்தும் பொறுப்பையே நிர்வகிக்கலாம். எந்த வியாசத்தையும் தைரியமாய் எழுதும் பழக்கம் ஏற்பட்டுவிடும். ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு சஞ்சிகை நடத்தப் பெற வேண்டுவது அவசியம்.

---

## 54. நாணயமே நற்கொள்கை

குறிப்பு: 1. முன்னுரை, 2. நாணயம் என்பது என்ன? 3. நாணயத்தினால் ஏற்படும் பயன், 4. நாணயந் தவறுவதனால் ஏற்படும் தீமை, 5. உதாரணக் கதை, 6. முடிவுரை.

மக்கள் தாங்கள் கற்ற கல்வியினாலேயே பெரியவர்கள் என்று அறிஞர்களால் கருதப்பட மாட்டார்கள். ஒருவன் எவ்வளவு சகலாகம பண்டிதனாயினும், ஒழுக்கம் தவறி நடப்பானாயின், அவன் அறிஞரால் நன்கு மதிக்கப் படமாட்டான். அவன் தான் கற்ற கல்வியினாலும் தனக்கும் பிறர்க்கும் பயன்படான் என்றே சொல்லலாம். ஆகவே, கற்றவன் கற்றபடி, நடந்துகொள்ள வேண்டும். இதனாலேதான் நம் தமிழ்ப் பெரியாராகிய திருவள்ளுவனார்,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்று கூறியுள்ளார். ஒழுகலாறுதான் முக்கியமானது. கல்லாதவன் ஒழுங்காக நடந்துகொண்டால், அதுவே

சாலச் சிறந்ததென்னலாம். அத்தகைய நடை முறைகளில் நாணயம் என்பது ஒன்று.

நாணயம் என்பதற்குப் பல பொருள்கள் இருப்பினும், இங்கு அச்சொல் சொன்ன சொல் தவறாது நடந்து கொள்ளும் சீரிய ஒழுக்க முறையினையே குறிப்பதாகும். ஒருவன் ஒருவனுக்கு நூறு ரூபாய் கடனைக் கொடுத்தான் என்று வைத்துக்கொள்வோம். இக்கடனுக்குக் கையெழுத்து முதலியன இல்லை. கொடுத்தவனுக்கும் வாங்கினவனுக்கும் தவிர, வேறு யாருக்கும் இவ்விஷயந் தெரியாது. வாங்கினவன் தான் பெற்ற பொருளை இன்ன காலத்தில் இன்ன வட்டிவீதம் சேர்த்துத் திருப்பிக் கொடுத்து விடுவதாக வாய்ப் பேச்சினால் சொல்லி, அப்படியே அதனை வட்டியும் முதலுமாகக் கொடுத்து விடுவானாயின், அதுவே நாணயம் என்று கூறுகிறோம். இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் நடந்துகொள்வது நாணயமாம்.

நாணயமாக நடந்து கொள்ளுவதனால் உலகில் பேரும் புகழும் பெருகுகின்றன. நாணயமாக நடப்பவர் உண்மை வழியினின்றும் ஒரு சிறிதும் தவறி நடவாராதலின், அவர் யாருக்கும் அஞ்சி நடக்க வேண்டுவதில்லை. மடியில் கன மிருந்தாலல்லவோ வழியில் பயம் ஏற்படும்? மேலும், நெஞ்சில் கரவுடையார் தம்மைக் கரப்பர். நாணயம் உடையவருக்குப் பகையில்லை; எல்லோரும் நண்பினர் ஆவர்; அவரிடம் நம்பிக்கையுங் கொண்டு ஒழுகுவர். ஒரு வியாபாரி நாணயம் உடையவனாய் இருப்பின், ஒவ்வொருவரும் அவனையே நாடி வாணிபம் செய்வர். அதனால், அவன் தன் வியாபாரத்தைப் பெருக்கித் தனவந்தன் ஆகலாம். இப்படியே ஒவ்வொரு துறையில் உள்ளவரும் தாம்தாம் நாணய முடையவராய் நடந்து

கொண்டால், தத்தம் தொழில் மார்க்கங்களில் முன்னுக்கு வரலாம். ஒரு பணியாளன் தன் எசமானனிடத்தில் நாணயமுடையவனாய் நடந்துகொண்டால், அவன் தன் எசமானனால் சன்மானிக்கப்படுவான்.

நாணயம் தவறி நடப்பதனால் பல தீமைகள் ஏற்படக்கூடும். சிலர் நாணயம் தவறி நடந்தால்தான் உலகில் நல்ல நிலையில் வாழ இயலும் என்று பிறரை மோசம் செய்தும், வஞ்சித்தும், பொய்சாட்சி சொல்லியும், அதிக வட்டி வாங்கியும், பொருள் சேர்த்து, ஆடம்பரமாகத் திரிவர். அவர்கள் அவற்றால் பின்னால் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்கள் பல. திடீரென்று வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும். அவர்கள் உடல் வியாதியால் பீடிக்கப்பட்டு மருத்துவர்களுக்கு அளவு கடந்து பொருளைக் கொடுப்பார்கள். அன்றி வழக்காடுவதிலும் பொருள் நஷ்டம் ஏற்படும். நாணயம் தவறி நடப்பதனால் பெயர் அழிந்து விடுகிறது. நாணயம் அற்றவன் உற்றார், உறவினர், நாட்டார் முதலியவர்களுக்கும் பகைவனாகின்றான். அவன் மனம் சாந்தமுறாமல், எப்போதும் பிறரை வஞ்சிப்பதற்கான தீய எண்ணங்களை எண்ணியபடியே இருக்கும். ஆகவே, நாணயம் தவறி நடப்பதனால் பல தீமைகள் ஏற்படுகின்றன. நம் உயிருக்கே ஆபத்து வருகின்ற காலத்திலும் நாணயத்தைக் கைசோரவிடுதல் கூடாது. நாணயம் நல்ல பலனையே அளிக்கும் என்பதை அறிவிக்க ஒரு கதை கூறுவோம்.

ஒரு மாலுமி தன்னிடமுள்ள பணமுடிப்புடன் ஒரு சாப்பாட்டு விடுதியில் தங்கினான். அவன் மீண்டும் அவ்விடம் விட்டுப் போகும்போது தான் கொண்டுவந்த பணமுடிப்பைக் கையில் கொண்டுபோக மறந்தொழிந்

தான். கப்பலோ புறப்பட்டுவிட்டது. மீண்டும் வந்து தான் கைசோர விட்ட பணமுடிப்பை எடுத்துப் போகச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. மாலுமி தன் பணம் போயிற்றே என்று வருத்தப்பட்டான். அந்தச் சாப்பாட்டு விடுதிக்குத் தலைவி ஒரு கிழவி. அவள் உத்தம குணமுடையவள்; நாணயம் வாய்ந்தவள்; பிறர் பொருளை வேம்பென வெறுக்கும் தன்மையள். அவள் அப் பணமுடிப்பைக் கண்டாள்; கண்டதும், அஃது அங்கு வந்து உணவருந்திச் சென்ற மாலுமியினுடையது என்று அறிந்தாள். உடனே அதனைக் கையினாலும் தொடாமல் அதன்மேல் ஒரு மூடியைக் கவிழ்த்துப் பத்திரப்படுத்திக் காத்து வந்தாள். இப்படி மூன்று வருடங்கள் கழிந்தன. மாலுமி மீண்டும் அச் சாப்பாட்டு விடுதிக்கே வந்தான். வந்தவன் தான் முன்பு மறதியினால் விட்டுச்சென்ற பணத்தைப்பற்றி அக் கிழவியை விசாரித்தான். அது கேட்ட கிழவி, அம் முடிப்புப் பத்திரபடுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் காட்டி, 'இதுதானே உமது பண முடிப்பு?' என்று கேட்க, அவன், ஆம்! இதுதான்,' என்று ஆனந்தத்துடன் சொல்லி, அதனைப் பெற்று, அவளது நாணயக்குணத்திற்கு புகழ்ந்து, அவளுக்கு 1,000 ரூபாய் பரிசளித்துச் சென்றனன்.

இக்கதையிலிருந்து நாம் அறிவதென்ன? அவள் அப் பணமுடிப்பைத் தான் அபகரித்துக் கொள்ளாது அதை உரியவனிடம் சேர்த்து மனமகிழ்ச்சியும், பரிசும் பெற்றாள் அன்றோ? அதுபோல நாமும் நாணயமுடையவராய்த் திகழவேண்டும்.

---

## 55. வெள்ளப் பெருக்கு

குறிப்பு : 1. முன்னுரை, 2. வெள்ளப் பெருக்குக்குக் காரணம், 3. வெள்ளப் பெருக்கு, 4. வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள், 5. அக்காலத்தில் செய்யவேண்டுவன, 6. முடிவுரை.

உலகில் ஏற்படக்கூடிய இயற்கை ஆபத்து நிகழ்ச்சிகளில் வெள்ளப் பெருக்கும் ஒன்று. இஃது ஏற்பட்டால், பல இன்னல்கள் ஏற்படும் என்பது திண்ணம். சில நாடுகளுக்கு எரிமலைகளாலும் சில நாடுகளுக்குப் பிளேக்கு முதலிய நோய்களாலும் பல இயற்கை ஆபத்துக்கள் நேரிடும். அவைகள் இன்ன நாடுகளில் தோன்றும் என்று அவ்வந்நாட்டுச் சீதோஷ்ண நிலையின் தன்மைகளைக் கொண்டு அறுதியிட்டுக் கூறிவிடலாம். ஆனால், வெள்ளப் பெருக்கு இப்படிக்கு இன்றி, எந்த நாட்டிலும் ஏற்படக் கூடியதொன்றாம். நமது புராணக் கதைகளில் பிரளயம் என்பது கூறப்படுகிறது. பிரளயத்தின்போதுதான் உலகம் அழியும் காலமாகும். அது நீராலும், நெருப்பாலும், மற்றும் பலவகை நிகழ்ச்சிகளாலும் ஏற்படக்கூடும். நீரால் பிரளயம் ஏற்பட்டால், கடல் பொங்கி விழுந்து உலகைத் தனது நீரால் மூடிவிடும் என்று இக்காலத்து மாணவர்களுக்கும், மற்றும் சில வயதான அறிஞர்களுக்கும் எடுத்துக் கூறினால், கூறுகிறவர்களைக் குதர்க்கம் பேசி எள்ளி நகையாடுகின்றார்கள். அவர்கள் தங்கள் கண் முன்பாகவே வெள்ளப் பெருக்கைக் காண்பார்களாயின், இனியேனும் அங்ஙனம் கூறமாட்டார்கள்.

வெள்ளப் பெருக்குக்கு காரணம் மழையேயாகும். மழையானது விடாது அடராப் பெய்யுமானால், ஆங்காங்குள்ள நீர் நிலைகளான ஏரி, குளம், ஆறு முதலியன நீர்

நிரம்பப்பெற்று, மிகுந்த நீரை வழிந்தோடச் செய்கின்றன. அதுவுமன்றி விடா மழையினுல் ஏரி முதலியவை நிரம்பி, அவற்றின் கரைகள் உடைபடுதலுமுண்டு. அப்போது ஏரி நீர் பெருக்கெடுத்து வெள்ளமாகப் புரண்டு வரும். ஆற்று நீர் பெருகி வரும் காலத்திலும் வெள்ளப் பெருக்கு உண்டாதலும் உண்டு. மழைக்காலத்தில் அநேகமாக வெள்ளப் பெருக்குத் தோன்றுமாயினும் சில காரணங்களால் கோடைக்காலத்திலும் வெள்ளப் பெருக்கு ஏற்படுதலும் உண்டு. மலைகளில் பாறை பாறையாகக் கட்டியுள்ள பனிக்கட்டிகள் சூரிய உஷ்ணத்தினுல் உருகி நீராகிப் பெருக்கெடுப்பதனுலும் வெள்ளப் பெருக்கு ஏற்படுதல் உண்டு.

நெருப்பின் வேகத்தைத் தணித்து விடலாம். ஆனுல், வெள்ளத்தின் வேகத்தைத் தடுக்க எவராலும் ஆகாது. மின்சார சக்தியைக் கொடுக்கும் ஆற்றல் வெள்ளத்துக்கு உண்டு என்றுல், அதன் வேகத்தை எவரால் தடை செய்ய இயலும்? இதனுலன்றோ நம் தமிழ் மொழியில், 'வெள்ளந் தடுத்தல் அரிது' என்று கூறியுள்ளார்.

இத்தகைய ஆற்றல் வாய்ந்த வெள்ளத்தினுல் ஏற்படக்கூடிய துன்பங்கள் எண்ணிறந்தனவாம். ஏழை மக்கள் குடியிருக்கும் வீடுகளை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடுகிறது; சிற்சில வீடுகளை விழச் செய்கிறது; பயிர் பச்சைகளை நாசஞ்செய்து, நன்கு வளர்ந்து பக்குவதசையில் உள்ள தானியக் கதிர்களைச் சின்னு பின்னப்படுத்தி விடுகிறது; ஆடு மாடுகளை அடித்துக் கொண்டுபோய் விடுகிறது; போக்கு வரவுக்குரிய இருப்புப் பாதைகளை அடித்துக்கொண்டு போய்விடுவதனுல், போக்கு வரவு தடைபடுகின்றது. பச்சை மரங்களை வேரோடு களைந்து அடித்துக்கொண்டுவந்துவழியடைத்து

விடுகிறது ; இப்படி எல்லாம் பல வழிகளில் இன்னல்களை உண்டு பண்ணுவதனால் பஞ்சத்தை உண்டாக்கி விடுகிறது; ஏழை மக்களை இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவும் இன்றிப் பரிதவிக்கச் செய்துவிடுகிறது. சிற்சில கிராமங்களை அப்படியே வெள்ளம் மூடிக்கொள்வதனால், அவ் வெள்ளத்தினின்றும் தப்பிவர இயலாமல் பலர் மடிந்தொழிகின்றனர். ஆதலால், உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றது. ஆகவே, வெள்ளத்தினால் பல சொல்லொணுக் கொடுமைகள் ஏற்படுகின்றன என்பது கண்கூடு.

இப்படி வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட காலங்களில் ஏழை எளிய மக்கள் நிற்க இடமின்றித் தத்தளிக்கும் போது அவர்களுக்கு இடந்தந்து, ஆடை ஈந்து, அன்னம் அளித்து ஆதரிக்க வேண்டும். இப்படி வெள்ளத்தின் பெருக்கத்தால் வருந்துவோர் பலராதலின், அப்பலருக்கு ஒருவர் செய்யும் உபகாரம் சிரம சாத்திய மாதலின், பல தனவந்தர் முன் வந்து உதவிசெய்ய வேண்டும். அவர்களுக்கு உண்டியும், இடமும், உடையும் தரவேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் செய்யப்படும் உபகாரம் பேருபகாரம் எனப்படும். இதனையறிந்தன்றோ நந்தமிழ் வேதமாகிய திருக்குறள்,

> “ காலத்தி னுல்செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது. ”

என்றும்,

> “ பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
> நன்மை கடலிற் பெரிது. ”

என்றும் கூறுகிறது. இத்தருணங்களில் அரசாங்கத்தாரும் துன்பப் படுபவர்களுக்கு வேண்டிய உதவிகளைச்

செய்ய முன் வரவேண்டும். பொது மக்களும் பல வேறு வழிகளில் பொருள் முதலியவைகளை வசூலித்து வெள்ளத்தினுல் வருந்துபவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் வேண்டும். நகராண்மைக் கழகத்தார், சிலர் வெள்ளத்தினுல் நோயுற்றிருப்பாராதலின், மருந்து முதலியன உதவி அவர்களை ஆதரிக்கவேண்டும். வெள்ளக் கஷ்ட நிலைமை அடிக்கடி கண்காணித்து வர, ஒரு நிருவாகச் சங்கத்தை ஏற்பாடு செய்தல் வேண்டும். இப்படிப் பல வழிகளிலும் உதவி செய்ய வேண்டும்.

இத்தகைய வெள்ளப் பெருக்கு அடிக்கடி வரும் என்பது நிச்சயமாதலின், வெள்ளப் பெருக்குப் பாதுகாப்பு நிதி என்று பிரத்யேகமாகப் பொருளைச் சேகரிக்கப்பட வேண்டும். ஏழை மக்கள் தங்குவதற்குப் பல விடுதிகள் கட்டப்படல் வேண்டும். அவர்கள் குடிசைகள் அழிந்து பட்டால், அவற்றை மீண்டும் புதுப்பிக்கும் பொருட்டுக் கடனுகப் பணவுதவியும் அரசாங்கத்தார் செய்தல் வேண்டும். ஏரி, குளம், குட்டை முதலியவற்றின் கரை நன்கு கட்டப்படல் வேண்டும்.

## 56. நான் கோடைகால விடுமுறை நாட்களைக் கழித்த விதம்

குறிப்பு: 1. விடுமுறைத் துவக்கம், 2. நான் என் சொந்த ஊருக்குப் பிரயாணப் பட்டது, 3. நான் அங்கு நாட்களைக் கழித்த முறை, 4. முடிவுரை.

எங்கள் பள்ளிக்கூடத்தில் வருஷ முடிவில் நடத்தப்படும் வகுப்பு மாறும் பரீக்ஷை, கடந்த ஏப்ரல் மாதம் தொடர்ச்சியாக பத்து நாள் நடந்தது. நான் ஒவ்வொரு பரீக்ஷையிலும் நன்கு விடை எழுதினேன். பரீக்ஷைகள் எல்லாம் முடிந்ததும், பள்ளிக்கூடம் கோடை கால விடுமுறைக்காக இரண்டுமாதம் மூடப்பட்டது. இந்த விடுமுறை நாட்களை நான் சென்னையிலேயே இருந்து கழிக்க எண்ணங்கொள்ளாமல், என் முன்னோர் வாழ்ந்த கிராமங்களில் சென்று கழிக்கலாம் என்று எண்ணி, என் பெற்றோர் அனுமதி பெற்று, என் சிறிய தந்தையார் வாழும் ஊருக்குப் போகத் தீர்மானித்தேன்.

ஊருக்குப் போவதற்குள் அங்குக் காலப்போக்குக்கு வேண்டியவைகளையும், சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்ற உடைகளையும் எடுத்துச் செல்லவேண்டி இருந்தமையின் என் தந்தையாரும் யானும் துணிக்கடைக்குச் சென்று, எனக்கு வேண்டிய துணிகளை எடுத்துக்கொண்டோம்; இக்காலப் பேரறிஞர்கள் எழுதிய ஆங்கிலப் புத்தகங்களையும், தமிழ்ப் புத்தகங்களையும் வாங்கிக்கொண்டோம்; எனக்கு ஒரு தோல் பெட்டி (Suit case) இல்லாதது ஒரு குறையாய் இருந்ததால், அதையும் வாங்கிக்கொண்டேன். என் எண்ணமெல்லாம் ஊர்ப்பிரயாணத்திலேயே இருந்தமையால், நான் வாங்கிய ஆடைகளைத் தையற்காரனிடம் கொடுத்து அவற்றைத் துரிதப்படுத்தித் தைத்துத் தரப்பெற்றேன்.

இப்படி நான் ஊர்ப் பிரயாணத்திற்கு வேண்டியவைகளைத் தயாரிப்பதற்குள் மூன்று நாட்கள் ஆகிவிட்டன. பிறகு நான்காம் நாள் என் தாய் தந்தையரிடம் விடை பெற்று, நேரே இரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று நான் போக வேண்டிய இடத்திற்குப் பயணச் சீட்டை வெகு சிரமத்தோடு வாங்கினேன். கோடைகால விடுமுறைக்கு என்னைப் போன்ற பல மாணவர்களும் தங்கள் தங்கள் ஊருக்குப் போனார்களாதலின், ஸ்டேஷனில் ஜனத்தொகுதி மிகுதியாய் இருந்தது. என் எண்ணம் ஊர்ப் பிரயாணத்திலேயே பதிந்திருந்தமையால், எனக்கு இரயில் பிரயாணத்தின்போது ஜனநெருக்கத்தினால் ஏற்பட்ட கஷ்டங்கள் எல்லாம் இன்பமாகவே இருந்தன.

கடைசியாக நான் போய்ச் சேரவேண்டிய ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கு நான் வருவேன் என்று முன்னதாகவே என் தந்தையார் என் சிறிய தந்தையாருக்குக் கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தாராதலின், அவர் என்னை வரவேற்க ஸ்டேஷனில் காத்திருந்தார். அவர் என்னைக் கண்ணுற்றதும் வெகு குதூகலத்தோடு வரவேற்றனர். எங்கள் கிராமம் ஸ்டேஷனுக்கு வெகு அருகே இருந்தமையால், அவரும் நானும் நடந்தே சென்றோம். சென்னை போன்ற நாகரிகம் மிகுந்த நகரங்களில் அன்றோ சிறிது தூரம் செல்ல வேண்டுமானாலும் வண்டியில் செல்ல வேண்டி நேரிடுகிறது! அப்படிக்கின்றி அது நாட்டுப்புறமாதலின், நடந்தே சென்றோம். செல்லும் வழியில் இரு புறமும் பயிர் பச்சைகள் பச்சைப்பசேல் என்று வளர்ந்து, மரகதக் கம்பளம் விரித்தாற்போன்றிருந்த கண்கவர் வனப்பு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஒரு புறத்தில் ஆடு மாடுகள் கூட்டங் கூட்டமாய் வெளியிடங்களிலும், மலைச் சரிவுகளிலும்

தங்கள் இச்சைப்படி புல் மேய்ந்து கொண்டிருந்தது. காண்பதற்கு வெகு ரமணீயமாயிருந்தது. மரங்களில் பறவைகள் தங்கள் இனிய குரல் எடுத்துக் கூவியது காதுக்கு உற்சாகமாய் இருந்தது. இத்தகைய இயற்கை இன்பமாகிய அமுதைப் பருகிக்கொண்டே யான் என் சிறிய தந்தையார் இல்லம் சேர்ந்தேன். அங்கு என் சிறிய தாயாரும் என் சகோதர சகோதரிகளும் என் வருகையால் மனம் மிக மகிழ்ந்தார்கள். நான் சிறுவர்களுக்கென வாங்கிச் சென்ற விளையாட்டுப் பொருள்களை அவர்களுக்குக் கொடுத்தபோது அவர்கள் நெஞ்சம் இன்பக் கடலில் மூழ்கியது. பிறகு நான் இரயிலில் வந்த சிரமம் தீர எனக்குச் சிற்றுண்டிப் படைக்கப்பட்டது. அதை உண்டு கொண்டே சிறிது நேரம் என் சிறிய தந்தையாருடனும், சிறிய தாயாருடனும், என் பெற்றோர் சுகம் முதலியவற்றைக் குறித்து உரையாடிவிட்டுப் பிறகு சிறிது கண்ணயர்ந்தேன். இதற்குள் பகல் உண்டி ஆயிற்று. அன்று நான் எங்கும் போகவில்லை; இரவு உண்டி கழிந்ததும், நன்கு நித்திரை போயினேன்.

மறுநாள் காலைக் கடன்களை முடித்துவிட்டு, ஊரைச் சுற்றிப் பார்க்கலாம் என்ற எண்ணங்கொண்டு, என் சிறிய தந்தையாருடன் வெளியில் புறப்பட்டேன். அவர் என்னை உடன் அழைத்துக்கொண்டு, அங்குள்ள ஒவ்வொன்றையும் காட்டிக்கொண்டே சென்றார். நான் அவற்றை எல்லாம் கண்ணுற்று ஆனந்தம் அடைந்தேன்.

அடுத்த நாள் முதல் சிற்சில வேளைகளில் நான் தன்னந்தனியே சென்று வருவதும் உண்டு; தினமும் ஆற்றில் ஸ்நானம் செய்வேன்; மாலையானதும் ஏரிக் கரைக்குச் சென்று சிறிது உலவிவிட்டு வருவேன்; சிற்சில வேளைகளில் நான் உடன் கொண்டு சென்ற புத்தகங்

களைப் படிப்பேன்; தினந்தோறும் வர்த்தமானப் பத்திரிகைகளைப் படித்து, அங்கங்கு நடக்கும் விஷயங்களை அறிந்துவந்தேன்; என் தந்தையாருக்கு அடிக்கடி கடிதம் எழுதி அவருடைய க்ஷேமலாபங்களை உணர்ந்து கொண்டேன்.

இப்படி நான் அங்கு ஏறக்குறைய இரண்டு மாதம் இருந்துவிட்டுப் பள்ளிக்கூடம் திறக்க இரண்டு நாள் முன்னதாகவே சென்னைக்கு வந்து சேர்ந்தேன்; பெற்றோரையும், என் பழைய பள்ளிக்கூட நண்பர்களையும் கண்டு உவந்தேன். நான் பள்ளிக்கூடம் சென்று, தலைமை உபாத்தியாயரால் மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டதை அறிந்து பெற்றோருக்குத் தெரிவித்தேன். அவர்கள் உள்ளம் பூரித்தார்கள். பிறகு பள்ளிக்கூடம் திறக்கப்பட்டதும், அன்றுமுதல் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று, பாடங்களைப் படிக்கலாயினேன்.

---

## 57. செஞ்சிலுவைக் கழகம்

குறிப்பு: 1. முன்னுரை, 2. கழகப்பெயர்க் காரணம், 3. இக்கழகம் ஏற்பட்டதின் காரணம், 4. துவக்கமும் வளர்ச்சியும், 5. கழகத்தினால் ஏற்படும் நன்மைகள், 6. முடிவுரை.

உலகத்தில் பல கழகங்கள் தோன்றின; தோன்றுகின்றன; இனியும் தோன்றும். அக்கழகங்கள் ஒவ்வொரு துறையில் நாட்டுக்கு நன்மை பயக்கின்றன. சில கல்வி அபிவிருத்திக்கென்றும், சிற்சில மதவிஷயங்களைக் குறித்தும், வேறு சில ஜீவகாருண்ணிய நிமித்தமும், சில பொது நலத்துக்கெனவும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சாரணர் இயக்கம் என்னும் ஒரு குழுவானது நாட்டுப்

பொது நன்மையின் பொருட்டு ஏற்பட்டதாம். அது போலவே செஞ்சிலுவைக் கழகமும் (Red Cross Society) நாட்டு நன்மைக்காகவே தோன்றியதாகும்.

இச்சங்கத்தை நடத்துபவர் வெள்ளிய நீண்ட மேல் அங்கியில் செவ்விய சிலுவை ஒன்றை அடையாளமாகக் கொண்டு இருப்பர். ஆதலின், இது குறித்து இக்கழகம் செஞ்சிலுவைக் கழகம் என்னும் பெயர் பெற்று நடை பெற்று வருகிறது.

இக்கழகம் ஏற்பட்டதின் காரணம் என்னவெனில், உலகிலுள்ள மக்கள் ஒற்றுமை கொண்டு, தங்களாலான உதவியைப் பிறருக்குச் செய்யவேண்டும் என்பதும், சுய நலமின்றிப் பர நலத்திற்கே பாடுபடவேண்டும் என்பதும், மக்களின் தீய பழக்க வழக்கங்களை நீக்கி அவர்களை நன்னடக்கை முதலிய நீதி மார்க்கங்களைப் பின்பற்றி நடக்கச் செய்யவேண்டும் என்பதும், ஒவ்வொருவரும் உடல் ஓம்பத் திடகாத்திரராக 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது போல ஆரோக்கிய முடையவராக இருக்கவேண்டும் என்பதும், ஒருவருக்கு ஒரு நோயோ, காயமோ ஏற்பட்டால், அதனை உடனே கவனித்துப் பரிகாரம் செய்யக்கூடிய சிகிச்சை முறை களைத் தெரிந்திருக்க வேண்டும் என்பதும், மற்றும் எவ் வெத்துறையில் பிறருக்கு உதவி செய்யக்கூடுமோ அவ் வத்துறையில் முன்னின்று உழைக்கவேண்டும் என்பதும் முக்கிய நோக்கமாகக் கொண்டு இக்கழகம் ஆரம்பிக்கப் பட்டது.

இக்கழகத்தை முதல் முதல் ஆரம்பித்தவர் கனம் ஹென்டிரி டூணன்ட் என்னும் வாலிபர். இவர் ஜினேவா வில் சுவிட்ஜர்லாண்டு நாட்டு வாலிபர். இவர் இக்

சழகத்தை 1864-ஆம் ஆண்டில் பேருக்கங்கொண்டு துவக்கினர். அரும்பெரு நோக்கங்களைக் கண்ட சில தேசங்கள் இதில் கலந்து உடன்படிக்கை செய்துகொண்டன. அப்படி உடன்படிக்கை செய்தவை பதினன்கு தேசங்களாம். இக்கழகத்தின் தீர்மானங்கள் ஹேக்கு நகரத்தில் 1906-ஆம் வருடம் அங்கீகரிக்கப்பட்டன. இக்கழகம் பல ஆண்டுகளாக நன்முறையில் நடந்து வந்துகொண்டிருந்தது. பிறகு பல நாடுகளில் இதன் கொள்கைகளை அடி ஒற்றிப் பல கிளைக் கழகங்கள் உண்டாயின. துருக்கியர் எகிப்தியர்களால் செந்நிலவுக் கழகமும், பெர்ஷியர்களால் செம்பருத்திக் கழகமும், கனடா தேசத்துக் கியூபெக்கு நகரத்து வாசிகளால் செஞ்சிலுவைக் கழகமுமாக மூன்று கழகங்கள் தோன்றின. இதன் பிறகு சில வருடங்களுக்குள் ஐரோப்பா முதலிய நாடுகளில் இப்பெயரால் சில கழகங்கள் தோன்றலாயின. நமது இந்தியாவிலும் இக்கழகம் 1925-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் தோன்றிய இக்கழகம் மாரி காலத்தில் புது டில்லியிலும், கோடைகாலத்தில் சிம்லாவிலும் இருந்து காரியங்களை நடத்திக்கொண்டு வரும். இப்படி நாளுக்கு நாள் இக்கழகம் பெருகலாயிற்று. இப்போது ஐம்பது கிளைக் கழகங்கள் இதன் சார்பில் தோன்றியுள்ளன.

இக்கழகத்தினல் ஏற்படக்கூடிய நன்மைகள் பல. இஃது ஏழை எளிய பிள்ளைகளை ஆதரித்து அவர்களுக்கு ஆடை, அன்னம் உதவுகிறது; விஷ பேதி, வைசூரி, பிளேக்கு முதலிய கொள்ளை நோய்கள் உண்டாகும் காலங்களில் மக்களுக்குப் பல துறைகளில் உதவி செய்கிறது; போர் முனையில் அடிபட்டுக் கிடப்பவர்களுக்குச் சிகிச்சை செய்கிறது; வெள்ளச் சேதம், பூகம்பம், தீ விபத்து முதலிய அபாயகரமான சந்தர்ப்பங்களில்

பேருதவி செய்கிறது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று நம் பெரியோர் கூறிச் சென்றபடி எப்பொழுதும் பிறருக்கு நன்மை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறது.

இக்கழகத்தில் அநேகமாக ஆசிரியர்களும், மாணவர்களுமே சேர்ந்து உழைத்து வருகின்றார்கள். தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளராக உள்ளவர் ஒவ்வொருவரும் இதில் சேர்ந்து நன்மை புரியலாம். இதன் நன்மைகளைப் பலருக்கும் எடுத்துச் சொல்லிப் பொது மக்கள் ஆதரவைப் பெற்றுப் பல கிளைக்கழகங்கள் தோன்றுவதற்கான முயற்சிகளை ஒவ்வொருவரும் செய்யவேண்டும். இது மக்கள் நன்மைக்கே உழைக்க முன் வந்துள்ளமையின், பல தனவந்தர்கள் பொருள் உதவி செய்து, இதன் கிளைக்கழகங்கள் ஆங்காங்கே தோன்றுவதற்குத் துணை புரியவேண்டும்.

---

## 58. ஆறும் ஜார்ஜ் அரசரது முடிசூட்டு விழா

குறிப்பு: 1. முன்னுரை, 2. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் வாழ்வு முடிவும் எட்டாம் எட்வர்டு மன்னர் அரசு துறத்தலும், 3. ஆறும் ஜார்ஜ் மன்னர் அரியணையேறுதல், 4. முடி சூட்டு விழா ஏற்பாடுகள், 5. விழாவின் அலங்காரமும் உலாப் போதலும், 6. விழாவின் போது அரசர் கொடுத்த வாக்குறுதிகள்.

'முடி சார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பராய் முடிவதும்,' 'வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம்' என்பதும் உலகில் ஒவ்வொருவரும் கண்கூடாகக் காணும் உண்மைச் செயல்

களாம். ஆகவே, மக்கள் உலகில் பிறந்தால் இறக்க வேண்டியவர்களே. இஃது எறும்பு முதல் யானை ஈறாக உள்ள உயிர்களுக்கு ஒப்ப முடிந்ததொன்றும். இத்தகைய உண்மையுடைய உலகில் குடி மக்களை நீதி முறையினின் றும் தவறாது காப்பதற்கு அரசர்கள் முடி சூடி ஆண்டு வருகின்றார்கள். அப்படிப் பல ஆண்டுகள் அரசாண்ட அரசர்களின் வாழ்நாள் முடிந்ததும், அவ்வரச பதவிக்கு அவ்வரசர்களின் அரசுரிமையை மைந்தரோ மகளிரோ அடைந்து, முடி சூடி நாட்டை நிர்வகித்து வருவர்.

இந்த முறையில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நீதி நெறி பிறழாது செங்கோல் செலுத்திய நமது மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பெருமானார் பூலோக வாழ்வை நீத்துத் தெய்வலோக வாழ்வை எய்தினார். அவருக்குப் பிறகு அவர் மூத்த புதல்வராகிய வேல்ஸ் நகரத்து இளவரசராயிருந்த எட்வர்டு என்பவர் எட்டாம் எட்வர்டு என்னும் பெயருடன் சிம்மாஸனம் ஏறினார். அவர் சில மாதங்கள் அரசராய் இருந்து வருகையில் தமது முடியைத் துறக்க வேண்டிய காரணம் இன்றியமையாது நேர்ந்தமையினால், தாம் முடி துறந்து அரசாட்சியையும் விட்டொழித்தார்.

அவருக்குப் பிறகு அவரது நேர் இளைய சகோதரரும், காலம் சென்ற ஜார்ஜ் மன்னரின் இரண்டாம் திருக்குமாரரும், யார்க்குக் கோமகனாரும் ஆகிய ஜார்ஜ் என்பவர், ஆறும் ஜார்ஜ் என்னும் திருநாமத்துடன் பட்டத்துக்கு வந்தார். அவர் பட்டத்துக்கு வந்த செய்தியை உலக மறிய அவருக்கு முடி சூட்டு விழாவானது வெகு விமரிசையாய் நடந்தேறியது. அஃது இலண்டன்மா நகரில் வெஸ்டு மின்ஸ்டர் ஆலயத்தில் 1937-ஆம் ஆண்டு மே மாதம் 12-ம் தேதி நடைபெற்றது.

அவ் விழாக் கொண்டாடுவதற்கான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. விழாக்காணும் விருப்புடைய பல பிரமுகர் வருவர் என்று புகைக் கப்பல்கள் பிரத்தியேக மாக விடப்பட்டன. பல ராஜ்யங்களிலிருந்து அவ்வந் நாட்டுச் சேனைகள் மரியாதைக்கு அறிகுறியாக அனுப்பப் பட்டன. சென்னையில் அன்று பல இடங்களில் கொடி ஏற்றுவித்துக் கட்டடங்களை மின்சார விளக்குகளால் அலங்கரித்தனர். அன்று ஏழை எளியவர்களுக்கு அன்ன மளித்தனர். அரசரது திருவுருவப் படம் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு பாண வேடிக்கைகள் பல நடந் தேறின.

மன்னர் பெருமானர், மகுடாபிஷேக தினத்துக்கு முன்னல் இலண்டன் கோபுரம் (London Tower) என்னு மிடத்தினின்று வெஸ்டு மின்ஸ்டருக்கு ஊர்வலமாகச் சென்றனர். அங்கு அவருக்கு அரசர் கடமை இன் னின்னவை என்பதைப்பற்றி அந்நாட்டு மடாதிபதிகள் உபதேசம் செய்தனர். மறு நாள் மன்னர் வெஸ்டு மின்ஸ்டர் ஹாலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவருக்கு ஆர்ச் பிஷப்பு தெய்விகத் தைலமாட் டினர். அதன் பிறகு அவருக்கு நீண்ட அங்கி ஒன்றும், குறுவாள், மிதியடி முதலியனவும் அளிக்கப்பட்டன. இதற்கிடையில் நன்முகூர்த்த வேளை வரவே, காண்டர்பரி ஆர்ச் பிஷப்பு அரசரது தலையில் முடி கவித்தார். அரசரது கையில் முத்திரை மோதிரமும், செங்கோலும், உலகிற் கறிகுறியான பொன் கோளமும் கொடுக்கப்பட்டன.

இத்தகைய சிறப்புடன் மகுடாபிஷேகத் திருநாள் நடைபெற்றவுடன் அரசர் பெருந்தகையார் பாதிரிமார் களைத் தமது மத முறைப்படி முத்தமிட்டார். தமது

திருவிழாக் காண வந்திருந்த சிற்றரசர் பிரதிநிதிகள் முதலியோருக்கு நன்றி செலுத்தினார். மேலும், ஆர்ச்சு பிஷப்பு முன்னிலையில் பாராளும் மன்றம் (Parliament) ஒப்புக்கொள்ளும் சட்டங்களின்படி தாம் ஆட்சி செய்ய ஒப்புக்கொள்ளுவதாகவும், கருணையுடன் நீதி நெறியில் நின்று ஆட்சி செய்வதாகவும், சட்டப்படி உண்டான பிராடஸ்டண்டு மதக்கொள்கைகளைப் பாதுகாத்துக் கவனித்து வருவதாகவும் வாக்குறுதி கொடுத்தார்.

நம் மன்னர் நீடூழி வாழ்வாராக !

---

## 59. பொருட்காட்சிச் சாலை

குறிப்பு: 1. முன்னுரை, 2. பொருட்காட்சிச் சாலை அமைக்குங் காரணம், 3. நடத்தும் முறை, 4. அமையும் தன்மை, 5. நன்மைகள், 6. முடிவுரை.

உலகத்தில் இயற்கையின் மூலமும், செயற்கையின் மூலமும் பல நூதனப் பொருள்கள் தோன்றிய வண்ணமாகவே இருக்கின்றன. ஆனால், அவைகள் ஒரு நாட்டில் மட்டுந் தோன்றுவனவல்ல; பல்வேறு நாடுகளில் பலபடியாக வெளி வருகின்றன. அத்தகைய பொருள்களை மக்கள் நேரில் காண விரும்புகின்றார்கள். ஆனால், அவ்வவ்விடங்களுக்கு மாந்தர் சென்று அவற்றைக் காணல் இயலாது. அத்தகையவை குறித்த ஓர் இடத்தில் வைக்கப்பட்டிருப்பின், மாந்தர் அவற்றைக் கண்கூடாகப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றவராவர். அப்படிப் பல்வேறு இடங்களில் உண்டான பொருள்களை ஒருங்கு கொணர்ந்து, ஓர் இடத்தில் ஒழுங்கான

முறையில் மக்கள் காண வைக்கப்படுவதே பொருட்காட்சி எனப்படும்.

பொருட்காட்சிச்சாலை அமைப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. மக்கள் புதிய பொருள்களைக் கண்டு களித்துச் செல்லுவதற்கும், அவர் அவர்கள் கண்டு பிடித்துச் செய்த வேலைத்திறனைக் காட்டிக்கொள்ளுவதற்கும், வியாபாரத்தை விருத்தி செய்துகொள்ள வியாபாரப் பொருள்களைப்பற்றி விளம்பரம் செய்வதற்கும் பொருட்காட்சியை அமைப்பர். மற்றும் பல காரணங்களை உட்கொண்டும் பொருட்காட்சிச் சாலையை ஏற்படுத்துவதுண்டு.

பொருட்காட்சிச் சாலையை ஏற்படுத்தி நல்ல முறையில் நடத்துவது சிரமமான காரியமேயாகும். இதற்கெனத் தனித் தொகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குள் தலைவர், காரியதரிசி, நிர்வாக அங்கத்தினர் முதலியவரை ஏற்படுத்திக்கொண்டு ஒழுங்காக நடத்த வேண்டும்.

பொருட்காட்சிச் சாலையை விசாலமான இடத்தில் நாலா பக்கங்களிலிருந்து மக்கள் வந்து காணுதற்கான முறையில் அமைக்கவேண்டும். இதன் பெயர் நன்கு தெரியும்படி மக்கள் நுழையும் இடத்தில் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். சுற்றிலும் பாதுகாவலின் நிமித்தம் வேலி அமைக்கப்பட வேண்டும். உள்ளே பல பொருள்களுக் குரிய பொறுப்பாளிகள் இருப்பார்களாதலின், அவரவர்கள் தங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் பெயர்களைத் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இடத்தில் நன்கு எழுதி அமைத்திருக்க வேண்டும். வந்து பார்க்கும் மக்களுக்குத் தங்கள் தங்கள் நாட்டுப் பொருள்களையோ, தொழிற்சாலைகளில் செய்த பொருள்களையோ பற்றி

விவரித்துச் சொல்ல வேண்டும். பொருள்கள் ஒழுங்கான முறைகளில் அலங்கரிக்கப்பட்டு இருக்கப்பட வேண்டும்.

இத்தகைய ஏற்பாடுகளுடன் அமைக்கப்படும் பொருட்காட்சிச் சாலையினால் பல நன்மைகள் உண்டாகின்றன. உலகில் பல பாகங்களில் உள்ள பொருள்களை ஓர் இடத்தில் எளிதில் காண்கிறோம்; அவற்றை விலைக்கும் பெறுகிறோம். சிற்சில பொருட்காட்சிச் சாலைகளில் பொருள்களைச் செய்யும் முறைகளை நமக்குச் செய்து காட்டுவதனால், அவற்றைக் காணும் நம் அறிவு விசாலமாகிறது. இதனால் நாம் பல நாட்டு மக்களின் நுண்ணறிவையும், அவ்வந்நாட்டுத் தன்மைகளையும் ஒருவாறு அறிந்துகொள்ளலாம். மற்றும் பல நன்மைகளையும் அடையலாம்.

இத்தகைய பல நன்மைகள் இருப்பதினாலேதான் ஒவ்வொரு துறையிலும் பொருட்காட்சியை அடிக்கடி ஆங்காங்கு அமைக்கின்றனர். கல்விப் பொருட்காட்சி, கைத்தொழிற் பொருட்காட்சி, ஆயுதப் பொருட்காட்சி, விவசாயப் பொருட்காட்சி, மிருகக்காட்சி முதலிய பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இத்தகைய பொருட்காட்சிகள் நாளுக்கு நாள் பெருக வேண்டும் என்றேதான் பொருட்காட்சி அமைக்கிறவர்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்களைக் கொடுத்து, அவர்களை ஊக்கப் படுத்துகின்றார்கள். ஆகவே, ஒவ்வொரு நாட்டிலும் பல பொருட்காட்சிச் சாலைகள் ஏற்பட வேண்டும்.

## 60. ஓர் இருப்புப் பாதை நிலையம்

குறிப்பு: 1. முன்னுரை, 2. நிலையத் தோற்றம், 3. நிலையப் பகுதிகள், 4. பிளாட்பாரச் செய்தி, 5. முடிவுரை.

இருப்புப் பாதையினால் மக்கள் அடைந்துள்ள நன்மைகள் பல. இவ்விருப்புப் பாதை நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டே இருக்கிறது. இருப்புப் பாதையில் ஓடும் வண்டிகள் நாட்டையும் நகரங்களையும் கடந்து செல்ல வேண்டுமல்லவா? வண்டியில் செல்வோர் தத்தம் ஊர்களில் இறங்க வேண்டியதாகவும், அடுத்த ஊர்களுக்குப் போக வேண்டியவராகவும் இருக்கின்றனராதலின், சராசரி ஐந்து மைலுக்கு ஓர் இடத்தில் ஊருக்கருகே இருப்புப் பாதைக் கம்பெனியார் வண்டிகள் தங்கிப் போக இருப்புப் பாதை நிலையங்களை (Stations) ஏற்படுத்தி இருக்கின்றனர்.

இவ்விருப்புப் பாதை நிலையங்கள் அவ்வவ்விடத்துக்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றன. சில இடங்களில் வெகு அழகிய வேலைப்பாடுகள் அமைந்த பெருங்கட்டடங்களிலும், சிற்சில இடங்களில் சிறு கட்டடங்களிலும், மற்றும் சில இடங்களில் இரயில்வண்டிப் பெட்டியிலும் இருப்புப் பாதை நிலையங்களின் காரியாலயம் (Office) அமைக்கப் பட்டிருக்கும். சிறிய நிலையங்களில் வண்டிகள் அடிக்கடி நின்று செல்ல மாட்டா. அங்குப் பிரயாணச் சீட்டைக் கொடுக்கும் தொழில் செய்பவரும், நிலையத் தலைவரும் (Station Master) ஒருவரே. அங்குப் போர்ட்டரும் இரண்டொருவரே இருப்பர்; ஜனங்களின் போக்குவரவும் அதிகமாய் இரா. சிறிய கட்டடத்தில் அமைந்த நிலையம் இதைவிடச் சிறிது சிறந்து விளங்கும். அங்கு இரவிலும்

பகலிலும் தலைவர் இருவரும், பிரயாணச் சீட்டு விற்போர் இருவரும் இருப்பர்; கூலியாட்களும் நான்கு ஐந்து பேர்கள் இருப்பார்கள்; மக்கள் நடமாட்டமும் அதிகம். மிகப்பெரிய அழகிய கட்டடத்தில் அமைந்த நிலையமோ, எல்லா விதத்திலும் பெரியதாகவே காணப்படும். அங்குத் தலைமை ஸ்டேஷன் மாஸ்டரும், உதவி ஸ்டேஷன் மாஸ்டரும், மற்றும் பல உத்தியோகஸ்தர்களும், பல கூலியாட்களும் இருப்பார்கள்.

பயணச் சீட்டுக் கொடுக்கப்பெறும் இடத்தில் எப்பொழுதும் மக்கள் கூட்டமாகவே இருப்பார்கள். டிக்கட்டு வாங்கும்போது பிரயாணிகள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு டிக்கட்டு வாங்குவதும் சண்டையிட்டுக் கொள்வதும் வெகு வேடிக்கையாய் இருக்கும். இரயிலில் ஏறும் பிரயாணிகளின் நிலை எப்பொழுதும் பரபரப்பாகவே இருக்கும். மூட்டையைத் தூக்கிக்கொண்டு போகிறவர்களும், குழந்தைகளை இழுத்துக்கொண்டு அவசரமாக ஓடி இடந்தேடுபவர்களும், அப்படித் தேடும் போது, முன்னமே வந்து இடங்களில் உட்கார்ந்து கொண்டு இங்கு இடம் இல்லை என்று விரட்டுபவர்களும், அதைக் கேட்டு அவர்களோடு சண்டை இடுபவர்களுமாய் மக்கள் அல்லற்படுவதுண்டு. பிளாட்பாரத்தில் மக்கள் நெருங்கிப் போய்க்கொண்டும், வந்துகொண்டும் இருப்பார்கள். கூலியாட்கள் தங்களுக்குக் கிடைத்த சுமைகளைத் தலையில் தூக்கிக்கொண்டு அச்சுமைகளுக்கு உரியவருடன் போய்க்கொண்டிருப்பார்கள். சாமான்களை விற்பவர்களுடைய ஓசையும், பண்டு பலகாரங்களை விற்பவர்களின் சத்தமும் காதுகளைத் துளைத்துவிடும். ஒரு புறத்தில் பத்திரிகை விற்போர் ஓசையும், மற்றொரு புறத்தில் வெற்றிலை பாக்கு, பீடி, சிகரெட்டு விற்போர்

சத்தமும், இவைகளுக்கிடையே பிரயாணிகளைப் பயணப் படுத்தி அனுப்ப உடன் வந்திருப்போர் உரையாடுதலும் நிறைந்து எங்கும் கூச்சலாகவே இருக்கும். இந்தச் சத்தம் போதாதென்று கருதுபவர்களைப் போலக் கூலி யாட்கள் தங்களுக்குச் சேர வேண்டிய கூலியைப் பெற்று லும் திருப்தியடையாமல் அதிகக் கூலிக்காகச் சண்டை யிடுவதும் உண்டு. இத்தனை ஆரவாரத்துக்கு மிடையே வண்டி புறப்படும் சமயத்தில் ஓடோடியும் வந்து வண்டி யில் ஏறுவோர் செயல் மிகவும் வேடிக்கையாய் இருக்கும். பலர் இங்கும் அங்கும் ஓடி அல்லாட்டப்படுவர். இப்படி வண்டி புறப்படும் மட்டும் ஒரே கூச்சலாகவே இருக்கும். ஏறக்குறைய காலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை யிலும் இரயில்வே நிலையத்தில் கூச்சல் குறைவதே இல்லை. ஏனெனில், ஒரு வண்டி போன சிறிது நேரத்திற்கெல்லாம் அடுத்த வண்டி போக வேண்டும். ஒரு புறத்தில் வண்டி கள் வந்துகொண்டிருக்கும்.

சில பெரிய உத்தியோகஸ்தர்கள் வருகின்ற காலத்தி லும், போகின்ற காலத்திலும் அவர்களிடத்தில் அன்பு கொண்ட மக்கள் தங்கள் நன்றியைச் செலுத்தும் பொருட்டு அவரை வரவேற்பதும், அவருக்குப் பிரிவு உபசாரம் செய்வதுமான சந்தர்ப்பங்களில் கூட்டம் மிகுந்து பெருங்கூச்சலாய் இருக்கும்.

பெரிய பெரிய இரயில்வே ஸ்டேஷன்களில் மக்க ளுக்குப் பல வகையிலும் சௌகரியங்களை இரயில்வே அதிகாரிகள் செய்து கொடுக்கின்றார்கள். மக்கள் தங்கு வதற்கு அறைகளும் (Waiting rooms), பல இடங்களில் டிக்கட்டுகள் கொடுக்க ஏற்பாடும், கண்டவர்கள் பிளாட் பாரத்தில் போகாதிருப்பதற்காகப் பிளாட்பாரக் கட்டண

மும், திருடர் முதலியவர்களால் பிரயாணிகளுக்கு ஆபத்து ஏற்படாதிருக்க இரயில்வே போலீஸ் ஏற்பாடும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

---

## 61. விருப்பமான தொழில்

குறிப்பு: 1. முன்னுரை, 2. உலகில் பலருக்குள்ள பழக்கங்கள், 3. பலன்.

மக்கள் விருப்பம் பலதிறப்படும். அஃது ஒருவருக்குள்ளதைப் போல மற்றொருவருக்கு இராது. ஒருவர் விரும்புவதை மற்றவர் வெறுப்பார். ஒருவருக்கு வெறுப்பாய் இருப்பது மற்றவருக்கு விருப்பாய் இருக்கும். ஒருவர் விரும்பிச் செய்வதே விருப்பமான தொழில் என்று கூறுவர். மக்கள் இப்போது மேற்கொண்டுள்ள சில விருப்பமான தொழில்களைக் குறித்துக் கூறுவோம்:

முதலாவது, நாணயங்களைச் சேர்த்தலாகிய ஒரு பழக்கத்தை எடுத்துக்கொள்ளுவோம். சிலர் இந்தியாவில் எங்கெங்கு என்னென்ன நாணயங்கள் செலாவணி முறையில் வழங்கி வருகின்றனவோ, அவற்றை எல்லாம் சேகரிப்பர். அந்தப் பழக்கமுடையவர்கள் தாங்கள் வெளி நாடுகளுக்குப் போக நேரும்போதெல்லம் அந் நாடுகளில் எத்தகைய நாணயங்கள் வழங்கப்படுகின்றன என்பதைக் கூர்ந்து கவனித்து, அவற்றைச் சேகரிக்க முந்துவார்கள். தாங்கள் வாழும் நாட்டில் யாரேனும் அத்தகைய நாணயங்களை வைத்துக்கொண்டு இருப்பார்களானால், அவர்களைத் தேடிச் சென்று, அந்நாணயங்களுக்கு ஈடான மதிப்புடைய வேறு நாணயங்களையோ, அவற்றினும் உயர்ந்த மதிப்புடைய நாணயங்களையோ

ஈந்தேனும், அவற்றைப் பெற்றுக் கொள்ளுவர். அத்தகைய நாணயங்களைக்கொண்டு வியாபாரம் செய்ய வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம் அன்று. அவர்கள் தங்களால் அதைப்போல எத்தனை நாணயங்களைச் சேர்க்கக் கூடும் என்பதை அறிய விரும்புவதே யாகும்.

சிலர் தபால் முத்திரைகளைச் (Stamps) சேர்ப்பதைப் பழக்கமாக கொள்ளுவர். இதற்காகச் சில தபால்காரர்களையும் நட்புச் செய்துகொண்டு, அவர்கள் மூலம் வெளியூர்களில் வழங்கப்பெறும் தபால் முத்திரைகளைச் சேகரிப்பார். அதுவுமல்லாமல், அயல் நாடுகளோடு தமக்குச் சம்பந்தமில்லாதிருந்தாலும், யாதேனும் சம்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு கடிதப் போக்குவரத்துச் செய்து கொண்டு, அயல் நாட்டினர் தமக்குப் பதில் எழுதும் போது கடிதங்களுக்கு ஒட்டியனுப்பும் முத்திரைகளைச் சேகரிப்பர். மற்றும் சிலர் தாம் எவ்வளவோ தனவந்தராய் இருந்தாலும், தம் தோட்டத்தில் தோட்டக்காரர் பலர் இருந்தாலும், அவர்களை எல்லாம் பொருட்படுத்தாது. தாமே அந்தத் தோட்ட வேலையைக் காலையும் மாலையும் தவறாது செய்து முடிப்பர்; பாத்தி கட்ட வேண்டிய இடத்தில் பாத்தி கட்டியும், கொத்திப் புழுதியாக்க வேண்டிய இடத்தைப் புழுதியாக்கியும், ஏற்றங்கொண்டு கிணற்று நீரை இறைத்துப் பாய்ச்சியும் மகிழ்வர். இதுவும் விருப்பத்தின் பாற்பட்டதே யாகும்.

சிலர் இலௌகிக விஷயத்தில் அதிக நாட்டங் கொள்ளாமல் தெய்விக விஷயத்தில் அறிவு செலுத்தும் இயல்புடையவர், ஞானவான்கள், துறவிகள் ஆகிய இவர்களின் புகைப்படங்கள் எங்கெங்குக் கிடைக்குமோ அங்கங்கெல்லாம் பூவைத் தேடி வண்டுகள் போவது போன்று

தேடியலேந்து சென்று, அப்படங்களேச் சேகரிப்பர். இதுவும் ஒரு பழக்கமேயன்றே?

இக்காலத்தில் படக்காட்சிகள் இளேஞர் உள்ளத்தையே கொள்ளே கொள்கின்றன என்று கூறலாம். சுருங்கக் கூறுமிடத்து, 'இது சினிமா உலகந்தானே!' என்று ஐயுறத்தக்க நிலேயில் படக்காட்சிகள் பெருகி இருக்கின்றன. அப்படக்காட்சிகளில் பலவற்றை ஆண் பெண் நடிகர்கள் பங்கெடுத்து நடத்தி வருகின்றார்கள். நன்கு வசூலாவதற்கு அளவு கடந்து விளம்பரம் செய்கின்றார்கள்; அதற்காக நடிகையர்களது புகைப்படங்களே அழகிய தாளில் அச்சிட்டுப் பத்திரிகைகளிலும், ஆண்டு மடல், தீபாவளிச் சுடர் என்னும் சஞ்சிகைகளிலும் வெளியிடுகின்றனர். அத்தகைய அழகான படங்களேப் பார்க்கும் இளேஞர் அவற்றைக் கத்தரித்துச் சேகரிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருப்பர்; பத்திரிகைகளில் அடங்கியுள்ள கட்டுரைகளில் வாசிப்பதற்கு அவற்றை வாங்காவிட்டாலும் அவற்றில் உள்ள அழகிய படங்களுக்காகவே சிலர் பத்திரிகைகளே வாங்குகின்றனர். இதனே உணர்ந்தே பத்திரிகைக்காரர்களும் தங்களது பத்திரிகைகளில் பல படங்களே அச்சிட்டு வழங்குகின்றார்கள்.

இப்படியாகப் பலர் தத்தம் மனத்துக்குகந்தவாறு ஏதேனும் ஒன்றை மேற்கொண்டு செய்து வருகின்றனர். இப்பழக்கம் ஒரு விதத்தில் நன்மை செய்கிறது என்றே கூறலாம் இதனல் மக்களது காலம் வீணிலே கழியாது. ஏதோ ஒரு தொழிலில் பயன்படுகிறது; பழையன என்று கழிப்பவைகளே எல்லாம் மீண்டும் மீண்டும் பார்க்க வழி ஏற்படுகின்றது. மனமும் உடலும் சோர்வடையாது இவற்றைத் தேடச் சுறுசுறுப்படைகின்றன.

ஒருவர் ஒரு பழக்கத்தில் தாம் மிகுதியும் வெற்றி அடைந்துவிட்டதாகத் தெரியவந்தால், தாம் ஏதோ பெரிய காரியத்தைச் செய்துவிட்டதாக எண்ணிச் சந்தோஷங்கொள்ள ஏதுவாகிறது.

இப்படி விருப்பங்கொண்டு செய்யும் பழக்கம் ஒரு நாட்டினரிடத்துமட்டும் இருக்கும் குணம் அன்று; நாகரிகமடைந்தவை என்று கருதப்படுகின்ற எல்லா நாடுகளிலும், சிறுவர் முதல் பெரியவர் வரையில் பலர் இத்தகைய பழக்கங்களை மேற்கொண்டு செய்வர். இந்தப் பழக்கத்தில் அடங்காத தொன்றில்லை.

---

## 62. நாட்டுப் பற்று

குறிப்பு: 1. முன்னுரை, 2. உண்மை நாட்டுப் பற்று 3. பொய்யான நாட்டுப் பற்று, 4. நாட்டுப்பற்றுக் கொள்வதின் அவசியம், 5. முடிவுரை.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே;
தந்தையர் நாடென்னும் போதினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" —பாரதியார்

இயற்கை உலகானது பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவுகளுள் நீர்ப்பாகமும் நிலப்பாகமும் அடங்கும். நிலப்பாகம் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்நாடுகளில் மாந்தர் தம் வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டு வருகின்றனர். நாடு என்பது வெறும் மண்ணை மட்டும் உணர்த்தாது; அங்கு வாழும் மக்களையும், அவர்கள் பேசும் மொழியையும், அவர்கள் மேற்கொண்டு ஒழுகும் நாகரிகத்தையும் உணர்த்துமெனக் கொள்க.

இத்தகையன எல்லாம் கொண்டதே நாடு என்று சொல்லப்படும். ஒரு நாட்டில் வாழும் மாந்தர் தம் வாழ்க்கையை உண்பதிலும் உறங்குவதிலும் மட்டும் கழித்து வருதல் அவ்வளவு உசிதமன்று. அவர்களுக்குத் தங்கள் நாட்டினிடத்துப் பிரத்தியேகமான பற்று ஏற்படுதல் வேண்டும். தான் பிறந்த நாட்டுக்கு எந்தக் காலத்திலேனும் எந்தத் தீங்கேனும் நேரிட ஒருவன் காண்பானாயின், "அது நாட்டுக்குத்தானே நேர்ந்தது! அதனால் நமக்கென்ன?" என்று இராமல், அது தனக்கு வந்ததாகவே கருதி; அதனைப் போக்குதற்கான முயற்சியைத் தானேயாயினும், பிறருடன் சேர்ந்தாயினும் முன் வந்து செய்யவேண்டும்.

இப்படி நாட்டின் நன்மையில் நாட்டம் கொள்வதையே நாட்டுப்பற்று என்று கூறுவர். இதனை ஒவ்வொருவரும் தம் கடமையாகக் கொள்ளவேண்டும். அப்படியின்றி, "இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?" என்று சும்மா சோம்பி இருத்தல் கூடாது. ஒவ்வொருவரும் அவரவர் முன்னோர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த நாட்டின்மீது பற்றுடையரா யிருப்பர். அவர் வயிறு வளர்க்க அயல் நாட்டுக்குச் சென்று, அங்கு வாழ்வாராயின், அந்நாட்டின்மீது அவ்வளவு பற்று உண்டாதல் இல்லை. நாட்டுப்பற்று இல்லாதவர் உயிர் உள்ளவராயினும், நடைப்பிணமேயாவார் என்னும் கருத்தில், ஸர் வால்டர் ஸ்காட்டு என்னும் அறிஞர்,

"Breathes there the man with soul so dead
Who never to himself hath said
"This is my own, my native land."

என்று கூறியிருப்பதை நாம் நன்கு சிந்தித்தல் வேண்டும்.

இந்நாட்டுப் பற்றுச் சிலரிடத்து உண்மையாகவும், சிலரிடத்துப் பொய்யாகவும் தோன்றுவதுண்டு. உண்மையாகவே நாட்டுப் பற்றுடையவர் தமக்கென வாழாது பிறர்க்குரியராகவே நாட்டுக்குத் தொண்டு புரிவர். தாய் நாட்டின்மீது பற்றுள்ள ஒருவன், பிற நாட்டை இகழ்வான் என்று கொள்வதற்கில்லை. அப்பற்றுப் பிறநாட்டின்மீதும் பற்றுக்கொள்ளத் தூண்டும். அப்பற்றுடையார் நாட்டில் போர் முதலியன நேராவண்ணம் தடுக்க முயல்வர். அப்படி நேரிடினும், தம் தாய் நாட்டிற்காக யுத்த முனையில் நின்று போர்புரிந்து, உயிரைக் கொடுத்துப் புகழுடைவர். தாய் நாட்டிற்கு ஒரு தீங்கு நேர்ந்தது என்று அறியின், அது தீரும் வரையில் உண்மை நாட்டுப் பற்றுடையோன் மனம் நிம்மதியடையாது. அவன் நாட்டுக் கௌரவத்தையே தனக்கு ஏற்பட்டுள்ள கௌரவத்தைக் காட்டிலும் சிறந்ததாகக் கருதுவான்.

சிலர் வெளிக்குத் தம் தாய் நாட்டின்மீது மிகுந்த பற்றுள்ளவர் போல நடிப்பர். இவர் இப்படி நடிப்பதன் காரணம் இதனால் தமக்கு எதிர்காலத்தில் ஏதேனும் உயரிய பதவி கிடைக்கக்கூடும் என்னும் எண்ணமேயாகும். இத்தகையார் நாட்டுப் பற்றெல்லாம் சுயநலத்தைக் குறித்ததும், பட்டம் பதவிகளை எதிர் நோக்கியதுமேயாகும். தாம் எதிர்பார்த்திருந்த நன்மை தமக்குக் கிடைத்ததும், இத்தகையவர்கள் நாட்டுக்கு நலம் தேடாதவர்களாகின்றார்கள். இத்தகையவர்கள் நாட்டுப் பற்று என்னும் போர்வையால் தங்களை மறைத்துக்கொண்டு நாட்டை அழிக்க எதிர்பார்க்கும் சதியாலோசனைக்காரர்கள் என்றே சொல்லலாமல்லவா? இத்தகையவர்களையே கண்டு போலும் டாக்டர் சாமுவேல் ஜான்ஸன் (Dr. Samuel Johnson) என்பவர், "Patriotism is the last refuge

of a scoundral," என்று கூறியுள்ளனர். இத்தகையவர் நாட்டுப் பகைஞரினும் கொடியவராவர். இவர்களைக் கண்டு நாட்டு மக்கள் ஏமாறாது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால், 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்' என்ற முதுமொழிப்படி, இத்தகையவர்கள் என்றும் நாட்டு மக்களை ஏமாற்றி வர இயலாது. இவர்களுடைய உண்மை எப்படியும் வெளிவரும். அப்போது இவர்கள் நாட்டு மக்களாலேயே புறக்கணிக்கப்பட்டுத் தங்களுக்கு ஏற்பட்டிருந்த சொற்ப மதிப்பையும் இழந்து, பெரிதும் அல்லல் படுவார்கள்; வௌவால் போல எந்தக் கட்சியிலும் சேர இயலாமல் வருந்துவார்கள்.

மக்களுக்குள்ள நாட்டுப் பற்றினால் ஒரு நாடு சிறந்து விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. இப்பற்றினால் எல்லா ஜாதியினரும் ஒருமனப்பட்டுத் தொண்டு செய்வர். ஆதலின், இதனால் ஜாதி வேற்றுமை, தீண்டாமை முதலிய தீய குறைகள் குறைந்தொழியும். இதனால் பல ஏழைகள் தனவந்தர்களின் உதவியைப் பெறுவார்கள்; கைத்தொழிலும், மொழி வளர்ச்சியும் ஓங்கும்.

---

## 63. படக்காட்சி

குறிப்பு: 1. முன்னுரை, 2. படக்காட்சி வகை, 3. படம் பிடிக்கும் முறை, 4. பயன், 5. முடிவுரை.

நாகரிகம் நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டு வரும் இவ்வுலகில் பல புதுமைகள் தோன்றிக்கொண்டே வருகின்றன. இப்புதுமைகளுக்குக் காரணமாக இருப்பது இயற்கை மின்சாரச் சக்தியேயாகும். இதன் துணைகொண்டு எண்ணிப் பார்க்கவும் இயலாத புதுமைகளை

எல்லாம் மனிதன் செய்து முடிக்கின்றனன். இப்படிப் பல புதுமைகளைக் கண்டு பிடிப்பதற்கு மனிதனது அறிவும் ஆற்றலும் துணை செய்கின்றன.

இங்ஙனம் நவநவமான முறைகளைக் கண்டுபிடித்து உலகுக்குதவும் பெருமை மேனாட்டறிஞர்க்கே உரியது. அவர்கள் எப்பொழுதும் இயற்கைப் பொருள்களின் துணையால் என்னென்ன செய்து முடிக்க இயலுமோ அவற்றை எல்லாம் செய்து முடிக்க ஊக்கமும் உணர்ச்சியும் மிக்கவர்களாய் முன் நிற்கின்றார்கள். கீழ் நாட்டினரோ எனில், மேனாட்டறிஞர்களைப் போல உலக விஷயத்தில் புக மனம் இன்றி ஆன்ம விசாரணையில் தலையிட்டவராய் வைதிக விஷயத்திலும் பரலோக ஈடுபாட்டிலும் தம் அறிவைச் செலுத்தி வருகின்றனர். மேனாட்டார் வைதிக முறையில் தம் கருத்தை முற்றிலும் செலுத்தாது இலௌகிக நாட்டமே மிக்கவராகிப் பல புதுமைகளைக் காண்பதிலேயே தம் அறிவைச் செலுத்தி வருகின்றனர். அப்புதுமைகள் பலவற்றுள் படக்காட்சியும் ஒன்று.

இப்படக்காட்சி இயங்கு படக்காட்சி, இயங்காப் படக்காட்சி, பேசும் படக்காட்சி, பேசாப் படக்காட்சி எனப் பலவகைப்படும். இயங்காப் படக்காட்சி என்பது உருவங்களைக் கண்ணாடியில் எழுதியோ அன்றிப் புகைப்படம் பிடித்தோ விளக்கின் துணைகொண்டு திரையில் காட்டப்படும் காட்சி. இப்படிப் படங்களைக் காட்டும் கருவியைத்தான் மாஜிக் லாண்டர்ன் (Magic Lantern) என்று கூறுவர். இக்கருவி 17-ஆம் நூற்றாண்டில் கிர்ச்சர் (Kircher) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இயங்கு படக்காட்சி: இயங்கு படக்காட்சியைக் கண்டுபிடித்த பெருமைவாய்ந்த தாமஸ் ஆல்வா எடிசன் (Thomas Alva Edison) என்னும் பெரியாரின் உதவி

பெரிதும் பாராட்டத் தக்கது. மாஜிக் லாண்டர்ன் மூல மாகக் காட்டப்பட்ட படங்கள் அசைவற்று எழுத் தோவிய மாகத் திகழ்ந்தன. இயங்கு படக்காட்சியில் இயற்கை உருவம் உள்ளது உள்ளவாரே இயங்கும் பான் மையில் படம் எடுக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டு வரு கின்றது.

பேசும் படக்காட்சி: இது பேசாப் படக்காட்சி யின் சம்பந்தமும் உடையது. இதற்கு இயக்க விளக்கப் படங்காட்டும் (Cinematograph) கருவியும், ஒலிப்பதிவுக் கருவியும் (Gramaphone) வேண்டும். இவ்விரண்டின் துணைகொண்டே பேசும் படக்காட்சிகள் தோன்றி யுள்ளன. முதன் முதலில் இயங்கும் படம் காட்டப்பட்ட போது இடையில் பாடல்களோ பேச்சோ வர நேரிட்டால் அவற்றிற்கேற்றவாறு பாடும் கருவியை இணைத்துப் பாடி யும் பேசியும் காட்டி வந்தனர். இதனால் இயங்கு படக் காட்சியின் வேகமும் பாடும் கருவியின் வேகமும் ஒத்து வாராததினால் பல அசௌகரியங்கள் நேர்ந்தமையின், இரண்டும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒத்து நடக்கவேண்டு மென்று ஒலிப்படக்கருவி (Synchronization of films) முறையைக் கண்டுபிடித்து வெற்றி பெற்று, அம்முறைப் படியே இப்பொழுது பேசும் படங்கள் எல்லாம் தயாரிக் கப்பட்டு வருகின்றன.

இங்ஙனம் மின்சாரத் துணைகொண்டு எத்தகைய படங்களையும் எடுத்துவிடலாம். எரிமலை, கடல், நீர் வீழ்ச்சி போன்ற இயற்கைக் காட்சிகளையும், சரித்திர சம்மந்தமான கதைகளையும், பெரியோர்களின் வரலாறு களையும் நடிகர்களின் துணைகொண்டு படமாகத் தயா ரித்து விடலாம். ஒரு படம் தயாரிக்கப்பட வேண்டுமா னால், அதற்கு ஏராளமான பொருள் வேண்டும். குதிரைப்

பந்தயம், கிரிக்கட்டுப் பந்தயம், போர், அரசர் முடிசூட்டு விழா முதலியவற்றைப் படம் பிடிக்க வேண்டுமானால், அவ்வச் சம்பவங்கள் நடக்கும் இடங்களுக்குச் சென்று பிடிக்க வேண்டும். சரித்திர சம்பந்தமான நாடகம் படம் பிடிக்கப்பட வேண்டின், நடிகர்களும், கதைப் பகுதியும், கதைக்கேற்ற ஆடை அணிகளும், இயற்கைக் காட்சிகளும் தயாரிக்கப்பட வேண்டும். நடிகர்கள் ஒன்று சேர்ந்து நடிப்பதற்கு ஒரு பெரிய தனியிடம் (Studio) வேண்டும். அத் தனி இடம் சாதாரண நாடகக் கொட்டகையைப் போன்றிராமல், சாஸ்திரீய (Scientific) முறைப்படி கட்டப்பட வேண்டும். பேசும் படம் பிடிக்கப்பட வேண்டுமானால், நடிகர் நடிக்குமிடத்தில் வெளிச்சத்தம் உள்ளே வரவொட்டாதபடி செய்துகொள்ள வேண்டும். ஏனெனில், சிறு சத்தம் வெளியிலிருந்து கேட்கப்படுமானாலும், அவ்வொலியும் அப்படத்தில் பதிந்து இடையிடையே அனாவசியமான சத்தங்கள் படம் காண்பிக்கப்படும் போது கேட்கும்; ஆகவே, நடிகர்களும் படம் எடுக்கும் இடத்தில் இருக்கும்போது தும்முதல், இருமுதல், கனைத்தல் முதலிய சத்தங்களைச் செய்யாமல் இருக்க வேண்டும். அப்படிச் சத்தம் செய்யின், அச் சத்தமும் அப்படத்தில் பதிந்துவிடும். இந்த முறைகளை எல்லாம் கவனித்துப் படம் பிடித்த பிறகு அவை தொடர்ச்சி கெடாது இணைக்கப்பட்டு 'பிலிம்' என்னும் பெயர் பெறும். ஒரு பிலிம் எடுக்கப்பட்டால் அதினின்று பல பிரதிகளை எடுத்துக் கொள்ளலாம். அவ்வனுகூலம் இருப்பதனாலேதான் ஒரே கதை பல இடங்களில் ஒரே சந்தர்ப்பத்தில் காண்பிக்கப் படுகின்றது.

இங்ஙனம் பிலிமாக எடுக்கப்பட்ட படம் புரொஜெக்டர் (Projector) என்னும் கருவியின் மூலம் மிகுதியும்

வெளிச்சமுடைய மின்சார விளக்கின் உதவியால் வெண் திரையில் காண்பிக்கப்படுகின்றது. அமெரிக்காவில் மேற் சொன்ன முறைகளை எல்லாம் அனுசரித்து அதிகமாகப் படங்கள் பிடிக்கப்படுகின்றன. அம்முறைகளை நன்கு அறிந்தும் நம் இந்தியாவிலும் கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய இடங்களிலும் படம் பிடிக்கும் நிலையங் களை (Studios) அமைத்துப் பல பிலிம்களைத் தயாரிக் கின்றனர்.

படக் காட்சிகளைப் பார்ப்பதனால் பல நன்மைகள் உண்டாகின்றன. காண முடியாத பல இடங்களை நேரில் காண்பதுபோலக் காண்கின்றோம். இலண்டன் நகரில் ஓர் அபூர்வ சம்பவம் நிகழ்ந்தால் அதனை நேரில் கண்டு களிக் கும் பாக்கியம் தனவந்தர்களுக்கே வாய்க்கும். ஆனால், ஏழை எளியவர்களும் அந்தச் சம்பவங்களை நேரில் காண் பதைப் போலப் படத்தில் காணலாம். இப் படக்காட்சி கல்வி அபிவிருத்தி செய்வதற்குப் பல வழிகளிலும் பயன் படுகிறது. மாணவர்கள் தாங்கள் படிக்கும் பூகோள பாடம், சரித்திர பாடம் முதலிய பாட சம்பந்தமான இயற்கைக் காட்சிகளையும் அழகிய கட்டடங்களையும் படத்தில் கண்டு களிக்கலாம். முன்னே நடந்த வாழ்க்கை வரலாறுகளும் படமாகப் பிடிக்கப்பட்டுக் காண்பிக்கப் படுவதனால், படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவை களையும், படியாதவர்களும் காட்சியின் மூலம் நன்கு அறிந்து கொள்வார்கள். தற்காலத்தில் மூலை முடுக்கு களில் எலலாம் சினிமாக்கள் ஏற்பட்டுப் பழைய சரித் திரங்கள் எல்லாம் படம் பிடித்துக் காண்பிக்கப்பட்டு வருவதனால், ஆண்களும் பெண்களும் எத்தனையோ விஷயங்களை அறிந்துள்ளார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வளவு நன்மைகள் இருப்பினும், படக்காட்சியினால் சில தீமைகளும் ஏற்படுகின்றன. பார்க்கத் தகாத சில சினிமாக் காட்சியினால் மாந்தர் ஒழுக்கம் கெடுகிறது. இளைஞர்கள் இளமையிலேயே கெட்டு ஒழிகின்றார்கள். படக்காட்சிகளைக் காண மக்கள் பெருங்கூட்டமாக வந்து எல்லோரும் ஒரே கட்டடத்திற்குள் இருந்து பார்க்க நேரிடுகின்றமையின், சுகாதாரத்திற்குப் பிரதிகூலமாகிறது. அடிக்கடி படக்காட்சியைப் பார்ப்பதனால் வெகு சீக்கிரத்தில் கண் பார்வை மங்குகிறது. ஆயினும், படக்காட்சியில் பின்னுஞ் சில அரிய சீர்திருத்தங்கள் செய்யப்படுமானால், இக்குறைகள் ஒருவாறு நீங்குதலும் கூடும்.

---

## 64. என் வாழ்க்கையின் நோக்கம்

குறிப்பு: 1. முன்னுரை, 2. எனது நோக்கம், 3. காரணம், 4. முடிவுரை.

கடவுளால் படைக்கப்பட்ட ஜீவராசிகள் அத்தனையும் ஒரு குறிக்கோளை நாடியே தம் வாழ்வை நடத்துகின்றன. மனிதனை எடுத்துக்கொண்டால், ஒருவர் சிறந்த வைத்தியர் ஆக வேண்டும் என்றும், மற்றொருவர் சித்திர வேலைப்பாட்டில் சிறந்து விளங்க வேண்டுமென்றும் இப்படி அவர் அவர் எண்ணத்தின்படி நோக்கங் கொண்டு இருப்பர். விலங்குகளும் பறவைகளும் தத்தமக்கேற்ற நோக்கமுடையனவே. இத்தகைய நோக்கம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டுவது இன்றியமையாததொன்றாம். மக்களுக்கு வாழ்க்கையில் ஒரு நோக்கம் இன்றேல் வாழ்வு ஒழுங்கு படாது, 'விழலுக்கிறைத்த நீரைப்போல' அவர்கள் வாழ்நாளும் உழைப்பும் வீணிலே கழிந்தொழியும்.

மனிதன் கொள்ளும் நோக்கத்திற்கும், ஏனைய ஜீவ ராசிகள் கொள்ளும் நோக்கத்திற்கும் வேற்றுமை உண்டு. மனிதன் தனது நோக்கத்தை எவ்விதத்திலேனும் நிறை வேற்றப் பாடுபடுவான். ஏனெனில், அவனுக்கு இயற்கை அறிவோடு செயற்கை அறிவாகிய கல்வியறிவும் துணை புரிகின்றது. ஏனையவையோ எனில், இவ்வறிவு பெருமை யால், தம் நோக்கத்தை நிறைவேற்ற இயலாதவைகளா கின்றன.

இப்போது எனது பிற்கால வாழ்க்கையின் நோக் கத்தை இங்குக் குறிப்பிடுகின்றேன். கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலத்தில் உயர்தரப் படிப்பைப் பெற என் மனம் அதிகமாக விரும்பவில்லை. நான் பிறர் ஆங்கிலத்தில் சொன்னதைத் தெரிந்துகொள்வதற்கும், அவர்களுக்கு ஆங்கிலத்திலேயே பதில் கூறுவதற்கும், ஆங்கிலத்தில் கடிதம் எழுத வாசிக்க உணர்ந்துகொள்வதற்கும் போது மான அளவு கற்று ஆறும் பாரப் படிப்பாகிய S.S.L.C. படிப்போடு நின்றுவிடப் போகிறேன். நான் வகுப்பில் படிக்கும்போது தமிழ்ப் பண்டிதர் தமிழ்ப்பாட்டையும், உரை நடையையும் நடத்தும்போது அம்மொழியில் எனக்குத் தனிமதிப்பு ஏற்பட்டிருப்பதனால், தமிழ்மொழி யில் மேன் மேலும் அறிவைப்பெற இலக்கண இலக்கியங் களில் தகுந்த அறிவு சான்ற வித்துவான்களை அடைந்து தமிழ் மொழியைப் பயின்று தமிழ்ப் பண்டிதனாக வேண் டும் என்பது எனது நோக்கம். இக்காலத்தில் தமிழைக் கற்றவர்களுக்கு மதிப்பும் ஊதியமும் கிடைப்பதில்லையே என்று சிலர் நினைக்கலாம். தமிழ் மொழியைக் கற்றதனால் மட்டுமா அவர்களுக்கு மதிப்பும் வருவாயும் கிடைக்க வில்லை? தமிழ் ஒன்றையே கற்ற உயர்திரு. சுவாமிநாத அய்யர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்று மதிக்கப்பட

வில்லையா? காலஞ்சென்ற உயர் திருவாளர் கா. நமசிவாய முதலியார் அவர்கள் செல்வத்தில் சிறந்து விளங்கி வாழவில்லையா? ஆகவே, தமிழ் மொழியைக் கற்பதனு லும் பண்டிதராவதனுலும் ஊதியமும் உயர் மதிப்பும் தடைபட்டுப் போகா. தமிழ் மொழியைக் கற்றதோடு அமையாது அவர் அவர் ஊக்கங்கொண்டு ஊதியத்தை யும் சிறப்பையும் அடைய முயலவேண்டும். இல்லையென் ருல் நாயனர்,

> "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல்."

என்று கூறுவரா? ஆகவே, நான் தமிழ் மொழியைக் கற்றுத் தமிழ்ப் பண்டிதனுய்த் திகழவே நோக்கங் கொண்டுள்ளேன்.

எனது நோக்கத்திற்குக் காரணம் என்னவெனில், தமிழ்மொழி இனிமை உடையது; அழகுடையது; சிறந்த பழைய இலக்கண இலக்கியங்களைக் கொண்டது; புராண இதிகாசங்களைப் பெற்றது; செய்யுள் அமைதியும் செவ்வனே அமையப் பெற்றது. இம்மொழியில் அமைந் துள்ள நீதிகளும் ஒழுக்க முறைகளும் எம்மொழியிலும் அமைந்திரா என்றே கூறலாம். இத்தகைய அருமை பெருமைகளை மாணவர்களுக்குப் போதிப்பதற்கே தமிழ்ப் பண்டிதனுக எனக்கு நோக்கம் ஏற்படுகிறது. காலஞ் சென்ற உயர் திருவாளர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி யார் தாம் B. A. பட்டம் பெற்றுங்கூடக் கனம் மில்லர் பெரியாரைத் தமக்குத் தமிழ்ப் பண்டிதர் வேலை கொடுக் கும்படி கேட்டதும், அவ்வாறே அவர் அப்பதவியைச் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் பெற்று விளங்கினர் என்பதும் உலகறிந்த உண்மை அன்றே? அவர் அங்ஙனம் கொண்ட நோக்கம் யாதாக இருக்கலாம்?

அந்நோக்கம்,

"தாம்இன் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

என்பதன்றோ? ஆகவே, யானும் இலக்கண இலக்கியச் சுவைகளை மாணவர்களுக்கும், தமிழ் மொழியினிடத்து அன்புமிக்க ஏனைய பொது மக்களுக்கும் எடுத்து இயம்பவே இந்நோக்கம் கொண்டேன்.

நான் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே பொருள் கிடைக்கும் போதெல்லாம் தமிழ் நூல்களை வாங்கிச் சேகரித்து வருகிறேன்; சிறந்த தமிழ் அறிஞர்கள் சொற்பொழிவாற்றும் இடங்களுக்குச் சென்று உபந்நியாசங்களைக் கேட்டு வருகிறேன்; தமிழ் வகுப்பு நடக்கும் இடங்களில் சென்று படித்து வருகிறேன். 'அறையில் ஆடிப் பிறகு அம்பலத்துக்கு வரவேண்டும்' என்பது நம் நாட்டுச் சொல் வழக்காதலின், இப்போது யான் வாசிக்கும் கலாசாலையில் நடக்கும் தமிழ்ச் சங்கத்தில் அடிக்கடி யானே பல விஷயங்களைக் குறித்துச் சொற்பொழிவும் ஆற்றி வருகிறேன். எனக்குத் தமிழில் சிறிது ஆர்வம் இருக்கிறது என்று அறிந்து பள்ளிக்கூடத்திலும் என்னை இத்தமிழ்ச் சங்கத்தின் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுத்துள்ளனர். இதனால் பல பெரியோர்களைச் சங்கத்திற்குத் தலைமை வகிக்க அழைக்க வேண்டி இருப்பதனால், அவர்களது பழக்கம் எனது பிற்கால நோக்கத்திற்குத் துணையாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். எனது நோக்கம் நிறைவேற இறைவன் திருவருள் புரிவானாக.

## 65. அச்சு இயந்திரத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகள்

குறிப்பு : 1. முன்னுரை, 2. முற்காலம், 3. இக்காலம், 4. பயன், 5. முடிவுரை.

ஆங்கில அரசாட்சியினால் நாம் அடைந்துள்ள நன்மைகள் சொல்லி முடியாதவை. ஆங்கிலேயர்கள் தங்கள் ஆளுகையில் மக்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் அத்தனையும் செய்து அமைக்கின்றார்கள். நம்மவர்கள் தங்கள் காரியங்களை வெகு சிரமத்தோடு செய்து வருகின்றார்கள். ஆனால், மேனாட்டினரோ எனில், ஒரு காரியத்தை எளிமை ஆக்கிவிடுகின்றனர். முற்காலத்தில் ஓர் ஊரில் இருந்து மற்றோர் ஊருக்குச் செய்தி அனுப்ப வேண்டுமானால் பல இடையூறுகள் ஏற்பட்டன. ஆனால், இப்போதோ, ஆங்கிலேயர்களால் இரயில் பாதை அமைக்கப்பட்ட பிறகு தபால் அனுப்புவதாய் இருந்தால் வெகு இலகுவில் அவ்வேலை முடிவடைந்துவிடுகிறது. இது போன்ற பல சௌகரியங்கள் மேனாட்டினரால் நமக்கு ஏற்பட்டுள்ளன. நாம் இப்பொழுது அச்சினால் ஏற்பட்டுள்ள நன்மைகளைக் கவனிப்போம்.

முற்காலத்தில் நம் தமிழ் நாட்டில் பனை ஓலையில் எழுத்தாணிகொண்டு எழுதியும் படித்தும் வந்தனர். இக்காலத்திலோ, அச்சு அடிக்கும் விதம் கண்டுபிடிக்கப்பட்டு, ஒருவித தொந்தரவும் இல்லாமல் பல நூல்களை அச்சடித்து விடுகின்றனர்.

இவ்வச்சு வித்தையானது சீனா, இந்தியா முதலிய இடங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தாலும், அச்சுகளைக் கண்டுபிடித்த பெருமை ஜர்மானியர்களுக்கே உரியது. அவர்களுக்குப் பிறகுதான் வில்லியம் காக்ஸ்டன்

என்னும் பெருந்தகையார் 1475-ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் அச்சுத் தொழிலை ஆரம்பித்தார்.

சிலகாலம் செப்புத்தகட்டில் விஷயங்களைச் செதுக்கி அச்சடித்து வந்தனர். இதனைச் செப்புத் தகட்டு அச்சுப் பதிவு (Copper plate printing) என்பர். மற்றொரு முறையாகிய லிதோகிராப்பு மூலமாகவும் அச்சிட்டுவந்தனர். அதாவது விஷயத்தைக் கல்லில் பதியச் செய்து அதினின்றும் பல பிரதிகளை அச்சிட்டு வந்தனர். மூன்றாவதாக, இப்போது எழுத்துக்களை ஈயத்தில் செய்து அவற்றை அச்சுக் கோத்து அச்சடித்து வருகின்றனர். இம் மூன்றாம் முறையில் எழுத்துக்களை (Types) விஷயத்திற்கு ஏற்றவாறு கையால் அடுக்கிப் பிறகு ஒன்று சேர்த்து அச்சிட்டு வருகின்றனர். இதனால் கால தாமதம் ஏற்படுகின்றது என்று அறிந்து இப்போது மின்சாரத்தின் துணைகொண்டு இயந்திரமே எழுத்துக்களை அடுக்கி அச்சடிக்கும் முறையைக் கண்டுபிடித்துள்ளனர். இம் முறை கையாளப்படுவதற்கு ரோடரி (Rotary) என்னும் இயந்திரம் துணை செய்கிறது. இவ்வியந்திரம் மணிக்கு 20,000 பதிவுகளைச் செய்கிறதென்றால் இதன் உபயோகத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

இத்தகைய பல சௌகரியங்களோடு கண்டு பிடிக்கப்பட்டுள்ள இந்த அச்சு இயந்திரத்தினால் சொல்லொணா நன்மைகள் ஏற்படுகின்றன. இந்த இயந்திரம் பல நூல்கள் வெளி வருவதற்குக் காரணமாகின்றது. அச்சு இயந்திரம் ஒரே சந்தர்ப்பத்தில் ஒரே நூலில் பல பிரதிகளை அச்சிட்டுக்கொள்ள ஏதுவாகின்றது. இதனால், குறைந்த விலைக்குச் சிறந்த நூல்கள் கிடைக்கின்றன. இதனால், கல்வி அறிவு ஓங்குகின்றது. பல பத்திரிகைகள் வெளி வருவதற்கு இஃது ஆதாரமாய் உள்ளது. விளம்ப

ரத்தினுல் கைத்தொழிலும் வாணிபமும் பெருகுகின்றன. சுருங்கக் கூறுமிடத்து நாட்டு முன்னேற்றத்திற்கும் நாகரிகத்திற்கும் அச்சு இயந்திரம் பெரிதும் துணையாய் இருக்கின்றது எனக் கூறலாம்.

இத்தகைய அரும்பெரு நன்மைகட்கெல்லாம் நிலைக்களனுய் உள்ள அச்சு வித்தையைக் கண்டு பிடித்து உலகுக்குதவிய பெரியார்கட்கு உலகம் பெரிதும் கடமைப்படவேண்டும்.

## 66. பாடங்களைத் தாய் மொழியில் பயிற்றுதல்

குறிப்பு : 1. முன்னுரை, 2. நன்மை, 3. தீமை, 4. முடிவுரை.

தற்கால உலகில் எங்குப் பார்த்தாலும் 'மாணுக்கர்களுக்குத் தாய்மொழிப் பற்று இல்லை; அவர்கள் தங்கள் தாய் மொழியை அலக்ஷியம் செய்கின்றுர்கள்' என்று யாவரும் கூறிக்கொள்கின்றனர். அவர்கள் அங்ஙனம் கூறுவதற்குக் காரணம் எப்பள்ளிக்கூடத்திலும் அவ்வந் நாட்டு மொழி போக, ஏனைய பாடங்களாகிய சரித்திர பாடம், பூகோளம், பௌதிக பாடம் ஆகிய இவை போன்ற எல்லாப் பாடங்களையும் ஆங்கில மொழியிலேயே நடத்திவந்ததனுல் தாய் மொழிப் பற்றுக் குறைந்தது. இதனுல் தாய் மொழிக்குச் சீரும் சிறப்பும் ஏற்படுவதில்லை. மாணவர்களும் எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் படிக்கும் அகம்பாவத்தினுல், 'தாய் மொழிதானே ! நாம் தினம் பேசும் பாஷைதானே!' என்று அசிரத்தையாய் இருந்து, பள்ளிக்கூடத்தில் தாய் மொழி போதிக்கப்படும் நேரந்தவிர வேறு வேளைகளில் தமிழ் நூலைத் திறந்து

கூடப் பார்க்காமலிருக்கிறார்கள். இந்நிலையில் மாணவர்கள் தங்கள் தாய் மொழியில் ஒரு வாக்கியத்தைப் பிழையின்றி எழுதவும் பேசவும் அறியாது பெரிதும் இடர்ப்படுகின்றார்கள்.

இதனால் ஒரு சிலர் ஆங்கிலம் நீங்கலாக ஏனைய பாடங்களை எல்லாம் அவ்வந்நாட்டு மொழியில் போதிக்கப் பட்டால், பலன் மிக உண்டாகும் என்று கூறியும், அவ்வாறே செய்ய வற்புறுத்தியும் வருகின்றனர். இம் முறையைச் சில கலாசாலைகளும் கையாண்டு வருகின்றன. இம்முறையால் மாணவர்கள் தங்கள் தாய்மொழியை மறக்க வழியில்லை. ஏனெனில், அவர்கள் எப்பாடத்தை எடுத்தாலும் அது தங்கள் தாய் மொழியில் எழுதப் பட்டிருப்பதனால், தங்கள் தாய் மொழியாகிலும் பிழையறப் பேசவோ எழுதவோ சமயம் ஏற்படுகிறது. மாணவர்கள் சரித்திரபாடம், பூகோளம் முதலியவற்றில் நல்ல பயிற்சி பெற்றிருந்தாலும், அவற்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட இயலாது இடர்ப்படுகின்றார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு அப்பாடங்கள் அவ்வந்நாட்டு மொழிகளிலேயே போதிக்கப்படுமானால், அவர்கள் தங்கள் உள்ளக் கருத்தை உள்ளவாறே தடையின்றி எழுதித் தெரிவிக்க இயலும்.

ஆனால், தாய்மொழியில் ஆங்கிலம் தவிர ஏனைய பாடங்களைப் போதிப்பதனால் பல இடையூறுகள் வந்து சேருகின்றன. முதலாவது இரசாயன சம்பந்தமான பாடங்களையும், க்ஷேத்திர கணிதம் முதலிய சில பாடங்களையும் தாய்மொழியில் கற்பித்தல் கஷ்டசாத்தியமானது. ஏனெனில், அப்பாடங்களில் வரும் சில பதங்களுக்கு நேரான மொழி பெயர்ப்பு அவ்வந்நாட்டு மொழியில் கிடைப்பது அருமை. இரண்டாவதாக ஒரு வகுப்பில்

பல மொழிக்குரிய பிள்ளைகள் படிப்பார்கள். உதாரணமாக ஒரு வகுப்பில் மகமதியரும், தெலுங்கரும், தமிழரும், மலையாளிகளும் கலந்து இருப்பார்கள். இவர்களில் ஒவ்வொருவருக்கும் அவரவர்க்குரிய தாய் மொழி வெவ்வேறு. இந்நிலையில் தேச சரித்திரத்தை எப்படித் தாய் மொழியில் கற்பிக்க இயலும்? தமிழில் போதித்தால், தெலுங்கு பிள்ளைக்கு தெரியாது; தெலுங்கில் கற்பித்தால் மலையாளிக்கு அறிந்துகொள்ள இயலாது. இவையே அன்றி, கல்லூரிக்குச் சென்று வாசிக்க நேரிடும் பிள்ளைகள் போதுமான ஆங்கிலப் பயிற்சி கிடைப்பாரங்களில் பெருமையால் அங்கு ஆங்கிலத்திலேயே யாவும் கற்பிக்கப் படுகையில் பெரிதும் துன்பப்படுவார்கள். ஆகவே, எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்திலேயே போதிப்பது நன்றாம்.

ஆனால், தாய் மொழிகளில் போதிக்கக்கூடிய முறையில் அமைந்துள்ள பாடங்கள் எல்லாம் அவ்வத் தாய் மொழியில் போதிக்கப்படலாம். உதாரணமாகத் தேச சரித்திரம், பூகோளம் ஆகிய இவற்றைக் குறிப்பிடலாம்.

---

## 67. தொழிற்கல்வி

குறிப்பு: 1. முன்னுரை, 2. தொழிற்கல்வி இன்னது என்பது, 3. பயன், 4. உதாரணக் கதை, 5. முடிவுரை.

நம் முன்னோர் மானிடப் பிறப்பின் மேன்மையைப் பலபடச் சிறப்பித்துப் பேசுவதற்குக் காரணம், இப் பிறவி ஏனைய எல்லாப் பிறவிகளிலும் விழுமியது என்பதே யாகும். இப்பிறவி ஒன்றே நன்மை தீமை இன்னவை என்று அறிந்து வாழ்க்கையைத் திருத்திக்கொள்ளும்

தன்மை வாய்ந்ததாய் அமைந்திருப்பது. இவ்விரண்டை அறிவதற்குக் கல்வி அறிவு உதவியாய் இருக்கிறது. இக் கல்வி அறிவை ஏட்டின் மூலமும் தொழிலின் மூலமும் நாம் பெறுகிறோம்.

ஏட்டுக் கல்வி என்பது புத்தகங்களின் மூலம் படித்து மன அறிவைப் பெருக்கிக் கொள்வதாம். தொழிற் கல்வியோ, உடலை வருத்திக் கஷ்டப்பட்டு வேலை செய்வதாற் பெறுவது. உழவு, நெசவு, தச்சு முதலிய தொழில்கள் இக்கல்வியில் அடங்கும். தொழிற்கல்வியைக் கற்பவர், ஏட்டுக் கல்வியைக் கற்க வேண்டுவதில்லை என்பதன்று. இரு கல்வியும் ஒவ்வொருவரும் பெற்றிருத்தல் மிகவும் நன்மையானதே. ஏட்டுக்கல்வி கற்றவர் தொழிற் கல்வியைக் கற்கச் சிறிது அசுசி கொள்வர். தொழிற்கல்வி இழிவினர் மேற்கொள்ள வேண்டுவது என்று சிலர் எண்ணுவர். அப்படி நினைப்பது எட்டுணையும் பொருந்தாது. கல்வியே ஒரு நாட்டில் வளர்ந்து வருமானால், பல பொருள்கள் நாட்டில் உற்பத்தியாக மாட்டா. ஆகவே, நாட்டுக்கு நன்மை ஏற்பட வேண்டுமானால், ஒவ்வொரு நாட்டிலும் தொழிற் கல்வி இன்றியமையாது பரவ வேண்டும்.

ஏட்டுக் கல்வி அநேகமாக ஒருவர் கீழ் அடிமையாகத் தொழில் புரிவதற்கே துணை செய்யும். தொழிற் கல்வியோ, ஒருவன் சுயமரியாதையுடையவனாய், தனக்குத் தொழில் இல்லாத காலத்திலும் தான் கற்ற தொழிலால் பொருளைச்செய்து விற்று ஜீவனத்துக்கு வழி ஏற்படுத்திக்கொள்ள ஏதுவாய் இருக்கிறது. ஏட்டுக்கல்வி மனத்துக்கே உரம் கொடுக்கும். தொழிற்கல்வியோ மனத்துக்கேயன்றி உடற்கும் பலத்தைத் தரும். இதனால் ஆரோக்யத்திற்கும் வழியுண்டாகிறது. தொழிற்கல்வி

அபிவிருத்தி அடைய அடைய நாடும் செல்வத்தில் சிறந்து விளங்கும். ஒரு நாடு முன்னேற்றம் அடைந்த நிலையில் இருக்கிறதெனில், அதற்குக் காரணம் அந்நாடு தொழிற்கல்வியில் கவனத்தை அதிகம் செலுத்தியதே அன்றி வேறன்று. இதனுடைய அருமையான நன்மைகளைக் கண்டன்றோ இப்போது கலாசாலைகளிலும் தொழிற்கல்விக்கென (Manual Training) வகுப்புக்களை ஏற்படுத்தி, நெசவு, புத்தகக் கட்டடம் (Book-binding) முதலிய தொழில்களில் மாணவர்களைப் பழக்கி வருகின்றனர். இதனால் ஏற்படும் நன்மையைக் குறித்து ஒரு சிறு கதையைக் கூறுவோம் :

ஒரு தனவந்தனும் ஓர் ஏழைத் தொழிலாளியும் அடுத்தடுத்து வாழ்ந்து வந்தனர். ஏழை மன அமைதியோடு வாழ்ந்து வந்தான். தனவந்தனோ, மனச்சாந்தமின்றி வாழலானான். தனவான் ஏழையின் மன அமைதியை அழிக்க அவனது சிறு குடிசையைக் கொளுத்தச் செய்தான். அதை அறிந்த ஏழை நியாயாதிபதியிடம் முறையிட, அவர் இருவரையும் காட்டுமிராண்டிகள் வாழும் ஓர் இடத்தில் இருக்கும்படி தண்டனை விதித்தார். அவ்வாறே இருவரும் அவ்விடத்திற்குக் கொண்டு போகப்பட்டனர். தனவந்தன் சுக போகியாய் வாழ்ந்தவனாதலின், அவன் அங்கு அந்நிலை பொறாது கஷ்டப்பட்டான். ஏழையோ, தான் கற்றிருந்த கூடை முடையும் தொழிலால் அங்குள்ள இயற்கைப் பொருள்களைக் கொண்டு கூடை முடைந்து அக்காட்டு மிராண்டிகளுக்கு ஈந்து, அவர்களால் உணவு பெற்றுச் சுகமாக வாழ்ந்து வந்தான். அப்போதுதான் தனவந்தனுக்குக் கைத்தொழிலின் மேன்மை தெரிய வந்தது. அது முதல் அவன் ஏழையுடன் நட்புக் கொண்டாடி வந்தான். இரு

வரும் விடுதலையடைந்த பிறகு தனவந்தன் அவ்வேழைக்குப் பொருள் உதவியும் புரிந்துவந்தான்.

இக்கதையின் நீதியை நன்கு சிந்தித்தல் வேண்டும். 'கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்பதை இத்தொழிற் கல்விக்கும் ஏற்றிக் கூறலாம். ஆதலின், இனியேனும் மாணவர்கள் தங்கள் கல்வி அறிவோடு தொழிற் கல்வியையும் பெற விரும்பவேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளை இம்முறையிலும் பயிற்றவேண்டும்.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ"

---

## 68. கட்சிப் பிரிவுகளினால் ஏற்படும் நன்மை தீமைகள்

குறிப்பு: 1. முன்னுரை, 2. கட்சி ஏற்படுவதற்குக் காரணம், 3. கட்சியினால் ஏற்படும் நன்மைகள், 4. தீமைகள், 5. முடிவுரை.

மக்கள் தங்களுக்குள்ளே சில கொள்கைகளைக் கையாண்டு வருவார்கள். இக்கொள்கைகளையே கட்சி என்றும் கூறலாம். இக்கட்சிகளின் தோற்றத்தால் பல நன்மைகளும் உண்டாகின்றன; தீமைகளும் ஏற்படுகின்றன. அவை என்னென்ன என்பதைப்பற்றி ஈண்டுச் சிறிது கூறுவோம்.

மக்களுக்குள் கட்சிப் பிரிவுகள் பல காரணங்களால் உண்டாகின்றன. மத சம்பந்தமாகவும், ஜாதி வேறுபாட்டினாலும், உலக விவகாரங்களினாலும் (Politics) இன்னும் இவை போன்ற பல காரணங்களாலும் கட்சிகள் தோன்றுகின்றன.

இன்னும் பல கட்சிகள் தோன்றுவது மக்கள் பல காரியங்களைச் சாதித்துக்கொள்ள ஏதுவாகிறது. எப்படி எனில், ஒருவராக ஒரு காரியத்தை முடித்து வைக்க வேண்டுமானால், அவருக்கு உழைப்பும் ஊதியமும் அதிகம் வேண்டும். அப்படி அவை இரண்டும் வாய்க்கப் பெறினும், ஒருவரின்பொருட்டு அக்காரியத்தை முடிக்க அனுமதி தரும் அதிகாரிகள் அசட்டை செய்யினும் செய்வார்கள். ஆனால், பலர் ஒன்று கூடி ஒன்றைத் தீர்மானித்து மேலதிகாரிகட்கு அனுப்பினால், அப்பலரின் பொருட்டு அவர்கள் அதனை நிறைவேற்ற வேண்டி இருக்கிறது. இதனால் பலர் கூடியே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுவது அவசியமாகிறது. 'United we stand, divided we fall' என்னும் ஆங்கிலச் சொல் வழக்கும் இதனை வற்புறுத்துகின்றதன்றோ? 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.'

ஆனால், 'அளவுக்குமிஞ்சினால் அமுதமும் விஷம்' என்பதனால் தேக ஆரோக்கியத்திற்கு மிகப் பொருத்தமான உணவாகத் திகழ்கின்ற பாலுங்கூட, இஃது உடம்புக்கு நல்லது என்று அதிகமாக உபயோகப்படுத்தப்படுமானால் கெடுதியே விளைவிக்கும். அது போல நன்மை என்று கருதப்படுகின்றவைகளும் தீமையையும் சில சந்தர்ப்பங்களில் உண்டுபண்ணுகின்றன. கட்சிகளினால் பல பிணக்குகள் தோன்றுகின்றன. 'எல்லோரும் ஒன்று' என்னும் கொள்கையாகிய சகோதரத்துவம் பின்னப்படுகிறது. இக்கட்சிப் பிணக்கால் மக்களுக்குள் விரோதமும், பொருள் நஷ்டமும் ஏற்படுகின்றன. எக்கட்சி எக்காலத்தில்வலுத்து நிற்கிறதோ அக்கட்சியைச் சேர்ந்தவர்களே தங்களுக்குரிய நன்மையைத் தேடிக்கொள்ளுபவர்களாகின்றார்கள். அக்காலங்களில் மற்றைய கட்சிகள் சங்கட

மான நிலையை அனுபவிக்க வேண்டியவைகள் ஆகின்றன. இக்கட்சிப் போராட்டம் பரநலம் பரநலம் என்று மாந்தரிடைப் பறையடித்து ஏமாற்றிக் கடைசியில் சுய நலத்துக்கே ஏதுவாக நிற்கின்றது. கட்சிப் போராட்டத்தினால் உயிர்ச்சேதமும், பொருள் நஷ்டமும், சிறை வாசமும் பிரதிபலனாக ஏற்படுகின்றன. ஆகவே, கட்சிப் பிரிவுகளினால் பல இன்னல் ஏற்படுகின்றன என்பது கண்கூடு.

இதனால் கட்சிகள் இருத்தல் கூடாதென்பது கருத்தன்று. கட்சிகள் என்றும் நிலைபெறக் கூடியனவாக இருத்தல் வேண்டும். ஆனால், மக்கள் மனப்பான்மை அத்தகைய ஒற்றுமை உணர்ச்சிக்கும் இன்னும் உறைவிடமாகவில்லை. கற்றவரும் மற்றவரும் தாம் தாம் முன்னுக்கு வரவேண்டுமென்றே முனைந்து பாடுபடுகின்றனர். இம்முனைப்பு அனைவருக்கும் இருத்தல் நலமே. எனினும், தமது முன்னேற்றம் பிறருக்கு எவ்விதத்திலும் இடையூறு பயவாத நிலையில் இருக்க ஒவ்வொருவரும் முயல வேண்டும். 'நல்லது செய்தற்கு ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்ற அருமைச் செந்தமிழ் வாக்கை மறவாதிருத்தல் வேண்டும். பல கட்சிகளும் உலகிற்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கொள்கை கொண்டே தோன்றுபவையாதலின், இக்கட்சிகள் எல்லாம் ஒன்று கூடின் பொது நன்மைகளை அனுசரித்துச் செயலாற்றிவரின், பல நன்மைகள் உண்டாகும். அப்போது மக்களுக்குள் பகை இன்றி எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ்வர். அப்படி ஒரு கட்சியின்றிப் பலப் பல கட்சிகள் சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் தோன்றிக் கொண்டே இருக்குமானால், எக்கட்சியும் முன்னேறாது. இடையிடையே சிதறுண்டு போகும். ஆகவே, நாட்டில்

பல கட்சிகளும் ஒருங்கு கூடி உண்மைக்கு உழைக்கும் ஒரே கட்சியாய்த் திகழின் நாடு பெருநலம் பெற்று விளங்கும்.

---

## 69. மலைகளும் அவற்றின் பயனும்

குறிப்பு : 1. முன்னுரை, 2. மலையும் மலையைச் சார்ந்த இடமும், 3. பயன்.

கடவுளால் படைக்கப்பட்ட இயற்கைப் பொருள்கள் பலவும் நம் நன்மைக்கே யாகும். ஆறுகளும், கடலும், தாவரங்களும் நமக்குப் பல நன்மைகளைப் புரிகின்றன. 'சிறு துரும்பும் பல்லுகுத்த உதவும்' என்னும் முது மொழியின் கருத்தென்ன? உலகில் உள்ள சகல பொருள் களும் உபயோகமுடையன என்பதல்லவா? அந்நிலையில் மலைகளால் ஏற்படக்கூடிய நன்மைகள் அனந்தம்.

தமிழ் நூல்களில் இயற்கை நில அமைப்பை ஐந்து பிரிவாகப் பகுத்துள்ளனர்: அவை மருதம், நெய்தல், முல்லை, பாலை, குறிஞ்சி என்பன. மருதம் என்பது வய லும் வயலைச் சார்ந்த இடமும்; நெய்தலாவது, கடலும் கடலைச் சார்ந்த இடமும்; முல்லை என்பது, காடும் காட்டைச் சார்ந்த இடமும்; பாலை என்பது, மணலும் மணலைச் சார்ந்த இடமும்; குறிஞ்சி என்பது, மலையும் மலையைச் சார்ந்த இடமும் ஆகும். மலைநாட்டுக்குத் தெய்வமாக முருகனை அமைத்தனர். இதனாலேதான் முருகன் 'மலை கிழவோன்' என்று நூற்களில் கூறப் படுகின்றனன். இம்மலையிலும் மலையைச் சார்ந்த இடத் திலும் வாழும் ஆடவர் பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறவன், கானவன் என்றும், பெண்டிர்

குறத்தி, கொடிச்சி என்றும் கூறப்படுவர். இம்மலை நாட்டுக்கே உரிய மிருகங்களாகக் கரடி, புலி, சிங்கம், யானை ஆகிய இவைகளையும்; பறவை வகுப்பில் கிளி, மயில், என்பனவற்றையும் கூறுவர். மக்கள் வாழும் இடத்தைச் சிறுகுடி என்றும், அவர்களுக்குக் கிடைக்கும் நீரை அருவி நீர், சுனை நீர் என்றும் கொண்டுள்ளார்கள். இம் மலை நாட்டில் வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தள் பூ முதலியனவும்; மர வகையில் சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் முதலியனவும் காணப்படும். மலை நாட்டினர் மலை நெல்லையும், மூங்கில் அரிசியையும், தினை அரிசியையும் தமக்கு உணவுப் பொருளாகக் கொள்வர். இம்மக்களது பறையும், யாழும், பண்ணும் முறையே தொண்டகப் பறை, குறிஞ்சி யாழ், குறிஞ்சிப் பண் எனப்படும். இங்கு வாழ்வோர் வெறியாட்டிலும், மலை நெல்லை விளைத்தலிலும், தினைக்கொல்லையைக் காத்தலிலும், தேன் சேகரித்தலிலும், கிழங்கு கிண்டி எடுத்தலிலும், அருவி நீரில் ஆடலிலும், சுனை நீராடலிலும் தம் காலத்தைக் கழிப்பர்.

இப்படி ஒரு தனி நகரமாகவே விளங்குதற்குக் காரணமாகிய மலையின் மாண்பை என்னென்றெடுத்து இயம்புவது!

“வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.”

என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற மழைக்கு முதற் காரணமாகிய மேகங்களை மலைகள் தடுத்து, மழை பெய்விக்கின்றன; ஆறுகளைத் தம்மிடத்தே தோற்றுவிக்கின்றன. ‘மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்’ என்ற முதுமொழிப்படி பல மூலிகைகள் உற்பத்தியாவதற்கு நிலைக்

களும் உள்ளன. பல ஜீவராசிகள் உயிர் பிழைத்திருப்பதற்கு வேண்டிய பல பொருள்களைத் தம் இடத்தே கொண்டுள்ளன. மலைகள் ஒரு காட்டுக்கு எல்லையாக அமைந்து வேற்றரசர் உள்ளே நுழையாதபடி காவல் புரிகின்றன. கோடை காலத்தில் வெப்பத்தினால் கஷ்டப்படுபவர்களுக்குத் தாம் இடந் தந்து துணை புரிகின்றன; உலக மாயையில் உழன்று அதனின்று விடுபட்டு மன நிம்மதியோடு வாழ விரும்புகிறவர்களுக்கு யோகத்தானமாகவும் விளங்குகின்றன.

---

## 70. ஆங்கில அரசாட்சியினால் ஏற்பட்டுள்ள நன்மைகள்

குறிப்பு: 1. முன்னுரை, 2. முற்காலமும் இக்காலமும், 3. ஆங்கிலேயர் செய்துள்ள நன்மைகள். 4. முடிவுரை.

> "நெல்லும் உயிரன்றே நீரும் உயிர்அன்றே
> மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்."

என்று நமது பண்டைத்தமிழ் நூலாகிய புறநானூறு என்னும் நூல் கூறுகிறது. இதன் கருத்து உலகமாகிய உடல் அரசனை உயிராகக்கொண்டு நிலவுகிறதேயன்றி, நெல்லையும் நீரையும் உயிராகக்கொண்டு நிலவவில்லை என்பதாம். இதனால் நெல்லும் நீரும் எவ்வளவு இன்றியமையாதனவோ, அவற்றைக்காட்டிலும் இன்றியமையாதவன் நாட்டுக்கு அரசன் என்பது விளங்குகிறது. இங்ஙனம் பெருஞ்சிறப்போடு ஒரு நாட்டுக்கு மன்னனாக அமைபவன் நல்லரசனாகக் குடிகளை ஓம்ப வேண்டுமே ஒழிய, வல்லரசனாக ஆட்சி புரிதல் ஆகாது. செங்கோல்

செலுத்தும் அரசனது நாடு அமைதியுடையதாய்க் குடிகளும் நன்னடைக்கையும், அறிவும், ஆற்றலும் உடையவர்களாய்த் திகழ்வார்கள். கொடுங்கோல் மன்னன் அரசு, உள் நாட்டுக் கலகம் மிக்கு, மக்களுக்குள்ள ஒற்றுமை முதலிய நற்குணங்களை அழித்து அல்லல் உறும். இதனால்,

> "கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில்
> கடும்புலி வாழும் காடு நன்றே."

என்ற வாக்கும் எழுந்தது. ஆகவே, ஒரு நாட்டுக்கு அரசராக வருபவர் தம்முயிர்போல மன்னுயிரைக் காத்துக் குடிகளுக்குத் தம்மாலும், தம் சேனை முதலிய பரிசனத்தாலும், பகையரசர்களாலும், திருடர்களாலும், விலங்கு முதலியவற்றாலும் உண்டாகின்ற ஐந்து வித பயங்களை நீக்கி நாட்டைச் செம்மையாக ஆண்டு வருதல் வேண்டும்.

ஆங்கிலேயர் ஆளுகைக்குமுன் நம் நாடு பல அரசுகள் வசமாய் இருந்தது. சில காலம் தமிழ் நாடு மூவேந்தர் வசத்திலும், மொகலாயர் வமிசத்தினர் ஆதினத்திலும், மகராஷ்டிரர்களுக்கு உட்பட்டும் இருந்தது. அப்படி இருந்த காலங்களில் பல அரசர்கள் அரச முறைகள் மேற்கொண்டு நடத்துகையில் தங்களுக்குள் ஒற்றுமையின்றிச் சண்டை சச்சரவு செய்து வந்தார்கள். குடி மக்களுக்கும் அடிக்கடி தொந்தரவு கொடுத்து வந்தார்கள். அக்காலங்களில் குடி மக்கள் உரிமையை இழந்து வாழ்ந்து வந்தார்கள். இவை போன்ற பல இடையூறுகள் இக்காலத்தில் இல்லை என்று திட்டமாகக் கூறலாம். ஆங்கில ஆட்சி நம் நாட்டில் நிலைபெற்ற பின்பு பல சீர்திருத்தங்கள் செய்யப்பெற்றதால், இப்பொழுது நாடு நல்ல நிலையில் உள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியை ஏற்றதும், நாட்டில் அமைதியை நிலைபெறச் செய்தனர். அன்னிய நாட்டரசர்கள் உட்புகுந்து போர் தொடுக்க இயலாத நிலையில் பாதுகாப்புக்குரிய வசதிகளை ஏற்பாடு செய்துகொண்டனர்; குடிமக்களுக்கிடையே கலகங்கள் நிகழாதிருக்கச் சட்டதிட்டங்களை ஏற்படுத்தினர். இவற்றால், உள் நாட்டுக் கலகங்களை அடக்கினர்.

குடி மக்கள் அறிவுச் சுடர் பெற்று ஒளிரவேண்டும் என்று எண்ணங்கொண்டவராய் ஆங்கிலேயர் கல்வியைத் தாம் நாடெங்கும் பரப்பப் பெரிதும் ஊக்கங் கொண்டனர். அதற்காகப் பல கலாசாலைகளைத் தம் சொந்தச் செலவில் ஏற்படுத்தியும், மற்றும் சிலர் கல்விச்சாலைகளைத் தொடங்கி இருந்தால் அக்கல்விச்சாலைகட்குப் பொருள் உதவி செய்தும் கல்வியை வளர்த்து வருகின்றனர். உலகத்திலேயே தனியரசு எனத் திகழும் பெருமை பெற்றிருப்பதனால் ஆங்காங்குத் தேச சஞ்சாரம் செய்து அவ்வந் நாட்டுப் பேரறிஞர்கள் கண்ட பொது உடைமைகளாகிய பல அரியபெரிய சாஸ்திரமாகிய உடல் நூல், உயிர் நூல், தாவர நூல், பொருள் நூல் இன்னோரன்ன பல சீரிய நூல்களை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தெழுதி மக்கள் படித்துணரப் பாடுபட்டு வருகின்றனர். இக்காலத்தில் நம்மவர், 'நாகரிகத்தில் நாங்களும் ஆங்கிலேயர்களாகிய உங்களுக்குப் பின்னடையோம்' என்று கூறிக் கொள்வதற்குரிய வன்மை பெற்றது. அவர்கள் கல்விக்காகச் சிரமப்பட்டுச் செய்து கொடுத்த சௌகரியங்களாலேயே யாம் என்று உறுதியாகக் கூறலாம்.

ஆங்கிலேயர்கள் நீதி முறைகளினால் ஏற்பட்டுள்ள நன்மை சொல்ல ஒண்ணாதது. இந்நீதியினால் மக்கள் தங்கள் தங்கள் சொத்து உரிமைகள் இவ்வளவு என்பதை

அறியலானுர்கள். ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தி இருக்கும் நீதிகள் அனைவரையும் கட்டுப்படுத்தும் பான்மையில் இருப்பதனுல், அந்நீதிகளைத் தவறி நடந்தால் தண்டனை கிடைக்கும் என்பதை மக்கள் நிச்சயமாக அறிந்துள்ளார்கள். ஆதலின், நாட்டில் வழக்குப் போராட்டமும், கொலை களவுகளும் ஒரு சிறிது குறைந்துள்ளன என்று கூறலாம்.

முற்காலத்தில் ஆண்களும் பெண்களும், தனித்து ஓர் இடத்திற்குப் போவது அச்சமாய் இருந்தது. அவ்வச்சம் ஆங்கிலேயரது போலீஸ் இலாக்காவினுல் நீங்கியது என்று கூறலாம். இக்காலத்தில் இரவிலுங்கூட யாரும் நிர்ப்பயமாய் உலவி வரலாம். ஆங்காங்குப் பால சந்திரர்களைப்போல மின்சார விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருப்பதனுலும், போலீஸ் அதிகாரிகள் இரவில் அந்த இடங்களில் நகர சோதனை செய்து வருவதனுலும் மக்களுக்கு அச்சம் என்பது இல்லை.

கல்வி அறிவு உள்ளவர்களுக்கு உத்தியோகம் உதவப் பல உத்தியோக சாலைகளை ஏற்படுத்தி உத்தியோகம் அளித்து வருகின்றனர். கல்வியறிவு இன்றித் தொழிற் கல்வியிலே தேர்ந்தவர்களும் வருவாய்க்கு வழி தேட வேண்டி இருப்பவர்கள் ஆதலின், பல தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தி, அன்னுருக்கும் ஊதியம் அளித்து வருகின்றனர். இப்படி ஆங்கிலேயர்களது ஆட்சியினுல் ஏற்பட்டுள்ள நன்மைகள் அனந்தம்.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த இவ்வாங்கில ஆட்சி முறைக்கும், இதனைச் சீர்பெற நடத்திவந்த ஆங்கிலேயருக்கும், நாம் பெரிதும் நன்றி செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறேம். நாம் நாட்டுச் சட்டதிட்டங்

களுக்கு அடங்கி நடக்கும் கடப்பாடுடையவர்களாய் இருத்தல் வேண்டும். மக்களில் ஒவ்வொருவரிடத்திலும் நாட்டுப்பற்று குடிகொண்டு வேரூன்றி இருத்தல் வேண்டும். ஒரு காலத்தில் இந்நாட்டுக்குக் கேடு வருமாயின், அக்காலத்தில் நம்மில் ஒவ்வொருவரும் நம் நாட்டுக்குத் தீங்கு வராது இருக்கப் பெரிதும் பாடுபடவேண்டும். நம்நாடு நீடுழி வாழ்க!